
முஸ்தாய் கரீம்

தங்கமான எங்கள் ஊர்







முஸ்தாய்
கரீம்

தங்கமான எங்கள் ஊர்



முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ, செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்
ஓவியர்: ந. அபகூமவ்

М. КАРИМ

ТАГАНОК

(ПОВЕСТЬ)

На тамильском языке

Перевод сделан по книге:
Мустай Карим. Таганок.
М., «Детская литература», 1964 г.

К $\frac{70802-013}{016(01)-81}$ 817—81

4803010102

முஸ்தாய் கரீமும் அவர் எழுதிய கதையும்

தமிழ் படிக்கும் தங்கைமாரே, தம்பிமாரே, இந்தக் கதைப் புத்தகம் உங்களுக்குப் புதியது. என்ன கதை இது? யாரைப் பற்றியது? இதை எழுதியவர் யார்?

நான் பிள்ளைப் பருவத்தை எப்போதோ கடந்து விட்டேன். சிறுவர், சிறுமியருக்காகச் சில வேளைகளில் எழுதக் கூடச் செய்கிறேன். ஆனாலும் குழந்தைகளுக்கான புத்தகங்கள் படிப்பதில் எனக்குப் பிரியம். இதில் வயது முக்கியம் அல்ல. முக்கியமானது வேறு. குழந்தைகளுக்கான நல்ல புத்தகத்தைக் குழந்தையும் அவனுடைய அம்மாவும் அப்பாவும் பாட்டியும் தாத்தாவும் எல்லோரும் படிக்கிறார்கள். பெரியவர்களும் ஒரு காலத்தில் குழந்தைகளாய் இருந்தவர்கள் தானே. நல்ல மனிதர்கள் எப்போதுமே கொஞ்சம் குழந்தைகள். கெட்ட குழந்தைகளோ, கெட்ட பெரியவர்களை விட மோசம். ஏன்? ஏனென்றால், அவர்கள் பெரியவர்கள் ஆகும் போது அவர்களுடைய கெட்ட குணம் இன்னமும் கடை

கெட்டது ஆகி விடும். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் மட்டும் அல்ல, எல்லா மனிதர்களுக்கும். சில வேளைகளில் இன்னும் அதிக மாக, முழு முழு மக்கள் இனங்களுக்கும் முழு முழு நாடுகளுக்கும் கேடு ஆகி விடும் அது...

''தங்கமான எங்கள் ஊர்'' நல்ல பையன்களைப் பற்றிய கதை. அவர்கள் சில வேளைகளில் தப்பு செய்கிறார்கள், அசட்டுத்தனம் பண்ணுகிறார்கள், எத்தனையோ விதமான குற்றங்கள் புரிகிறார்கள். ஆனாலும் அவர்கள் இனிய, அன்புள்ள குழந்தைகள். உங்கள் வயதுதான் அவர்களுக்கு. ஆனால் அவர்கள் வேறு நாட்டில், நீங்கள் வசிக்கும் நிலைமைகளுக்கு மாறான நிலைமைகளில், வசிப்பவர்கள்.

அதனால்தான் இந்தப் புத்தகத்தையும் இதை எழுதிய எழுத் தாளரையும் பற்றி உங்களுக்குக் கொஞ்சம் சொல்லலாம் என்று முடிவு செய்தேன்.

எங்கள் சோவியத் நாட்டிலே குழந்தைகளுக்காக ஏராளமான புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. வாழ்நாள் முழுவதும் குழந்தைகளுக்காக எழுதுவதில் செலவிட்ட பல எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். எத்தனையோ தலைமுறைகளைச் சேர்ந்த வாசகர்கள் அவர்களை நேசித்தும் மதித்தும் வருகிறார்கள். ஆனால் பெரியவர் களுக்காக எழுதுபவர்களும், எல்லாம் தொடங்குவது குழந்தைப் பருவத்திலிருந்து என்பதைப் புரிந்து கொண்டு, குழந்தைகளுக் காகப் புத்தகங்கள் எழுதுகிறார்கள். அவர்கள் எழுதும் புத்தகங் கள், வழக்கமாகக் குழந்தைகளுக்காக எழுதுபவர்களுடைய புத் தகங்களுக்கு ஈடாக இருப்பதோடு, சில வேளைகளில் மேலானவை யாகக் கூட இருக்கின்றன.

முஸ்தாய் கரீம் பெரியவர்களுக்காக எழுதுபவர். கவிஞர், நாடக ஆசிரியர், பொது விஷயக் கட்டுரையாளர். சோவியத் வாசகர்கள் எல்லோரும் அவரை அறிந்திருக்கிறார்கள், நேசிக்கிறார் கள். சோவியத் யூனியனின் அரசாங்கப் பரிசும் ருஷ்யக் குடி யரசின் அரசாங்கப் பரிசும் அவருக்குக் கிடைத்திருக்கின்றன. சோவியத் ருஷ்யாவின் நாடாளுமன்ற உறுப்பினராக—ருஷ்ய சோவியத் கூட்டாட்சி சோஷலிசக் குடியரசின் சுப்ரீம் சோவியத்

உறுப்பினராக—அவர் நீண்ட காலமாய் இருந்து வருகிறார்

சோவியத் நாட்டிலே நூற்றுக்கு மேற்பட்ட பெரிய, சிறிய மக்கள் இனங்கள் இருப்பதை நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒவ்வோர் இனத்தவரும் தன் சொந்த மொழியில் பேசுகிறார், படிக்கிறார். எண்ணிக்கையில் பெரியதும் சின்னதுமான ஒவ்வொரு மக்கள் இனத்திலும் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். வெவ்வேறு மொழிகளில் எழுதப்பட்ட புத்தகங்கள் ஒவ்வோர் இனத்தவருடைய தாய்மொழியிலும் பெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றில் ஒவ்வொரு வாசகருக்கும் மிகவும் பிடித்த புத்தகங்கள் உண்டு...

முஸ்தாய் கரீமின் தாய்மொழி பஷ்கீரியம். தம்முடைய கவிதைகளையும் நாடகங்களையும் கட்டுரைகளையும் குழந்தைகளுக்கான புத்தகங்களையும் அவர் பஷ்கீரிய மொழியில் எழுதுகிறார். அவர் பஷ்கீரியக் கவிஞர். சோவியத் பஷ்கீரியாவின் மக்கள் கவிஞர் என்ற பட்டம் பெற்றவர். பஷ்கீரியா ருஷ்யாவின் மையத்தில் உள்ள குடியரசு. வோல்கா, காமா, உரால் முதலிய ஆறுகள் சோவியத் நாட்டில் எங்கே இருக்கின்றன என்பது உங்களுக்குத் தெரிந்தால் பஷ்கீரியத் தன்னாட்சி சோவியத் சோஷலிசக் குடியரசை வரைபடத்தில் கண்டுபிடிப்பது உங்களுக்குக் கடினமாய் இராது... அப்படி உங்களுக்குத் தெரியாது என்றால் பூகோள வரைபடத்தில் தேடிப் பாருங்கள்...

எங்கள் சோவியத் நாட்டில் முஸ்தாய் கரீமை அறிந்தவர்கள் பஷ்கீரியர்கள் மட்டும் அல்ல, ருஷ்யர்களும் உஸ்பேக்கியர்களும் உக்ரேனியர்களும் கஸாஃகியர்களும், பெலோருஷ்யர்களும், லித்துவானியர்களும் மல்தாவியர்களும் கிர்கீசியர்களும், யகூத்தியர்களும் எஸ்தோனியர்களும், தத்தாரியர்களும், புர்யாத்துக்களும் லாட்வியர்களும்—அட சோவியத் நாட்டின் எல்லா மக்கள் இனங்களையும் மொழிகளையும் பெயர் குறித்துக் கட்டுமா எங்காவது!

நேற்று குழந்தைகளாய் இருந்த பெரியவர்களும் நாளை பெரியவர்கள் ஆகப் போகிற குழந்தைகளும் அவரை அறிவார்கள். முஸ்தாய் கரீமின் புத்தகங்கள் சோவியத் நாட்டு மக்கள் இனங்களின்

எல்லா மொழிகளிலும் ருஷ்ய மொழியிலும் மிகப் பெருத்த எண்ணிக்கைகளில் வெளியாவதால் எல்லோரும் அவரை அறிவார்கள்.

குழந்தைகளுக்காக எழுதும் முஸ்தாய் கரீமைப் பற்றி இன்னும் சில வார்த்தைகள்.

குழந்தைகளுக்காக நல்ல புத்தகங்கள் எழுதுவதற்கு ஒருவர் நல்ல கற்பனை உள்ளவராகவும் அறிவாளியாகவும் நல்லவராகவும் மட்டும் இருந்தால் போதாது. வாழ்க்கையை அனுபவித்திருக்க வேண்டும். துன்பமும் இன்பமும் உள்ள வாழ்க்கையை, கடினமான அல்லது இலேசான வாழ்க்கையை நன்றாக அனுபவித்திருக்க வேண்டும். ஒருவன் வாழ்வது தனக்காக அல்ல, மற்றவர்களுக்காக என்பதைத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். தனக்காக இல்லாமல், வேறு யாருக்காவது கொஞ்சமாவது நன்மை செய்திருக்க வேண்டும். இப்படி நான் எப்போதும் எண்ணி வந்திருக்கிறேன்...

முஸ்தாய் கரீம் இந்தக் கோட்பாட்டின்படி வாழ்ந்தார், வாழ்ந்து வருகிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. அதனால்தான் அவருடைய கவிதைகளை சோவியத் நாட்டு மக்கள் இவ்வளவு விரும்புகிறார்கள். அவருடைய நாடகங்கள் அதனால்தான் இவ்வளவு விரும்பப்படுகின்றன. சோவியத் நாட்டின் சிறுவர்களும் சிறுமிகளும்—எல்லா மக்கள் இனத்தவர்களும்—அவரை இவ்வளவு நேசிப்பதன் காரணம் இதுதான்! இந்த மாதிரி மனிதர் திறமையாக எழுதத் தெரிந்தவர் மட்டும் அல்ல, தாம் அனுபவித்ததை எழுதுகிறார்...

போன யுத்தம் பற்றி நீங்கள் ஒருவேளை கேள்விப்பட்டிருப்பீர்களே? இரண்டாவது உலக யுத்தம் என்று அது அழைக்கப்படுகிறது. உங்களுக்கு அது வரலாறு. சோவியத் பஷ்கீரிய எழுத்தாளரான முஸ்தாய் கரீமுக்கோ, அது இன்றைய வாழ்க்கைக் கதை. பல்வேறு தேசிய இனங்களைச் சேர்ந்த பல லட்சம் சோவியத் மக்கள் போரிட்டு, பாசிசத்தை முறியடித்தார்கள். அவர்களில் ஒருவராக, பஷ்கீரியர் முஸ்தாய் கரீம் போரிட்டார். யுத்தம் நடந்த நான்கு ஆண்டுகளும் அவர் போர் முனையில் இருந்தார், கடினமான சண்டைகளில் பங்கு கொண்டார். எத்தனையோ தரம் காய

டைந்தார். பல ஊமைக் காயங்கள் அவருக்குப் பட்டன. வெற்றி கிடைத்த 1945ம் ஆண்டில் சோவியத் சேனையுடன் முன்னேறி யற்ற நாடுகளின் மக்களை அவர் பாசிசத்திலிருந்து விடுவித்தார். "பஷ்மாக்கி" ("செருப்புக்கள்") என்ற பெயருடன் குழந்தைகளுக்காக அவர் எப்போதோ எழுதிய முதல் கதை இதைப் பற்றியது. பிறகு சிறுவர் சிறுமியருக்காக "எங்கள் வீட்டின் இன்பம்" என்று ஒரு நாவல் எழுதினார். நாடு யுத்தத்தில் வெற்றி பெற்றது, ஆனால் தோற்றோடிய பகைவனால் சீரழிக்கப்பட்டிருந்தது. அதில் வசித்த பையன்களும் பெண்களும் போருக்குப் பிறகு எவ்வளவு துன்பப்பட்டார்கள் என்பதை வருணிக்கிறது இந்த நாவல்...

"தங்கமான எங்கள் ஊர்" என்னும் இந்தக் குறு நாவலும் அந்தச் சிக்கலான நேரத்தைப் பற்றியதுதான். இதில் வருணிக்கப் படும் சோவியத் சிறுவர்கள் யுத்தத்தின் துன்பத்தை "ருசி பார்த்தவர்கள்", ஆனால் யுத்தத்துக்குப் பிந்திய சீரழிவுக் காலத்தின் துன்பங்களை அவர்கள் இன்னும் அதிகமாக அனுபவிக்கிறார்கள்...

குழந்தைகள் நாளையப் பெரியவர்கள் என்பது உலகறிந்த உண்மை.

சோவியத் மக்களுக்குத் துன்பமாய் இருந்த யுத்தத்துக்குப் பிந்திய ஆண்டுகளில் உங்கள் சம வயதினரான சோவியத் பையன்களும் பெண்களும் எப்படி வாழ்ந்தார்கள் என்று இந்தக் கதையிலிருந்து நீங்கள் தெரிந்து கொள்வீர்கள். அதோடு, படிப்பினையும் பெறுவீர்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் எவ்வளவுதான் சின்னப் பையனாய் இருந்தாலும், மறு நாள் என்ன நேரும் என்று ஒருவனுக்கும் ஒருபோதும் தெரியாது...

சோவியத் நாட்டில் முஸ்தாய் கரீமின் குறு நாவல் "தங்கமான எங்கள் ஊர்" பல ஆண்டுகளுக்கு முன்பே, 1960லேயே வெளியாகி விட்டது. அதன் பின் அதன் பல பதிப்புக்களும் மறு பதிப்புக்களும் வெளிவந்து விட்டன.

யுத்தத்துக்குப் பிறகு வந்த கடினமான ஆண்டுகளில் வளர்ந்த சோவியத் சிறுவர்களும் சிறுமியரும் இந்த நெடுங்கதையை விரும்புகிறார்கள். காரணம், இது நேர்மையானது, உண்மையானது. சிறு

வாசகர்களுடன் ஆசிரியர் இதில் ஆழ்ந்த தோரணையில், பெரிய வர்களிடம் பேசுவது போல, பேசுகிறார். குழந்தைகளுக்கான சில புத்தகங்களில் இருக்குமே, கொஞ்சல்கள், ''ஐயோ என் சின்னக் கண்ணே! ஐயோ என் அழகுக் கண்ணே! எங்கே, நான் உன்னை முத்தம் கொஞ்சுகிறேன்!'' என்று, அதெல்லாம் இதில் கிடையாது.

முஸ்தாய் கரீம் என் நெடுங்கால நண்பர், போர்முனைத் தோழர். நான் முன்னுரை எழுதப் போவது தெரிந்ததும், தம்முடைய சில எண்ணங்களை அதில் சேர்க்கும்படி கேட்டுக் கொண்டார். அவற்றை அப்படியே தருகிறேன்.

இதோ அவை:

''ஆகஸ்டு மாத இரவில் எங்கள் வானத்தை நான் பார்க்கிறேன். அது என் பஷ்கீரியாவின், ருஷ்யாவின், சோவியத் நாட்டின் வானம். என் வாழ்க்கையும் வஜீருடைய வாழ்க்கையும் இந்தக் கதையின் மற்றப் பாத்திரங்களுடைய வாழ்க்கையும் அதில் இருக்கின்றன. ஒன்று சொல்லி விடுகிறேன். வஜீர் கற்பனைப் பாத்திரம் அல்ல. மற்றப் பையன்களுக்கு வெவ்வேறு பெயர்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆனால் பெயர்கள் என்னவாய் இருந்தாலும் அவர்கள் எனக்குத் தெரிந்தவர்கள். அப்போது சின்னவர்களாக இருந்தவர்கள். பெரியவர்கள் ஆகி அவர்கள் செய்ததை நான் அறிவேன். ஆகையால் இன்று அவர்களைப் பற்றிப் பெருமை கொள்கிறேன்...

''மறுபடி இந்தக் கதையைப் பற்றிச் சொல்கிறேன். அல்லது குழந்தைகளுக்காக நான் எழுதியவையும் இன்னும் எழுதாதவையுமான மற்றப் புத்தகங்களைப் பற்றிப் பேசுகிறேன். என்னுடைய கருத்துப்படி, சின்னவர்களுடைய துயரம் ஆழ்ந்த பிரச்சினை. சின்னஞ் சிறு மனிதனுடைய துயரம் பெரியவர்களைக் கவலையில் ஆழ்த்த வேண்டும். குழந்தைகளின் விபத்துக்கள் தனிப்பட்டவை, இழப்புக்களும் அப்படியே... அவற்றை மதிக்க வேண்டும். அவற்றைக் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் நல்ல சிறுவன் வளர்ந்ததும் நன்மை நம்பிக்கை இல்லாதவன் ஆகி விடுவான்...

இந்தக் கதை பிறந்த கதை இது. யுத்தத்துக்குப் பிந்திய அந்தக் கடினமான ஆண்டுகளில் மனைவி ரவூஸா, குழந்தை மகன் இல்ஸீக் இருவரோடும் நான் உரால் ஆற்றின் மறு கரையில் அமைந்த கிராமத்தில் வசித்து வந்தேன்... அங்கே நாங்களே எல்லாவற்றையும் அனுபவித்தோம், வஜீரையும் மற்றப் பையன்களையும் தெரிந்து கொண்டோம்... 'தங்கமான எங்கள் ஊர்', மற்ற எண்ணங்கள் எல்லாம் இதையே விவரிக்கின்றன...''

ஆசிரியரின் இந்தச் சொற்களுடன் மேற்கொண்டு எதையாவது சேர்ப்பது எனக்குக் கடினம்.


முஸ்தாய் கரீமின் ''தங்கமான எங்கள் ஊர்'' என்ற இந்தக் குறு நாவலிலிருந்து சோவியத் நாட்டின் தங்கள் வயதுப் பையன்களையும் பெண்களையும் பற்றித் தமிழ்ச் சிறுவர் சிறுமியர் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

இது எப்போதும் சுவாரசியமானது!

உதாரணமாக, ஆங்கில, அமெரிக்க, பிரெஞ்சு, ஸ்காண்டிநேவிய, ஆசிய, ஆப்பிரிக்க எழுத்தாளர்களின் நூல்கள் சோவியத் நாட்டின் எல்லா மக்கள் இனங்களுடைய மொழிகளிலும் வெளியாகின்றன, பாடப் புத்தகங்களில் இடம் பெறுகின்றன. இவற்றைப் படிக்கும் சோவியத் சிறுவர், சிறுமியர் தெரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்கிறார்கள், எது தங்களுக்கு நிரம்பப் பிடித்தது என்று மதிப்பிடுகிறார்கள். அல்லது, குழந்தைகளுக்காக நிறைய எழுதிய சோவியத் ருஷ்யக் கவிஞர் விளதீமிர் மயக்கோவ்ஸ்கி சொன்னது போல, ''நல்லது என்றால் என்ன, கெட்டது என்றால் என்ன'' என்று சீர்தூக்கிப் பார்க்கிறார்கள்.

செர்கேய் பருஸ்தின்





தங்கக் கழுகு ஊர்

எங்கள் தங்கக் கழுகு ஊருக்கு வந்திருக்கிறீர்களா? இல்லையா? அடே, எங்கள் ஊரைப் பார்க்காமல் எப்படி வாழ முடிகிறது உங்களால்? உலகத்தில் எல்லாவற்றையும் விட அழகான ஊர்களில் ஒன்று ஆயிற்றே அது! ஆக்கம் கெட்டவர்தான் நீங்கள்... வேறு வகையானவர்களும் இருக்கிறார்கள். அவர்கள் இந்த ஊரைப் பார்த்ததோடு நிற்காமல் இதிலேயே பிறந்து வளர்ந்திருக்கிறார்கள். உண்மையான அதிர்ஷ்டக்காரர்கள் இவர்கள், சந்தேகம் இல்லாமல்! நீங்களே எண்ணிப் பாருங்கள், ஒருவன் பிறந்ததும் பிறக்காததுமாக, தங்கக் கழுகு ஊரைக் கண் முன்னே காண்கிறான்—என்ன

அதிர்ஷ்டம்! ஆனாலும் மனிதர்களைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. தங்கமான எங்கள் ஊர்க்காரர்களில் கூடச் சில வேடிக்கையான பேர்வழிகள் இருக்கிறார்கள். எங்கேயோ தீவு தீவாந்தரங்களுக்கு, யாருமே கேள்விப்பட்டிராத தொலை தூர தேசங்களுக்கும் நகரங்களுக்கும், தாங்களாகவே விரும்பித் திடீரென்று போய் விடுகிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! இப்படிப் போய் எல்லாவற்றையும் தாங்களே நேரில் பார்த்து விட்டுச் சொந்த ஊருக்குத் திரும்பி, என்ன என்னவோ அற்புதங்களையும் வேடிக்கைக் கதைகளையும் சொல்லுகிறார்கள். நான் யுத்தத்தைப் பற்றிப் பேசவில்லை. போருக்கு எங்கள் ஊர்க்காரர்கள் பலர் போனார்கள். ஆனால் வேடிக்கை பார்ப்பதற்காக ஒருவரும் அங்கே போகவில்லை. போரில் வேடிக்கை பற்றிய நினைப்பே வராது... அமைதியான காலத்திலேயோ, இளம் கழுகுகள் போல உலகம் முழுவதையும் சுற்றிப் பறந்து வர ஏலாத கிழவர்கள் கூடத் தூர தேசங்களைப் பற்றிக் கனவு காண்கிறார்கள். கிச்சிலிப் பழ மரங்களும் எலுமிச்சை மரங்களும் வளரும் நாடுகளையும் ஆழங்காண முடியாத கடல்களையும் மாகடல்களையும், கடுங்குளிர் காலமே இல்லாத நாடுகளையும் பகல் போல வெளிச்சமான இரவுகள் வெகுநேரம் நீடிக்கும் பிரதேசங்களையும் அவர்கள் ஓயாமல் மனக் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...

''ஆகா, சுற்றுப் பயணம் செய்து இதை எல்லாம் நேரில் பார்த்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!'' என்று நிறையப் பெயர் ஆசைப்படுகிறார்கள். ஆனால் ''ஆகா, தங்கக் கழுகு ஊரைப் போய்ப் பார்த்து விட்டு வருவோமே!'' என்று ஒரு தரமாவது சொன்னவர் எவரையும் காண இது வரை ஏனோ வாய்க்கவில்லை.

இப்படி அறிவு ஆர்வம் இல்லாதவர்களாக, அசட்டைப் போக்கு உள்ளவர்களாக இருக்க மனிதர்களால் எப்படி முடிகிறது என்று ஆச்சரியம் கூட உண்டாகிறது.

நான் முன்னமே சொன்னது போல, எங்கள் ஊர்க்காரர்கள் பலர் பயணம் செய்து உலகத்தைப் பார்த்திருக்கிறார்கள். எங்குமே போகாதவர்களும் கூட ஒன்றும் தெரியாதவர்கள் அல்ல.

நல்லது எது, கெட்டது எது என்று இனங்காண அவர்களால் முடியும். எங்கள் மேய்ப்பர் ஷரீபுல்லா-அகாயையே எடுத்துக் கொள்வோமே. (அகாய் என்ருல் மாமா என்று அர்த்தம்.) அவருக்கு வயது அறுபது ஆகி விட்டது. கிராமத்தை விட்டு வெளியே ஒரு நாள் கூடப் போனதில்லை அவர். ஆனுல் உலகம் பூராவையும் நன்ருகத் தெரிந்து வைத்திருக்கிருர். அவர் சொல்லுகிற கதைகளைக் கேட்டாலே 'போதும், நீங்கள் கண்டு கொள்வீர்கள் ஆள் எப்பேர்ப்பட்டவர் என்று!

'செங்கடல் நீரிலிருந்து சிவப்புச் சாயம் தயாரிக்கப்படுகிறது. கருங்கடல் நீரால் கறுப்புச் சாயமும் வெண்கடல் நீரால் வெள்ளைச் சாயமும் செய்யலாம்.. அப்பாலே மஞ்சள் கடலும் பச்சைக் கடலும் நீலக் கடலும் உண்டு... எந்த மாதிரிச் சாயம் வேண்டுமோ அந்த மாதிரி நீரை எடுத்துக் கொள்ளலாம்!'' என்பார் ஷரீபுல்லா மாமா. ''இன்னும் கேளுங்கள். வெப்பப் பிரதேசங்களில் ஒரே தட்டையான வெளிகள் உண்டு. அந்த மாதிரித் தரையில் ஒரு முட்டையைப் பொழுது புலரும் போது உருட்டி விட்டால் பொழுது சாயும் வரையில் அது தங்கு தடை இல்லாமல் உருண்டு கொண்டே இருக்கும்...'' என்பார்.

இப்பேர்ப்பட்டவராக்கும் ஷரீபுல்லா மாமா!

எங்கள் தங்கக் கழுகு ஊர் உரால் மலைகளுக்கு நடுவே அமைந்திருக்கிறது. இந்த மலைகளில் அகல இலை மரங்களும் ஊசி இலை மரங்களும் உள்ள காடுகள் அடர்ந்திருக்கின்றன. ஊரின் இரண்டு பக்கங்களிலும் இரண்டு பெரிய ஏரிகள் உண்டு. இவற்றில் ஒன்றின் பெயர் கல்கான்-கூல்—கேடய ஏரி, மற்றதன் பெயர் கிளீஸ்-கூல்—வாள் ஏரி. கேடய ஏரி ஊரிலிருந்து எட்டி இருந்தது. வாள் ஏரியோ ஊரை ஒட்டி இருந்தது. வசந்த காலத்தில் மலைச் சரிவுகளில் பசும் புல் முளைத்ததுமே கேடய ஏரியின் நீர் கறந்த பால் போல வெதுவெதுப்பாகி விடும். வாள் ஏரியின் நீரோ, உறைபனி மாதிரிச் சில்லென்று இருக்கும். கோடை கால நடுவில் கூட அதில் மூழ்கிஞல் உடம்பெல்லாம் பொசுக்குவது போலக் கடுங் குளிர் சுரீர் என்று பாயும்.

உலகத்தில் எதுவும் தானே தோன்றுவது இல்லை. இந்த இரண்டு ஏரிகளும் உண்டான விதம் பற்றிப் பல வகையான கதைகள் வழங்குகின்றன. முன் காலத்திலே, அயல் நாட்டாரிடமிருந்து ஊரைக் காத்துப் போராடிய போது ஒரு வீரன் மேல் அம்பு பாய்ந்து விட்டதாம். வீரன் தரையில் விழுந்தானும். அவன் வலது கையில் பிடித்திருந்த வாள் ஒரு பக்கமும் இடது கையில் பிடித்திருந்த கேடயம் மறு பக்கமும் நழுவி விழுந்தனவாம். வாள் விழுந்த இடத்தில் குளிர் ஏரியும் கேடயம் விழுந்த இடத்தில் வெப்ப ஏரியும் தோன்றினவாம். ஏரிகளின் நீர்கள் வெவ்வேருக இருந்தது ஏன் என்று நீங்கள் கேட்டால் அதே ஷரீபுல்லா தடையில்லாமல் பதில் சொல்லுவார்:

''ஏனென்ருல் வாள் கொடிய ஆயுதம், கொல்லுவதற்காகத் தயாரிக்கப்பட்டது. கேடயமோ, நன்மை செய்யும் கருவி, மனிதர்களைக் காப்பதற்காகத் தயாரிக்கப்பட்டது''.

இந்த ஏரிகள் ஆழமானவை, அழகு உள்ளவை. ஆனல் தங்கக் கழுகு ஊருக்குக் கவர்ச்சி தருபவை இவை மாத்திரம் அல்ல. ஊரைச் சுற்றிலும், ஆழ்ந்த வானம் வரையில் கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றன உயரமான மலைகள். ஒன்றை ஒன்று ஒடிப்பிடித்து விளையாடுபவை போலக் காணப்படுகின்றன அவை. பளிச்சிடும் வண்ணப் பூக்கள் தைத்த பச்சை வெல்வெட்டு விரிப்பு போர்த்தவை போன்ற பள்ளத்தாக்குகளும் புல் தரைகளும் மலைகளுக்கு நடுவே நெடுந் தூரம் பரவி இருக்கின்றன. தெளிந்த ஊற்று நீர் கலகலவென்று ஒலி செய்தவாறு பெருகுகிறது. காட்டு ஆடுகள் பாறைக்குப் பாறை தாவிய வண்ணம் கொம்மாளம் அடிக்கின்றன. ஆறுகளில் வசந்த கால வெள்ளம் பெருகுவதிலிருந்து இலையுதிர் காலக் கடுங்குளிர் தொடங்குவது வரை அலுப்பு இல்லாமல் பறவைகள் கீச்சிட்டுக் கொண்டிருக்கின்றன... வசந்த கால இடிப் புயல்களின் போது மலைகளில் ஒரே இரைச்சலாய் இருக்கும். இதே மலைகள் கரு மேகங்களில் சாய்ந்து கொண்டு, இடி முழக்கங்களுடனும் வெடி ஓசைகளுடனும் வானத்தைப் பிளக்கின்றன போலத் தோன்றும். வெப்பம் உள்ள கோடையில் கைப்

பருமனான பார்ஸ்னிப்புக் கிழங்கு காடுகளில் முளைக்கும். [காட்டு வானம்பாடியின் தலையளவு பெரிய இனிப்பான ஸ்டிராபெரிப் பழங்கள் குறுங்காடுகளில் முதிரும்... மனிதர்களின் கால்கள் படாத மலைச் சிகரங்கள் மேல் தங்கக் கழுகுகள் முட்டைகள் இட்டுக் குஞ்சுகள் பொரிக்கும். சிறகுகள் முளைத்ததும் குஞ்சுகள் கூட்டிலிருந்து வெளியே பறந்து, உரக்கக் கத்தியவாறு ஊருக்கு மேலே வட்டமிடும். இந்தத் தங்கக் கழுகுகளின் காரணமாகத் தான் எங்கள் கிராமத்துக்குத் ''தங்கக் கழுகு ஊர்'' என்ற பெயர் ஏற்பட்டது.



குக்ரேக் மலை மேல் உரையாடல்

வாள் ஏரிக்கு அப்பால் உள்ள உயரமான மலைக்குக் குக்ரேக் மலை என்று பெயர். இதன் வடக்குச் சரிவுகள் மேல் ஊசி இலை மரக் காடு அடர்ந்து இருக்கிறது. ஆனால் தெற்குச் சரிவுகள் மேலோ சமதரையான பொட்டல். வெயில் அடிக்கும் போது இந்த மலை பாதி மழித்த தலை போல் தோற்றம் அளிக்கும். இந்தப் பிரதேசங்களில் மரங்கள் மலையின் வடக்குச் சரிவுகளை ஒட்டி எப்போதும் வளர்கின்றன. குளிர்ந்த வாடைக் காற்றிலிருந்து மலையைக் காத்துத் தங்கள் கிளைகளால் போர்த்த அவை விரும்புவது போல் இருக்கும். குக்ரேக் மலை உச்சியில் ஏறிச் சுற்றிலும் பார்த்தால் வான விளிம்பு எங்கோ

மிகத் தொலேவில் போய் விடுவதைக் காண்போம். கீழே உரால் ஆற்றின் கரையில் அமைந்த திர்மே கிராமத்து வீடுகள் எல்லாம் தேனீப் பண்ணேயில் உள்ள தேன் கூடுகளே விடப் பெரியவையாக இல்லே போலத் தோன்றும். மலேச் சரிவில் மேய்ப்பர்கள் மூட்டிய நெருப்பிலிருந்து கிளம்பும் புகை கூட ஷரீபுல்லாவின் சுங்கானி லிருந்து வரும் புகையைக் காட்டிலும் குறைவானதாகத் தெரியும்.

கிரமேத் சிகரம் மட்டுந்தான் வெயிலில் பளிச்சென்று மின்னும். கோடை வெப்பம் தொடங்கும் வரையில் இந்தச் சிகரத்தை வெண்பனி மூடி இருக்கும். மற்றச் சிகரங்கள் நீல அலேகள் மாதிரி நாலா பக்கத்திலிருந்தும் அதனிடம் நெருங்கும். அவற்றுக்கு நடுவே கிரமேத் சிகரம் கண்கள் கூசும்படி வெள்ளே வெளேரென்று ஒளி வீசும். இந்தச் சிகரத்தைப் பார்க்கப் பார்க்க அது நம்மை நெருங்கி வரும், பெரிதாகும். நம் கண் எதிரே அது வளர்வது போல் இருக்கும். மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போய், தானே நம்மை எதிர் கொள்ள வருவது போலக் காட்சி தரும்.

கிரமேத் சிகரத்தின் மேல் ஏற எத்தனேயோ சிறுவர்களுக்கு ஆசை. ஆனுல், செங்குத்தான பாறைகளின் விளிம்பு ஓரமாக வளேந்து நெளிந்து செல்லும் ஆபத்தான ஒற்றையடிப் பாதையில் ஒரு பகல் முழுவதும் ஓர் இரவு முழுவதும் நடந்து, அடர்ந்த காட்டையும் ஆழமான மலேப் பள்ளங்களேயும் கடந்த பிறகுதான் சிகரத்தை அடைய முடியும். தன்னே ஆண் மகனுக மதிப்பவன் என்ன வந்தாலும் வரட்டும் என்று கிரமேத்தா சிகரத்தின் மேல் கட்டாயம் ஏறி விடுவான்.

ஆமாம், கட்டாயம் ஏறி விடுவான்...

ஆனுல் இப்போது குக்ரேக் மலேயின் தெற்குச் சரிவுகளில் ஷரீபுல்லா மாமாவின் ஆடுகள் நெறு நெறுவென்ற சத்தத்துடன் புல்லேக் கடித்தவாறு மேய்ந்து கொண்டிருந்தன. வெவ்வேறு வயது உள்ள ஐந்து பெயர் மலே உச்சியில் உட்கார்ந்திருந்தார்கள். ஒட்டிய கன்னங்களும் செம்பட்டை மீசையும் உள்ளவர் வயதில் எல்லாருக்கும் மூத்தவர். அவர் தாம் ஷரீபுல்லா மாமா. உங்களுக்கு

அவரை முன்னமே தெரியும். ஆனால் மற்ற நாலு பெயரையும் பற்றி நீங்கள் கேள்விப்பட்டே இருக்க மாட்டீர்கள். அதில் வியப்பு அடைவதற்கு ஒன்றும் இல்லை. இவர்கள் எதற்காகவும் இன்னும் புகழ் பெறவில்லை. இவர்களில் மூன்று பெயர் ஐந்தாம் வகுப்புப் பரீட்சைகளில் வெவ்வேறு மதிப்பெண்கள் பெற்று நேற்றுத்தான் தேறினார்கள். எப்படியோ ஒருவிதமாக ஆண்டுப் படிப்பை முடித்து விட்டார்கள். இவர்களுடைய படிப்பு எப்போதும் சீராக நடந்து விடவில்லைதான். ஆனாலும் தேறாத பாடங்களும் மறு தேர்வுகளும் இல்லாமல் ஒப்பேற்றி விட்டார்கள்... மலை உச்சியில் உட்கார்ந்திருந் தவர்கள் வெவ்வேறு ஆசாமிகள், அவர்களுடைய பெயர்கள் வெவ் வேறானவை. ஆப்பு போலக் கூர்மையான மூக்கு உள்ள ஒடிசலான பையனின் பெயர் அப்துல்லா. அவனுடைய தலை மயிர் கீல் மாதிரிக் கறேல் என்று இருந்தது. அதில் விரல்களை வைத்தால் ஒட்டிக் கொள்ளும் என்று தோன்றியது. சப்பை மூக்கும் மரக் கிண்ணம் போன்ற உருண்டை முகமும் கொண்ட இந்தப் பருத்த தடியன் வஜீர். அவனுடைய உப்பிய கன்னங்கள் வெக்கையிலும் குளிரி லும் சிவந்த ஆப்பிள்கள் போல் இருக்கும். கண்களை மிக அடிக் கடி கொட்டும் வழக்கம் அவனுக்கு உண்டு. அது குறும்புத்தனம் என்று நினைத்த புதிய பள்ளி ஆசிரியை ஒரு தரம் அவனை வகுப்பை விட்டு வெளியே போகச் சொல்லி விட்டாள். கண்களை அடிக்கடி கொட்டினாலும் குறி பிசகாமல் கவண் எறிவதில் வஜீர் தேர்ந்தவன்.

மூன்றாமவன், தங்கக் கழுகு ஊரின் ஒரே ஒரு செம்பட்டைத் தலையனான ஐதார். காட்டு ஆட்டுக் குட்டி என்பது அவனுடைய பட்டப் பெயர். அவன் நல்ல ஓட்டக்காரன் ஆனதால் ஊர்க்காரர் கள் அவனை அப்படி அழைத்தார்கள். நாலாவது பேர்வழி பெண். அவள் கொஞ்சம் விலகி உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு ஏழா வது வயதுதான் நடந்து கொண்டிருந்தது. சுண்டெலி வால் போல மெல்லியதான அவளுடைய பின்னலில் சிவப்பு ரிப்பன் வைத்திருந் தது. அவள் பெயர் குல்நூர். இந்த அழகான பெயருக்கு பஷ்கீரிய மொழியில் ''வெயில் ஒளியில் பளிச்சிடும் பூ'' என்று அர்த்தம்.

எல்லாம் நன்றாக இருந்திருக்கும், ஆனால் இந்த குல்நூருக்கு முன் பற்கள் இல்லாததுதான் குறை. அந்த மாதிரிப் பேர்வழிக்கு இரகசியத்தைக் காப்பாற்றுவது நிரம்பக் கடினம் ஆயிற்றே.

இப்போது அவர்கள் நாலு பேரும் ஷரீபுல்லா மாமா சொன்ன கதையை ஒரே கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். மறையும் சூரியனின் இதமான கிரணங்கள் ஷரீபுல்லாவின் புகை ஏறிய மீசையில் பளிச்சிட்டுக் கொண்டிருந்தன. சிறு ஒளிக் கீற்றுகளாக அவை அவருடைய கீழ் உதட்டில் பட்டுக் கொண்டிருந்தன. ஆகையால்தான் தணிந்த குரலில் அவர் சொன்ன ஒவ்வொரு சொல்லும் யாருக்கும் தெரியாத, கவர்ச்சி மிகுந்த இரகசியத்தைச் சிறுவர்களுக்கு வெளிப்படுத்துவது போல் ஒலித்தது.

மாமா என்ன சொல்லிக் கொண்டிருந்தார்? நாமும் கேட்போமே.

'கிரமேத் சிகரத்தின் மேல் ஏறுவது என்றால் கழுகு பறக்கும் உயரத்துக்கு ஏறுவது என்று அர்த்தம்'' என்று வருணித்துக் கொண்டிந்தார் ஷரீபுல்லா. ''இரவு நேரங்களில் நட்சத்திரங்கள் இந்தச் சிகரத்தின் மேல் விளையாடும். நெருப்பைச் சுற்றும் விட்டில்கள் மாதிரி மேலே எழும்புவதும் துள்ளுவதுமாக அவை கும்மாளம் அடிக்கும். கையை நீட்டிப் பிடித்து விடும்படி அவ்வளவு தாழ இறங்கும்! எல்லாவற்றிலும் குறும்பு உள்ள சில நட்சத்திரங்கள் தற்செயலாகப் பாறைகளில் மோதிச் சுக்கல்களாகச் சிதறும். விண்மீன்கள் விழுவது என்று இதைத்தான் சொல்லுகிறோம். அற்புதமானது கிரமேத்! ஆனால் அதற்குப் பெரிய துன்பம் ஏற்பட்டிருக்கிறது. சிகரத்தின் மேலே உள்ள சின்ன ஏரியில் பொன் மீன்களும் வெள்ளி மீன்களும் முன் காலத்தில் கணக்கில்லாமல் நிறைந்திருந்தன. நட்சத்திரங்கள் மலைச் சிகரத்தில் இறங்கியது இந்த மீன்களோடு விளையாடுவதற்காகத் தான் போலிருக்கிறது. ஆனால் இந்த மீன்கள் வெகு காலத்துக்கு முன்பே போய் விட்டன. அவற்றில் ஒன்று கூட ஏரியில் இல்லை. நட்சத்திரங்களால் தான் பழைய வழக்கத்தை விட முடியவில்லை... ஒரு கொடியவன் இந்த மீன்களை ஒழித்து விட்டான். ஒரே ஒரு பைக் மீனை அவன்

ஏரியில் போட்டான். ஏழு பகல்கள், ஏழு இரவுகளில் இந்த மீன் கலைப் பொன், வெள்ளி மீன்களையும் விழுங்கி விட்டது. இதனால் கிரமேத் மிகுந்த துயரம் அடைந்தது. வருத்தம் காரணமாக ஏரியும் வறண்டு போகத் தொடங்கிற்று. ஏரி அடி வரை வறண்டு போய் விட்டால் கிரமேத் ஒரே குருடு ஆகி விடும். தனக்கு மேலே மிதக்கும் மேகங்களை அதனால் பார்க்க முடியாது. வெயில் ஒளியும் மலை உச்சியில் இரவு வேளைகளில் கும்மாளம் அடிக்கும் நட்சத்திரங்களும் அதற்குத் தெரிய மாட்டா... பெருந்தீனிக்காரப் பைக் மீனும் கடைசியில் செத்துத் தொலைந்தது. ஆனால் ஏரியில் இருந்த எல்லா உயிர்களையும் கொன்று தீர்த்த பிறகுதான் அது உயிரை விட்டது. யாராவது ஜிகித்துக்கள்—அதாவது வீரர்கள்—துணிவோடு வந்து முன்பு இருந்த மாதிரியான பொன், வெள்ளி மீன்களை ஏரியில் விடவில்லையானால் அது உண்மையாகவே வறண்டு போகும், துயரத்தினால் கிரமேத் இடிந்து தகர்ந்து விடும். வெள்ளை வெளேரென்று பளிச்சிடும் இந்த உயரமான மலையின் இடத்தில் வெறும் இடிபாடுகள் மட்டும் ஒரு நாள் மிஞ்சினால் மிக மிக வருத்தமாய் இருக்கும்... இல்லையா தம்பிமாரே?'' என்று கேட்டார் ஷரீபுல்லா.

ஆனால் ''தம்பிமார்'' பதில் ஒன்றும் சொல்லவில்லை...



தலைவனின் தேர்தல்

சூரியன் கீழே இறங்கி, தொலை தூரக்காட்டில் புகுந்ததும் ஷரீபுல்லா தம் செம்மறி ஆடுகளைப் பண்ணைக்கு ஓட்டிப் போனார், சிறுவர்கள் வீடுகளுக்குப் புறப்பட்டார்கள்.

முதலில் பேச்சு தொடங்கினான் வஜீர்.

''ஆமாம், கிரமேத்தின் பாடு மோசந்தான்...''

''எல்லாம் பாழாய்ப் போன ஒரு பைக் மீனால் வந்த வினை!'' என்று கோபம் பொங்கக் கூறினான் ஐதார்.

''பைக் மீனால் அல்ல, அந்தக் கெட்ட மனிதனால்'' என்று திருத்தினான் அப்துல்லா. பின்பு தலையை ஆட்டி, ''கூடாது, கிரமேத்தை இந்த நிலையில் விடக் கூடாது'' என்று தீர்மானமாகச் சொன்னான்.

''நிறைய மீன் முட்டைகளைச் சேகரிப்போம். முட்டைகள் பொரிந்துதானே மீன்கள் வெளிவருகின்றன'' என்று யோசனை கூறினான் வஜீர்.

''முட்டைகளை அல்ல. உயிருள்ள மீன்களை ஏரியில் விட வேண்டும்'' என்று அவன் பேச்சில் வெடுக்கெனக் குறுக்கிட்டான் ஐதார்.

''சிவப்பு மீன் சினைகள் கடையில் விலைக்குக் கிடைக்கும்'' என்று எதிர்பாராத விதமாகத் தெரிவித்தாள் குல்நூர்.

சிறுவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். இவ்வளவு முக்கியமான விஷயம் பேசப்படும் போது வேற்று ஆள் இருப்பது சரி அல்ல என்பது எல்லோருக்கும் தெளிவாகப் புரிந்தது.

''இந்தா, நீ அப்பாலே போ இங்கிருந்து!'' என்று தங்கைக்குக் கண்டிப்பாக உத்தரவிட்டான் ஐதார்.

ஆனால் அப்பாலே போகும் எண்ணமே குல்நூருக்கு இல்லை.

''போக மாட்டேன்... நீயே போய்க் கொள்!''

''நடையைக் கட்டு என்கிறேன்!''

''நீயேதான் நடையைக் கட்டு!''

''நல்லது'' என்று கண்டிப்பான உத்தரவுக்குப் பதில் வாக்குறுதி அளிக்க முற்பட்டான் ஐதார். ''என் சொல்லைக் கேட்டாயானால் வானம்பாடிக் குஞ்சு ஒன்று பிடித்துத் தருகிறேன். ஒரு சோடி கூடப் பிடித்துத் தருகிறேன்!'' என்றான்.

''சொல்லு சத்தியமாக என்று!''

''சத்தியமாக!''

குல்நூர் சம்மதத்தைக் காட்டுவதற்காகப் பின்னல் குலுங்கும்படித் தலையை ஆட்டி விட்டு, துள்ளிக் குதித்துக் கொண்டு ஊருக்குள் ஓடினாள். அவளுடைய பல நிறத் தலைக் குட்டை முன்னால் வெகு தூரம் வரை தெரிந்து கொண்டிருந்து விட்டு மறைந்தது.

எங்கள் பக்கத்தில் ஆண்கள் ஆழ்ந்த விஷயங்களை நின்று கொண்டு பேசுவது கிடையாது. அறிவும் அனுபவமும் தேவைப்படும் விஷயங்களை உட்கார்ந்தபடித்தான் ஆலோசிப்பார்கள். அறிவையும் அனுபவத்தையும் ஈடுபடுத்துவதற்காகச் சிறுவர்களும் உட்கார்ந்தார்கள். கிரமேத்தைக் காக்க வேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினையை விவாதிக்கத் தேவையே இருக்கவில்லை. கிரமேத்மலையைக் காப்பாற்றுவது சந்தேகம் இல்லாமல் அவசியமாய் இருந்தது. ஆனால் அதைக் காப்பாற்றுவது எப்படி என்பதில் தான்

ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு கருத்துக்கள் இருந்தன. கூட்டுப் பண்ணை மீனவர் குழுவிடம் நேரே உதவி கேட்கலாம் என்று ஐதார் யோசனை சொன்னான். ஆனால் வஜீர் எரிச்சல் அடைந்து அவனை அப்போதே நையாண்டி செய்யத் தொடங்கி விட்டான்.

''உதவி, உதவி வேண்டும் உனக்கு! போ, ஊருக்கெல்லாம் கேட்கும்படி ஓலமிடு,உதவி வேண்டும் என்று கெஞ்சு,பாவம்! த்தூ!'' என்று துப்பி, இகழ்ச்சியுடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

ஐதார் வஜீரோடு சண்டை போடக் கிளம்பினான், ஆனால் அப்துல்லா இரண்டு பேரையும் கண்டிப்பாகத் தடுத்தான்:

''சண்டை போட இது நேரம் அல்ல! இங்கே நாம் செய்யப் போகிற முடிவை நம்மில் ஒருவனும் தூக்கத்திலோ விழித்துக் கொண்டிருக்கும் போதோ வெளியிட மாட்டோம் என்று முதலில் ஆணை இடுவோம். வாருங்கள். இது இரகசியம். நம்மைத் தூக்கில் போட்டாலும் சரி, கண்ட துண்டமாக வெட்டினாலும் சரி, இரகசியத்தை வெளியிடக் கூடாது! வாயை மூடிக் கொண்டிருக்க முடியாதவன் காட்டிக் கொடுக்கி என்று அழைக்கப்படுவான். ஆணை இடுங்கள்!''

அப்துல்லா முதலில் இரண்டு கைகளையும் நெற்றி மேல் வைத்து ஆழ்ந்த தோரணையில் சொன்னான்:

''ஆணை இடுகிறேன்!''

''ஆணை இடுகிறேன்! ஆணை இடுகிறேன்!'' என்று திருப்பிச் சொன்னார்கள் ஐதாரும் வஜீரும்.

''இப்போது கேளுங்கள்'' என்று மேலே பேசினான் அப்துல்லா. ''முட்டையுள்ள மீன்களை மட்டும் ஒரு வாளி, அல்லது இரண்டு வாளிகள் நிறையப் பிடித்துப் பொறுக்கி எடுக்க வேண்டும் நாம்!''

''நீ என்ன ஒன்று!'' என்று இருந்த இடத்திலிருந்தே கூவினான் வஜீர். ''பிடிப்பது எதற்காக? வாள் ஏரியில் நம் செம்படவர்கள் மீன்களைச் சேமித்து வைக்கும் இடம் எனக்குத் தெரியும்! இருட்டு ஆனதும் இரண்டு என்ன, மூன்று வாளிகள் நிறையக் கூட மீன்கள் எடுத்துத் தருகிறேன் உங்களுக்கு! மீன்களைப் போடுவதற்குக் கூடை பின்னுவது தான் தேவை.''

''சரி அல்ல. துப்புரவான காரியத்தை அழுக்குக் கைகளால் செய்யக் கூடாது'' என்று பெரிய மனிதன் போலச் சொன்னான் அப்துல்லா.

இந்தச் சொற்களை அவன் ஒரு தரம் ஷரீபுல்லா சொல்லக் கேட்டிருந்தான். ஆனால் வஜீர் அவற்றுக்கு மசியவில்லை.

'என்ன விரைப்பாகப் பேசுகிறான்!'' என்று கண்களை இடுக்கிக் கொண்டு அப்துல்லாவைச் சுட்டிக் காட்டியபடி இகழ்ச்சியுடன் சிரித்தான் வஜீர். ''இவனை நாம் தலைவனாகத் தேர்ந்தெடுத்து விட்டோம் போல...''

''நண்பர்களே!'' என்று திடுக்கிட்டான் ஐதார். ''உண்மை யிலேயே நமக்கு ஒரு தலைவன் வேண்டுமே! என்ன செய்வது?''

ஒருவரும் அவனுக்குப் பதில் சொல்லவில்லை. அவன் கேட்டது முக்கியமான கேள்வி, அதைப் பற்றி நன்றாகச் சிந்தனை செய்ய வேண்டி இருந்தது. தவிரவும் ஆலோசனை நடத்தும் போது மற்றவர்களுடைய கருத்தை உடனே ஒப்புக் கொள்வது ஆண்மகனுக்கு அழகு அல்ல. அவர்கள் வெகு நேரம் பேசாமல் இருந்தார்கள். ஆனாலும் ஐதாரின் யோசனையைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

தேர்தல் ஒழுங்கு முறைகளைப் போதுமான அளவு நன்றாக அறிந்திருந்த அப்துல்லா, ''தலைவனைத் தேர்ந்தெடுக்க வேண்டும்'' என்றான்.

ஆனால் வஜீரிடம் தன்னடக்கம் வெளியே காட்டிக் கொள்ளவே முடியாதபடிக் குறைவாக இருந்ததால் அவன் குறுகிய கரு விழிகளை விரைவாகக் கொட்டிய வண்ணம் கெஞ்சிக் கேட்கத் தலைப்பட்டான்.

''நண்பர்களே, அருமை நண்பர்களே.. வாழ் நாள் முழுவதிலும் ஒரு தரங்கூட நான் தலைவனாக இருந்ததில்லை... ஐதார் வகுப்புச் சட்டாம்பிள்ளையாக இருந்தான், அப்துல்லா சுவர்ச் செய்தித்தாளின் ஆசிரியனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டான், வட்டார முன்னோடிகள் மகாநாட்டுக்குப் போனான்... நான் ஒருவன் மட்டுந்

தான்...'' வஜீரின் குரல் தழுதழுத்தது, விழிகளிலிருந்து கண்ணீர் பொங்கிவரத் தயாராக இருந்தது.

அப்துல்லாவின் குரல் வாடைக் காற்று போலச் சுரீரென்று அவன் மேல் பாய்ந்தது:

''தலைவர் பதவி கெஞ்சிப் பெறுவது அல்ல!''

வஜீர் நொடிப் போது பேசாதிருந்தான். ஆனால் தலைவன் ஆகும் விருப்பத்தைக் கைவிட முடியாததால் வேறொரு தந் திரத்தைக் கடைப்பிடித்தான்.

''சீட்டு! அப்படியானால் சீட்டுப் போட்டுப் பார்ப்போம்! அல் லது கழியில் கைகளை ஒருவர் பின் ஒருவராக வைத்து அளப்போம். யாருடைய கை மேலே இருக்குமோ அவனே தலைவன் ஆவான்'' என்று சட்டென யோசனை சொன்னான்.

ஆனால் ஐதார் இதை ஏற்கவில்லை. ''சீட்டும் கழியும் விளை யாட்டுக்குத் தான் சரி. இது விளையாட்டு ஒன்றும் இல்லை. என் கருத்துப்படி, ஓட்டப் பந்தயம் வைக்க வேண்டும். முதலாவதாக வருபவன் தலைவன் ஆவான்'' என்றான்.

வஜீர் கவண் எறிவதில் தேர்ந்தவன், ஆனால் ஓட்டத் தில் அல்ல. கவண் எறிவதிலாவது தான் மேலானவன் என்ற எண்ணத்தால் செயற்கையாகக் கெக்கலித்தான்.

''ஹ-ஹா! என்ன அபார யோசனை! ஓட்டக்காரனைத் தலைவன் ஆக்குவோம் என்கிறாயாக்கும். தலைவன் என்ற சொல் தலை என்ற சொல்லிலிருந்து பிறந்தது. கால்களுக்கு இங்கே என்ன வேலை? உனக்குத் தெரியாது என்றால் வாயை மூடிக் கொண்டிரு! குறி பிசகாமல் கவண் எறிவதில் போட்டி வைப்பதே மேல்! இலக் கைச் சரியாகத் தாக்குபவனே கமாண்டர். வேண்டுமானால் அப் துல்லாவே சொல்லட்டும்!'' என்றான்.

அப்துல்லாவிடமோ, சொந்த யோசனை இருந்தது, அதைச் சொல்ல வேண்டுமென்று பொறுமை இல்லாமல் துடித்துக் கொண் டிருந்தான். ஆனாலும் நிதானமாகக் கேட்டான்:

''எல்லாவற்றிலும் சரியானது எது, சொல்லட்டுமா?''

''சொல்லு!''

''குஸ்தி போட்டு பலப் பரீட்சை செய்வதுதான் எல்லாவற்றையும் விடச் சரியானது. குஸ்தியில் ஜெயிப்பவனே தலைவன்!''

அப்துல்லாவுடன் விவாதம் செய்வது பயன் அற்றதாய் இருந்தது. ஆனாலும் சிறுவர்கள் வெகு நேரம் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ''முரட்டு உடல் வலிமை உள்ளவர்கள் தலைவர்கள் ஆன காலம் எப்போதோ மலையேறி விட்டது'' என்று சொன்னதற்காக வஜீர் அனேகமாக அடி வாங்கத் தெரிந்தான்.

முடிவில் நீதி வென்றது. எல்லா யோசனைகளும் ஏற்கப்பட்டன. முதலில் ஓட்டப் பந்தயம் நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. ஊர் எல்லையில் தூரத்திலிருந்து தெரிந்த ஒற்றைத் தேவதாரு மரம் வரை ஓட வேண்டி இருந்தது. ஐதார் கழியால் கோடு போட்டான். மூன்று பேரும் சராய்களை மடக்கி விட்டுக் கொண்டு தங்கள் தங்கள் இடங்களில் நின்றார்கள்.

வஜீர் உத்தரவிட்டான்:

''ஒன்று, இரண்டு, மூன்று!''

வில்லிலிருந்து விடப்பட்ட அம்பு போல உடனே முன்னே பாய்ந்தான் ஐதார். அவன்தான் எப்படி ஓடினான்! அவனுடைய பாதங்கள் தரையில் படவே இல்லை போல் இருந்தன. குதிகால்கள் மட்டுமே ஒன்றன் பின் ஒன்றாகப் பளிச்சிட்டன! வெகு நேரம் அவனுக்குப் பின்தங்காமல் ஓடிக் கொண்டிருந்தான் அப்துல்லா. வஜீரோ, தாயின் பின்னே ஓட அவ்வளவாக விருப்பம் இல்லாத சோம்பேறிக் குதிரைக் குட்டி போல எடுத்த எடுப்பிலேயே பின் தங்கி விட்டான்.

''செம்பட்டைப் பேய்! இவன் கால்களில் கல்லால் அடித்தாலும் தேவலை! இடறாமல் ஓடிக் கொண்டே இருக்கிறான் பார்!'' என்று ஐதாரை மனதுக்குள் திட்டினான்.

மெய்தான். இடறும் எண்ணமே இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தான் ஐதார். நீளமான கடிவாள வார்களின் தூரத்துக்கு அப்துல்லாவைப் பிந்த விட்டு விட்டு, முதலில் இலக்குக்கு ஓடி ஒற்றைத் தேவதாரு மரத்தைக் கட்டிக் கொண்டான். அப்துல்லா இரண்டாவதாக வந்தான். பாவம் வஜீரோ, பாதி வழி ஓடிய

பின், திடீரென்று தரையில் விழுந்து, வலது காலைத் தூக்கி, உள்ளங்காலை உற்றுப் பார்க்கத் தொடங்கினன். பாதத்தில் குத்திய சிலாம்பைத் தேடினன் போலும். அல்லது, ஒருவேளை சிலாம்பைப் பிடுங்கி எறிந்து விட்டு, கொஞ்ச நேரம் உட்கார்ந்திருந்த பின், நொண்டியவாறு தோழர்களை எட்டிப் பிடித்தான்.

''எதற்காக இப்படி ஓடுகிருய்? கால்கள் மேல் கொஞ்சமாவது இரக்கம் காட்டப்படாதோ?'' என்று அவனைப் பார்த்து வாய் விட்டுச் சிரித்தான் ஐதார்.

''என் காலில் சிலாம்பு குத்தி விட்டது. நான் பந்தயத்தில் கலந்து கொள்ளவில்லை என்று வைத்துக் கொள்ளுங்கள்'' என்ருன் வஜீர்.

மற்ற இருவரும் வஜீரின் உள்ளங்காலைக் கவனமாக, விஷயம் தெரிந்த பாங்கில் உற்றுப் பார்த்தார்கள். எப்போதோ ஏற்பட்டிருந்த கீறல்களின் தழும்புகள் தவிர விசேஷமாக வேறு எதுவும் அவர்களுக்குத் தென்படவில்லை. வஜீர் விவாதத்தில் இறங்கவில்லை. தனது தோல்வியை அவன் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. அடுத்த போட்டியைத் தள்ளிப் போடாமல் அப்போதே வைத்துக் கொண்டார்கள் பையன்கள். மூன்று பேரும் சராய்ப் பைகளிலிருந்து தங்கள் போர்க் கருவிகளான கவண்களை எடுத்தார்கள். அவை இல்லாமல் அவர்கள் ஒருபோதும் இருந்ததில்லை. போட்டி நிபந்தனைகள் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டன. ஐதாரின் பூத்தையல் போட்ட குல்லாய் தேவதாரு மரத்தின் முறிந்த கீழ்க் கிளையில் தொங்க விடப்பட்டது. பின்பு பையன்கள் முப்பது அடிகள் நகர்ந்து போய், ஒரு கழியைத் தரையில் ஊன்றினர்கள். பைகளில் எப்போதும் கிடந்த சேமிப்புக்களிலிருந்து ஆளுக்கு மூன்று மழமழப்பான உண்டைக் கற்களை எடுத்துக் கொண்டார்கள். நிபந்தனைப்படி, குறி பிசகாமல் மூன்று தரம் குல்லாய் மேல் கவண் எறிபவன் வெற்றியாளன் என்று வைத்துக் கொண்டார்கள். பெயர்களின் பஷ்கீரிய அகர வரிசைப்படி முறை அமைத்துக் கொண்டார்கள். இதன்படி ஐதார் முதலில் கவண் எறிந்தான். அவன் எறிந்த கல் கீச்சொலியுடன் குல்லாய்க்கு மேலாகப்

பறந்தது. இரண்டாவது கல் தேவதாரு அடிமரத்தில் ஓசையுடன் பட்டது... மூன்ருவது தடவை ஐதார் மிக நீண்ட நேரம் குறி வைத்துக் கொண்டிருந்தான். இந்தத் தடவை தன் குல்லாயைத் தாக்கிப் பிய்த்து விடுவது என்று அவன் தீர்மானித்தான். ஆனல் கல் வேறு திசையில் போய் விட்டது, குல்லாய் தன் இடத்தில் அமைதியாகத் தொங்கிக் கொண்டிருந்தது.

அடுத்தது வஜீரின் முறை. முதலில் அவன் கொஞ்ச நேரம் கண்களை இடுக்கிக் கொண்டு இலக்கை உற்றுப் பார்த்தான். பிறகு கவணில் கல்லை வைத்து ரப்பரை இழுத்தான். சரியாக அந்த நேரம் பார்த்து ஒரு கொசு அவனுடைய சப்பை மூக்கின் மேல் உட்கார்ந்தது. வஜீரோ, அதைச் சட்டை செய்யவே இல்லை. ஆனல் நீள்மூக்குக் கொசுவைப் பார்த்த ஐதார் மனதுக்குள் அதைக் கடுமையாகத் திட்டினன்:

''படு முட்டாள் நீ, கொசுவே! மூக்கின் மேல் உட்காருவதற்குப் பதிலாக நேரே கண்ணில் விழுந்திருந்தாயானல் மேலாயிருக்குமே!''

ஆனல் ஐதார் கொசுவை விரும்பிய அளவு திட்டி முடிப்பதற்குள் அவனுடைய குல்லாய் பறந்து தரையில் விழுந்தது.

''முதல் ரொட்டிக்கு வெண்ணெய் தடவி விட்டேன்!'' என்று வேட்டைக்காரர்கள் பேசும் மொழியில் பெரிய மனிதப் பாங்கில் சொன்னன் வஜீர்.

அப்துல்லா மரத்தின் பக்கம் ஓடிப் போய், குல்லாயை முந்திய இடத்தில் மாட்டினன். இரண்டாவது கல் சீழ்க்கையுடன் பாய்ந்து குல்லாயைக் கிளையிலிருந்து அகற்றி மறுபடி தரையில் வீழ்த்தி விட்டது. கல் குல்லாய் மேல் அல்ல, தன் நெற்றி மேல் பட்டது போல ஐதாருக்கு மண்டையிடி ஏற்பட்டது.

''இரண்டாவது ரொட்டிக்கு வெண்ணெய் தடவி விட்டேன்!'' என்று மறுபடி பெருமையடித்துக் கொண்டான் வஜீர்.

மூன்ருவது தாக்கு சச்சரவுக்கு இடம் ஆயிற்று. குல்லாய் என்னவோ விழத்தான் செய்தது, அனல் கிளை அசைந்ததால்தான் அது விழுந்தது.

வஜீர் முன்னைக் காட்டிலும் அதிக ஆடம்பரத்துடன் ''மூன்ருவது ரொட்டிக்கு வெண்ணெய் தடவி விட்டேன்'' என்று முழங்கிய போது ஐதார் மனதுக்குள் மகிழ்ந்தவாறு குறுக்கிட்டான்:

''வெண்ணெய் தடவ ரொம்பத்தானே அவசரப்படாதே. வெண்ணெய் பற்ருது.''

''பொருமைப்படுகிருயோ? நெஞ்சில் சுண்டெலிகள் கறவுகின்றனவோ?'' என்று கேலியாகச் சிரித்தான் வஜீர். ஆனல் மூன்ருவது கல் இலக்கில் படவில்லை என்பதை அவனே உணர்ந்திருந்தான். பெருமையடித்துக் கொள்ளும் ஒட்டக்காரனைக் கொஞ்சம் குத்திக் காட்ட அவனுக்கு ஆசையாய் இருந்தது.

''கவண் இப்படியாக்கும் எறிய வேண்டும், தம்பீ, ஐதார்! இது ஓட்டம் அல்ல, குதிகால்களால் தரையில் பட படவென்று அடிப்பதல்ல!'' என்று பெருமிதத்தோடு முழங்கினன்.

''இப்படித் தற்பெருமை பீற்றிக் கொள்வதற்கு நாக்கு எப்படித்தான் சளைக்காமல் இருக்கிறதோ!'' என்று கடிந்து கொண்டான் அப்துல்லா. ''கொஞ்சமாவது நியாயமாய்ப் பேசு, வஜீர், உன் மூன்ருவது தாக்கு எப்படியும் கணக்கில் சேராதே!''

வஜீர் வெறுமே தோள்களைக் குலுக்கினன். கவண் எறிவதில் ஐதார் போலவே அப்துல்லாவும் தன்னை வெல்ல மாட்டான் என்பதை அவன் நன்ருக அறிந்திருந்தான். மெய்யாகவே மூன்று தடவைகளில் ஒரு தடவைதான் அப்துல்லா எறிந்த கல் இலக்கில் பட்டது. ஆகவே அவன் இரண்டாம் இடத்தைப் பெற்ருன்.

சிறுவர்கள் குஸ்தி போடுவதற்கு இடம் தெரிந்தெடுத்து, கடைசிப் போட்டி தொடங்கிய போது சூரியன் மேற்கே சாய்ந்து விட்டது. ஒற்றைத் தேவதாரு மரத்தின் நிழல் உருளைக் கிழங்கு வயலில் நீண்டு கிடந்தது. சீட்டு போட்டார்கள். அதன்படி வஜீரும் ஐதாரும் கைகளில் துப்பிக் கொண்டு எதிர் எதிராக நின்ருர்கள்.

உண்மையான குஸ்தி பயில்வான்களின் பேச்சில் ஐதார் கேட்டான் ''சண்டை போடுவோமா, சமாதானமாய்ப் போவோமா?'' என்று.

''சண்டையும் போடுவோம், சமாதானமாகவும் போவோம்'' என்று பதிலளித்து விட்டு இன்னொரு தரம் உள்ளங்கைகளில் துப்பிக் கொண்டான் வஜீர்.

சபந்தூய் என்னும் வசந்தகால உழவுத் திருநாளின் போது மல்லர்கள் செய்வது போல இரண்டு பையன்களும் தோளோடு தோள் மோதிக் கொண்டார்கள், பின்பு சட்டை விளிம்புகளைப் பிடித்துக் கொண்டு திடீரென்று குனிந்து ஒருவன் உடலை மற்றவன் குறுக்காகக் கட்டிக் கொண்டு சுற்றிச் சுழலத் தொடங்கினார்கள்.

எதிராளியைத் தரையில் வீழ்த்தி, இரண்டு தோள் பட்டைகளிலும் மண் படும்படிக் கிடத்த ஒவ்வொருவனும் முயன்றான். மூச்சு இரைத்தவாறு அவர்கள் நெடு நேரம் மல்லுக் கட்டினார்கள், ஆனால் ஒருவனும் மற்றவனுக்குச் சளைக்கவில்லை. ஐதார் வஜீரின் வயிற்றில் தலையால் முட்டிய வாறு அவனைத் தன் தலைக்குப் பின்னே எறியப் பல தடவைகள் முயன்றான். ஆனால் வஜீர் தன் உடல் கனம் முழுவதாலும் அவனை நசுக்கியபடி அவன் மேல் சாய்ந்தான். தன் நுரையீரல்கள் இடம் பெயர்ந்து விட்டதாகவும், இருதயம் உண்டையாகத் தொண்டைக் குழிக்கு உருண்டு வந்து விட்டதாகவும் ஐதாருக்குத் தோன்றியது. வெகு நேரம் நேர்மையுடன் மற்போர் புரிந்தார்கள். மல்லர்களில் ஒருவனும் எதிராளியின் காலை இடறி விடவோ, வேறு ஏதேனும் மோசடி செய்யவோ முயலவில்லை. திடீரென்று வஜீர் பலத்தைத் திரட்டிக் கொண்டு ஐதாரை மார்புடன் சேர்த்து இறுக்கி, ஒரே வெட்டில் உயரத் தூக்கினான். கீறல்கள் நிறைந்த ஐதாரின் வெறும் பாதங்கள் தரையில் பாவாமல் கிளம்பி, தம் வசமின்றிக் காற்றில் ஆடின. ஆனால் வஜீரும் நிலை கொள்ளாமல் தள்ளாடி, தன் எதிராளியோடு முகங் குப்புறத் தரையில் விழுந்தான். அதே கணம், இறுக்கம் நிறைந்த நிசப்தத்தில் ஏதோ சடசடப்பு ஒலித்தது. வஜீருடைய நீலச் சட்டையின் நீண்ட துண்டுகள் தரையில் கிடந்த ஐதாரின் கைகளில் காணப்பட்டன.

என்ன நடந்தது என்று முதலில் ஒருவருக்கும் புரியவில்லை. ஆனால் வஜீர் எழுந்ததும், அவனுடைய வியர்த்து வடிந்து சூடேறிய உடம்பில் சட்டைக் கைகளும் நுகம் போலத் தொங்கிய கழுத்துப் பட்டையும் மட்டுமே மிஞ்சி இருந்ததை எல்லோரும் கண்டார்கள்.

''ஹ-ஹா-ஹா! எப்பேர்ப்பட்ட வீரத் தோற்றம் உனக்கு! என்று கெக்கலித்தான் அப்துல்லா.

கல்லில் விலா படும்படி விழுந்த ஐதார் வலியை மறந்து விட்டு அப்துல்லாவோடு சேர்ந்து கொண்டான்.

''ஹ-ஹா! புலித்தோல் அணிந்த வீரன்!''* என்று சிரித்தான்.

எதையும் சந்தேகிக்காத வஜீர் முகத்து வேர்வையைத் துடைத்துக் கொள்வதற்காகச் சட்டை விளிம்பைப் பிடிக்கக் கைகளை நீட்டினான், ஆனால் அவனுடைய வெறும் வயிற்றில் தான் அவை பட்டன. ஐதாரின் கைகளில் இருந்த நீலத் துணித் துண்டுகள் தன் சட்டையிலிருந்து கிழிந்தவை என்பதை அப்போது தான் அவன் ஊகித்துக் கொண்டான்.

கழுத்தில் தொங்கிக் கொண்டிருந்த கழுத்துப் பட்டையின் மிஞ்சிய துண்டைத் தொட்ட வஜீர் கர்வத்துடன் தலை நிமிர்ந் தான்.

''தலை முழுதாக இருந்தால் சட்டை தானே கிடைக்கும்!'' என்றான்.

ஒரு சட்டை கிழிந்து விட்டதற்காக உரக்க அழவோ சண்டை போடவோ கிளம்பும் வகையான பையன் அல்ல வஜீர். இந்த மாதிரி அற்ப விஷயங்களைப் பொருட்படுத்துவது அவசியம் என்று அவன் நினைக்கவில்லை... தவிரவும் வீட்டில் வஜீரிடம் இன்னொரு சட்டை இருந்தது. வெயிலில் ஒரேயடியாகச் சாயம் போய் விட்ட தால் அதன் நிறத்தை நிச்சயமாகச் சொல்வது அதன் சொந்தக் காரனுக்கே இப்போது கடினமாய் இருக்கும், ஆனால் இதுவும் அவ்வளவு முக்கியம் அல்ல.

---

* புலித்தோல் அணிந்த வீரன்—ஜார்ஜியக் காவியங்களில் வருணிக்கப்படும் வீரன்.—மொழிபெயர்ப்பாளர்.

குளிரும் ஈரிப்பும் உள்ள இருட்டு பள்ளத்தாக்கில் கவிந்தது. குஸ்தி நடந்த இடம் ஒரேயடியாக மிதிபட்டு மெதுவாகி இருந்தது. மல்லர்களோ, முடிவான நடவடிக்கைகள் தொடங்காமல் சுற்றியும் அக்கம் பக்கமாகவும் வெறுமே சுழன்று கொண்டிருந்தார்கள். வஜீரின் சதைப் பற்றுள்ள முதுகில் வியர்வை துளித்து விட்டது. அப்துல்லாவின் சட்டையிலோ, ஈரக் குறியையே காண வில்லை. ''சாதிப் புரவிக்கு வேர்ப்பதற்குள் மட்டக் குதிரைக்கு உயிர் போய் விடும்'' என்று அப்துல்லா போன்றவர்களைப் பற்றிச் சொல்வதுண்டு. சாதிப் புரவி போல இருந்தான் அவன். ஆனாலும் வஜீரின் விருப்பப்படி வீணே சுழன்று கொண்டிருப்பது அப்துல்லா வுக்கு முடிவில் அலுத்துப் போய் விட்டது. திடீரென்று அவன் சட்டெனக் குனிந்து, வஜீரைத் தன் மேல் குப்புறச் சாய்த்துக் கொண்டு, தோள்கள் மேல் தூக்கி, தலைக்குப் பின்னே எறிந்து விட்டான். சாமர்த்தியமான இந்த உத்தியை எதிர்பாராத வஜீர் சாக்கு மூட்டை போலத் தரையில் விழுந்தான். குஸ்தி திடுதிப் பென்று முடிந்து விடவே, தாங்கள் அவ்வளவு விடாப்பிடியாகப் போட்டி போட்டது எதற்காக என்பது பையன்களுக்கு உடனே நினைவு வரவில்லை. அதை முதலில் நினைவு கூர்ந்தான் ஐதார்.

''தேர்தல்கள் முடிந்து விட்டன. நம் தலைவன் நம்மைத் தன் தலைமையில் ஏற்றுக் கொள்ள வேளை வந்து விட்டது'' என்று சொன்னான் அவன்.

நான்கு விழிகள் ஒரே நேரத்தில் அப்துல்லாவை ஆவலுடன் பார்த்தன. எல்லோரையும் விடப் பெரிய மேம்பாடு அப்துல்லா வின் தரப்பிலேயே இருந்தது. அவனே மற்றவர்களைக் காட்டிலும் துணிந்தவனாகவும் பலசாலியாகவும் இருந்தான்.

மனத்தாங்கலையும் வன்மத்தையும் அறியாத வஜீர் முதலில் சொன்னான்:

''விரும்பினால் எங்களை நெருப்பில் இட்டுப் போ, விரும்பினால் நீரில் செலுத்து! நாங்கள் உன் விசுவாசம் உள்ள துணைவர்கள்!''

அப்துல்லாவின் உள்ளம் உருகி விட்டது. ''நண்பர்களே! நாம் படித்தோமே ஒரு கதை, அதில் கூட இப்படித்தானே வருகிறது!

மூன்று நண்பர்கள். ஒருவன் ஒட்டக்காரன், இரண்டாமவன் குறி தவறாத வில்லாளி, மூன்றாமவன் மல்லன்!'' என்றான்.

''ஆனால் ஒருவன்தான் தலைவனாக இருப்பான்.''

''நீ எங்கள் தலைவன்! உனக்கு வெற்றி கூறுகிறோம்: ஹுர்ரா! என்று முழங்கினான் ஐதார்.

''ஹுர்ரா!'' என்று வஜீர் உரக்க முழங்கவே, மலைகள் கூட ''ஹுர்ரா!'' என்று பலத்த எதிரொலி செய்தன.

அப்துல்லா தன் உடையிலிருந்த புழுதியைத் தட்டிப் போக்கி, இடைவாரைச் சரிப்படுத்திக் கொண்டு, தலைவனுக்கு ஏற்ற கண்டிப் பான குரலில் தன் முதலாவது உத்தரவை அறிவித்தான்:

''கிராமத்தைக் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட குழு வுக்கு 'முக்காலி' என்ற பெயர் சூட்டப்படும். சம்மதமா?''

''சம்மதம். முக்காலிக்கு மூன்று கால்கள் உண்டு, நாமும் மூன்று பேர். நம் பஷ்கீரியாவில் இந்தப் பெயர் உள்ள நடனம் கூட இருக்கிறதே'' என்றான் வஜீர்.

ஐதார் தலை அசைப்பால் இசைவைத் தெரிவித்தான்.

வரலாற்றுச் சிறப்புள்ள இந்த முடிவை எடுத்த பின் பையன் கள் ஒருவர் தோளை மற்றவர் தழுவியவாறு வீடுகளுக்கு நடந் தார்கள்.

அந்த நிமிடங்களில் 'முக்காலி' வலுவானதாகத் தோன்றி யது. அதன் கால்களான இவர்களோ, நட்பையும் விசுவாசத்தை யும் பற்றிய முறிக்க முடியாத சபதத்தால் வாழ்நாள் முழுவதும் ஒருவரோடு ஒருவர் இணைந்தவர்களாக இருப்பதை உணர்ந்தார் கள்.



வஜீரின் முதல் தவறு

குறி தவருமல் கவண் வீசும் வஜீரின் உள்ளம் களி துள்ளியது. வலது கையால் தலைவனை அணைத்தவாறு நடந்து கொண்டிருந்தான் அவன். பன்னிரண்டு வயது வரை தான் சாதாரண மனிதனுக வாழ்ந்து விட்டதாகவும் மேற்கொண்டும் சாதாரண மனிதனுக வாழ்வான் என்றும் எண்ணமிட்டான். எல்லோரும் தலைவர்களாக இருக்க முடியாதே. ஆனுல் இப்போது அவன் ''முக்காலி''யின் நம்பகமான ஆதாரம் ஆகிவிட்டான். அவன் இல்லாவிட்டால் ''முக்காலி'' சரிந்து விடும்,

சந்தேகமே இல்லை! அவ்வளவு அவசியமான மனிதன் ஆகி விட்டான் அவன்! யாருக்காவது மகிழ்ச்சி ஏற்படுத்த வேண்டும், ஏதாவது நல்ல, பரிவுள்ள காரியம் செய்ய வேண்டும், என்று வஜீருக்கு விருப்பம் உண்டாயிற்று. சராயின் இடது பையைத் தொட்டுப் பார்த்தான். அவனுக்கு மிகுந்த மதிப்பு உள்ள ஒரு சாமான் அதில் இருந்தது. அதைத் திருப்தி ஏற்படும் அளவுக்குப் பார்த்து மகிழ அவனுக்கே இன்னும் நேரம் கிடைக்கவில்லை.

''நண்பர்களே!'' என்று எதிர்பாராத விதமாக அழைத்தான். ''ஆயுதம் இல்லாமல் இருப்பது தலைவனுக்கு அசௌகரியம்'' என்று சொல்லி, எலும்புப் பிடி வைத்த பழைய கத்தியைப் பையிலிருந்து எடுத்து, பெருந்தன்மையுடன் அதைத் தலைவனிடம் நீட்டினான் ''இந்தா, அப்துல்லா, எடுத்துக் கொள்!'' என்றான்.

தலைவனும் ஒட்டக்காரனும் வியப்பால் மலைத்துப் போனார்கள். அவர்களுடைய விழிகள் அகல விரிந்து கத்தியை ஆவல் பொங்க நோக்கின. அபூர்வமான, விலை மிக்க பொருள் அவர்கள் முன்னே இருந்தது!

''இதை எங்கிருந்து எடுத்தாய்?'' என்று பயத்துடன் கேட்டான் அப்துல்லா.

''கேட்காதே! கொடுப்பதை வாங்கிக் கொள்! என்று வாய் விட்டுச் சிரித்தான் வஜீர்.

ஆனால் பரிசை எடுத்துக் கொள்ளத் தலைவன் அவசரப்படவில்லை. ஆம், கத்தி அவனுக்குப் பிடித்திருந்தது, நிரம்பப் பிடித்திருந்தது! அதை எடுக்கக் கையை நீட்டக் கூட வந்தான், ஆனால் ஓர் எண்ணம் அவனைத் தடுத்தது. ''இவ்வளவு அருமையான கத்தி வஜீரின் கையில் தவறுதலாக அகப்பட்டிருக்குமோ?'' என்று நினைத்தான். இந்த வில்லாளியின் கைகளில் எவை எவையோ சாமான்கள் இருந்தாற் போலிருந்து ''தற்செயலாக'' அகப்பட்டு வந்ததை அவன் நினைவு படுத்திக் கொண்டான்.

''எங்கிருந்து எடுத்தாய்? உள்ளதைச் சொல்லு. இல்லாவிட்டால் உன் கத்தியை விரல் நுனியால் கூடத் தொட மாட்டேன்!'' என்று கண்டிப்பாகச் சொன்னான்.

''இன்னும் என்ன உள்ளதும் இல்லாததும்?.. கொடுத்தால் வாங்கிக் கொள், அவ்வளவுதான்!''

''இல்லே, நான் இப்படி எடுத்துக் கொள்ள மாட்டேன்! எங்கிருந்து எடுத்தாய் என்று கேட்கிறேனே, சொல்லு!''

வஜீர் தயங்கினன்.

''எங்கிருந்து என்று கேட்கிருயா... உள்ளதைச் சொல்வதானல்...''

''என்ன, உள்ளதைச் சொல்வதானல்?''

''சரியான உண்மையைச் சொல்வதானல், நான் இதை ஷரீபுல்லாவின் பையிலிருந்து அசத்தினேன்'' என்று முடிவில் கூறிவிட்டு, தான் சொல்ல வேண்டாததைச் சொல்லி விட்டதாக உணர்ந்து, ''என்ன, பிடிக்கவில்லேயோ?'' என்று கேட்டான்.

கடுங் கோபம் அடைந்த அப்துல்லாவின் விழிகள் நெருப்பைச் சிந்தின.

''திருடினுயா?'' என்று வியப்பும் கோபமும் பொங்கக் கூவினன் அவன். இரண்டு நண்பர்களேயும் வெவ்வேறு பக்கங்களில் தள்ளிவிட்டு, வஜீரின் கிட்டத்தில் போய், ''திருடவா செய்தாய், நாய்ப் பயலே?'' என்று கேட்டான்.

''திருடவில்லே, எடுத்துக் கொண்டேன். பையிலிருந்து கத்திப் பிடி துருத்திக் கொண்டிருந்தது...'' என்று கொஞ்சம் பின்னே நகர்ந்து தன் செயலுக்கு நியாயம் கற்பிக்க முயன்ருன் வஜீர்.

ஆனல் அப்துல்லா அவன் கன்னத்தில் ஓங்கி ஓர் அறை விட்டான்.

''திருட்டுப் பயலே!''

அவன் இன்னெரு தரம் கையை ஓங்கினன், ஆனல் ஐதார் அவனேத் தடுத்தான்.

''கைகளே அழுக்காக்கிக் கொள்ளாதே!'' என்று இகழ்ச்சியுடன் சொன்னன்.

கோப மிகுதியால் தலேவனுக்கு மூச்சு திணறியது. வஜீரைச் சுட்டிக் காட்டி, தன் இரண்டாவது உத்தரவை அறிவித்தான்:

''எலும்புப் பிடி வைத்த கத்தியை மேய்ப்பர் ஷரீபுல்லாவிட

மிருந்து திருடியதற்காக வஜீரை நம்முடைய ''முக்காலி''யிலிருந்து நீக்குவோம். அவனை நம் தோழனுக மதிக்க மாட்டோம், அவனுடன் கை குலுக்க மாட்டோம், அவனோடு பேச மாட்டோம்! அவமானம்!''

''திருடனுக்கு அவமானம்!'' என்று திருப்பிச் சொன்னுன் ஐதார்.

வானத்திலிருந்து தரையில் தடாலென்று விழுந்தது போல் இருந்தது வஜீருக்கு. அவனுடைய உளக் களிப்பின் சுவடு கூட எஞ்சி இருக்கவில்லை. தலையைத் தொங்க விட்டுக் கொண்டு தரையைப் பார்த்தான். அங்கே தன் பொந்திலிருந்து மெதுவாக வெளி வந்த சாண வண்டு ஒன்று இங்கும் அங்கும் பார்வை செலுத்தி விட்டு அவசரப் படாமல் தன் வழியே ஊர்ந்து போனதைக் கண்டான். வண்டின் நிலைமை வஜீரின் நிலைமையை விட எவ்வளவோ நன்ருய் இருந்தது. குளிர்ந்த மாலைக் காற்றில் சட்டைக் கிழிசல்கள் படபடத்தன. அழுக்குத் தடங்களை விட்டவாறு நெற்றியிலிருந்து பெருகிற்று வேர்வை, சிவந்த இமைகள் மிக மிக அடிக்கடி கொட்டின. தப்பிய கழுத்துப் பட்டையில் இருந்த பெரிய வெள்ளைப் பொத்தான் மட்டுமே தன் வழக்கமான இடத்தில் அமைதியாக நிலைத்திருந்தது. அவனுடைய உடம்பு முழுவதிலும் இருந்த ஒரே வெண் புள்ளி அதுதான். வஜீரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனுல் அவனுடைய தோழர்களின் உரமேறிய நெஞ்சங்களில் இரக்கத்துக்கு இடம் இல்லை. தலைவனின் உறுதியான தீர்மானம் மாற்றப்படாமல் அப்படியே இருந்தது.

குனிந்த தலை நிமிராதிருந்த வஜீருக்குத் தலைவனின் மூன்ருவது கடுமையான உத்தரவும் கேட்டது: சொந்தக்காரர் ஷரீபுல்லாவுக்குக் கத்தி தாமதமின்றித் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். வஜீர் அவர் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க வேண்டும். அவன் இப்படிச் செய்யாவிட்டால் 'திருடன்' என்ற வெட்கக் கேடான பட்டப் பெயர் ஊர் முழுதிலும் பரப்பப்படும்.

பிறகு தலைவன் இரக்கம் இல்லாமல் மறுபடி சொன்னுன்:

''வஜீர் திருடன்! நம்மில் யாரும் அவனோடு கை குலுக்க மாட்டோம், யாரும் அவனோடு பேச மாட்டோம்.''


''முக்காலி''யைச் சேர்ந்த இருவர் சட்டெனத் திரும்பி வீட்டுக்குப் போய் விட்டார்கள். மூன்றாவது கால், ஆக்கங் கெட்ட வஜீர், தன்னந் தனியாக இருந்தான். நன்றாக இருட்டி விட்டது, ஆனால் அவனோ, இன்னமும் நின்றவாறு தனது துன்பத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்தான். கத்தியைச் சொந்தக்காரரிடம் தாமதம் இன்றித் திருப்பிக் கொடுக்க வேண்டும் என்ற தலைவனின் கடைசிக் கட்டளை வஜீரைச் சிறப்பாக இக்கட்டான நிலைமையில் வைத்தது. மறு நாளே உலகம் முடிந்து விடும் என்று இருந்தால் இந்தக் கட்டளையை நிறைவேற்ற அவன் எண்ணியே இருக்க மாட்டான். ஆனால் உலக முடிவு எதிர்பார்க்கப்படவில்லை, ஆகவே, இன்னும் கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்து விட்டு, பண்ணைக்கு மெதுவாக நடந்தான் வஜீர். அதே சமயத்தில் மேய்ப்பர் ஷரீபுல்லா வேலையை முடித்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார். அவர்கள் வழியில் சந்தித்தார்கள்.

''மாமா'' என்று கூச்சத்துடன் சொன்னான் வஜீர். ''இதோ உங்கள் கத்தி... குக்ரேக் மலைச் சரிவில் இதைத் தற்செயலாகக் கண்டேன்...''

உண்மையைச் சொல்லி மன்னிப்பு கேட்பதற்கு வேண்டிய துணிவு வஜீருக்குப் போதவில்லை. ஆனால் மேய்ப்பருக்கு இந்த விஷயமே தெரியாதபடியால் அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்.

''சபாஷ், அருமையான பையன்! உனக்கு நன்றி! நீ நேர்மை உள்ளவன்!'' என்றார் ஷரீபுல்லா.

''நன்றி என்ற ஒரு சொல் ஆயிரம் துன்பங்களிலிருந்து காக்கிறது'' என்று பழங்காலத்தில் சொல்லி வந்தார்கள். ஆனால் ஷரீபுல்லாவின் புகழ்ச்சியோ, அவர் சொன்ன ''நன்றி'' என்ற சொல்லோ, நண்பர்களின் இழப்பு என்ற முக்கியமான துன்பத்திலிருந்து வஜீரைக் காக்கவில்லை.



வீட்டு விவகாரங்கள்

இப்போது பையன்களின் வீடுகளுக்குள் பார்வை செலுத்துவோம். யாரிலிருந்து தொடங்குவது? தலைவனிலிருந்தே தொடங்குவோம். இல்லாவிட்டால் கோபித்துக் கொள்வான்.

அப்துல்லாவின் குடும்பத்தில் மூன்று பேர். அவனுடைய தாயார் பால் கறப்பவளாக வேலை செய்து வந்தாள். கோடைகாலம் தொடங்கியது முதல் அவள் தொலைதூர மேய்ச்சல் நிலங்களுக்கு வேலை செய்யப் போய் விட்டதால் அப்துல்லா பாட்டி நகிமாவோடு இருந்தான். அப்துல்லாவின் தகப்பனார் முகம்மது போரில் கொல்லப் பட்டார். அக்கார்டியன் வாத்தியம் வாசிக்கும் முகம்மதை ஊர்க் காரர்கள் இன்னமும் நினைவு வைத்துக் கொண்டிருந்தார்கள்.

முகம்மதுவின் மரணச் செய்தி அடங்கிய பயங்கரக் கடிதம் போர் முடிவதற்கு இரண்டு வாரங்களுக்கு முன்னால் வந்தது. ''தாய்நாட்டுக்காகச் சண்டையில் வீர மரணம் அடைந்தார்'' என்று அதில் எழுதி இருந்தது. அம்மாவும் பாட்டியும் வெகு நேரம் கண்ணீர் பெருக்கியவாறு அழுது கொண்டிருந்தார்கள். பிறகு அவர்கள் ஒரேயடியாகப் பேச்சற்றுப் போனார்கள். சில வேளை களில் ஒரு நாள் முழுவதும் அவர்களில் ஒருவரும் ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அப்துல்லாவுக்கு அப்போது ஏழு வயது கூட ஆகவில்லை. ஆனாலும், தன் வீட்டுக்கு எவ்வளவு பெரிய துன்பம் வந்திருக்கிறது என்பதைத் தன் சின்ன இதயத்தால் அவன் உணர்ந்து கொண்டு விட்டான். இந்தப் பெருந்துயரத்தைத் தங்களுக்குத் தோன்றியபடி தாங்கிக் கொள்வதில் பெரியவர்களுக்கு அவன் இடைஞ்சல் செய்யவில்லை.

தகப்பனாரின் பஞ்சு வைத்துத் தைத்த பழைய கோட்டைப் போட்டுக் கொண்டு வாயிலின் பக்கத்தில் இருந்த கல் மேல் மணிக் கணக்காக உட்கார்ந்திருப்பான். அந்த ஆண்டு வசந்த காலம் தொடங்கிய போதே வெதுவெதுப்பாக இருந்தது. ஏப்ரல் முடிவதற்குள்ளேயே புல் தளதளவென்று வளர்ந்து விட்டது, பட்சிகள் பாடத் தொடங்கி விட்டன, ஏரிகளில் வெண் மீன்கள் நீந்தி விளையாடின. தெருவோடு போன பெண்கள் அப்துல்லாவின் வீட்டுக்குப் பக்கத்தில் நிமிட நேரம் நின்று, சிறுவனைக் கண்டதும் ''பாவம்...'' என்று தங்களுக்குள் கிசுகிசுத்துக் கொண்டார்கள். சிலர் சட்டைக்கை விளிம்பால் கண்களை இரகசியமாகத் துடைத்துக் கொண்டார்கள். தகப்பனார் என்றால் என்ன, அவர் எதற்காக வேண்டும் என்பதை அப்துல்லா அப்போது நன்றாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனாலும் விளங்காத ஆழ்ந்த துயரம் சிறுவனின் உள்ளத்தில் புகுந்து விட்டது. ''வீரத்துக்காக'' முகம்மது பெற்ற பதக்கம் பிறகு, கொஞ்ச காலம் கடந்த பின், வந்து சேர்ந்தது. போர்முனைத் தோழர்கள் அதை அனுப்பி இருந்தார்கள். அது முதல் இந்த ஆறு ஆண்டுகளாக நகிமா பாட்டி ஒவ்வொரு வியாழக் கிழமை அன்றும் இந்தப் பதக்கத்தைப் பளிச்சிடும்படி தேய்த்துத்

துடைத்து, மகனுடைய புகைப்படத்தின் அடியில் பொருத்தி வைக்கிறுள். அலமாரிக்கு மேலே, கறுப்பாகி விட்ட சட்டத்தில் தொங்குகிறது அந்தப் படம்.

அன்றும் வியாழக் கிழமை. அப்துல்லா வீட்டுக்குள் புகுந்த போது நகிமா பாட்டி உட்கார்ந்து அப்பாவின் பதக்கத்தைத் துப்புரவு செய்து கொண்டிருந்தாள்.

''தகப்பன் இல்லாத பையன் கடிவாளம் இல்லாத குதிரைக் குச் சமம். என் பேச்சைக் கேட்பதை அறவே விட்டு விட்டாய்! இருட்டும் வரை எங்கே தொலேந்திருந்தாய் பேய்களின் பின்னே?'' என்று எரிந்து விழுந்தாள் பாட்டி. ''நீ யகூப்பைக் கொஞ்சமாவது எடுத்துக்காட்டாக வைத்துக் கொண்டாயானுல் நன்ருய் இருக்கும். அவன் எப்போது பார்த்தாலும் வீட்டின் பக்கத்திலேயே வளேய வருகிருன். வேளா வேளேக்குச் சாப்பிடுகிருன்! அவனுடைய துணி மணிகளும் எப்போதும் துப்புரவாய் இருக்கின்றன! பார்க்கவே சந்தோஷம் உண்டாகிறது. நீயோ, ஓயாமல் வஜீரின் பின்னே சுற்றிக் கொண்டிருக்கிருய்! உன் தலேயும் சந்தமும் பார்க்கவே சகிக்கவில்லே! ஓ அல்லாவே!''

''பாட்டீ, வஜீர்தான் என் பின்னே சுற்றுகிருன். நான் இடம் கொடுத்திருந்தால் மேற்கொண்டும் சுற்றி இருப்பான், சந்தேகம் இல்லாமல்'' என்று வாய்க்குள் முணுமுணுத்தான் அப்துல்லா.

சாதாரணச் சிறுவனுன தன் பேரன் அப்துல்லா ''முக்காலி'' யின் தலேவன் ஆகி விட்டான் என்று நகீமா பாட்டி நினேக்கவே இல்லே என்பது தானே விளங்கும். தெரிந்திருந்தால் அவள் வேறு விதமாகப் பேசி இருப்பாள்...

''யகூப்பை உதாரணமாக வைத்துக் கொண்டாயானுல் நன் ருய் இருக்குமே'' என்று தொடர்ந்து பொடுபொடுத்தாள் பாட்டி.

''அட விடுங்களேன் பாட்டீ இந்த யகூப்பை!'' என்ருன் அப் துல்லா.

வீதியில் இருந்த பையன்கள் எல்லோரிலும் அதிக அமைதி யும் கீழ்ப்படிவும் உள்ளவனுக விளங்கினுன் யகூப். அவனுக்கு எந்த விதமான திறமைகளும் கிடையவே கிடையாது என்ருலும் படிப்

பிலும் அவன் அடி மட்டத்தில் இருக்கவில்லை. விடா முயற்சியால் எப்போதும் மேலே வந்து கொண்டிருந்தான். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்களும் வீட்டில் அம்மாக்களும் பாட்டிகளும் தங்கள் பையன் களைக் கோபித்த போது, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர் களுக்கு உதாரணமாக யகூப்பைக் காட்டினார்கள். சண்டைக்கும் களி பொங்கும் விளையாட்டுக்கும் பிறகு பையன்களுடைய சட்டை கள் புழுதியும் அழுக்கும் படிந்த கந்தைகள் ஆகி விட்ட போதும், சிறுவர்கள் அடித் தழும்புகளும் முழைப்புக்களுமாக வீடு திரும் பிய போதும், ''நீ யகூப்பை எடுத்துக்காட்டாக வைத்துக் கொண் டால் நன்றாய் இருக்குமே'' என்ற ஒரே பல்லவிதான் அவர்கள் காதுகளில் படும்.

இந்த எல்லாவற்றின் காரணமாகவும் ''எடுத்துக்காட்டான யகூப்'' என்ற பட்டப் பெயர் பாவம் யகூப்புடன் தானாகவே ஒட்டிக் கொண்டது.

மற்ற சிறுவர்கள் யகூப்பின் மனம் புண்படும்படி அடிக்கடி பேசினார்கள், சில வேளைகளில் அடிக்கவும் செய்தார்கள். ஆனால் யகூப் யாரையும் அடிப்பதற்காக ஒரு போதும் கை ஓங்கியதில்லை, யாருடனும் வாய்ச் சண்டை போட்டதில்லை, யாரைப் பற்றியும் குறை சொன்னதில்லை.

பாட்டியின் கண்டனங்கள் இந்தத் தடவை போதிய விரை வில் முடிந்து விட்டன. அப்துல்லாவுக்காகக் காத்திருந்தது ஒரு தட்டு பொங்கல். அதிலிருந்து அனேகமாகக் கண்ணுக்குத் தெரி யாத ஆவி கிளம்பிக் கொண்டிருந்தது. தான் பேரனைக் கோபித்து முடிவதற்குள் பொங்கல் நன்றாக ஆறி விடுமோ என்று பாட்டி பயந்தாள்.

''கைகளை நன்றாக அலம்பி விட்டு உட்காரு!'' என்று கட்டளை இட்டாள் பாட்டி. பின்பு பெருமூச்சு விட்டு, துப்புரவாக்கிய பதக்கத்தை மகனுடைய படத்துக்கு அடியில் தொங்க விட் டாள்.

மேசைக்கு மேலே விளக்கு பிரகாசமாக எரிந்து கொண்டி ருந்தது. மின் விளக்கின் ஒளியில் வெள்ளிப் பதக்கம் சுடர் வீசிப்

பளிச்சிட்டது. ஒரு பருக்கை மிச்சம் இல்லாமல் பொங்கலை எல்லாம் சுரண்டித் தின்னும் வரை அப்துல்லா இன்று பதக்கத்திலிருந்து பார்வையை அகற்றவே இல்லை.

என்ன ஆனாலும் தலைவனுக்கு வீட்டில் திட்டு மட்டும் இன்றி, ருசியான பொங்கலும் கிடைத்தது.

வஜீரின் தாயார் குர்பான்பிகா வீதி முழுவதிலும் கேட்கும் படியான காட்டுக் கூப்பாட்டுடன் மகனை வரவேற்றாள். என்ன செய்வது, குர்பான்பிகாவின் சுபாவம் அவ்வளவு மோசமானது! பசு மாடு மந்தையிலிருந்து திரும்பாவிட்டால், அவள் வீதி நெடுகக் கேட்கும்படி ஒப்பாரி வைப்பாள்:

''இந்தப் பாழும் பசுவின் குடலை ஓநாய்கள் கிழித்தாலாவது நன்றாய் இருக்குமே. அப்படி நடந்தால் நான் சந்தோஷப்பட்டு எழ்மாகோல் முல்லாவுக்கு நானாகவே பிச்சை போடுவேனே!''

கோழிகள் காய்கறித் தோட்டத்தில் புகுந்து விட்டால் குர் பான்பிகாவின் பழக்கமான கூச்சல் அண்டை அயலாரின் செவி களைத் துளைக்கும்:

''இதுகள் கழிச்சல் கண்டு செத்துத் தொலைந்தால் தேவலை யே! தொல்லைகள் குறையும், எனக்கு நிம்மதி ஏற்படுமே! உஷ்-உஷ்!''

கோழிகளும் பசுவும் இல்லாவிட்டால் என்னதான் செய்வாள் குர்பான்பிகா?

வீட்டுக்குள் புகுவதற்கு முன் வஜீர் நீலச் சட்டையின் மிச்சங் களை எச்சரிக்கையாகக் கழற்றிச் சுருட்டிக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டான். கதவைத் திறந்ததுமே தாயாரின் பயங்கரக் குரல் அவன் காதில் பட்டது:

''வஜீர்! வெட்கங் கெட்ட பயலே! நீ வீட்டுக்குள் வா சொல் கிறேன்! உன் தோலை உரித்து விடுகிறேன், படுக்காளி! நீ எங்கே யாவது விழுந்து கழுத்தை முறித்துக் கொள்ள! ஏதாவது செய்ய வேண்டும்] என்றால் வலு| போதவில்லை, விளையாடவும் பையன் களோடு ஓடிச்சாடவும் வேண்டும் என்றால், எல்லோருக்கும் முன்னே

வருவாய்! யகூப்பின் உதாரணத்தைத் துளியாவது பின்பற்றப் படாதோ...''

தன் பன்னிரண்டு வயது வாழ்க்கையில் இந்த மாதிரி அதட்டல்கள், மிரட்டல்களை வஜீர் நிறையக் கேட்டிருந்தான். ஆகையால் முன்னமே சமாதானம் அடைந்து, தன் விதியை எதிர்கொள்ள மௌனமாக முன்னே வந்தான். ஆனால் இடையே ஒன்று சொல்லிவிட வேண்டும். வஜீரின் தாயார் குர்பான்பிகாவுக்கு நாக்கு கொடுமையானது என்றாலும் அவள் ஒருபோதும் மகனை அடித்தது கிடையாது. சட்டையாய் இருந்த கிழிசலை முன்னறையில் பெட்டிக்குப் பின்னால் மறைத்து வைத்து விட்டு வஜீர் வீட்டுக்குள் வந்தான். தகப்பனார் சமிகுல்லா வீட்டில் இல்லை, வேலைக்குப் போயிருந்தார். போரில் ஒரு காலை இழந்து விட்ட அவர் கூட்டுப் பண்ணைக் களஞ்சியங்களைக் காவல் காத்து வந்தார். வஜீர் வீட்டுக்கு வந்த போது அவனுக்கு மூன்று வயது இளையவனான தம்பி நசீப் சுவரோடு சாய்ந்தவாறு அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். அவனுடைய கன்னங்கள் உப்பி இருந்தன. வாயில் இருந்ததை விழுங்குவதற்குள் உறங்கிப் போயிருப்பான்.

''சட்டையை எங்கே தொலைத்தாய், அறிவு கெட்டவனே?'' என்று மகன் மேல் மறுபடி பாய்ந்தாள் குர்பான்பிகா.

''இந்தக் கோடையில் சட்டை போடாமல் வளையவருவது என்று முடிவு செய்திருக்கிறேன் அம்மா. உடம்பை உரப்படுத்திக் கொள்ள வேண்டும்'' என்று அமைதியாகப் பதில் சொன்னான் வஜீர்.

''உரப்படுத்த அல்ல, உன் தோலை உரிக்க வேண்டும்! எங்கே சட்டை?''

''நான் அதை முன் அறையில் வைத்திருக்கிறேன். அதில் தையல் கொஞ்சம் விட்டுப் போயிருக்கிறது!''

''சரி சரி. அந்த மடையன் இருக்கிறானே, அப்தராஷ், அவன் மாதிரி வளைய வா. சராயையும் கழற்றி விடு...''

''எனக்கு நெஞ்சை மட்டுந்தானே வலுவாக்கிக் கொள்ள வேண்டும் அம்மா...''

குர்பான்பிகாவின் கோபம் உலர்ந்த வைக்கோல் போல் இருந்தது. அது குப்பென்று மூண்டெரியும், சட்டென்று அணைந்தும் விடும். இந்தத் தடவையும் அப்படியே ஆயிற்று.

திடீரென்று பரிவுடன், ''வா, ஆட்டுக் குட்டீ, உட்கார்ந்து சாப்பிடு'' என்றாள்.

இந்த மாதிரி, தலைவன் அப்துல்லாவுக்குப் போலவே வஜீருக்கும் கொஞ்சம் நீதி போதனைக்குப் பிறகு பரிவுகாட்டப்பட்டது, வயிறார உணவும் கிடைத்தது.

ஆனால் ஐதாரையோ,வீட்டில் யாருமே நினைவுபடுத்திக்கொள்ளவில்லை. ஒன்பது குழந்தைகளுக்கு நடுவே ஒருவன் இல்லாததை ஒருவரும் கவனிக்கவில்லை. அவன் சமையல் அறைக்குப் போய், பாத்திரத்தில் இருந்த உறை குத்திய பாலை அப்படியே எடுத்துக் குடித்து விட்டு, தீனிப்புல் பரணில் தன்னுடைய இடத்துக்கு நிதானமாகப் போய்ப் படுத்து அக்கணமே தூங்கி விட்டான்.

வஜீருக்குத் தூக்கம் வரவில்லை. அவன் வாசலுக்குப் போய், படியில் உட்கார்ந்து விண்மீன்களைப் பார்த்தான். கிரமேத்தின் மேலே தெரிந்த எல்லாவற்றிலும் மங்கலான நட்சத்திரம் தன்னுடைய நட்சத்திரம் என்று அவனுக்குத் தோன்றியது. ''என் ஒருவனுக்கு மட்டும் எதனால்தான் காரியம் பலிக்காமல் போகிறது? எதனால்?'' என்று வருத்தத்துடன் எண்ணமிட்டான் வஜீர்.

இன்னும் ஒரு நபராலும் அன்று இரவு வெகு நேரம் வரை தூங்க முடியவில்லை. தலைவன் அப்துல்லா பெருத்த பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தான். பல விதமான எண்ணங்கள் அவனைச் சூழ்ந்தன. ''முக்காலி''யின் ஒரு கால் உளுத்தது என்று தெரிந்து விட்டது. அதை உடனே சீர்படுத்த வேண்டி இருந்தது.''முக்காலி''க்கு மூன்றாவது கால் தேவைப்பட்டது. ஆனால் நம்பமான இந்த மூன்றாவது தோழனை எங்கிருந்து தெரிந்தெடுப்பது? இவ்வளவு அவசியமான, முக்கியமான பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது? யாரை ஆதரவாகக் கொள்வது?



மூன்றாவது கால்

அப்துல்லா கண் விழித்த போது பாட்டி வீட்டில் இல்லை. பையனுடைய பார்வை எதிர்ச் சுவர் மேல் நிலைத்தது. பளபளப்பான வட்டப் பதக்கம் அங்கே தொங்கிக் கொண்டிருந்தது. அப்துல்லா துள்ளி எழுந்து பதக்கத்தைச் சுவற்றிலிருந்து எடுப்பதற்காகக் கையை நீட்டியவன், பதக்கத்தைக் கையில் எடுக்க யாரையும் பாட்டி அனுமதிக்கவில்லை என்பதை நினைவுபடுத்திக் கொண்டு ஆசையை அடக்கிக் கொண்டான். தவிரவும் அதை எதற்காகத் தொட வேண்டும்? புதிய பஷ்கீரிய மாதர்கள் மாலையாகக் கழுத்தில் போட்டுக் கொள்ளும் நாணயங்களில் எல்லாவற்றையும் விடப் பெரியதைக் காட்டிலும் இது அழகானது, பெரியது என்பது தானே தெரியவில்லையா

என்ன? அல்லது, பதக்கத்தின் பளிச்சிடும் வெள்ளியில் பொறித் திருந்த குறிப்பு அப்துல்லாவுக்கு மறந்து விட்டதா? இல்லை. இந்தக் குறிப்பு அப்துல்லாவுக்கு மனப்பாடமாகத் தெரிந்திருந் தது. ஆனாலும், ஒவ்வோர் அசைக்கும் தனிப்பட்ட அழுத்தம் கொடுத்து அதை இன்னொரு தரம் உரக்கப் படித்தான்: ''வீரத் துக்காக.'' இந்தச் சொல்லின் ஆழ்ந்த பொருளை முதன் முதலாக உணர்ந்து கொண்டு, ''வீரத்துக்காக'' என்று கிளர்ச்சியுடன் மனதுக்குள் சொல்லிக் கொண்டான். வெள்ளியில் பொறித்த ''வீரத்துக்காக'' என்ற குறிப்பின் அர்த்தத்தை அப்துல்லா அன்று வரை ஆழ்ந்து யோசித்துப் பார்த்ததில்லை. அதாவது, அவனுடைய தகப்பனார் வீரர் என்று அர்த்தம் ஆகிறது. அப்படியானால் அவரை ''முகம்மது-பத்தீர்'' (வீரர் முகம்மது) என்று ஒருவரும் சொல்லாதது ஏன்? ஒருவருக்கும் தெரியாது போலிருக்கிறது...

கதைகளில் வரும் வீரன் இறந்தால் தன்னுடைய வாளையும் கேடயத்தையும் அம்பறாத் தூணியையும் அம்புகளையும் தன் மக னுக்கு உடைமை ஆக்குவான்... ஒருவேளை அப்துல்லாவின் தகப் பனாரும் சொல்லி இருப்பார்: ''என்னுடைய பதக்கத்தை என் மகனுக்குக் கொடுங்கள். என் நினைவாக அதை அவன் மாட்டிக் கொள்ளட்டும்.'' கட்டாயமாக அவர் அப்படித்தான் சொல்லி இருக்க வேண்டும். இல்லாவிட்டால் தகப்பனாரின் தோழர்கள் இந்தப் பதக்கத்தை அனுப்பி இருக்க மாட்டார்கள்.

அப்துல்லா தகப்பனாரின் பதக்கத்தைச் சுவற்றிலிருந்து பத பாகமாக எடுத்து, காலப் போக்கில் மங்கிவிட்ட கண்ணாடியின் முன்னே நுனிக் கால்களில் எம்பி நின்று தன் வலது மார்பில் அதைக் குத்திக் கொண்டான். பதக்கம் தலைவனுக்கு நிரம்ப இசைந் தது. இனிமேல் அவன் பதக்கத்தைக் கழற்றாமல் எப்போதும் மாட்டிக் கொண்டிருப்பான். பாட்டியுடன் பேசிச் சம்மதம் பெறு வது எப்போதும் முடியும். கொஞ்ச நேரம் தொன தொனப்பாள், பிறகு நிறுத்தி விடுவாள்.

பளிச்சிடும் பதக்கமும் மார்புமாக அப்துல்லா வீதிக்கு வந்த போது விசுவாசம் உள்ள நண்பனான ஐதாரைக் கண்டான். ஐதார்

வெகு நேரத்துக்கு முன்பே வந்து விட்டான், ஆனால் உள்ளே போகத் தயங்கிக் கொண்டு வாயில் பக்கத்தில் உட்கார்ந்து பொறுமையுடன் காத்திருந்தான். அப்துல்லாவின் மார்பில் பதக்கத்தைக் கண்ட அவன் மிகுந்த வியப்பு அடைந்தான். ''இது எதற்காக? தகப்பனாரின் பதக்கங்களை விளையாட்டுச் சாமான்கள் போல மாட்டிக் கொள்ளலாமா?'' என்று எண்ணிக் கொண்டான். ஆனாலும் தலைவனுக்கு மனத்தாங்கல் ஏற்படுத்த விரும்பாததால் வெறுமே புன்னகை மட்டும் செய்தான்.

'' 'வீரத்துக்காகக்' கொடுக்கப்படும் பதக்கத்தை இருதயத்துக்கு நேர் மேலே, இடது மார்பில் அணிய வேண்டும்'' என்றான்.

தன் நண்பன் மகிழ்ச்சியையே காட்டாததால் ஆச்சரியம் அடைந்த அப்துல்லா பேசாமல் பதக்கத்தை இடது மார்புக்கு மாற்றிக் கொண்டான். தோழனின் அசட்டையால் அவனுக்குக் கொஞ்சம் எரிச்சல் கூட வந்தது.

''இந்த ஐதாருக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது'' என்று சிடுசிடுப்புடன் நினைத்துக் கொண்டான் அப்துல்லா.

பையன்கள் தங்கள் விவகாரங்களைப் பற்றிப் பேசத் தலைப்பட்டார்கள்.

''உள்ளதைச் சொன்னால், கிரமேத் தகர்ந்து சிதறி விடும் என்று ஷரீபுல்லா மாமா சொன்னது கொஞ்சம் பொய்'' என்று திடீரெனக் கூறினான் ஐதார். ''பூகம்பம் இல்லா விட்டால் மலைகள் ஒருபோதும் வெறுமே தகர்ந்து சிதறுவது இல்லை!''

''ஆனால் நம்முடைய 'முக்காலி' தகர்ந்து சிதறும்படி நீ உலுக்குகிறாய்!'' என்று கோபத்துடன் சொன்னான் அப்துல்லா. ஏற்கெனவே அவனுடைய மனநிலை கெட்டுப் போயிருந்தது. ''எதற்குப் பயப்படுகிறாய், பேடி?''

''நானா பயப்படுகிறேன்?''

''நீதான்!''

''நான் எதற்கும் பயப்படவில்லை. நீயும் வீணாகச் சிடுசிடுக்காதே'' என்று அமைதியாகச் சொன்னான் ஐதார். ''நான் வெறுமே

அப்பாவிடம் கேட்டேன். கிரமேத் சிகரத்தில் ஏரி உண்மையாகவே இருக்கிறதாம். அந்த ஏரியில் மீன்கள் கிடையாதாம். மீன் இல் லாத ஏரி பார்வை இல்லாத கண்கள் போல என்று அப்பாவும் சொன்னார். புரிந்து கொண்டாயா?''

''எதை?''

''எதையாம், எதை! நாம் அதில் மீன்களை விட்டு வளர்த் தோமானால் நிலைமை சீர்பட்டு விடும். ஏரி உயிர் பெறும்!''

''நீ தகப்பனாரிடம் இப்படியே சொன்னாயோ?''

''நன்றாய்ச் சொன்னாயே, ஒருபோதும் சொல்ல மாட்டேன்!''

நண்பன் மனதை வீணாகப் புண் படுத்தி விட்டதால் அப் துல்லாவுக்கு வருத்தம் உண்டாயிற்று.

''ஒன்று சொல்லட்டுமா, ஐதார்'' என்று மென்மையாகப் பேசத் தொடங்கினான். ''கிரமேத் கூடத் தகர்ந்து சிதறாமலே இருக்கட்டும். மக்களுக்காக ஓர் ஏரி முழுவதிலும் நாம் மீன்களை விட்டு வளர்ப்போம் என்பதும் நல்லதுதானே! மீன் எல்லாருக்கும் வேண்டி இருக்கும்! ஆனால் நாம் எதனால் பிடிப்போம்? எல்லா வற்றுக்கும் முன்னே மீன் வளர்ப்புக் கூடை பின்னுவது நமக்கு அவசியம். பிடிக்கும் மீனை எல்லாம் அதில் சேமித்து வைப்போம். வாள் ஏரியின் மறு கோடியில் நாணல் அடர்ந்த வாய்ப்பான இடம் இருக்கிறது. மீன் அங்கே நன்றாகப் பிடிபடுகிறது!''

''மீன் வளர்ப்புக் கூடையை நான் ஒரு நொடியில் பின்னி விடுவேன்'' என்றான் ஐதார்.

அன்றே வாள் ஏரியின் மறு கோடிக்குப் போய் வில்லோவால் மீன் வளர்ப்புக் கூடை பின்னுவது என்று சிறுவர்கள் முடிவு செய் தார்கள். ஆனால் ''முக்காலி'' மூன்றாவது காலை இழந்து விட்டது அவர்களுக்கு மிகுந்த வருத்தம் உண்டாக்கிற்று. இந்த வஜீர் தான் எவ்வளவு அற்பன்! காரியத்தை எல்லாம் கெடுத்து விட் டானே! என்ன ஆனாலும் சரி, மூன்றாவது காலைத் தேடிக் கண்டு பிடிக்க வேண்டும்! இந்த முக்கிய விவகாரங்களை விவாதித்து வஜீரைத் திட்டிக் கொண்டிருந்த சிறுவர்களுக்கு எடுத்துக்காட் டான யகூப் திடீரென்று தென்பட்டான். நீண்ட மிலாற்றை வீசி

ஆட்டியபடி தாராக்களை ஏரிக்கு ஓட்டிப் போய்க் கொண்டிருந் தான் அவன். இரண்டு பையன்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''டேய், யகூப், இங்கே வாயேன்!'' என்று கூவி அழைத்தான் ஊதார்.

யகூப் நின்ருன்.

''நான் தான் தாராக்களை ஓட்டிப் போகிறேனே'' என்று தயக்கம் நிறைந்த மெல்லிய புன்னகையுடன் சொன்ஞன்.

''தாராக்களுக்கு வழி தெரியும். வா என்ருல் வாயேன்!''

யகூப்பால் கீழ்ப்படியாமல் இருக்க முடியவில்லை. மிலாற்றைத் தரையில் இழுத்தவாறு தோழர்களிடம் ஓடி வந்தான்.

''உட்காரு!'' என்று அவனிடம் சொன்ஞன் தலைவன்.

யகூப் பணிவாக உட்கார்ந்தான்.

''வீரன் ஆக விரும்புகிருயா?''

''விரும்புகிறேன், சந்தேகம் இல்லாமல்... ஆனுல் எப்படி வீரன் ஆவதாம்?'' யகூபின் கண்கள் பளிச்சிட்டன. அப்துல்லா வின் மார்பில் இருந்த பதக்கத்திலிருந்து பார்வையை அகற்ற அவனுல் முடியவில்லை. பின்பு ஆழ்ந்த பெருமூச்சு விட்டான். ''ஆகா, அதிர்ஷ்டசாலி என்ருல் இவன் அல்லவா அதிர்ஷ்டசாலி'' என்று அவன் சொல்லுவது போல் இருந்தது.

தலைவன் யகூபைத் தலை முதல் கால் வரையில் சோதிப்பவன் போல இன்னொரு தரம் பார்வையிட்டான். பரீட்சிக்கும் கூர்ந்த பார்வை தன் மேல் படுவதை உணர்ந்த யகூப் கூசிக் குறுகி, சிறு வனும் கதியற்றவனும் போல ஆகி விட்டான்.

''இவர்கள் என்னை என்ன செய்ய விரும்புகிருர்கள்?'' என்று கலவரத்துடன் எண்ணமிட்டான்.

ஆனுல் அவனுடைய பயம் விரைவில் அகன்று விட்டது.

அப்துல்லா அமைதியான ஆழ்ந்த குரலில் திடீரென்று அவ னேடு பேசத் தொடங்கினுன்:

''யகூப், எப்போதாவது நீ குக்ரேக் மலை உச்சியில் ஏறி இருக் கிருயா?''

''கட்டாயமாக ஏறி இருக்கிறேன்!''

''கிரமேத்தைப் பார்த்திருக்கிறாயா? அதன் சிகரம் வெள்ளை வெளேரென்று தொலைவில் தெரியுமே?''

''கட்டாயம் பார்த்திருக்கிறேன்!''

''அந்த மலையின் உச்சியில் வட்டமான ஏரி இருக்கிறது. ஆனால் ஏரியில் மீன்கள் இல்லை.''

''ஏன்? மீன் இல்லாத ஏரி கிடையாதே!''

''உண்டு போல் இருக்கிறது. 'முக்காலி' என்ற பெயர் உள்ள எங்கள் குழு அங்கே மீன்களை விட்டு வளர்க்க முடிவு செய்திருக்கிறது. மூன்றாவது ஆளாக எங்களோடு சேர்ந்து கொள்கிறாயா? குழுவின் தலைவன் நான்!''

யகூப் மலங்க மலங்க விழித்தான். மகிழ்ச்சியினால் வாய் விட்டுக் கூடச் சிரித்தான்.

தலைவன் மறுபடி அதே கேள்வியைக் கேட்டான்:

''சேர்ந்து கொள்கிறாயா?''

''அம்மாவிடம் கேட்கிறேன்...''

''முதுகெலும்பு இல்லாதவனடா நீ, யகூப்! இது இரகசியம். ஆமாம், தெரிந்து கொள். உன்னை வெட்டினாலும் சரி, தூக்கில் போட்டாலும் சரி, இதைப் பற்றி யாரிடமும் ஒரு வார்த்தை கூடப் பேசக் கூடாது—அம்மாவிடம் கூட. புரிந்ததா?''

அப்துல்லா நோக்கத்தை விவரமாகவும் புரியும்படியும் விளக்கினான்.

''முட்டைகள் உள்ள மீன்களை முதலில் நிறையப் பிடித்து மீன் வளர்ப்புக் கூடையில் சேமிப்போம். பிறகு வாளிகளில் கிரமேத்துக்குக் கொண்டு போவோம். தண்ணீரை மாற்றுவது அவசியமாய் இருக்கும். வழியில் அடிக்கு ஓர் ஊற்று உண்டு. உனக்குப் பயமாய் இருந்தால் இப்போதே சொல்லி விடு.''

''இதற்காகக் கோபிக்க மாட்டார்களா?''

''யார்?''

''அட அம்மாதான்...''

''கட்டாயம் கோபிப்பாள். கொஞ்சம் கோபித்துத் திட்டி

விட்டு நிறுத்தி விடுவாள். முக்கியமான புதிய செயல்களைத் தொடங்கியவர்களை முன் காலத்திலும் மற்றவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.''

எதிர் நின்ற செயலின் முக்கியத்துவம் முழுவதையும் யகூபும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லைதான். அவனுக்குக் கவர்ச்சியாய் இருந்தது வேறு ஒன்று. தோழர்களால் விலக்கி ஒதுக்கப்பட்ட அந்தச் சிறுவனுக்குத் தன் வயதுப் பையன்களுக்குச் சமமாக விளங்க வேண்டும் என்று மிகுந்த ஆசையாய் இருந்தது. அதனுல் தான் அவன் பொதுக் காரியத்துக்கு விசுவாசமாய் இருப்பதாகத் தயங்காமல் சத்தியம் செய்தான், யாரிடமும் கேட்காமல் தன் சொந்த விருப்பத்தின் பேரில் ''முக்காலி''யில் சேர்ந்து கொண்டான்.

அதோடு அதிகப்படியான இன்னும் ஒரு நிபந்தனையையும் தலைவன் அவனுக்கு விதித்தான்.

''எடுத்துக்காட்டாக இருப்பது எல்லாம் மூன்று நாட்களுக்குள் முடிந்து விட வேண்டும்! குறி தவருமல் கவண் எறியவும் நன்ருகத் துடுப்பு தள்ளவும் கற்றுக் கொள். இதெல்லாம் பயன் படும். இன்னும் ஒன்று: வஜீரோடு கை குலுக்காதே.''

''ஏனோ?

''இதைத் தெரிந்து கொள்வது இப்போது உனக்கு அவசியம் இல்லை. என்ன, எல்லா நிபந்தனைகளுக்கும் இசைகிருயா? இசைகிருய் என்ருல் ஆணையிடு!''

''இசைகிறேன், ஆணையிடுகிறேன்!'' என்ருன் ''முக்காலி'' யின் புதிய கால்.

சற்று நேர மௌனத்துக்குப் பிறகு இன்னும் ஓர் அறிக்கை செய்வது அவசியம் என்று ''முக்காலி''யின் தலைவன் எண்ணிஞன்:

''உன்னை அழைப்பது தவிர்க்க முடியாததாகி விடும் அளவுக்கு நாங்கள் போக்கு அற்றுப் போய்விட்டோம் என்று நினைக்காதே. உன்னை ஆளாக்க விரும்புகிருேம், அவ்வளவுதான். இதைத் தெரிந்து கொள்.''

''சரி'' என்று தலையைச் சாய்த்தான் யகூப்.

பெரிய பயணத்துக்குத் தீவிரமாக ஆயத்தம் செய்வது அந்தக் கணம் முதல் தொடங்கியது. பொது முடிவின்படி அப்துல்லாவும் ஐதாரும் வாள் ஏரியின் மறு கோடியில் மீன் வளர்ப்புக் கூடை பின்ன வேண்டி இருந்தது. ஆனல் யகூப் தன் எடுத்துக்காட்டான தன்மைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக இப்போதைக்கு ஊரிலேயே தங்கினுன்.

அவனுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மூன்று நாட்களில் முதல் நாள் வெகு நேரத்துக்கு முன்பே தொடங்கி விட்டது.



புகழ் தலைமுறைச் சொத்து அல்ல

ஐதார் வீதியில் இருந்தான், அப்துல்லா தன் வீட்டுக்கு ஓடினன். ஒரு ரொட்டித் துண்டையும் சேமியாவைக் கூறு போடுவதற்காக மட்டும் பாட்டி பயன் படுத்தி வந்த கத்தியையும் எடுத்துக் கொண்டு வெளியே வாசல் வரை வந்து விட்டான். அதற்குள் நகிமா பாட்டி திடீரென எதிர்ப்பட்டாள். அப்துல்லா உடனே கத்தியை முதுகுக்குப் பின்னல் மறைத்துக் கொண்டான். பாட்டி அதைக் கவனிக்கக் கூட இல்லை போல் இருந்தது. ஆனல் பேரனுடைய மார்பில் இருந்த பதக்கத்தை அவள் அக்கணமே பார்த்து விட்டாள். அவளுடைய நெஞ்சு வலியுடன் இறுகியது, முகத்தில் இருந்த சுருக்கங்கள்

மேலும் ஆழம் ஆயின, கண்களில் பெருத்த ஏக்கம் குடி கொண்டது. ஆனால் பாட்டி கூச்சல் போடவில்லை, பையனைக் கடிந்து கொள்ள வில்லை. பேரன் தோளை அன்போடு வருடியபடி அவள் தணிவாகச் சொன்னாள்:

''பேரப் பிள்ளை, என்னோடு வீட்டுக்குள் போவோம் வாயேன்.''

''ஐதாரும் நானும் ஏரிக்குப் போக ஆயத்தமாகிக் கொண் டிருந்தோம் பாட்டீ.''

''அதற்கென்ன, போங்கள். ஐதார் கொஞ்சம் பொறுப் பான்.''

வீட்டுக்குள் போனதும் நகிமா பாட்டி பேரனுடைய தோளை இன்னொரு தரம் வருடினாள்.

''பதக்கந்தான் உனக்கு எப்படிப் பொருந்துகிறது!''

''மெய்யாகவா, பாட்டீ?'' என்று மகிழ்ந்து போனான் அப் துல்லா.

''உன் பாட்டி வெறும் பேச்சு பேச மாட்டாள். நீ ஐந்து ஆண்டு படித்து முடித்திருக்கிறாயே, பாட்டிக்கு விளக்கிச் சொல்லு: பதக்கம் எதற்காகக் கொடுக்கப்படுகிறது?''

''துணிவுக்காக, வீரத்துக்காக! இங்கே ருஷ்யனில் அப்படியே எழுதி இருக்கிறது, பாட்டீ!'' என்று உற்சாகத்துடன் விளக்கினான் அப்துல்லா.

பாட்டி அன்பு ததும்பத் தலை ஆட்டினாள்.

''நல்லது. உன்னால் இதைப் படித்து விளக்க முடிந்ததற்கு நன்றி. ஆமாம், இந்தப் பதக்கங்கள் யாருக்குக் கொடுக்கப்படு கின்றன?''

''யாருக்காவது? வீரர்களுக்கு, அருஞ் செயல் செய்பவர் களுக்கு, துணிவு உள்ளவர்களுக்கு!''

நகிமா பாட்டி லேசான மோவாய் அசைப்பால் பையனுடைய மார்பைச் சுட்டினாள். (பஷ்கீரியப் பிரதேசத்தில் புனிதமாக மதிக்கப்படுவது விரலால் சுட்டப்படுவது இல்லை.)

''இந்தப் பதக்கம் யாருக்குக் கொடுக்கப்பட்டது?''

''உனக்குத்தான் தெரியுமே பாட்டீ, அப்பாவுக்கு!'' என்று அவளுடைய கேள்வியால் வியப்பு அடைந்து கூறினன் பேரன்.

''அப்படியானல் இதை யார் போட்டுக் கொள்ள வேண்டும்?''

''அப்பாதான், சந்தேகம் இல்லாமல்... ஆனல் அப்பா திரும்பி வரவில்லையே... பாட்டீ, அப்பாவின் நினைவாக நான் இதைப் போட்டுக் கொள்ளப் போகிறேன்.''

நகிமா பாட்டி வெகு நேரம் பேசாதிருந்தாள். அப்துல்லா போகத் தயங்கியவனுகப் பலகைக் கட்டிலில் கூச்சத்துடன் உட்கார்ந்திருந்தான். பாட்டி பெருமூச்சு விட்டவாறு தன் எண்ணங்களில் ஆழ்ந்திருந்தாள். பலகைக் கட்டிலிலிருந்து கால்களைத் தொங்க விட்டபடி இதே போல ஒரு காலத்தில் உட்கார்ந்திருந்த தன் மகனை ஒருவேளை அவள் நினைவு படுத்திக் கொண்டாள் போலும். அப்துல்லா தகப்பனுர் சாயலாக இருந்தான். அவனுடைய பழக்கங்களும் அடக்கமான புன்னகையும் குரலும் இதே வீட்டில் வளர்ந்த அவளுடைய மகன் முகம்மதை நினைவுபடுத்தின. அடிக்கடி பேரனைப் பார்க்கையில் நகிமா பாட்டி சில வேளைகளில் மகிழ்ந்தாள், வேறு சில வேளைகளில் ஆழ்ந்த துயரத்துக்கு உள்ளானுள். அப்துல்லா இதைப் புரிந்து கொண்டிருந்தான். அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் பாட்டியிடம் பரிவு காட்ட அவன் முயன்றுன். இப்போதும் அவன் இதைப் புரிந்து கொண்டான்.

நகிமா பாட்டி இன்னெரு தரம் ஆழ்ந்த பெருமூச்சு விட்டு, இடையில் முறிந்து போன பேச்சை நிதானமாகத் தொடர்ந்தாள்:

''அப்படியானல் நான் சொல்வதைக் கேள், பேரப் பிள்ளை... வீரன் இறந்ததும் வாள் மகனைச் சேருகிறது. குறி தவருத வில்லாளி இறந்ததும் அவனுடைய வில்லும் அம்பும் மகனுடையவை ஆகி விடுகின்றன... வேண்டி இருந்த போது தகப்பனுர்களின் ஆயுதங்களை மகன்கள் எடுத்துக் கொண்டார்கள். தகப்பன் விட்டுப் போன கலப்பையால் மகன்கள் வயலை உழுகிறுர்கள். அவனுடைய மண்வெட்டியால் நிலத்தைக் கொத்திக் கொடுக்கிறுர்கள், அவனுடைய சம்மட்டியால் அடித்து இரும்புச் சாமான்கள் செய்கிறுர்

கள்... தகப்பனுர் வைத்துப் போன தொப்பியை அவருடைய மக்கள் போட்டுக் கொள்ளலாம்... இதோ உன் தலையில் அப் பனின் தொப்பி இருக்கிறது. ஆனுல் தகப்பனுக்குப் பிறகு எஞ்சி இருக்கும் புகழ் இருக்கிறதே, அது தொப்பி அல்ல! அவனுடைய மக்கள் அதை வாரிசு முறைப்படி போட்டுக் கொள்ள முடியாது. குழாயிலிருந்து கிளம்பும் புகை எப்படிக் காற்றைச் சூடாக்கு வது இல்லையோ, அப்படியே தகப்பனின் புகழ் மகன்களுக்குச் சேர்வது இல்லை. உன்னுடைய சொந்தக் காரியங்கள் உன் தகப் பனுடைய புகழுக்கு ஏற்றவையாக இருந்தால், இந்தக் காரி யங்களை மனிதர்கள் மெச்சிப் பாராட்டினுல், விஷயம் வேருக இருக்கும்...''

''பாட்டீ, அந்த மாதிரிச் செயல்களை நாங்கள் செய்வோம். நீயே பார்த்து ஆச்சரியப்படுவாய்!'' என்று உற்சாகமாகச் சொன் ஞன் அப்துல்லா.

''அப்படியே இருக்கட்டும்!'' என்று கூறிய நகிமா பாட்டி மெல்லிய குரலில் மேலே சொன்ஞள்: ''உனக்குப் பிடித்திருந்தால் தாராளமாகப் போட்டுக் கொள்... நான் பதக்கத்தைச் சொல்லு கிறேன். நான் தடை செய்யவில்லை...''

ஆனுல் அப்துல்லா பேசாமல் மார்பிலிருந்து பதக்கத்தைக் கழற்றி, தகப்பனுர் படத்திற்கு அடியில் முந்திய இடத்தில் அதை மாட்டினுன்.

வெளியே ஐதார் காதைத் துளைக்கும் படிச் சீழ்க்கை அடித் தான். அவனுடைய பொறுமையும் தீர்ந்து போய் விட்டது தெரிந் தது.

''நல்லது போ. கத்தியை மட்டும் தொலைத்து விடாதே'' என்ருள் பாட்டி.

வேறு நேரத்தில் தன் கத்தியை வீட்டிலிருந்து வெளியே எடுத்துப் போகப் பேரனை அவள் அனுமதித்திருக்கவே மாட் டாள். ஆனுல் இன்று அவள் அவனிடம் வேறு ஒன்றும் சொல்ல வில்லை. ஒரே நாளில் இரண்டு தரம் அவனைக் கடிந்து கொள்ள அவள் விரும்பவில்லை போலும்.

''சரி பாட்டீ!'' என்று கத்தி விட்டு வாசலிலிருந்து வெளியே பாய்ந்தான் அப்துல்லா.

பேரன் போன பின் நகிமா பாட்டி பதக்கத்தைக் கையில் எடுத்து அதை மிக நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு சட்டைக் கை விளிம்பால் அதைத் துடைத்து முந்திய இடத்தில் மாட்டினாள்.



எடுத்துக்காட்டானவன் திருந்தத் தொடங்குகிறன்

வீடு திரும்பியதும் தன் ''எடுத்துக் காட்டான'' தன்மைக்கு விரைவில் முடிவு கட்டுவது எப்படி என்று யகூப் நெடு நேரம் மண்டையை உடைத்துக் கொண்டான். எதிலிருந்து தொடங்குவது? தன் ஒவ்வொரு நடவடிக்கையையும் முன் கூட்டி விவரமாகச் சிந்தனை செய்வது மிகச் சின்ன வயதிலிருந்தே அவனுக்கு வழக்கம் ஆகி இருந்தது. குறுகலான, நிலையில்லாத பாலத்தில் நடப்பவன் போல எப்போதும் உணர்ந்து வந்தான் யகூப்... இதோ கால் தவறி விழுந்து விடுவோம் என்று அவனுக்குத் தோன்றிக் கொண்டிருந்தது.

தனது ஒரே மகனைப் பேணிக் காத்த தாய் சுற்றியுள்ளவற்றின்பால் அச்சம் நிறைந்த எச்சரிக்கை உணர்வை அவனிடம்

வளர்த்திருந்தாள். சிறுவன் யகூப் வாழ்க்கையை முதன் முதலாகத் தெரிந்து கொண்டது ''கூடாது'' என்ற ஒரு மொத்தமான தடை வாயிலாகத்தான். படல் மேல் தொற்றக் கூடாது, கற்களை எறியக் கூடாது, அண்டை வீட்டுக்காரி சபீராவின் நாயைத் தொடுவது கூடாது. இந்தத் தடைகளை எல்லாம் தாய் மகனுக்கு நிமிடந்தோறும் நினைவுபடுத்திக் கொண்டிருந்தாள். பையன் வளர வளர இந்தத் ''தடைப் பிரதேசங்களும்'' வளர்ந்து கொண்டு போயின. தோழர்களோடு காட்டுக்குப் போகக் கூடாது—வழி தவறி விடும், ஏரியில் நீந்திக் குளிக்கக் கூடாது— மூழ்கி விடுவாய், மலை மேல் ஏறக் கூடாது—விழுந்து விடுவாய். கோடையில் குல்லாயைக் கழற்றக் கூடாது—ஏனென்றால் வெயில் தாக்கி உடம்புக்கு வந்து விடும். வசந்த காலத்தில் மென்மயிர்த் தோல் மேல்கோட்டைக் கழற்றக் கூடாது—ஏனென்றால் தடிமல் பிடித்து விடும். இந்தக் ''கூடாது''களுக்கு வரம்போ முடிவோ கிடையாது என்று தோன்றியது. ஆனால் எதற்கும் ஒரு முடிவு எப்போதாவது வந்து தீரும் அல்லவா?

குறும்புக்காரர்களான தன் சம வயதுப் பிள்ளைகளிடமிருந்து கெட்ட பழக்க வழக்கங்களை மகன் கற்றுக் கொண்டு விடக் கூடாது என்று தாய் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டாள். இன்னாரோடு விளையாடாதே, இன்னாரோடு நட்பு பாராட்டாதே, இன்னாரை வீட்டுக்குக் கூட்டி வாராதே, இன்னார் வீட்டுக்குப் போகாதே என்று மகனை ஓயாமல் எச்சரித்து வந்தாள். யகூப் எல்லாவற்றிலும் அம்மா சொற்படி நடந்து வந்தான். அவளுடைய கோரிக்கைகளை நிறைவேற்றியதன் காரணமாக அவன் தன் தோழர்களிடமிருந்து கொஞ்சங் கொஞ்சமாக விலகி ஒதுங்கினான். மற்றப் பையன்களுக்கு அவனுடைய போக்கு முதலில் எரிச்சல் உண்டாக்கிற்று. அவர்கள் யகூபைப் படு கேலி செய்தார்கள். அடிக்கடி அடிகள் கூடக் கொடுத்தார்கள். பின்பு அவர்களுக்கு இது அலுத்துப் போயிற்று, ஆகவே அவனை அறவே சட்டை செய்யாமல் விட்டு விட்டார்கள். யகூப் உலகத்தில் உயிரோடு இருக்கிறானா இல்லையா என்பதில் அவர்களில் யாருக்கும் இப்போது அக்கறை

இல்லை. அம்மாக்களும் பாட்டிகளும் மட்டும் தான் தங்கள் பிள்ளைகளுக்கும் பேரன்களுக்கும் அவனை உதாரணமாகத் தொடர்ந்து காட்டி வந்தார்கள். ஆனால் பிடிவாதமுள்ள சிறுவர்கள் யகூபை உதாரணமாக எடுத்துக் கொள்வது தங்கள் தகுதிக்குக் குறைச்சல் என்று எண்ணினார்கள்.

ஆகையால், அப்துல்லாவும் ஐதாரும் யகூபைத் தங்களிடம் வரும்படி அழைத்த போது அவன் முதலில் குழப்பமும் பின்பு வியப்பும் அடைந்தான். ஏனென்றால் வெகு காலமாகவே யாருக்கும் அவன் தேவைப்படவில்லை, எவனும் அவனைத் தன்னிடம் அழைக்கவில்லை. அப்துல்லா தன்னோடு மிக அமைதியாகவும் நட்புடனும் பேசிய போது யகூப் மகிழ்ந்து போனான். தன் சம வயதினர் எல்லோரும் தன்னை இன்னும் கைவிட்டு விடவில்லை என்றும் மிக முக்கியமான காரியத்தில் பங்கு கொள்ளத் தன்னை அழைக்கிறார்கள் என்றும் எண்ணினான். ஒருவனுடைய துரதிர்ஷ்டம் சில வேளைகளில் வேறு ஒருவனுக்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வருகிறது என்பதையும், வஜீர் அப்படி அசட்டுத்தனமாக வெட்கக் கேடான செயல் செய்திராவிட்டால் தான் முன்போலவே ''எடுத்துக்காட்டான'' பையனாகவே எப்போதும் இருந்திருப்பான் என்பதையும் யகூப் அறிந்திருக்கவில்லை.

ஆனால் இந்த ''எடுத்துக்காட்டான'' தன்மைக்கு இப்போது முடிவு வந்து விட்டது.

''எதிலிருந்து தான் தொடங்குவது? எதிலிருந்து தொடங்குவது?'' என்று ஆலை பாய்ந்தான் யகூப். தலைவன் விதித்த நிபந்தனைகளை விரைவில் நிறைவேற்ற அவன் அவசரப்பட்டான்.

கவணிலிருந்து தொடங்குவது கட்டாயம் சரியாய் இருக்கும், அதுதான் எல்லாவற்றிலும் முக்கியம், நிச்சயமாக, தன் மதிப்பு உள்ள ஒவ்வொரு பையனும் பயங்கரமான இந்த ஆயுதத்தைப் பையில் வைத்திருக்கிறான்.

யகூப் வீட்டுக்கு ஓடி, கத்தியை எடுத்துக் கொண்டு முகப்பின் தூரத்து மூலைக்குப் போனான். கவணுக்கு ஏற்ற கவட்டை உள்ள உலர்ந்த கம்பைத் தேடிக் கண்டான். இப்போது அதைக்

கணக்காக நறுக்கிச் சீவி இழைக்க வேண்டி இருந்தது. வெட்டுக் கட்டையில் நுழைத்திருந்த கோடரியை வெகு சிரமத்துடன் எடுத்து வேலையில் முனைந்தான் யகூப். ஆனால் அவனுக்குத் தோல்வி ஏற்பட்டது. கம்பு நுனியை வெட்டிய போது கவர்க் கிளைகளில் ஒன்றைத் தற்செயலாக வெட்டி எடுத்து விட்டான். வேறு ஒரு கவர்க் கம்பை அவன் தேட வேண்டியதாயிற்று. இந்தத் தடவை அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. கம்பு கிடைத்தது, போதிய அளவு ஒழுங்காக அதை நறுக்கவும் முடிந்தது. அருமையான கவண் வாய்த்து விட்டது. இனி அதைக் கத்தியால் சீவி வெள்ளை வெளேரென்று ஆக்கி, வஜீர் செய்திருப்பது போலச் சிவப்புச் சாயம் பூச வேண்டும். இதற்காகச் சாயம் செலவிட அவன் தயங்க மாட்டான்! பிறகு தகப்பனாரின் பழைய சைக்கிள் டியூபிலிருந்து நேரான ரப்பர் பட்டை நறுக்கிக் கொள்வான். பழைய பூட்சு மேல் பகுதியிலிருந்து வட்டத் தோல் துண்டு அறுத்து எடுத்துக் கொள்வான். இந்த மாதிரி ஆயுதம் தயாரிக்க இது வரை அவனுக்குத் தேவை ஏற்படவில்லைதான், ஆனால் மற்றவர்கள் இதை எப்படிச் செய்கிறார்கள் என்பதை அவன் பார்த்திருந்தான், கைகளில் கூடப் பிடித்திருந்தான். மற்றவர்கள் செய்கிறார்கள் என்றால் யகூப் ஏன் செய்யக் கூடாது? கட்டாயம் செய்து விடுவான். பின்பு பை நிறைய உண்டைக் கற்களைச் சேகரித்துக் கொண்டு, சரியாகக் குறி பார்ப்பதற்காக ஒரு கண்ணை இடுக்கியபடி, அதோ, களஞ்சியக் கூரை மேல் நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருக்கும் அந்தப் பூனை மேல் கவண் எறிவான்.

இனிய மனக்கோட்டை கட்டிக் கொண்டிருந்த யகூப், மரத்தை இழைக்கையில் கூர்மையான கத்தி தன் சுட்டு விரலைச் சீவி விட்டதைக் கவனிக்கக்கூட இல்லை. விரலிலிருந்து இரத்தம் பொங்கி வந்தது. பயந்து போன யகூப் கத்தியை எறிந்து விட்டு, தாயை உரக்கக் கூவி அழைத்தான்:

''எசேய்!''*

---

* எசேய்—அம்மா என்று பொருள்படும் பஷ்கீரியச் சொல்.

தவறு செய்து விட்டோம் என்பதை அக்கணமே புரிந்து கொண்டான். எவனுவது பையனுக்குக் கையிலோ காலிலோ காயம் பட்டால் இரத்தத்தைக் கண்டதும் அவன் தன் தாயிடம் ஓடுவ தில்லேயே. மரப் பொடியை எடுத்துக் காயத்தில் தூவிக் கொள் வான். வாக்காகக் காலடியில் கிடந்தது உளுத்த கட்டை... யகூப் விரலிலிருந்து இரத்தத்தை உதறிப் போக்கி விட்டு மருந்து போட்டுக் கொள்ளப் போனுன். அதற்குள் அவன் தாய் வீட்டுக்கு உள்ளிருந்து வாசலுக்கு ஓடி வந்தாள்.

''என்ன ஆயிற்று, குழந்தாய், என் கண்ணே?'' என்று துயரம் பொங்கக் கூவிஞள்.

ஆனுல் யகூப் இப்போது தானும் தழுதழுத்துப் போய், தாயாரையும் தழுதழுக்க வைக்கும் பழைய யகூபாய் இருக்க வில்லே. இல்லே! அவன் காயம் பட்ட கையைச் சட்டென முது குக்குப் பின்னே மறைத்துக் கொண்டான்.

''ஒன்றும் ஆகவில்லே! நான் உன்னேக் கூப்பிடவில்லே, ''பெசேய்! பெசேய்!''* என்று பூனேயை அல்லவா அதட்டினேன்!'' என்ருன்.

''ஐயோ, நீ தான் என்னே எப்படிக் கலவரப்படுத்தி விட் டாய்!'' என்று ஆழ்ந்த பெருமூச்சுடன் சொல்லிவிட்டு வீட்டுக்குள் திரும்பிப் போனுள் தாயார்.

யகூப் கட்டையிலிருந்து உளுத்த பகுதியை எடுத்து ஒரு துண்டு ஒடித்துத் தேய்த்துப் பொடி ஆக்கி, வீட்டுக்கு முதுகைக் காட்டியபடி திரும்பி, அந்தத் தூளேக் காயம் பட்ட விரல் மேல் தூவினுன். தூள் ரோஜா நிறம் ஆயிற்று, ஆனுல் இரத்தப் பெருக்கு நின்று விட்டது. தொடங்கிய வேலேயை முடிக்க வேண்டி இருந் தது. இந்த மாதிரிச் சங்கடம் ஏற்படக் காரணமாய் இருந்த கத்தியை யகூப் துணிவுடன் மறுபடி எடுத்தான். ஆனுல் இந்தத் தடவை வேலே ஓடவில்லே. காயம் பட்ட விரல் வலித்தது, வேலேக்கு

* பூனே என்று பொருள்படும் பஷ்கீரியச் சொல். ''எசேய்,'' ''பெசேய்'' என்ற சொற்களின் ஒலிப்பு ஒற்றுமை இங்கே கையாளப்பட்டிருக்கிறது.

இடைஞ்சலாய் இருந்தது. பின்பு அது கடுமையாக வலிக்கத் தொடங்கிற்று.

''எடுத்துக்காட்டான'' தன்மையுடன் போராட்டத்திற்கான திட்டத்தை மாற்றுவதென்று யகூப் முடிவு செய்தான். தொடங்கிய கவணை ஒதுக்கமான மூலையில் மறைத்து விட்டு எண்ணத்தில் ஆழ்ந்தான்...

அட என்ன வந்தது! இன்றைக்குக் கைகளால் ஒன்றும் செய்ய முடியாது என்றால் அவனுடைய கால்கள் தாம் பழுதில்லாமல் இருக்கின்றனவே! குக்ரேக் மலையில் ஓர் இடத்தில் பாறைகளின் வரிசை கூர்மையாகத் துருத்திக் கொண்டிருக்கிறது. அவன் அங்கே போய், பாறைக்குப் பாறை தாவுவதற்குப் பழகத் தொடங்குவான். தலைவன் தனக்கு விதித்திருக்கும் நிபந்தனைகளை அவன் நிறைவேற்றுவான். யகூப் தன் வீட்டின் மேல் இன்னொரு தரம் பார்வை செலுத்தினான். தாயாரின் கூரிய பார்வைக்குப் பயந்து வெளி வாயிலுக்கு மெதுவாக நடந்தான். வேலியோரமாகக் கிடந்த ஒரு பந்தை எடுத்துக் கொண்டு மேலே எறிவதும் வாயிலில் அடிப்பதுமாகக் கொஞ்ச நேரம் விளையாடினான்... பிறகு விளையாட்டில் ஈடுபட்டவன் போலப் பந்தை வெளியே வீசி விட்டுக் கதவைத் திறந்தான். கதவு கிறீச்சிட்டது. அக்கணமே தாயாரின் தலை சன்னலுக்கு வெளியே எட்டிப் பார்த்தது.

''யகூப், நீ எங்கே போகிறாய்!''

''பந்து வெளியே போய்விட்டது அம்மா'' என்றான் யகூப்.

தாயார் சன்னல் அருகே நின்று கொண்டிருந்த வரை அவன் பந்தை வாயிலில் எறிவதும் உரக்க எண்ணுவதுமாக வீதியில் விளையாடிக் கொண்டிருந்தான். சன்னல் மூடப்பட்டதும் பந்து மலைக்குப் போகும் திக்கில் சந்தோஷமாகத் துள்ளிச் சென்றது. யகூப் பந்தின் பின்னே ஓடினான். பந்து உருண்டு ஓடிற்று, யகூப் பின்னே ஓடினான். குறும்புக்காரப் பந்து அவன் கையில் பிடிபட மாட்டேன் என்றது. சிறுவன் அதை நெருங்க வேண்டியதுதான் தாமதம், பந்து மறுபடி துள்ளிச் சந்தில் மேலே உருண்டு ஓடிற்று... இதோ சந்து முடிந்து விட்டது. பந்து இளம்

புல்லில் சிக்கி நின்றது. ஆனால் மிக வேகமாக ஓடி வந்த யகூபால் நிற்க முடியவில்லை. அவன் ஒரே மூச்சில் குக்ரேக் மலை போய்ச் சேர்ந்து விட்டான். இப்போது திரும்பிப் பார்க்கத் தேவையே இருக்கவில்லை. யகூப் முதல் பாறை வரை தொற்றி ஏறினன். அங்கே ஒன்றன் மேல் ஒன்ருகக் குவிந்து கிடந்தன சாம்பல் நிறக் கற்பாளங்கள். அவற்றில் ஒவ்வொன்றும் பெரிய பெட்டி அளவு அல்லது அதைவிடக் கூடப் பெரிதாக இருந்தது.

ஊர்ச் சிறுவர்கள் யுத்த விளையாட்டு ஆடியபோது இந்த இடத்தையே எப்போதும் தேர்ந்தெடுத்தார்கள், கற்களுக்குப் பின்னே மறைந்து கொண்டு பகைவர்களைச் சுட்டார்கள். ஆனால் இங்கே விளையாடுவது மிகவும் ஆபத்தாக இருந்தது. கொஞ்சம் கால் சறுக்கினலும் விழுந்து கழுத்தை முறித்துக் கொள்ள வேண்டி வரும். யகூப் முதலில் கொஞ்சம் சின்னப் பாறைகளைத் தெரிந்தெடுத்துப் பாறைக்குப் பாறை தாவினன். கைகளைச் சாமர்த்தியம் இன்றி இரண்டு பக்கமும் ஆட்டினன், சமநிலை பிசகாதிருக்கப் பாடுபட்டான். ஒரு தடவை கால் தவறி விழுந்த போது அவனுடைய முழங்காலில் வலிக்கும்படி அடிபட்டது, முழங்கையில் சிராய்ப்பு ஏற்பட்டது. ஆனல் இதனல் அவன் ஆட்டத்தை நிறுத்திவிடவில்லை. தாவுவதில் உண்மையான தேர்ச்சி ஏற்படும் வரையில் அவன் தொடர்ந்து தாவிக் கொண்டிருந்தான். அப்புறம் அவன் பெரிய பாறைகள் கிடந்த இடத்துக்குப் போனன்.

பாறையின் பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்தவனை அந்த நேரத்தில் ஊர்க்காரர்கள் யாராவது பார்த்திருந்தால் அவர்கள் மிகுந்த வியப்பு அடைந்திருப்பார்கள், அவனைத் துள்ளும் பொம்மை என்று எண்ணி இருப்பார்கள். ஆனல் ஊர்க்காரர் எவரும் யகூபைக் கண்காணிக்கவில்லை. தன் மகன் இந்த மாதிரிச் செயல்களில் ஈடுபடக் கூடும் என்று அவனுடைய தாயார் எண்ணிக் கூட இருக்க மாட்டாள். யகூபோ, பற்களை இறுகக் கெட்டித்தவாறும் ஒரு நிமிடங்கூட இடை ஓய்வு கொள்ளாமலும் தாவிக் குதித்த வண்ணமாய் இருந்தான். அவனுக்கு இது களி பொங்கும் விளையாட்டாகவோ சிறுவனின் குறும்புச் சேட்டையாகவோ இருக்க

வில்லை. உண்மையில் அவசரமான அவசிய வேலையாக இருந்தது. ''முக்காலி''யின் தலைவனுக்குக் கொடுத்த வாக்கை அவன் நேர்மையாக நிறைவேற்றிக் கொண்டிருந்தான், அவ்வளவுதான். அவன் விழுந்து அடி பட்டுக் கொண்டான், அவனுடைய கன்னத்திலும் முழங்கைகளிலும் சிராய்ப்புகள் ஏற்பட்டன, நெற்றியில் முழைப்பு கிளம்பியது. ஆனால் ஒவ்வொரு சிராய்ப்புக்குப் பிறகும் யகூபின் இதயம் முன்னிலும் அதிக உரம் பெற்று, துணிவு மிகுந்தது ஆயிற்று. தனக்குள் உற்சாகமும் துணிவும் குமிழ் இடுவதை அவன் திடீரென உணர்ந்தான்... சுருங்கச் சொன்னால், ஷரீபுல்லா கூறுவது போல யகூபின் இதயத்திலும் கழுகு கூடு கட்டி இருந்தது போலும், இதுவரை இறக்கைகளை விரிக்கத்தான் அதற்கு முடியவில்லை போலும்...

ஆனால், யகூபினால் ஈர்க்கப்பட்டு நாம் வஜீரை அறவே மறந்து விட்டோம். தலைக்கு நாள் மிகவும் வருத்தம் பொங்கிய நிலையில் அவனை விட்டுப் பிரிந்தோம். யகூப் தன் காரியத்தில் ஈடுபட்டிருக்கட்டும், இதற்கு இடையே நாம் வஜீர் வீட்டை எட்டிப் பார்ப்போம். யகூப் வீட்டுக்கு எதிர்ப் பக்கம் வீதியில் சற்றுத் தள்ளி இருக்கிறது அவன் வீடு.



"உருண்டையான என் சுருளே..."

யுத்த காலத்திலும் அதற்குப் பிந்திய ஆண்டுகளிலும் வேறு பல குடும்பங்கள் போலவே வஜீரின் குடும்பம் மிகவும் கடினமான நிலைமைகளில் வாழ்ந்து வந்தது. ஒருவேளை இதனால் தான் போலும், குர்பான்பிகா சித்தி என்று ஊர்க்காரர்களால் அழைக்கப்பட்ட வஜீரின் தாயாருக்கு ஒரு விந்தையான பழக்கம் ஏற்பட்டது. ரொட்டி, உப்பு, வெண்ணெய், புளித்த பாலாடை, தேயிலை, சர்க்கரை ஆகியவற்றைக் கணவனிடமும் குழந்தைகளிடமுமிருந்து அவள் மறைத்து வைத்தாள். பெட்டி, அலமாரி, நிலவறை ஆகியவற்றின் சாவிகளை எப்போதும் தன்னிடம் வைத்துக் கொண்டிருந்தாள். வாழ்க்கை சீர்பட்டு, வீட்டில் எல்லாம் போதுமான அளவு இருந்த ஆண்டுகளிலும் குர்பான்பிகா இந்த வழக்கத்தைக் கைவிடவில்லை. அற்பப்

பண்டங்களைக் கூட முன்போலவே பேராசையுடன் எண்ணிக் கணக்கிட்டும் தின்னக் கூடியவற்றை எல்லாம் பூட்டி வைத்தும் வந்தாள். ஆனால் துணி மணிகள் விஷயத்திலும் மற்ற சாமான்கள் விஷயத்திலும் அவள் ஒரே அசட்டையாக இருந்தாள்.

வீட்டில் எல்லாப் பண்டங்களும் எப்போதும் பூட்டி வைக்கப் பட்டிருந்ததால் எங்கும் துருவித் தேடுவதும் எல்லாவற்றையும் புரட்டிப் போடுவதும் சின்ன வயதிலிருந்தே வஜீருக்கு வழக்கமாகி விட்டிருந்தன. ஐந்து வயதுப் பையனாக இருக்கையில் ஒரு நாள் தலையணைகளுக்கு நடுவே மறைந்தது வைக்கப்பட்டிருந்த ரை ரொட்டியை அவன் கண்டான். ஆனால் வஜீர் பேராசை கொண்டு தானே அதைத் தின்றுவிடவில்லை. இரண்டு சம பாகங்களாக விண்டு தம்பி நசீபுக்குப் பாதியைக் கொடுத்தான். இன்னொரு தடவை நிலவறைப் பூட்டை ஆணியால் திறந்து அண்ணனும் தம்பியும் பால் குடித்தார்கள். பிறகு தாயாரின் பெட்டிக்குச் சாவி தெரிந்து எடுத்தார்கள். விருந்தாளிகளுக்காக வைத்திருப்பதாகத் தாயார் சொன்ன ஒரு சர்க்கரைக் கட்டியை அதிலிருந்து எடுத்துக் கொண்டார்கள். இந்தச் சர்க்கரைக் கட்டியை அவர்கள் கோடரியால் துண்டு போட்டார்கள். சின்னத் துண்டு நசீபுக்குக் கிடைத்தது. எந்த விதப் பூட்டையும் திறக்கும் கலையை அலுக்காமல் பயின்ற இரண்டு பையன்களும் பூட்டுக்களின் எல்லா மர்மங்களையும் தெரிந்து கொண்டார்கள். முடிவில் குர்பான்பிகாவின் வீட்டுப் பூட்டுக்கள் எல்லாமே வேலைக்கு உதவாதவை ஆகி விட்டன.

கணக்கிட்டு வைத்திருந்த சேமிப்புக்கள் எங்கே மறைந்து விடுகின்றன என்பதை குர்பான்பிகாவே விரைவில் ஊகித்துக் கொண்டாள். அவ்வளவுதான். பையன்கள் மேல் வசவு மழை பொழியத் தொடங்கிற்று. ஆனால் பிடிவாதக்காரர்களான சிறுவர்கள் தங்கள் செயலைத் தொடர்ந்தார்கள். எந்தப் பூட்டையும் நம்பாமல் குர்பான்பிகா தன் உத்தியை மாற்றினாள். உணவுப் பண்டங்களைப் பெட்டியிலோ நிலவறையிலோ வைப்பதை அவள் நிறுத்தினாள். சர்க்கரை அல்லது மிட்டாய்கள் போன்ற தின்பண்

டங்கள் பழைய மென்மயிர்க் கோட்டின் பைகளிலோ, முகட்டறையில் கிடந்த நமுதா சோடுகளின் மேல் பகுதியிலோ இப்போது மறைத்து வைக்கப்பட்டன, அல்லது சாமான் அறையில் வெகு காலமாகத் தொங்கிக் கொண்டிருந்த மரவுரிக் கூடையின் அடியில் போடப்பட்டன. நிலவறையில் இருந்த வெண்ணெயும் புளித்த பாலாடையும் குளியறையின் பழைய அடுப்புக்கு மாறின. ஆனுல் இந்த நடவடிக்கைகள் விரும்பிய பயனைத் தரவில்லை. பையன்கள் தங்கள் தேட்டங்களை விடாப்பிடியாகத் தொடர்ந்தார்கள், தாயாரின் இரகசியங்களை ஒன்றன் பின் ஒன்ருகக் கண்டு பிடித்துக் கொண்டு போனுர்கள். ஆனுல் அவர்கள் எதிலும் பேராசை காட்டவில்லை, கண்டு எடுத்த பண்டங்களை மிச்சம் வைக்காமல் தின்று தீர்த்துவிடவில்லை என்பதைச் சொல்லி விட வேண்டும். மறைத்து வைக்கப்பட்ட பண்டங்களைத் தேடுவது இப்போது அவர்களுக்கு உற்சாகமான அபூர்வ விளையாட்டாக, ஆபத்தான தனி வகைத் தொழிலாக மாறிவிட்டது.

அரிதாகக் கிடைத்த பணம் போன்ற கண்டு பிடிப்புக்களும் இந்த விளையாட்டிலிருந்து விலக்கப்படவில்லை. சிறு அடுப்பில் துழாவிப் பார்த்து, பழைய புகை விளக்குக்கு அடியிலிருந்து முழுதாக ஐந்து ரூபிள்களைக் கண்டு எடுப்பதும், பிறகு பணியாரங்கள் வாங்கி, தோழர்களின் குதூகலம் பொங்கும் குழுவுடன் சேர்ந்து அவற்றைத் தின்பதும் சுவாரசியமானவை அல்லவா? வஜீருக்கு இது மிகவும் சுவாரசியமாய் இருந்தது. அவன் அப்படியே செய்தான்.

அவன் தலை மேல் பொழிந்த வசவுகளும் சாபங்களும் கூரை மேல் விழும் ஆலங்கட்டிகள் அதிலிருந்து துள்ளிச் சிதறி விடுவது போலத் துள்ளிச் சிதறி விட்டன. ஆனுல் மறைத்து வைத்த பணத்தைக் கண்டு எடுப்பது லேசான காரியமாக இல்லை. ஒரு தடவை கண்டு எடுத்தார்கள், மறு தடவையும் தேடிக் கண்டார்கள், ஆனுல் மூன்ருவது தரம் சித்த உறுதி பற்றவில்லை...

ஆனுல் இன்றைக்குப் பணத்தைக் கண்டுபிடிப்பது வஜீருக்குத் தவிர்க்க முடியாதபடிக் கட்டாயமாய் இருந்தது. இப்போது இது

விளையாட்டோ வேடிக்கையோ அல்ல. முந்திய நாள் அவமானத்தைத் தோழர்களோடு சமாதானம் செய்து கொள்வதால்தான், நைச்சியமாகத்தான் போக்கிக் கொள்ள முடியும். பணத்தைக் கண்டுபிடித்து, கடையில் பணியாரங்கள் வாங்கி, தோழர்களுக்குத் தின்னக் கொடுத்து, அதன் பின் மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற திட்டம் வஜீரின் மூளையில் உதித்திருந்தது. பஷ்கீரியாவில் பெரியவர்கள் கூட இப்படிச் செய்கிறார்கள்: யாராவது ஒருவரைக் காரணம் இல்லாமல் புண்படுத்தி விட்டால், புண்படுத்தியவர், புண்பட்டவரை விருந்துக்கு அழைத்து உபசரித்து மன்னிப்பு கேட்கிறார். வஜீர் அப்படியே செய்ய விரும்பினான்.

இரவு முறை வேலையிலிருந்து சற்று முன் திரும்பிய தகப்பனார் முன்னறையில் உறங்கிக் கொண்டிருந்தார். தாயார் வேலைக்குப் போய் விட்டாள். கண்டு எடுக்கும் பணத்தை வேறு ஒருவனுடன் பங்கிட்டுக் கொள்வது இந்தத் தடவை தேவை அற்றதாய் இருந்த படியால் வேண்டாத சாட்சியை விரட்டுவதற்காகத் தம்பி நசீபை ஏரிக்குத் தாராக்களைக் கண்காணிப்பதற்காக அனுப்பினான் வஜீர். வீட்டில் தனியாக இருந்த போது எல்லாவற்றையும் தலை கீழாகப் புரட்டி, பணத்தைத் தேடத் தொடங்கினான். எல்லாப் புத்தகங்களையும் துருவித் தேடினான், உப்புப் பாத்திரத்திலிருந்து உப்பைக் கொட்டிக் கவிழ்த்தினான், சன்னல், கதவுக் கொர்னிசுகளைத் துழாவினான், அடுப்புக்குள் தலையை நுழைத்துப் பார்த்தான், ஆனாலும் தேடிய பொருள் அவனுக்குக் கிடைக்கவில்லை. பொறுமை இழந்து எரிச்சல் மண்ட அறை நடுவில் நின்று சுற்றிலும் இன்னொரு தரம் கவனமாகக் கண்ணோட்டினான்... அடுப்புக் கொர்னிசில் அசட்டையாகப் போடப்பட்டிருந்த கம்பளி நூற்சுருள் மேல் அவனுடைய பார்வை எதிர்பாராமல் பட்டது.

வஜீர் நூற்சுருளை எடுத்து, கையில் உருட்டி, தொட்டுப் பார்த்தான். அது அவசர அவசரமாகச் சுற்றப்பட்டிருந்தது போலக் காணப்பட்டது. நிரம்பத்தானே தொளதொளவென்று இருந்தது. வஜீர் சுருளைக் காதருகே கொண்டுபோய் விரல்களால்

அழுத்தினான். சுருளுக்கு உள்ளே சரசரப்பு கேட்டது. அதில் ஏதோ மர்மம் இருந்தது. வஜீர் இன்னொரு தரம் கேட்டான், பின்பு நூல் நுனியைக் கண்டு சுருளை விரைவாகப் பிரிக்கத் தொடங்கினான்.

பொறுமை இன்மையாலும் எதிர்பார்ப்பினாலும் அவனுடைய இதயம் உக்கிரமாக அடித்துக் கொண்டது. கரடியின் தடத்தைக் கண்டு கொண்ட வேட்டைக்காரனின் இதயம் இந்த மாதிரி அடித்துக் கொள்வதுண்டு. சுருளைப் பிரிக்கையில், தான் அக்கணமே இட்டுக் கட்டிய ஒரு பாட்டைத் தணிந்த, நீட்டிய குரலில் பாடக் கூடச் செய்தான் வஜீர்:

"உண்டையான என் சுருளே,
கண்டனையோ என் பணத்தை?"

நூற்சுருள் சொல்வது போல வேறொரு பாட்டால் தானே பதில் சொன்னான்:

"உண்டையான நூற்சுருள் நான்,
கண்டைப் பிரி, சொல்லுகிறேன்..."
"சொல்லாவிட்டால் நானே
கண்டு கொள்வேன்..."

இப்படித் தணிந்த குரலில் பாடிய வஜீர் நூற் சுருளை முன்னிலும் அவசர அவசரமாகப் பிரிக்கலானான். பல தடவைகள் மடித்த பச்சைக் காகிதம் கம்பளி நூல்களின் ஊடாக இதோ தெரிந்தது. இதோ அது வஜீரின் கைக்கு வந்து விட்டது. ஓகோ! புத்தம் புதிய ஐம்பது ரூபிள் நோட்டு அல்லவா இது! அதற்குள் சுற்றி வைத்திருக்கிறது இன்னொரு காகிதம்—இருபத்தைந்து ரூபிள் நோட்டு. அதோடு இன்னொன்று—ஐந்து ரூபிள் நோட்டு. இது பெருத்த புதையல் ஆயிற்றே! ஆனால் வஜீருக்கு இவ்வளவு நிறையப் பணம் வேண்டாம்.

"இங்கே மூன்று காகிதங்கள்: அப்பா, அம்மா, குழந்தை. நமக்குக் குழந்தையே போதும்!" என்று மகிழ்ச்சியுடன் சொல்லி

ஐந்து ரூபிள் நோட்டைப் பையில் வைத்துக் கொண்டான் வஜீர்.

பாக்கிப் பணத்தை இருந்த படியே மடித்தான். கண்டைச் சுருட்டியவாறு தன் பாட்டை மறுபடி தணிந்த குரலில் பாடினன்:

''உண்டையான நூற்சுருளே,
கண்டதென்ன, அறிந்ததென்ன?''
''கொண்டு போயிற்று நிலவைக் கதிர்
கண்டேன் அதை மட்டுமே...''

கண்டைச் சுருட்டி முந்திய இடத்தில் வைத்து விட்டுக் கடைக்கு ஓடினன். பணியாரங்கள் வாங்கிச் சராய்ப் பைகளில் திணித்துக் கொண்டான். அப்போது விற்பனைப் பெண் ஏனே சந்தேகத்துடன் அவனைப் பார்த்தாள். வாங்கின பணியாரங்களுக்குக் காசு கொடுக்க வகையற்ற சிறுவர்களில் வஜீர் ஒருவன் என்று எண்ணினள் போலிருக்கிறது.

உண்மையிலோ, விற்பனைப் பெண்ணுக்கு ஒரு சந்தேகமும் இருக்கவில்லை. வஜீரின் வெற்று உடம்பைப் பார்த்து, அவள் எண்ணிக் கொண்டது இதுதான்: ''இவனுடைய தாயார் இன்று துணிகள் துவைக்கப் போகிருள் போலும். இந்த அப்பாவிப் பையனிடம் மாற்றுச் சட்டை கூடவா இல்லை?..''

இந்த ''அப்பாவிப் பையன்'' தன் உடம்பை உரப்படுத்திக் கொள்கிருன் என்பதை அவள் என்ன கண்டாள்?

வஜீர் வீடு திரும்பி, பணியாரங்களைச் சவுக்கையில், படல் சுவற்றின் பிரம்புகளுக்கு இடையே வைக்கோலில் பொதிந்து வைத்தான். வாய்ப்பான நேரம் வந்ததும், தன்னிடம் ஓர் இரகசியம் இருப்பதாக நண்பர்களுக்குக் குறிப்பு காட்டுவது என்று அவன் முடிவு செய்தான். அப்போது மூன்று பேரும் மலை மேல் ஏறுவார்கள். அங்கே பணியாரங்களைப் பையிலிருந்து ஒவ்வொன்ருக எடுத்துப் புல் மேல் பரப்பி வைப்பான். தோழர்கள் நின்று வியப்புடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளுவார்கள்...

எட்டு பணியாரங்களையும் பசும் புல் மேல் வைத்து விட்டு வஜீர் அவைகளைப் பங்கிடத் தொடங்குவான். அப்துல்லாவுக்கும் ஐதாருக்கும் தலைக்கு மூன்று பணியாரங்கள் இருந்து விட்டுப் போகட்டும். தனக்கு அவன் இரண்டு மட்டும் வைத்துக் கொள்வான். ஒன்று கூட எடுத்துக் கொள்ளாதிருக்கவும் அவன் தயார். விருந்தாளிகளை எப்படி உபசரிக்க வேண்டும் என்பது அவனுக்குத் தெரியும்!

இவ்வாறு கனவு கண்ட வஜீருக்குத் தான் சுவர்க்கத்துக்கே போய்விட்டது போல இருந்தது. அந்தக் கணங்களில் அவனைக் காட்டிலும் இன்பமும் மகிழ்ச்சியும் கொண்டவன் வேறு யாரும் இல்லை!

மிடுக்காக நடந்து வீதிக்குப் போய் வெறும் வயிற்றைத் துருத்திக் கைகளை முதுகுக்குப் பின் வைத்தவாறு நெடுநேரம் வாயிலின் அருகில் நின்று கொண்டிருந்தான். தன் மேல் திருப்தி அவனுக்குள் பொங்கிக் கொண்டிருந்தது.

இதற்குள் மலையின் பக்கத்திலிருந்து சந்தில் திடீரெனத் தென்பட்டான் யகூப். அவன் உடம்பில் காயங்கள் படாத இடமே பாக்கி இல்லை. எங்கும் ஒரே தழும்புகளும் கீறல்களுமாக இருந்தன.

''டேய், எடுத்துக்காட்டு, எங்கிருந்து வருகிறாய்?'' என்று கேட்டான் வஜீர்.

''நான் ஒன்றும் எடுத்துக்காட்டு அல்ல, நான் யகூப்'' என்று உறுதியாக மறுமொழி கூறினான் யகூப்.

''கரடியோடு சண்டை போட்டாய் போலிருக்கிறதே, பயில்வான்?''

தோழர்களுக்குத் தான் கொடுத்த வாக்குறுதி யகூபுக்கு நன்றாக நினைவு இருந்தது. ஆனாலும் பேசாமல் வஜீரைக் கடந்து போவது ஏதனாலோ அவனுக்குச் சௌகரியமாக இல்லை. தவிரவும் வஜீரோடு கைகுலுக்குவதில்லை என்று மாத்திரமே அவன் சத்தியம் செய்து கொடுத்திருந்தான். பேசுவது என்பதும் கை குலுக்குவது என்பதும் வெவ்வேறு விஷயங்கள் அல்லவா! சுருங்கச் சொன்னால்

வஜீரின் பக்கமாக விரைப்புடன் போய்விடுவது சாத்தியம் என்று யகூபுக்குத் தோன்றவில்லே.

''நான் கன்றுக் குட்டியைத் தேடிக் கொண்டிருந்தேன்'' என்று போகிற போக்கில் ஒரு பொய் சொன்ஞன் யகூப்.

''பாறைகளில் மண்டையை மோதி இந்தக் கன்றுக்குட்டியைத் தேடிஞயோ?''

''அந்த மாதிரி நடக்கத்தான் செய்தது'' என்று பெருமூச்சு விட்டான் யகூப். விவரங்களில் புகுவது அவசியமாக அவனுக்குப் படவில்லே.

''நன்ருகத்தான் அழகுபடுத்திக் கொண்டிருக்கிருய் உடம்பை... ஆனுல் இது ஒன்றும் பிரமாதமில்லே! சீக்கிரம் ஆறிவிடும்! ஒட்டுப் போட வேண்டி வராது!'' என்று தேற்றிஞன் வஜீர்.

அவன் நெஞ்சு மகிழ்ச்சியால் நிறைந்திருந்தது. ஏதேனும் நல்ல காரியம் செய்ய விருப்பம் உண்டாயிற்று. அதஞல் தான், மற்றப் பையன்களின் மதிப்பை என்றைக்கோ இழந்துவிட்ட யகூபிடம் கூட அவன் நட்பும் பரிவும் காட்டிஞன். அவனுடைய காயத் தழும்புகளேக் கண்டு அவன் மேல் இரக்கம் கூடக் கொண்டான். ஆனுல் இதுவும் போதாது என்று அவனுக்குப் பட்டது, இன்னும் எதஞலாவது யகூபுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்த ஆசையாய் இருந்தது.

ஆனுல் யகூபின் மனதிலோ, அந்தக் கணத்தில் முற்றிலும் வேறு எண்ணங்கள் இருந்தன. வஜீருக்கு முகமன் கூடச் சொல்லாமல் அப்பால் போவதற்குப் பதிலாக, வஜீருக்கு மனத்தாங்கல் ஏற்படுத்தக் கூடாது என்பதற்காக அவன் வஜீரோடு நின்று கொண்டும் பெருந்தன்மையுடன் அவனிடம் பேசிக் கொண்டும் இருந்தான்...

யகூபின் இந்த இரகசிய எண்ணங்களே வஜீர் தெரிந்து கொண்டிருந்தால், எடுத்துக்காட்டானவனின் நெற்றியில் இன்னும் இரண்டு முழைப்புக்கள் கிளம்பி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லே. ஆனுல் வஜீர் எதையும் தெரிந்து கொள்ளவில்லே. நல்ல மன நிலேயில் இருப்பவர்கள் குருடர்கள் போன்றவர்கள். யகூப்

தன்னைப் பற்றி என்ன நினைக்கிறான் என்று வஜீர் ஊகித்துத் தெரிந்து கொள்ளாதது மட்டும் இல்லை. எடுத்துக்காட்டானவன் மேல் உண்மையான பரிவால் அவனுடைய உள்ளம் நிறைந்து ததும்பியது. ஆகவே, நெடு நேரம் சிந்தனை செய்யாமல் பையிலிருந்து தன் விலைமிக்க கவணை எடுத்தான். சிவப்புப் பிடி உள்ள அந்தக் கவண் வீதி முழுவதிலும் புகழ் பெற்றிருந்தது.

''உனக்குப் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டான் வஜீர்.

''பிடிக்காமல் என்ன, கட்டாயமாகப் பிடித்திருக்கிறது...''

''வேண்டுமா உனக்கு?''

''வேண்டும், ஆனால்...'' என்று குழம்பினான் யகூப்.

''வேண்டும் என்றால் எடுத்துக் கொள்! உனக்கு இனாமாகக் கொடுக்கிறேன்!''

யகூபின் தலை சுற்றியது. சிவப்புப் பேய்கள் கண்களில் கூத்தாடின. வஜீர் கவணை அவனிடம் நீட்டினான்.

''கொடுக்கும் போது வாங்கிக் கொள்!'' என்று உறுதியாகச் சொன்னான்.

அவனுடைய குரல் யகூபைக் கொஞ்சம் நிதானத்துக்குக் கொண்டு வந்தது.

''நான் உனக்கு ரப்பர் பந்தும் சைக்கிள் மணியும் தருகிறேன். எப்படிக் கிணுகிணுக்கிறது, தெரியுமா?'' என்று கிளர்ச்சி பொங்கக் கூறினான் யகூப்.

''வேண்டாம். பரிசுக்கு விலை வாங்குவது கிடையாது. கவண்கள் என்னிடம் ஒரு பெட்டி நிறையக் கிடக்கின்றன...''

யகூப் தயக்கத்துடன் கையை நீட்டினான். அவனுக்கு இன்னமும் சந்தேகமாய் இருந்தது: வஜீர் ஒரு வேளை விளையாட்டுக்குச் சொல்கிறானோ? அவனைக் கிண்டல் செய்கிறானோ? ஆனால் பெருந்தன்மையும் தாராளமும் கொண்ட வஜீர் முரட்டு வேடிக்கைகளுக்கும் கிண்டல்களுக்கும் அப்பாற்பட்டவனாக இருந்தான். யகூப் நடுங்கும் கையால் கவணை வாங்கிச் சராய்ப் பையில் வைத்துக் கொண்டான்.

''நான் உனக்கு''... என்று மறுபடி ஆரம்பித்தான்.

ஆனால் வஜீர் அவனைச் சட்டென்று இடை மறித்தான்: ''ஒன்றும் வேண்டாம். வீட்டுக்குப் போய்க் கவண் எறியக் கற்றுக் கொள்.''

''நல்லது'' என்று தலையாட்டிய யகூப் விரிந்திருந்த சராய்ப் பையைக் கையால் அழுத்திக் கொண்டு வீட்டுக்கு ஓடினான்.

வஜீருக்கு எதிரே திடீரென வந்து நின்றாள் குல்நூர். வாயைக் காதுவரை நீட்டிக் கொண்டு, மூட்டையில் சுருட்டிய சிவப்புச் சீட்டித் துணியைக் கக்கத்தில் இடுக்கி இருந்தாள்.

''அட வெட்கம் கெட்டவனே, சட்டை கூடப் போடாமல் இருக்கிறாயே!'' என்று காதைத் துளைக்கும்படிக் கீச்சிட்டாள்.

''போ, போ உன் வழியைப் பார்த்து!'' என்று கையை வீசினான் வஜீர்.

''போகிறேனே! யம்லீஹா சித்தியிடம் சீட்டித் துணியைக் கொண்டு போகிறேன். அவள் எனக்கு அழகான கவுன் தைத்துத் தருவாளே!'' என்று அறிவித்த குல்நூர் தலையசைப்பால் எங்கோ ஒரு பக்கம் சுட்டி, இன்னொரு தகவல் தெரிவித்தாள்: ''ஐதாரும் அப்துல்லாவும் வாள் ஏரியின் மறு கோடிக்குப் போயிருக்கிறார்கள். அவர்கள் என்னைக் கூடக் கூட்டிப் போகவில்லை. ஆனால் எனக்கு வானம்பாடி பிடித்துத் தருவார்களாம். இரண்டு.''

குல்நூர் பொரிந்து கொட்டிவிட்டுத் தன் வழியே போய் விட்டாள். தன் சொற்களால் வஜீருக்கு எவ்வளவு ஏக்கமும் வேதனையும் உண்டாயின என்பதை அவள் அறியவே இல்லை. வயிறு நிறைந்தவன் பட்டினி கிடப்பவனைப் புரிந்து கொள்வானா? தான் எல்லோரிலும் அதிக இன்பம் உள்ளவன் என்று சற்று முன்தான் உணர்ந்த வஜீர் சட்டெனத் தலையைத் தொங்கப் போட்டான். தலைக்கு நாள் இருந்த கவலைகளும் கலவரங்களும் அவனை மறுபடி ஆட்கொண்டன. அப்படியானால் தோழர்கள் தன்னை விலக்கி வைத்து விட்டது உண்மைதான்! அவன், வஜீர், எல்லாராலும் புறக்கணிக்கப்பட்ட யகூபின் நிலைக்குத் தாழ்ந்து விட்டானா என்ன?

யகூபின் நட்சத்திரம் அன்று முதல் உச்சத்தில் ஏறத் தொடங்கி இருந்தது வஜீருக்குத் தெரியாது. தெரிந்திருந்தால் தன்னுடைய ஆயுதத்தைத் தன் கையாலேயே அவனுக்குக் கொடுத்திருக்க மாட்டான்...

''இன்று சாயங்காலமே ஏதாவது தகுந்த காரணம் கண்டு பிடித்து, தோழர்களுக்கு உபசாரம் செய்து மன்னிப்பு கேட்க வேண்டும். இல்லாவிட்டால் வாழ்க்கை எனக்குக் கசந்து விடும்...'' என்று கவலையுடன் எண்ணமிட்டான் வஜீர்.



எடுத்துக்காட்டான பையன் சாதாரண யகூப் ஆகிறான்

யகூப் தன் வீட்டுக்குள் போன போது அவனுடைய தாயார் அரண்டு போய்த் தலையைப் பிடித்துக் கொண்டாள். வெகு நேரம் வரை ஒரு சொல் கூடப் பேச அவளால் முடியவில்லை. அவளுடைய முகம் மாறி மாறி வெளிறுவதும் நீலம் பாரிப்பதுமாக இருந்தது. அவளது தொண்டைக் குழியில் பந்து போல ஏதோ அடைத்துக் கொண்டது. முடிவில் கைகளை வீசி ஆட்டியவாறு காதைத் துளைக்கும்படி அவள் வீரிட்டாள்:

''கொன்று விட்டார்கள் என் மகனை, கொன்று விட்டார்கள்! எந்த வெறிநாய் உன்னைக் கடித்துக் குதறிற்று என் கண்ணே... ஐயோ, குற்றுயிராகி விட்டானே என் குழந்தை, சாகக் கிடக்கிறானே!..''

சாகும் எண்ணமே இல்லாத யகூப் அமைதியாகத் தோள்களைக் குலுக்கி, வெற்றிக் குரலில் சொன்னான்:

''அம்மா, நான் விளையாடினேன், பாறைகள் மேல் துள்ளிக் குதித்தேன்! அது ரொம்பக் குதூகலமாக இருந்தது, ஆனால் எனக்குக் கால் கொஞ்சம் சறுகிவிட்டது...''

குலியெமேஷ்-அபாய் புலம்பலைத் தொடர்ந்தாள்:

''எல்லாம் இந்தப் பாழும் வஜீர் செய்த வம்புதான், சந்தேகம் இல்லாமல்! கூட்டுப்பண்ணை அலுவலகத்துக்குப் போய் இந்தப் போக்கிரியை ஒழுங்குக்குக் கொண்டு வரும்படி செய்யா விட்டால் எனக்கு இருப்பு கொள்ளாது!''

வழக்கத்துக்கு மாறான தாராள புத்தியைக் காட்டி, சற்று முன் தான் தனக்குக் கவணைப் பரிசளித்த பையனைப் பற்றி இந்த அபாண்டத்தை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க யகூபால் முடியவில்லை. அவனுடைய நெஞ்சில் ஒரு விதமான வலி கூட உண்டாயிற்று.

''அம்மா, நீ வஜீரை ஒன்றும் சொல்லாதே. அவன் இப்போது என் நண்பன். நான்தான் இடறி விழுந்து விட்டேன். தானே விழுபவன் அழக்கூடாது!'' என்று ஆழ்ந்த தோரணையில் சொன்னான் யகூப்.

ஆனால் தாயார் முன்னிலும் கடுமையாகக் கிளர்ச்சி அடைந்தாள்.

''தாங்களே விழும் குழந்தைகளைச் சேர்ந்தவன் அல்ல நீ. வெறும் பேச்சு பேசாதே! வஜீர் கிட்டத்திலேயே போகாதே என்று எத்தனை தரம் உனக்குப் படித்துப் படித்துச் சொல்லி இருக்கிறேன்! இந்த உதவாக்கரைப் பயலோடு சிநேகிதம் வைத்துக் கொள்ளாதே என்று எத்தனை தரம் சொல்லி இருக்கிறேன்!''..

வஜீர் குற்றம் அற்றவன் என்று தாயார் நம்பும்படி எடுத்துச் சொல்வது நடவாது என்று கண்ட யகூபின் மூளையில் துணிகரமான ஓர் எண்ணம் திடீரென்று உதித்தது.

''அம்மா, அப்படியானல் இதோ இந்த எல்ம் மரத்தின் உச்சியில் ஏறி அங்கிருந்து குதிக்கிறேன், நீயே பார்ப்பாய். பெருமூச்சுக் கூட விட மாட்டேன் பார்!'' என்ருன்.

இப்படிப் பயமுறுத்தி விட்டு, வேலி அருகே நின்ற ஒற்றை எல்ம் மரத்தின் பக்கம் பாய்ந்தான் யகூப். ஆனல் அவன் அடிக் கிளையைப் பற்றுவதற்குள் அவனுடைய தாயார் அவனை நெருங்கிப் பிடித்துக் கொண்டாள்.

இந்த மரத்தின் மேல் ஏற யகூப் பல முறை முயன்ருன், ஆனல் அவனுடைய முயற்சி இதுவரை ஒரு தரம் கூடப் பலிக்க வில்லை என்பதைச் சொல்லிவிட வேண்டும். ஆகவே இந்தத் தடவை அவன் உச்சிக்கு ஏறி இருப்பது சந்தேகம் தான். ஆனல் அவனுடைய எதிர்பாராத குறும்பு தாயைக் கடுமையாகப் பாதித்து விட்டது.

மகனைத் தழுவி, மரத்திலிருந்து தொலைவில் அவனை இட்டுச் செல்ல முயன்றவாறு, ''அசட்டுத்தனம் பண்ணுதே, கண்ணே'' என்று நடுங்கும் குரலில் சொன்னுள் அவள்.

''குழந்தைக்கு மூளை பிசகி விட்டது போலிருக்கிறது!'' என்று கலவரத்துடன் எண்ணிஞள்.

உண்மையிலேயே யகூபின் குறும்பு மிக விந்தையாகப் பட்டது. ஏனென்ருல் அது வரை அம்மா சொன்னபடியே எல்லாம் செய்து வந்தான் அவன்.

''என் கண்ணே!.. என் கண்ணே!..'' என்று அச்சத்துடனும் குழப்பத்துடனும் திரும்பத் திரும்பச் சொன்னுள் குலியெமேஷ் அபாய்.

ஆனல் யகூபோ, எதையும் கேட்க விரும்பவில்லை. தாயாரின் அணைப்பிலிருந்து விடுபட முயன்றவாறு எல்ம் மரத்தை நோக்கிப் பாய்ந்தான்.

''விடு என்னை! சொல்லுகிறேனே—விடு! எப்போது சொல்லி விட்டேனே, குதிக்கத்தான் போகிறேன்!''

குலியெமேஷ்-அபாய்க்குத் தாவு தீர்ந்து போயிற்று. தன் மகனுக்கு ஏதோ கேடு வந்து விட்டது என்று அவள் உறுதியாக

எண்ணினுள். அவனைச் சமாதானப் படுத்த முயன்றவாறு, பைத்தியக்காரர்களிடம் பேசுவது போலத் தணிந்த குரலில் அவனேடு பேசினுள்:

''நல்லது மகனே, குதிப்பாய், கட்டாயம் குதிப்பாய், ஆனுல் நாளைக்குத் தான். இப்போது வீட்டுக்குள் போவோம். பாலாடையும் இனிப்பு பிஸ்கோத்துகளும் தருகிறேன்...''

இந்த மாதிரி ருசியான பண்டங்களைப் பற்றிக் கேட்டதும் பசித்திருந்த யகூப் முரண்டுவதை நிறுத்தினுன். தாயாரின் சந்தேகங்களை அறியாததால் தான் குதிக்கப் போவதாக அவளை நம்ப வைத்து விட்டதாக எண்ணி மகிழ்ந்தான்.

மகனைத் தன் அணைப்பிலிருந்து விடாமல் குலியெமேஷ்-அபாய் அவனை வீட்டுக்கு இட்டுப் போனுள்.

சாப்பிட உட்கார்ந்த யகூப் ஒரு கிண்ணம் பாலாடையையும் ஒரு குவியல் பிஸ்கோத்துக்களையும் நொடிப் போதில் தின்று தீர்த்தான். இன்னமும் கூடத் தின்றிருப்பான், ஆனுல் கேட்கக் கூச்சப் பட்டான்.

''என்ன தான் செய்வது? தகப்பன் போய் விட்டான் தொலைந்தே போனவன் போல, இங்கே இந்த மாதிரித் துன்பம்...'' என்று வைத்த கண் வாங்காமல் யகூபைப் பார்த்தபடிக் கவலையுடன் எண்ணமிட்டாள் குலியெமேஷ்-அபாய்.

''உன் கீறல்கள் வலிக்கவில்லையா, மகனே?'' என்று ஏக்கத்துடன் கேட்டாள் தாய்.

''இல்லை'' என்று நெற்றியில் நீலமாய் இருந்த முழைப்பைத் தொட்டு விட்டுச் சொன்னுன் யகூப்.

தாயின் நெஞ்சு மறுபடி விண்டு போயிற்று. ''வலியைக் கூட உணர முடியாதபடி அவ்வளவு தூரத்துக்கு மூளை பிசகி விட்டதா என்ன இவனுக்கு?..'' என்று நினைத்துக் கொண்டாள்.

படுக்கையை விரித்து, ''படுத்துக் கொள், மகனே, நிச்சயமாக நீ ரொம்பக் களைத்துப் போனுய்'' என்றுள்.

தன் ''எடுத்துக்காட்டான தன்மை''யுடன் அதிகாலை முதலே போராடிக் கொண்டிருந்த யகூப் மிகவும் களைத்துத்தான் போயி

ருந்தான், ஆகையால் எதிர்க்காமல் படுத்துக் கொண்டான். அப்போது கடினமான ஒரு சாமான் தொடையில் உறுத்துவதை உணர்ந்தான். சராய்ப் பையைத் தொட்டுக் கவண் இருந்ததை உணர்ந்தான். ஆகவே, கவண் அதன் இடத்தில் இருந்தது. யகூபின் களைப்பு இருந்த சுவடு தெரியாமல் மறைந்து விட்டது. உடனே இடத்திலிருந்து துள்ளி எழுந்திருக்க விரும்பினான். ஆனால்... தூங்குபவன் போலப் பாசாங்கு செய்தான், மிகவும் நாசூக்காகக் குறட்டை கூட விட்டான்.

மகன் தூங்கி விட்டான் என்று நம்பிய குலியெமேஷ்-அபாய் சாக்கிரதையாக வாயிலுக்குப் போனாள். ஊருக்கு ஒரு கிலோமீட்டர் தள்ளி இருந்த காட்டுக் காவலரின் வீட்டுக்குப் போக அவள் முடிவு செய்திருந்தாள். இந்தக் காட்டுக் காவலரின் மகள் டாக்டர். தலைக்கு நாள்தான் தகப்பனார் வீட்டுக்குக் குழந்தைகளோடு இளைப்பாறுவதற்காக வந்திருந்தாள். தன் மகனைச் சோதித்துப் பார்க்கும்படி அவளிடம் கேட்டுக் கொள்ள முடிவு செய்தாள் குலியெமேஷ்-அபாய்.

தாயார் வெளியே போய், அறைக் கதவு மெல்லிய கிரீச் சொலியுடன் சாத்தப்பட்டு, வெளிக் கதவும் திறந்து பூட்டப்பட்ட சத்தம் கேட்டதும் யகூப் துள்ளி எழுந்து முகப்புக்கு ஓடி, அம்மா எந்தப் பக்கம் போனாள் என்று வேலி இடுக்கு வழியாகப் பார்த்தான். கூட்டுப்பண்ணை அலுவலகத்துக்கோ வஜீரின் வீட்டுக்கோ கூட அவள் போகவில்லை. தாயார் ஊர்க் கோடிக்குப் போவதைக் கண்ட யகூப் அமைதி அடைந்து கவணை வெளியில் எடுத்தான். மலைநாட்டு வீரர்களான ஜிகித்துக்களின் கைகளில் தான் என்ன என்ன மாதிரி ஆயுதங்கள் கிடைக்கின்றன! யகூப் கவணைக் கையில் பிடித்துச் சுழற்றினான், அதன் மழமழப்பான சிவப்புப் பிடியைப் பரவசத்துடன் பார்வையிட்டான். இனி வேலை தொடங்குவதுதான் பாக்கி.

வாசல் பக்கத்துத் தரையில் மணலும் பருக்கைக் கற்களும் சிதறிக் கிடந்தன.

சிறு கற்களைப் பொறுக்கித் தொப்பியில் போட்டுக் கொண்டு

வாசலில் வசதியாக உட்கார்ந்து கொண்டான் யகூப். இப்போது கவண் எறிவதற்கு இலக்கு தேட வேண்டி இருந்தது. இதைப் பற்றி நீண்ட யோசனை எதற்காக? பண்டசாலையின் கிட்டத்தில் தூண் கவர்ப்பில் கவிழ்த்திருந்த பச்சை வாளியைக் காட்டிலும் தகுந்த இலக்கு எங்கே கிடைக்கும்?

கவணில் கூழாங்கல்லை வைத்துக் குறிபார்க்கலானான் யகூப். முதலில் ஒரு கண்ணையும் பின்பு மற்றதையும் நீண்ட நேரம் இடுக்கிக் கொண்டிருந்தான். பின்பு இரண்டாலும் அளவு பார்த்தான். அப்புறம் கவண் ரப்பரை அது ஒரேயடியாகக் குறுகும் வரை இழுத்துச் சட்டென விட்டான். கல் எந்தத் திக்கில் பாய்ந்தது என்பதை அவன் கவனிக்கக் கூட இல்லை, ஏனென்றால் திடீரென்று விடப்பட்ட ரப்பர் அவனுடைய காயம் பட்ட விரலில் வலி உண்டாகும் படிச் சுளீரென்று அடித்ததால் அவன் கண்களில் சிவப்பு வட்டங்கள் சுழன்றன. முன்பு இது மாதிரி நேர்ந்திருந்தால் யகூப் கவணை எறிந்து விட்டு அழுது கொண்டே அம்மாவிடம் ஓடி இருப்பான். ஆனால் அந்தக் காலம் இப்போது போய் விட்டது. தோல்வி அவனுடைய உற்சாகத்தை அதிகந்தான் ஆக்கிற்று. அடி பட்ட விரலை உதடுகளில் வைத்துக் கொண்டு அதன் மேல் இரண்டொரு தரம் ஊதிய பிறகு மறுபடி தன் வேலையில் ஈடுபட்டான். இரண்டாந் தரம் கவண் எறிந்தான், மூன்றாந் தரம், ஐந்தாந் தரம் என்று எறிந்து கொண்டே போனான், ஆனாலும் பச்சை வாளி தன் இடத்தில் நிம்மதியாகத் தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு தரங்கூட அது கிலுங்கென்று ஒலிக்கவில்லை!

அப்போது யகூப் வாசல் படியை விட்டு இறங்கிப் பண்டசாலைக்கு இரண்டடி கிட்டே போய், நின்றபடிக் கவண் எறியத் தொடங்கினான். ஆறாந் தடவை எறிந்த கல் பட்டு வாளி டணார் என்று ஒலித்தது. கூழாங்கல் அதன் பச்சை விலாவை உராய்ந்து கொண்டு துள்ளிப் புல்லில் விழுந்தது.

''ஒரு ரொட்டிக்கு வெண்ணெய் தடவி விட்டேன்!'' என்று வெற்றிப் பெருமிதத்துடன் சொன்னான் யகூப்.

இந்த வழக்கு மொழியை அவன் வஜீரிடம் அடிக்கடி கேட்

டிருந்தான், இப்போது மகிழ்ச்சியுடன் தானும் சொன்னான்.

ஆனால் இரண்டாவது ரொட்டி ''வெண்ணெய் தடவிக் கொள்ள'' வெகு நேரம் மறுத்தது. யகூபுக்கு மனச் சோர்வு உண்டாகத் தொடங்கிற்று. அதற்குள் கவணிலிருந்து எறியப்பட்ட கூழாங்கல் வேறோர் இலக்கைத் தேடிக் கொண்டது. பச்சை வாளி முந்திய இடத்திலேயே இருந்தது, ஆனால் பண்டசாலை சன்னலின் மேல் சட்டத்திலிருந்து உடைந்த கண்ணாடிகள் கணகணவென்று சிதறின. அந்தக் கணத்தில் மெல்லிய கிரீச்சொலியுடன் வெளிக் கதவு திறந்தது. ஆனால் உற்சாகப் பெருக்கில் இருந்த யகூப் காதில் அது படவில்லை. பிடிவாதமாகப் பச்சை வாளியைக் குறி வைத்து ரப்பரை இழுத்து விட்டான். மறுபடியும் கண்ணாடிகள் கணீரொலியுடன் சிதறின. இவை பண்டசாலைச் சன்னலின் கீழ்ச் சட்டத்திலிருந்து சிதறின.

அப்போதுதான் முகப்பில் புகுந்த குலியெமேஷ்-அபாயும் டாக்டரும் திகைத்துப் போய் நின்று விட்டார்கள். பயந்து போன தாயார் காதைப் பிளக்கும் கூச்சலுடன் யகூப் மேல் பாய்ந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டாள்.

''என் மகனே!''

கவணைப் பைக்குள் வைக்க யகூப் மிகுந்த சிரமப்பட்டான். அவன் தாயாருக்கோ கவண் மேல் கவனமே செல்லவில்லை.

''இவன்தான் உங்கள் நோயாளி மகனா?'' என்று வந்திருந்த டாக்டர் குலியெமேஷ்-அபாயிடம் கேட்டாள்.

''ஆமாம். இவன்தான். என் ஒரே மகன்!..''

யகூபை வீட்டுக்குள் இட்டுப் போனார்கள். அவனுடைய தொண்டையையும் கண்களையும் டாக்டர் பரிசோதித்துப் பார்த்தாள். பின்பு கட்டிலில் படுக்க வைத்து, அவனுடைய வயிற்றைத் தொட்டுப் பார்த்தாள். ஸ்டெதஸ்கோப்பை மாட்டிக் கொண்டு பையனுடைய நெஞ்சிலும் முதுகிலும் வைத்து உற்றுக் கேட்டாள். பிறகு கண்களை இன்னொரு தரம் பார்த்தாள்.

''உங்கள் பையன் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கிறான்'' என்று தாயிடம் சொன்னாள்.

''அது எப்படி? ஆரோக்கியம் உள்ள பையன் இப்படி இருப்பது உண்டா எங்காவது? இவன் உடம்பில் காயம் படாத இடமே இல்லையே!''

''இவனுக்கு உடம்பு சரியாய் இல்லா விட்டால் குதித்திருக்க மாட்டான். குதித்திராவிட்டால் விழுந்திருக்க மாட்டான். அப்படித்தானே, ஜிகித்?'' என்று புன்னகை செய்தாள் டாக்டர்.

''ஜிகித்'' ஆம் என்று தலை ஆட்டினான்.

தாயாரோ தன் பாட்டைத் தொடர்ந்தாள்:

''இந்தக் காயங்களுக்கு என்ன மருந்து தடவ வேண்டும்?''

''ஒரு மருந்தும் வேண்டாம். தானே ஆறி விடும்...''

''இந்த டாக்டருக்கு இதயமே இல்லை போலிருக்கிறது'' என்று நினைத்துக் கொண்டாள் குலியெமேஷ்-அபாய். ஆனால் அது சரி அல்ல. டாக்டருக்கு இதயம் இருந்தது. மிகுந்த பரிவு உள்ள இதயம். ஆனால் அற்ப விஷயங்களுக்கு ஆர்ப்பாட்டம் செய்பவர்களை இந்த டாக்டரால் சகிக்க முடியவில்லை. தன் கருவிகளைப் பெட்டியில் வைத்து எடுத்துக் கொண்டு வணக்கம் சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

''இனி என்ன செய்வது? இப்படித்தான் இருக்க வேண்டும் போலிருக்கிறது'' என்று எண்ணமிட்டாள் பயந்து போன குலியெமேஷ்-அபாய். அன்று முழுவதும் அவள் தன் மகனைக் கண்காணித்துக் கொண்டிருந்தாள். அவனை முகப்புக்குக் கூடப் போக விடவில்லை. ஆனால் பொழுது சாய்வதற்கு முன்னால், மந்தை மேய்ச்சலிலிருந்து திரும்பியதும், தன் கன்றுக் குட்டி வராததைக் கண்ட குலியெமேஷ்-அபாய் அதைத் தேடக் கிளம்பினாள். போவதற்கு முன் மகனைக் கண்டிப்பாக எச்சரித்தாள்:

''வெளியே மட்டும் கிளம்பாதே, சொல்லி விட்டேன்!''

தன் சொற்கள் பயன் அளிக்கும் என்ற நம்பிக்கை இல்லாததாலும், பையன் தன் சொல்லைத் தட்டி விடுவான் என்ற அச்சத்தாலும் குலியெமேஷ்-அபாய் அறையை வெளிப் புறமும் பூட்டினாள். அவள் மட்டும் இப்படிச் செய்யாதிருந்தால் யகூப் ஒருவேளை அவள் பேச்சைக் கேட்டிருப்பான், வீட்டில் உட்கார்ந்திருப்பான்.

ஆனால் பட்டியில் அடைபட்ட ஆட்டுக் குட்டி போல, பூட்டிய அறையில் எவன் அமைதியாக உட்கார்ந்திருப்பான்? யகூப் சன்னல் வழியே முகப்பில் குதித்தான். தலைவன் அவனுக்குக் கொடுத்திருந்த மூன்று நாள் கெடுவில் ஒரு நாள் முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. வேண்டியபடிப் பயிற்சி செய்யத் தனக்கு நேரம் பற்றாது என்று யகூபுக்குக் கவலை ஏற்பட்டது. அதனால் தான் அவன் மறுபடி தன் வேலையில் ஈடுபட்டான். குளியறைப் புகை போக்கியின் தகர விளிம்பை விழத் தட்டவும் வீட்டைச் சுற்றி இருந்த மேட்டின் வலப் புறம் கிடந்த மண் பானையை உடைக்கவும் வேறொரு அண்டை வீட்டுக்காரி கியூன்பிகா பாட்டியின் பித்தளைப் பாத்திரத்தின் விலாவில் அதுக்கல் ஏற்படுத்தவும் தாயார் வருவதற்குள் அவனால் முடிந்தது...

கியூன்பிகா பாட்டி எதையும் பார்க்கவோ கேட்கவோ இல்லை. ஆனால் வேறொரு பக்கத்து வீட்டுக்காரி கோபத்துடன் கத்தி யகூபைத் திட்டத் தொடங்கினாள்:

''பாழும் பயலே, நீயும் இரண்டாவது வஜீராக மாறி விட்டாயா? நல்ல தாயார் தகப்பனாருக்கு இந்த மாதிரிப் பதர் பிள்ளையாகப் பிறந்திருக்கிறதே! எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று இவனுக்குத் தெரியவில்லை போலிருக்கிறது! உன் அம்மா வரட்டும், பொறு! உதவாக்கரைப் பயலே!..''

''உதவாக்கரை'' என்று வாழ்நாளில் முதல் தடவையாக அழைக்கப்பட்ட யகூப் அதற்காக நிரம்ப வருத்தப்பட்டுவிடவில்லை. ''உருப்படாத'' அல்லது ''பதரான'' பையனை ஒருவரும் உதாரணமாகக் காட்ட மாட்டார்கள். ஆகவே ஊர்ப் பையன்கள் யகூபை ''எடுத்துக்காட்டானவன்'' என்று நையாண்டி செய்வதை இனி நிறுத்தி விடுவார்கள்.



ஏரியில் மீன்கள்
விளையாடுகின்றன...

சூரியன் மறையும் தறுவாயில் இருந்தது. விரைவான சிறு அலைகள் கரையை விட்டு ஓடுவதும் மறுபடி கரையை இறுக அணைத்துக் கொள்வதுமாகப் பகல் முழுவதும் காற்றுடன் விளையாடிக் கொண்டிருந்தன. ஆனால் சாயங்கால வேளையில் அவை திடீரென்று அடங்கி விட்டன. களைத்துப் போய் விட்டன போலும். அல்லது விளையாட்டைத் தொடங்கி வைக்கும் தலைவனான காற்று அவைகளை இளைப்பாற விடத் தீர்மானித்து மலைக்கு ஓடி, அடர்ந்த தேவதாரு மரங்களுக்கு இடையே புகுந்து, அவற்றின் முள்ளாய்க் குத்தும் நீண்ட ஊசியிலைகளைப் பறக்க அடிப்பதில் ஈடுபட்டது போலும். காற்றுக்குத் தான் எந்த இடத்திலும் எந்த நேரத்திலும் செய்வதற்கு வேலை கிடைத்து விடுமே.

ஆனால் பட்சிகள் எப்போதும் தங்கள் நேரக் கணக்குப்படியே பாடுகின்றன. வெப்பம் உள்ள நடுப் பகலில் பாட அவை அவ்வள வாக விரும்புவதில்லை. ஆனால் லேசான குளிர் பூமிக்கு இதமாகப் பரவும் மாலைக் கருக்கலில் வாள் ஏரியின் கரையில் உள்ள ஒவ் வொரு புதரும் தனக்கே உரிய பாட்டுக்களைப் பாடுகிறது. அவற் றைக் கேட்கக் கேட்க அலுப்பதே இல்லை!

மீன்களும் காலையிலும் மாலையிலும் கும்மாளம் அடிப்பதை விரும்புகின்றன. தெளிந்த நீரில் சளப்பிட்டவாறு அவை நீரின் மேற்பரப்பில் பெரிய, சிறிய சுழிகளை ஏற்படுத்துகின்றன. எல்லா வற்றிலும் அதிகக் குறும்பு உள்ளவையோ என்றால், வெள்ளிச் செதிள்கள் பளிச்சிடும்படி மேலே துள்ளி வருகின்றன—''நாங் கள் எவ்வளவு அழகானவர்கள், பார்த்துப் பரவசம் அடையுங் கள்!'' என்று பெருமை அடித்துக் கொள்பவை போல.

இப்படி விட்டாற்றியாக இங்கே விளையாடிக் கொண்டிருக் கும் வகை வகையான இந்த மீன்களில் பல, தங்கள் ஏரியைப் பிரிந்து கிரமேத் சிகரத்தில் உள்ள வேற்று ஏரிக்கு மிக மிக விரை வில் போக வேண்டி இருக்கும். வாள் ஏரியில் தங்கள் சொந்த நீருக்குத் திரும்ப அப்புறம் ஒரு போதும் இவற்றுக்கு வாய்க்காது!

இந்தச் சேதிகள் எல்லாம் மீன்களுக்குத் தெரியாது. அவற் றால் கொஞ்சமாவது ஊகிக்க முடிந்திருந்தால் இப்படிக் கவலை இல்லாமல் கூத்தாடி இருக்க மாட்டா.

ஆனால் பறவைகளின் விஷயம் முற்றிலும் வேறு. பறவைகளை வெகு தூரம், காட்டின் மிக அடர்ந்த பகுதிகளுக்கு வேண்டுமானா லும், கொண்டு போகலாம். ஆனாலும் அவை தங்கள் கூடுகளுக்கு வழி கண்டு கொள்ளும். பூமியில் நன்றாக வாழ்வது என்றால் இது தான்! இது நீரில் வாழ்வது போன்றதே இல்லை. நல்லது, மீன்கள் நீந்தட்டும், பட்சிகள் பாடட்டும், ஏரிக் கரையில் உள்ள வில்லோச் செடிக்குள் நாம் பார்வை செலுத்துவோம். முதலில் அங்கே நமக்குத் தெரிவது கீல் போல் கறுத்த ஒரு தலை. அப்புறம் அதன் பக்கத்தில் தெரிகிறது இன்னொரு தலை—செம்பட்டையானது. நாணல் அடர்த்தியாக மண்டி இருப்பதால் இந்தத் தலைகள் யாரு

டையவை என்று தெரிந்து கொள்வது கடினமாய் இருக்கிறது, ஆனாலும் தலைவன் அப்துல்லா தன் விசுவாசமுள்ள தோழன் ஐதாரை இங்கே கூட்டி வந்திருக்கிறான் என்பதையும் அவர்கள் இரண்டு பேரும் முக்கியமான வேலைக்காக இங்கே வந்திருக்கிறார் கள் என்பதையும் நாம் சட்டென ஊகித்து விடுவோம். இது உண் மைதான். ஏனென்றால் ''முக்காலி''யின் இரண்டு கால்கள் பேசா மல், ஒரே கவனமாக மீன் பிடி கூடை முடைந்து கொண்டிருக் கிறார்கள். அதிலும் ஐதார் அபாரமான தேர்ச்சியும் கலைத் திறமை யும் கொண்டிருப்பதால் அப்துல்லா தலைவனாய் இருந்த போதி லும் நாணல் தயாரித்துத் தரும் மிக எளிய வேலையை ஏற்றுக் கொண்டிருக்கிறான். நன்றாக வளைந்து கொடுக்கும் நாணலைப் புதரில் தேடிக் கண்டு, பாட்டியின் கத்தியால் நறுக்கி, தாள்களை அகற்றி ஐதாரிடம் கொடுக்கிறான்.

''நிபுணன் அப்பா நீ!'' என்கிறான் அப்துல்லா. அவனுடைய குரலில் ஒலிக்கும் மரியாதைத் தொனிகளைக் கேட்கும் போது தோழனிடம் கொஞ்சம் இச்சகம் கூடப் பேசுகிறான் என்று தோன்று கிறது. அதனால் என்ன, தனக்குத் திறமை இல்லாத போது மற்ற வனுக்கு உதவுவதும் அவன் மேல் பொறாமைப்படுவதும் அவசியம் ஆகி விடுகின்றன.

மெய்யாகவே ஐதார் வேலை செய்வதைப் பார்க்கவே இன் பமாய் இருந்தது. அவனுடைய பழுப்பேறிய துடியான கைகள் களைப்பில்லாமல் இயங்கின. துவளும் நீளமான நாணல்கள் பட்டு நாடாக்கள் போல அவனுடைய லாகவமான விரல்களில் விளை யாடின. அவன் மீன் பிடி கூடை முடையவில்லை, விலை உயர்ந்த லேஸ் பின்னுகிறான் என்ற எண்ணம் ஏற்பட்டது. அதே சமயம் தன் திறமையைப் பற்றி அவன் ஒரு தரங்கூடப் பெருமை அடித்துக் கொள்ளவில்லை. அவனுடைய முகத்தில் சுய திருப்தியின் சாயல் கூட இல்லை. சற்றைக்கு ஒரு தரம் மூக்கை உறிஞ்சியவாறு அவன் ஒரே முனைப்புடன் வேலையில் ஈடுபட்டிருந்தான்.

உண்மையான தேர்ச்சியாளர்கள் இப்படித்தான் இருப்பார் கள்!

மீன்கள் கும்மாளம் அடித்தன, பறவைகள் பாடின, பையன்கள் கூடை முடைந்தார்கள், ஆனுல் கரையில் பதுங்கிப் பதுங்கி நடந்த சட்டை போடாத பையனை ஒருவரும் கவனிக்கவில்லை. மெல்லிய வில்லோக் கிளைகள் அவனுடைய வெறும் தோள்களைத் தொட்டு ஏதோ கிசுகிசுக்க முயன்றது உண்மையே. ஆனுல் அவற்றின் கிசுகிசுப்பை யாரும் உற்றுக் கேட்கவில்லை. கொஞ்சம் நடந்த பிறகு பையன் புதர்களில் கவிழ்ந்து படுத்து, தங்கள் வேலையில் முனைந்திருந்த இரண்டு தோழர்களையும் உற்றுக் கவனிக்கத் தொடங்கினுன். முகத்தில் பிரகாசமான வெளிச்சம் பட்டதுபோல அவன் கண்களை அடிக்கடி கொட்டினுன், ஆனுலும் அவனுடைய கூர்ந்த பார்வை தெளிவாய் இருந்தது. அவன் எல்லாவற்றையும் கண்டான், மனத்தில் பதித்துக் கொண்டான்... பின்பு ஏதோ முடிவுக்கு வந்து கோரைப் புல் கொத்தைப் பற்றி அதைத் தரையிலிருந்து பிடுங்காமல், குதிரை வால் போல முடிச்சாகக் கட்டினுன். பஷ்கீரியக் காட்டுப் பிரதேசத்தில், தடம் தவருமல் இருப்பதற்காகவோ, இடத்தைக் குறிப்பதற்காகவோ இந்த மாதிரி அடையாளங்களை ஆட்கள் அடிக்கடி விட்டுச் செல்வது உண்டு. இந்தப் பையனும் அடையாளம் விட்டுச் செல்ல விரும்பினுன் போல் இருக்கிறது. வாள் ஏரியின் கரைகள் விசாலமானவை, எங்கே பார்வை செலுத்தினுலும் கடக்க முடியாத நாணல் புதர்கள் மண்டி இருந்தன. வழி தவறுவதும் கடினம் அல்ல.

உடம்பை வலுவாக்குவதற்காகச் சட்டை போடாமல் வெற்று உடம்பாக வளைய வரும் பையன்களைக் கோடையில் அடிக்கடி காணலாம்தான், ஆனுல் சுறுசுறுப்பும் அதே சமயம் எச்சரிக்கையும் உள்ள இம்மாதிரிப் பையன்களைத் தங்கக் கழுகு ஊரில் காண்பது அரிது. இந்த உருண்டை முகத்தையும் கொட்டும் இமைகளையும் விரைந்த பூனை நடையையும் ஒரு தரமாவது பார்த்தவர்கள் இவன் வஜீர் என்று உடனே சொல்லி விடுவார்கள்.

தனக்கு வேண்டி இருந்தவற்றை எல்லாம் சரி பார்த்த பின் வஜீர் எச்சரிக்கையுடன் அப்பால் நகர்ந்து காட்டுக்கு உள்ளே

போய், அடர்ந்த புல்லில் காடை போல மூழ்கி மறைந்து விட்டான்...

அப்துல்லாவும் ஐதாரும் முடைவதை முடித்து இளைப்பாறிய வண்ணம் தங்கள் கை வேலையைப் பார்வை இட்டார்கள். அருமையாக, அழகாக அமைந்து விட்டது கூடை! உண்மை நிபுணன் போலத் தன் வேலையைக் கவனமாகச் சரி பார்த்தான் ஐதார். கூடை மூடியைப் பல தடவை திறந்து மூடினன், கூடையை எல்லாப் பக்கங்களிலும் கவனித்துப் பார்த்தான். பிறகு பையன்கள் சராய்களைக் களைந்து விட்டு நீரை நெருங்கினுர்கள்.

கனத்த கல் ஒன்றை எடுத்துக் கூடையின் அடியில் வைத்து, கூடையை நீரில் தள்ளினுர்கள். கூடை உடனே அடித் தரைக்குப் போய்விடவில்லை. அதை நாணல்களுடன் கட்டி வைக்க வேண்டியதாயிற்று. மீன்களைத் தின்ன நண்டுகள் வரக் கூடும் என்று அஞ்சி, கூடை மூடியை மிக மிக இறுக்க மூடினுர்கள் பையன்கள். வில்லோப் பட்டையால் அதை வலுப்படுத்தக் கூடச் செய்தார்கள். மீன் வலைஞர்கள் அனுபவசாலிகள். மீன் பிடிப்பதன் நுட்பங்களை அறிந்தவர்கள். கோடையின் இந்தப் பருவத்தில் எப்போது ஏதேனும் மீன் கூடைக்குள் விழும் என்று உட்கார்ந்து எதிர்பார்ப்பது மன்னிக்க முடியாத பேதைமை ஆகும் என்பதை அவர்கள் அறிவார்கள். இந்த மாதிரி வழி தவறிய மீன்கள் அகப்படும் வரை காத்திருப்பது என்ருல் கோடை காலம் முழுவதும் கழிந்து விடலாம். இல்லை, இல்லை! நாளைக்கே நான்கு தூண்டில்களுடன் காரியம் தொடங்க வேண்டும். மீன் தூண்டில் முள்ளை விழுங்கி விடாதபடி விரைவாகத் தூண்டிலை எடுத்து விட வேண்டும். இல்லாவிட்டால் மீன் செத்துப் போகும்.

நீரில்தான் எத்தனை மீன்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தன! ஏரி முழுதும் செதிள்களால் பளிச்சிடுவதாகவும் வெள்ளி மயமாக மின்னுவதாகவும் தோன்றியது. எப்படி விரைவாகத் தூண்டில் முட்களில் மாட்டிப் புது ஏரிக்கு மாறுவோம் என்றே குதூகலமாக விளையாடிய மீன்கள் கனவு கண்டு கொண்டிருந்ததாகப் பையன்களுக்குத் தோன்றியது.பயணம் செய்வது யாருக்குத்

தான் பிடிக்காது? வேறு இடங்களுக்குப் போவது யாருக்குத்தான் சுவாரசியமாய் இருக்காது?

''விளையாடுங்கள், விளையாடுங்கள்!'' என்று ஆதரவாளனின் தோரணையில் சொன்னான் அப்துல்லா. ''நீங்கள் இன்னும் அதிக மகிழ்ச்சியுடன் விளையாடும் நாட்கள் வரப் போகின்றன!''

தங்கள் முக்கிய வேலையை முடித்து விட்ட பையன்கள் ஊருக்கு விரைந்தார்கள்.



விடாமல் பெய்த மழை

பஷ்கீரியாவில் கோடை மழை கூடப் பல நாட்கள் விடாமல் பெய்யும். அந்த மாதிரி மழை பிடித்துக் கொண்டால் இரவும் பகலும் கொட்டு கொட்டென்று கொட்டும். சலிப்பு உண்டாக்கும்படிச் சோவென்று இரையும். அதனால் தான் மழை இடை ஓய்வு இல்லாமல் பெய்கிறது என்று சொல்லுவார்கள். ஆனால் இந்தப் பருவத்தில்தான் நிலம் விரும்பிய அளவு நீர் குடிக்கும், இன்பம் அனுபவிக்கும். ஈரமான கரு மண், வெண்ணெய் கலந்த பொங்கலைச் சற்று முன்தான் சாப்பிட்ட சிறுவனுடைய உதடுகள் போலப் பளிச்சிடும்.

நடு ராத்திரியில் தொடங்கிய மழை விடாமல் காலையிலும் பெய்து கொண்டிருந்தது. ஆனாலும் நான்கு வீடுகளில் நான்கு சிறுவர்கள் கைகளைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. கொம்பில்லாத பழுப்புப் பசுவை மந்தைக்கு ஓட்டிய பிறகு

அப்துல்லா ஐதார் வீட்டுக்குப் போனான். தோழர்கள் வலுவான, நிரம்ப நல்ல தூண்டில்கள் நான்கு தயாரித்தார்கள். பழைய மீன் வலையைக் கொண்டு பை தைத்தார்கள். களஞ்சியத்துக்குப் பின்னே மண்ணைத் தோண்டி இரையாகப் போடத்தக்க புழுக்களை ஒரு தகர டப்பா நிறையச் சேகரித்தார்கள்.

''இந்த மழை நம் திட்டத்துக்குக் கேடாக ஓயாமல் கொட்டிக் கொண்டே இருக்கிறது'' என்று அங்கலாய்த்தான் அப்துல்லா. ''நல்ல வேளை பார்த்தது! நம்மை ஒரேயடியாகக் காலை வாரி விட்டது!''

எல்லாவற்றிலும் நன்மையைக் காணப் பழகி விட்ட ஐதார் நண்பனைத் தேற்ற முயன்றான்:

''கொட்டட்டும் நன்றாக! சோனா மாரியாய்க் கொட்டி விட்டுத் தானே நின்று விடும். பயனாகத் தானியம் நன்றாக விளையும். நாளைய தினமும் நம்மிடமிருந்து ஓடிப் போய் விடாது. மழைக்குப் பிறகு மீன்கள் அதிகமாகப் பிடிபடும்!''

''உனக்கு எல்லாம் நல்லதுதான்! சொந்த மூளையால் எதை யுமே நீ சிந்திப்பது கிடையாது!'' என்று சீறி விழுந்தான் அப் துல்லா. ''படகுக்கு எங்கே போவதாம்? அதைப் பற்றி யோசித் தாயா நீ?''

''எதற்காகப் படகு? மீன்கள் தாம் கரையோரமாக நன்றாய்ப் பிடிபடுகின்றனவே?''

''வேண்டாம், விடு! மீன் குஞ்சுகளைப் பிடிக்கப் போகும் சின்னப் பயல்கள் மாதிரிக் கரையிலேயே கால்களைத் தொப்புத் தொப்பென்று அடித்துக் கொண்டிருப்பது நமக்கு அழகாய் இருக்காது. அந்தக் காலம் மலை ஏறி விட்டது!'' என்று மிடுக்குடன் சொன்னான் அப்துல்லா.

மெய்யாகவே, தன்னை மீன் பிடிப்பவனாக மதித்து வாள் ஏரியில் மீன் பிடிப்பவன் தூண்டிலும் கையுமாகக் கரையில் உட் கார்ந்திருக்க மாட்டான். பெரிய மீன்கள் ஆழத்தில் நீந்தும். உண்மையான மீன் வேட்டைக்காரன் ஏரி நடுவில் படகில் அமர்ந்திருப்பான்.

''அதனுல் என்ன? படகு கிடைப்பதற்கான வழி எதையாவது கண்டுபிடிப்போம்'' என்று இசைந்தான் ஐதார். ''ஒன்று தெரியுமோ? எடுத்துக்காட்டானவனுடைய தாத்தா நகரத்தில் யார் வீட்டுக்கோ விருந்துக்குப் போயிருக்கிறுர். ஆனுல் படகைப் பெரிய பூட்டால் பூட்டி விட்டுப் போயிருக்கிறுர். அதற்குச் சாவி கண்டு பிடித்துவிட்டால்...''

தலைவன் அப்துல்லா தன் புதிய கட்டளையை அறிவித்தான்:

''படகு கொண்டு வரும் பொறுப்பு எடுத்துக்காட்டான யகூபிடம் ஒப்படைக்கப் படுகிறது.''

அந்த நேரத்தில் வஜீரின் வீட்டில் பின்வரும் இனிய உரையாடல் நடந்து கொண்டிருந்தது:

''கோதுமைத் தோசை சுடுவதற்காக அதிகாலையிலேயே மாவு தயாரித்து வைத்திருக்கிறேன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தாள் குர்பான்பிகா-அபாய். ''குழந்தைகளுக்கு வாய்க்கு ருசியாகப் பண்ணிப் போடுவோமே என்று நினைத்தேன். இதோ அடுப்பு மூட்டி அதைப் பழுக்கப் பழுக்கக் காய்ச்சுகிறேன்...''

''வெண்ணெய் எந்தப் பக்கத்தில் தடவுவாய் அம்மா, மழமழப்பான பக்கத்திலா, சுரசுரப்பான பக்கத்திலா?'' என்று கேட்டான் நசீப்.

''இரண்டு பக்கத்திலும் தடவப் போகிறேன் மகனே. சீக்கிரமாக ஓடு. உலர்ந்த விறகு எடுத்துக் கொண்டு வா.''

''ஆகா, தோசைகள் ருசியாக இருக்கும்!'' என்று நாவைச் சப்புக் கொட்டிக் கொண்டு ஒரு முழுக் கட்டு உலர்ந்த விறகை முகப்பிலிருந்து எடுத்து வந்தான் நசீப்.

வஜீருக்கும் வேலை கொடுத்தாள் தாயார்.

''இந்தா வஜீர், யம்லெகூல் பாட்டி வீட்டுக்கு வேகமாய் ஓடிப் போய் வாணலி வாங்கி வா. இரண்டு வாணலிகள் இருந்தால் காரியம் எவ்வளவோ சீக்கிரமாக முடியும். ஆனுல் ஒன்று, போவதும் வருவதுமாக இருக்க வேண்டும் நீ. சுணங்கக் கூடாது.''

வேலை மனதுக்குப் பிடித்ததாக இருந்தது, இல்லா விட்டால் வஜீர் முரண்டு அடித்து, ''உன் நசீபே போய்க் கொள்ளட்டும்'' என்று முணுமுணுத்திருப்பான். இப்போதோ அவன் மறு பேச்சு பேசாமல் தகப்பனாரின் பூட்சுகளை வெறுங் கால்களில் மாட்டிக் கொண்டு வெளியே ஓடினான்.

''வஜீர்!'' என்று அவனைப் பார்த்துக் கத்தினாள் குர்பான் பிகா. ''எங்கே ஓடுகிறாய் சட்டை போடாமல், ஊரார் சிரிக்கும் படி? நீ ஏன் தான் இப்படி அறிவு கெட்டவனாக இருக்கிறாயோ? அடை மழை கொட்டுகிறதே, அப்பாவின் பஞ்சு வைத்த கோட்டையாவது போட்டுக் கொள்ளேன்!''

ஆனால் வஜீர் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. அவன் தரப் பில் பதில் சொன்னான் நசீப்:

''என்ன அம்மா நீ? அவனுக்கு எதற்குப் பஞ்சு வைத்த கோட்டு? அவன் தன் உடம்பை வலுப்படுத்துகிறான். நம் வஜீர் வீரன் போலப் பலசாலி ஆகி விடுவான். நீயே பார்ப்பாய்! எருது அவனை முட்ட வந்தால் அவன் அதைச் சுண்டு விரலால் விழத் தட்டி விடுவான்!''

'' 'விழத் தட்டிவிடுவானாம், விழத் தட்டி!...' தடிமல் பிடித்து இருமவும் தும்மவும் அவன் தொடங்கும் போது தெரியும் சேதி...''

''வீரர்களுக்குத் தடிமல் பிடிப்பதில்லை!''

''இதோ இன்னொரு முட்டாள் கிளம்பி இருக்கிறான்! இது தான் குறையாய் இருந்தது! உளறுவாயன் நீ!''

இன்று குர்பான்பிகா மகிழ்ச்சி பொங்கும் மனநிலையில் இருந் தாள். உபா நகரிலிருந்து வந்த கண்ணாடிக்கார அதிகாரியே நேற்று அவளுடைய வேலையைப் புகழ்ந்தார்.

''உன் வேலை அருமையாக நடக்கிறது! குர்பான்பிகா, நீ இப் போதே முன்னணிக்கு வந்து விட்டாய், வட்டாரத்தின் சிறந்த பெண் தொழிலாளர்களில் ஒருத்தி ஆகி விட்டாய்'' என்றார் அவர்.

''நன்றி, நன்றி! உன் நல்ல வார்த்தை மனதுக்கு ஊட்டம்

தருகிறது'' என்று மகிழ்ச்சியுடன் பதில் சொன்னுள் குர்பான்பிகா.

இவ்வாருக இன்றையத் தோசைகளுக்கு மாவு நேற்றே தயாராகி விட்டது. தன் வேலே பற்றிய புகழ்ச்சியைக் கேட்ட தாய் தோசை சுட்டுப் போட்டுக் குழந்தைகளே மகிழ்விக்கத் தீர் மானித்தாள். அடுப்பு மளமளவென்று சூடேறிற்று, வாணலியில் தோசைகள் சீறல் ஒலி செய்து சிவந்தன. ஆனுல் வஜீர் போனவன் மாயமாய் மறைந்து விட்டான்.



படகுக்கு நீந்தக் கற்பிக்கிறேன்

எல்லா வீடுகளும் வீதி நெடுகிலும் நேர் வரிசைகளாக அமைந்திருந்தன. யம்லெகூல் பாட்டியின் வீடு மட்டும், மந்தையிலிருந்து பிரிந்த ஆட்டுக்குட்டி போல, ஏரிக்கரைச் சந்தின் கடைக் கோடியில் தனியாக நின்றது. அல்லது, எதனாலாவது கோபம் கொண்டு இந்த வீடு ஊரிலிருந்து முகத்தைத் திருப்பிக் கொண்டிருக்கிறதா? ஆனால் அப்படி எண்ண முடியாது: தங்கக் கழுகு ஊர் பூராவும் யம்லெகூல் பாட்டியைக் கண்ணின் மணி போலப் பேணி வந்தது. அண்டை அயலார் அவளை எப்போதும் இன் முகத்துடன் உபசரித்து, வீட்டுக்கு வரும்படி அடிக்கடி அழைத்து வந்தார்கள்.

இந்த வீட்டுக்குச் சொந்தக் கதை உண்டு, சொந்த விதி உண்டு. ஒரு காலத்தில் இதன் சொந்தக்காரர் மிர்ஜாபாய்

தேர்ந்த வலைஞராக இருந்தார். ''மீன் பிடிப்பவனுடைய இடம் தண்ணீருக்குப் பக்கத்தில்'' என்பது அவருடைய ஆழ்ந்த நம்பிக்கை. தம் வீட்டை ஏரிக் கரையில் அவர் கட்டினார். யம்லெகூலும் அவரும் நட்புடன் வாழ்ந்தார்கள், பிள்ளைகளைப் பெற்று வளர்த்தார்கள். ஆனால் ஒரு நாள், ஏரி அமைதியாக அலை அடித்துக் கொண்டிருந்த போது, மிர்ஜாபாயின் வீட்டுக்குக் குடி வந்தது துன்பம்—யம்லெகூலின் இரண்டு மகன்கள் போர் முனைக்குப் போனார்கள். இரண்டு பேருமே வீடு திரும்பவில்லை. வெற்றிக்குச் சற்று முன்னால் மிர்ஜாபாயும் காலமானார். யுத்தம் முடிந்து ஊர் விவகாரங்கள் சீர்பட்டதும் கூட்டுப் பண்ணைத் தலைமையகம் மிர்ஜாபாயின் வீட்டை ஊருக்கு நடுவில் இருந்த காலி இடத்துக்குக் கொண்டுவரத் தீர்மானித்தது. ஆனால் பாட்டி இசையவில்லை. ''என் மகன்கள் வளர்ந்த இடத்திலிருந்து வீட்டை நகர்த்த மாட்டேன்'' என்றாள்.

யம்லெகூல் பாட்டி அந்தக் காலத்தில் இசைந்திருந்தால் அவளுடைய வீடு குர்பான்பிகாவின் வீட்டுக்குக் கைக்கு எட்டும் தூரத்தில் இருந்திருக்கும். வாணலிக்காகப் போன வஜீர் எப்போதோ திரும்பி இருப்பான். இப்போதோ, அவன் போனவன் காணாமலே போய் விட்டான்...

சேற்றில் கால்களைச் சளப்புச் சளப்பென்று அடித்தவாறு சந்து முனை வரையில் ஓடினான் வஜீர். யம்லெகூல் பாட்டியின் வீட்டுக் கதவுப் பக்கத்தில், ஏரிமேல் பார்வை செலுத்துவதற்காக அவன் நின்றான். தொங்கிய தலைகளுடன் கரையில் உட்கார்ந்திருந்தன தாராக்கள். நாணல் தரையோடு தரையாகச் சாய்ந்திருந்தது. கரையிலிருந்து சற்றுத் தொலைவில் இப்புறமும் அப்புறமுமாகச் சாய்ந்தவாறு மிதந்து கொண்டிருந்தது தனிப் படகு. திறமை இல்லாமல் துடுப்பு தள்ளிக் கொண்டிருந்த ஆளை மழைத் தாரைகளுடைய வலையின் ஊடாகக் கண்டு கொண்டன வஜீரின் கூர்மையான கண்கள்.

''அடே! இவன் யகூப் அல்லவா?''

தோசைகளும் வாணலியும் வஜீரின் நினைவிலிருந்து அக்கண மே வெளியேறி விட்டன. படகு ஓட்டிக் கொண்டிருந்த யகூபை ஓடிப் போய்ப் பார்க்காமல் இருப்பது அவனுடைய சக்திக்கு மீறி யதாய் இருந்தது! எடுத்துக்காட்டான யகூப் அடை மழையில் படகில் ஏறி ஏரியை உழும் காட்சி காணக் கிடைத்தது உண்டா எப்போதாவது?

வஜீர் ஏரிக் கரை மீது ஓடி, நாணல்களுக்குப் பின்னிருந்து தோழனை மௌனமாகக் கவனிக்கலானான்.

யகூப் கரை மீது பார்வை செலுத்தவில்லை, வஜீரைப் பார்க்க வும் இல்லை. அவன் முழு பலத்துடன் துடுப்பு தள்ளிப் படகை வழிக்குக் கொண்டுவர முயன்று கொண்டிருந்தான். ஆனால் படகு அவன் விருப்பத்துக்கு இணங்கவில்லை. அது ஒன்று ஒரே இடத்தில் கதியற்றுச் சுழன்றது, இல்லா விட்டால் முன்னே பாய்ந்தது, அல்லது விலாப் புறம் திரும்பி நீரின் பக்கம் ஒரே அடியாகச் சாய்ந்தது. கரையிலிருந்து வீசிய காற்று அதை ஏரி நடுவுக்கு மெதுவாக அடித்துப் போயிற்று.

வஜீருக்குப் பொறுக்க முடியவில்லை.

''அடேய், எடுத்துக்காட்டு! அங்கே என்ன செய்கிறாய்?'' என்று கத்தினான்.

யகூப் குழப்பத்துடன் திரும்பிப் பார்த்தவன், அக்கணமே சமாளித்துக் கொண்டான்.

''தாத்தாவின் புதிய படகுக்கு நீந்தக் கற்பிக்கிறேன்!'' என்று உரக்க விடை அளித்தான்.

''அட போடா, ஆசான், ஆசான்! ஒரு துடுப்பைக் கொண்டு உட்கார்ந்தா வலிப்பது? நின்று கொண்டு துடுப்பு வலிக்க வேண் டும். எழுந்திரு உடனே!'' என்று உத்தரவிட்டான் வஜீர்.

யகூப் வெளியே குனிந்து தண்ணீரை அச்சத்துடன் பார்த் தான்.

''இங்கே நிரம்ப ஆழம் ஆயிற்றே. படகு வேறு ஆடுகிறது...''

''பயப்படாதே, அறிவு கெட்டவனே, இங்கே ஆழமே கிடையாது. உன் கழுத்துக்குக் கூட வராது...''

''அட நான் பயப்படவில்லை...''

யகூப் தயக்கத்துடன் எழுந்து படகின் நடுவில் நின்றான்.

''பின் பகுதிக்கு மாறு! நடுவிலே நின்று கொண்டு துடுப்பு தள்ளுவார்களா யாராவது?'' என்று மறுபடி கத்தினான் வஜீர்.

யகூப் சாக்கிரதையாகப் பின் பகுதிக்கு நகர்ந்தான்.

''அப்படித்தான்'' என்று பாராட்டினான் வஜீர். ''இப்போது துடுப்பு தள்ளத் தொடங்கு! முதலில் வலது பக்கத்திலிருந்து ஆரம்பி! வலது பக்கத்திலிருந்து என்கிறேனே! உனக்கு என்ன, வலம் எது, இடம் எது என்று தெரியாதோ? இதுவாக்கும் வலம், பார்!''

வஜீர் கையை உயர்த்தினான். ஆனால் யகூபிற்கு முகத்தைக் காட்டியபடி அவன் நின்றதால் தோழனுடைய வலது கை அவனுக்கு இடது கையாகத் தோன்றியது. தன் தப்பைக் கண்டு கொண்ட வஜீர் அதைக் காட்டிக் கொள்ளாமல் மளமளவென்று சொல்லிக் கொண்டு போனான்:

''டேய், யகூப்! எப்படி வேண்டுமானாலும் துடுப்பு தள்ளிக் கொள், கேட்டாயா? நான் சொல்கிறேன், நல்லது, எப்படி வேண்டுமானாலும் துடுப்பு தள்ளிக் கொள் என்று!''

யகூப் பாடுபட்டு இடமும் வலமுமாக மாற்றி மாற்றித் துடுப்பு வலித்தான். கைகளை வீசி ஆட்டுவதும் சகதியில் சளப்பிடுவதுமாக, கரையில் ஓடியபடிப் பொறுமை இல்லாமல் கட்டளை இட்டான்:

''அந்தப் பக்கத்திலிருந்து துடுப்பு தள்ளு! இப்போது இந்தப் பக்கத்திலிருந்து! அப்படித் தான்! அந்தப் பக்கத்திலிருந்து! இந்தப் பக்கத்திலிருந்து! இப்போது மறுபடி அந்தப் பக்கத்திலிருந்து!''

படகு சுழன்று கொண்டும் ஆடிக் கொண்டும் மெதுவாகக் கரையை நெருங்கிற்று. ஆனால் வஜீருக்கு இது போதவில்லை. துடுப்பு தள்ளுவது போன்ற சாதாரணமான காரியத்தைச் சமாளிக்க ஏலாத மனிதனை அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருக்க அவனால் முடியவில்லை.

''துடுப்பை முக்காதே. தண்ணீரில் அவ்வளவு ஆழத்தில்

எதற்காக நுழைத்தாய் அதை? நீ உருளைக்கிழங்கு தோண்டிப் பறிக்கவில்லையே? அகலமாக வீசிப் போடு! அகலமாக என்கிறேன்! ஆடாதே, ஊஞ்சல் மாதிரி! நேராக நில்லு! அப்படித்தான்!'' என்று ஆவேசத்துடன் உத்தரவிட்டான் வஜீர்.

தோழன் இட்ட ஆணைகளை யகூப் பாடுபட்டு நிறைவேற்றினான். ஆனால், தான் ஏதோ கொஞ்சம் கற்றுக் கொண்டு விட்டதாக அவன் எண்ணிய சமயத்தில் வந்தது எதிர்பாரா விபத்து.

''இன்னும் அகலமாக வீசிப் போடு!'' என்று மறுபடி கத்தினான் வஜீர். ''ஊம், இன்னும் அகலமாக!''

துணிச்சல் அடைந்த யகூப் துடுப்பை வீசிப் போட்டு நீரின் ஆழத்தில் தள்ளினான். படகு ஒரேயடியாக அசைந்து ஆடிற்று. பையன் சமநிலையை இழந்து, தொபுகடீர் என்று நீரில் விழுந்தான்.

''உட்கார்!'' என்று கூச்சலிட வாயெடுத்தான் வஜீர். ஆனால் உட்கார்வதற்கு இப்போது யாரும் இல்லை...

யகூபின் கட்டம் போட்ட தொப்பிதான் அலைகள் மேல் மிதந்து கொண்டிருந்தது. வியப்பினால் வாயைத் திறந்து கொண்டு அந்தத் தொப்பியை ஒரே பார்வையாகப் பார்த்த வண்ணம் கரையில் மலைத்து நின்று விட்டான் வஜீர்.

தொப்பலாக நனைந்த தொப்பி நீரில் மூழ்கத் தொடங்கிய போது அதற்குச் சிறிது தூரத்தில் நீரிலிருந்து மேலே வந்தது யகூபின் தலை. வஜீர் சுய நினைவை அடைந்து கவணிலிருந்து கிளம்பிய கல் போலச் சளப்பென்று நீரில் பாய்ந்தான். அவனுடைய பூட்சுகள் வண்டல் தரையில் சிக்கிக் கொண்டு தாமாகவே கால்களிலிருந்து கழன்று விட்டன. வஜீரோ, இதைக் கவனிக்கக் கூட இல்லை. விரைவில் படகை எட்டிப் பிடிப்பதிலேயே குறியாக இருந்தான். அங்கே, நீருக்கு மேலே கிளம்புவதும் மறுபடி மூழ்குவதுமாகத் தெரிந்தது யகூபின் தலை. அந்த இடத்தில் ஆழம் அவ்வளவாக இல்லை, தண்ணீர் யகூபின் காதுகள் வரை தான் வந்தது. ஆனால் நீந்தத் தெரியாதவன் மூழ்குவதற்கு அவ்வளவு நிறையத் தண்ணீர் தேவை இல்லையே...

வஜீர் நீந்தி ஆக்கங்கெட்ட படகோட்டியை நெருங்கி, அவ

னுடைய சட்டைக் கழுத்துப் பட்டையைப் பிடித்துக் கொண்டு கரைக்கு இழுத்துப் போனான். அவர்கள் இருவரும் திண்ணமான தரையை அடைந்த போது யகூபின் முகம் இரத்தம் செத்து வெள்ளை வெளேரென்று இருந்தது.

வஜீர் அவனை உறுதியாக நிற்க வைத்தான். பின்பு, குளிரால் நீலம் பாரித்த உதடுகளை நக்கிக் கொண்டு கேலி செய்தான்:

''ஏரித் தண்ணீர் ருசியாய் இருந்ததா?''

ஆனால் யகூப் தலையை அசைக்க மட்டுமே செய்தான். தண் ணீர் அப்படி ஒன்றும் ருசியாய் இருக்கவில்லை என்பது தெரிந்தது.

''சரி, போ! நான் இன்னும் ஒரு முழுக்கு போட்டு உன் தொப் பியைத் தேடுகிறேன்!'' என்றான் வஜீர்.

''வேண்டாம்'' என்று சிரமத்துடன் சொன்னான் யகூப். அவ னுடைய உதடுகள் குளிரில் ஒன்றோடொன்று அடித்துக் கொண் டன. குரல் நடுங்கிற்று. ''வேண்டாம். தலை பத்திரமாக இருந் தால் தொப்பி கிடைத்து விடும்.''

குளிர்ந்த நீரில் மறுபடி இறங்க வஜீருக்கே அவ்வளவாக விருப்பம் இல்லை.

''தொப்பி போனால் போகிறது'' என்று ஏதோ சிந்தனையுடன் சொன்னவன், ஏரியைத் திரும்பிப் பார்த்து, சட்டென்று கைகளை உதறினான். ''படகு போகிறது! படகும் துடுப்பும்!'' என்று ஓடிக் கொண்டே கத்தினான். பின்பு தண்ணீரில் பாய்ந்து கைகளை வீசி வீசிப் போட்டு நீந்திப் படகை நெருங்கினான். அலைகள் மேல் அசைந் தாடிக் கொண்டிருந்த துடுப்பை எடுத்துக் கொண்டு படகைப் பிடித்து ஒரு தரம் எம்பிப் படகுக்குள் தாவினான். விரைவில் அவன் படகைக் கரைக்கு உறுதியுடன் செலுத்தலானான்.

அச்சத்தாலும் குளிராலும் இன்னும் நடுங்கிக் கொண்டிருந்த யகூப் தன் வசமற்ற பொறாமையுடன் வஜீரைப் பார்த்தான்.

''ஆகா, வஜீர் மாதிரி நீந்தத் தெரிந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும்!'' என்று நினைத்துக் கொண்டான்.

தலையோடு காலாகச் சொட்டச் சொட்ட நனைந்த வஜீரோ படகைக் கரையில் இழுத்து வைத்து விட்டுத் தன் பூட்சுகளைத்

தேடக் கிளம்பினான். அவைகளைக் கண்டுபிடிப்பது கடினமாய் இல்லை, ஏனென்றால் அவை உளையில் சிக்கிய இடத்தில் ஆழம் கணிசமாகக் குறைவாய் இருந்தது. பூட்சு மேல் பகுதிகள் நீரிலிருந்து துருத்திக் கொண்டிருந்தன. வஜீர் அவற்றில் இருந்த தண்ணீரைக் கவிழ்த்துக் கொட்டி விட்டு மகிழ்ச்சியுடன் சொன்னான்:

''எவ்வளவு நன்றாக முடிந்தது! இப்போது அப்பாவின் பூட்சுகளும் தங்களைத் தாங்களே கழுவிக் கொண்டு விட்டன. வீட்டுக்குத் தான் வெறுங்காலோடு போக வேண்டி இருக்கும். துப்புரவான பூட்சுகளை மறுபடி அழுக்காக்கக் கூடாதே!''

யகூப் இன்னமும் அசையாமல் முந்திய இடத்தில் நின்று கொண்டிருந்தான். வஜீர் அவனிடம் போய், அவனுடைய தோளைத் தட்டிக் கொடுத்து, பாராட்டும் தோரணையில் சொன்னான்:

''நீ சரியான ஆள் ஆவாய். இப்போதைக்குத் தேர்ச்சி பற்றாது உனக்கு. ஆனால் உருப்படியான ஆள் ஆவாய்.''

''உண்மையாகவா?'' என்று மகிழ்ந்து போய்க் கேட்டான் யகூப்.

''உண்மையாக, உண்மையாக!'' என்று கோரணி செய்தான் வஜீர். ''எப்போது நான் வெறும் பேச்சு பேசினேன்?''

''பேசினது இல்லைதான், சந்தேகம் இல்லாமல்...''

''சரி, கிடக்கிறது. இப்போது என்ன செய்யப் போகிறோம்?''

''தெரியாது... தாத்தாவின் படகைத் திருப்பி ஓட்டிப் போக வேண்டும்.''

பையன்கள் படகை மறுபடி நீரில் தள்ளினார்கள்.

''துடுப்பை எடுத்து, பதற்றப்படாமல் தள்ளு'' என்று சீடனிடம் சொன்னான் ஆசான்.

யகூப் கரை ஓரமாகப் படகைச் செலுத்தினான். வஜீர் தொடர்ந்து ஆணைக் குறிப்புக்கள் கொடுத்துக் கொண்டிருந்தான், ஆனால் கடும் சோதனைக்கு உள்ளாகி மீண்ட யகூப் தானும் தயக்கம் இல்லாமல் படகைச் செலுத்தினான். கணிசமாக நீண்ட தூரம் படகோட்டியதை அவன் கவனிக்கக் கூட இல்லை.

வஜீரும் அவனும் படகுச் சங்கிலியைத் தூணில் கட்டிப் பூட்டை

மாட்டியதும் யகூபின் தாய் எங்கிருந்தோ வந்து சேர்ந்தாள். அவள் உரக்கப் புலம்பிக் கூச்சலிடத் தொடங்கினாள்.

''ஐயோ நான் ஆக்கம் கெட்டவள்! இந்தப் பிள்ளை என்னை நெருப்பிலும் நீரிலும் தள்ளுகிறான்! என் கண்ணே, நீரெலி போல அல்லவா இருக்கிறாய் நீ! இதெல்லாம் வஜீரின் கை வேலைதான், சந்தேகமே இல்லை! நான் இன்றைக்கே அலுவலகத்துக்குப் போய் இந்த வஜீரைப் பற்றிக் குறை சொல்லா விட்டால் என் பெயரை மாற்றிக் கொள்கிறேன்! நான் சொன்னது காதில் பட்டதா, வஜீர்? குழந்தையை எதற்காகத் துன்பப்படுத்துகிறாய்? அவனுடைய தொப்பியை எங்கே தொலைத்து விட்டாய்?''

குலியெமேஷ்-அபாய் பிள்ளையின் கையைப் பிடித்துக் கொள்ளப் போனாள், ஆனால் அவன் சட்டென்று விலகி விட்டான்.

''இதோ பார், அம்மா! நீ மட்டும் வஜீரை இன்னும் ஒரு வார்த்தை கடிந்து சொன்னாயோ, நான்... நான் உடனே இந்தப் படகில் ஏறித் தொலை தூரம் ஓட்டிப் போய்விடுவேன்! போனேனோ, மறுபடி ஒருபோதும் திரும்பி வர மாட்டேன், தெரிந்து கொள்!''

குலியெமேஷ்-அபாய் ஒன்றும் பேசாமல் ஒரு பக்கம் நின்று கொண்டிருந்த வஜீரைப் பொசுக்கி விடுபவள் போலப் பார்த்தாள், ஆனால் பேச்சை வேறு புறம் திருப்பினாள்.

''சரி, சரி, நான் ஒன்றும் சொல்ல மாட்டேன். உன் மனம் போலவே இருக்கட்டும். வா, வீட்டுக்குப் போகலாம்!''

பையன் கையைப் பிடிப்பதற்கு அவள் மறுபடி முயன்றாள்.

''என்னைக் கையைப் பிடித்து நடத்திப் போக வேண்டாம்'' என்று எதிர்த்தான் சிறுவன். ''நானே வருகிறேன். ஆனால் வஜீரை ஒரு வார்த்தை கூடக் கடிந்து சொல்லக் கூடாது!''

''சரி சரி. மாட்டேன் என்றுதான் சொல்லி விட்டேனே...''

தாயும் மகனும் வீட்டுக்குப் புறப்பட்டார்கள். வஜீர் பூட்சுகளைக் கக்கத்தில் இடுக்கியவாறு ஏரிக் கரையில் இருந்து கொண்டான். அவன் எங்கும் போக அவசரப்படவில்லை. ஏனென்றால் வாணலியையும் தன்னை வீட்டில் எதிர்பார்த்துக் கொண்டிருந்த கோதுமைத் தோசைகளையும் வெகு நேரத்துக்கு முன்பே மறந்து விட்டான்...



மழைக்குப் பிறகு

மழை பகல் முழுவதும் இடை விடாமல் கொட்டிக் கொண்டிருந்தது. ஆனால் மாலைத் தறுவாயில் ஒரு மட்டுக்கு நின்றது. வானத்தை என்றென்றைக் கும் மூடி விட்டவை போலக் காணப்பட்ட மேகங்கள் மிகக் குறுகிய நேரத்துக்கு விலகின. மழையால் அப்போது தான் கழுவப்பட்ட தெளிந்த நீல வானில் மீண்டும் ஆட்சி செலுத்தத் தொடங்கிற்று சூரியன். எல்லாவற்றிலும் சின்ன மழைத் துளிகள் மட்டுமே, மேலே எங்கேயோ வழி தவறி விட்டவை போல, எப்போதாவது நிலத்தில் சிதறின. இந்தத் துளிகள் ஒருவேளை மழையின் குழந்தைகள் போலும். அவை வானத்தில் விளையாடிக் கொண்டிருந்ததால் பெரிய துளிகளோடு சேர்ந்து விழச் சுணங்கி விட்டன போலும். என்ன்தான் சொன்னாலும் குழந்தைகள் குழந்

தைகள் தானே. விளையாட்டில் ஈடுபட்டு விட்டால் எல்லாவற்றை யும் மறந்து விடுகின்றன.

இந்தத் துளிகள் இதமான வெது வெதுப்பு உள்ளவை, அன்பு ததும்புபவை. அவற்றுக்குக் கையை நீட்டினுல் அவை நுண்ணிய பொறிகளாக உள்ளங்கையில் சிந்தும். நாம் கையை இறுக முடி ஞல் அவை விரல்களின் இடை வழியாகச் சட்டென்று ஓடிப் போய் விடும்.

அப்பேர்ப்பட்ட குறும்புக்காரத் துளிகள்!

''ஆகா, அகப்பட்டாயா தூண்டிலில்—என் கையில்!'' என்று தன் உள்ளங்கையில் விழுந்த துளியைப் பார்த்துக் கூவினுள் குல் நூர். ''ஆனுல் நீ எதனுல் இப்படி வெதுவெதுப்பாக இருக்கிருய்? ஒரு வேளை அங்கே, சூரியனுக்குக் கிட்டத்தில், உனக்கு ரொம்ப வெதுவெதுப்பாக இருந்ததோ?''

குல்நூர் கையைத் திறந்து, மேலே உயர்த்தி, மற்றத் துளி களைத் தன்னிடம் வரும்படி அழைத்தாள்.

''விழுங்கள், விழுங்கள் உள்ளங்கையில்!'' என்று சொல்லிச் சிரித்தாள்.

வேலியின் பக்கத்தில் கிடந்த கட்டையில் இடம் பிடித்துக் கொண்ட அவள் கட்டையின் மறு முனையில் உட்கார்ந்து ஒரே முனைப்பாக ஏதோ ஆலோசனை செய்து கொண்டிருந்த அப்துல்லா வையும் ஐதாரையும் சட்டை செய்யவே இல்லை. பையன்களின் முகங்களில் கவலை ததும்பியது. வெதுவெதுப்பான மழை நீர்க் குட்டங்களிலும் ஓடைகளிலும் சிறுவர்கள் சிரிப்பும் கீச்சொலியு மாகச் சளப்பிடுவதிலும் குல்நூர் உள்ளங்கையில் துளிகளைச் சேக ரித்தவாறு வாய் ஓயாமல் கலகலவென்று பேசிக் கொண்டிருப் பதிலும் அவர்களுக்கு என்ன அக்கறை! அவர்களுக்குச் சொந்தக் கவலைகள் இருந்தன.

''இந்த எடுத்துக்காட்டானவனுல் கால் காசுக்குப் பிரயோச னம் இல்லை'' என்று தன் எண்ணங்களுக்குக் குரல் கொடுத்தான் ஐதார். ''வேண்டாத போதெல்லாம் இங்கே சுற்றிக் கொண் டிருப்பான், தேவைப்படும் போதோ, ஆள் கண்ணிலேயே படக் காணேம். முதுகெலும்பு இல்லாதவன்!''

அப்துல்லா பற்களின் ஊடாகத் துப்ப மட்டுமே செய்தான். அவனுடைய எரிச்சல் எல்லே வரை போய் விட்டதை இது காட்டியது.

ஆனுல் ஐதார் கொஞ்ச நேரம் பேசாதிருந்து விட்டு மறுபடி தொடங்கினுன்.

''ஒருவேளே அவன் பயந்து விட்டான் போலிருக்கிறது. கிழவனுரின் படகோ, எல்லாவற்றிலும் மேலானது. ஒரு துளி தண்ணீரைக் கூட உள்ளே விடாது.''

திடீரென்று அப்துல்லா கேட்டான்:

''நீ என்னேத் தலேவனுக மதிக்கிருயா?''

''சந்தேகம் இல்லாமல் மதிக்கிறேன்!'' என்று உறுதிப்படுத்தினுன் ஐதார்.

''மதிக்கிருய் என்ருல் இப்போதே போய் எடுத்துக்காட்டானவனே இங்கே கூட்டி வா!''

''நான் போகிறேன், ஆனுல் அவனுடைய தாயார் என்னேப் பார்த்து விட்டால் கூச்சல் கிளப்புவாள், யகூபை விடவே மாட்டாள்!''

ஐதார் தங்கையின் பக்கம் பார்வை செலுத்தினுன். மழையில் அடிபட்டுச் சாய்ந்த புல்லே நேராக நிமிர்ந்து சூரியனேப் பார்க்கும்படிச் சொல்லி முடித்திருந்தாள் குல்நூர்.

''தங்கச்சீ, புத்திசாலிக் கண்ணே குல்நூர்'' என்று கொஞ்சலாக மொழிந்தான் ஐதார். ''நான் உனக்கு இரண்டு வானம்பாடிக் குஞ்சுகள் பிடித்துத் தருவேன் என்பதுதான் உனக்குத் தெரியுமே.''

குல்நூர் அண்ணனிடம் உற்சாகமாக ஓடி வந்தாள்.

''தெரியும். ஆனுல் நீ அவைகளேப் பிடிக்க மாட்டேன் என்கிருயே.''

''பிடிப்பேன். நீயே பார்ப்பாய். உன்னுடைய அழகான சிவப்பு கவுன் தைத்து வந்ததும் அவைகளேக் கொண்டு வருகிறேன். சரிதானு?''

''சரி.''

தலையை ஆட்டி விட்டு, மறுபடி தன் இடத்தில் உட்காரப் போன குல்நூரை அவளுடைய அண்ணன் தடுத்தான்.

''இன்னும் இந்தப் பறவைகளுக்காக ஒரு கூண்டும் உனக்குச் செய்து தருகிறேன், அதற்கு நானே நீலச் சாயம் பூசுகிறேன்'' என்றான்.

''நான் அவைகளுக்குத் தானியம் இரையாகப் போடுவேன்!'' என்று உற்சாகமாகச் சொன்னாள் குல்நூர்.

''கட்டாயம் போடுவாய். ஆனால் நான் சொல்வதைக் கேள். நீ பெரியவள் ஆகி விட்டாயே.''

''பெரியவள்'' ஆவதற்கு இந்தத் தடவை குல்நூருக்கு அவ்வளவாக விருப்பம் இல்லை என்றாலும் அவள் பேசாதிருந்தாள், ஏனென்றால் சிறு பறவைகள் வைத்துக் கொள்ள அவளுக்கு ஒரே ஆசையாய் இருந்தது. தோழி அல்பியாவிடம் பறவைக் குஞ்சு இருந்தது, குல்நூரிடமோ, இன்றுவரை இல்லை.

நம்பிக்கையும் மகிழ்ச்சியும் பொங்கத் தமையனை நேராக உற்றுப் பார்த்தாள்.

''தங்கச்சீ, வேகமாய்ப் போய் யகூபை அழைத்துக் கொண்டு வா. ஆனால் ஒன்று, அவனுடைய அம்மா காதில் படாதபடிப் பார்த்துக் கொள்'' என்றான் ஐதார்.

வெறுங் கால்களால் குட்டங்களின் நீரைச் சிதற அடித்தவாறு யகூபின் வீட்டுக்கு ஓடினாள் குல்நூர். வீட்டு வாசல் வரை போனதும் அவள் நின்று வேலி இடுக்கோடு ஒட்டிக்கொண்டு முகப்பு முழுவதிலும் பார்வை செலுத்தினாள். குவியலாகக் கிடந்த விறகுகளின் மேல் உட்கார்ந்து எதையோ சீவிக் கொண்டிருந்தான் யகூப். வேலையில் ஒரேயடியாக ஈடுபட்டிருந்ததால் அவன் தலையை நிமிர்த்தக்கூட இல்லை. யகூபின் தாயார் காதில் பட்டு விடும் என்ற அச்சத்தால் அவனைக் கூப்பிடக்கூட குல்நூர் தயங்கினாள். சற்று யோசனை செய்த பின் அவள் தன் முட்டியை விடக் கொஞ்சம் பெரிய கல்லை எடுத்து, நுனிக் கால்களில் எம்பி நின்று அதை வேலிக்கு மறு பக்கம் போட்டாள். யகூபுக்குச் சிறிது தூரத்தில் இருந்த குட்டத்தில் விழுந்தது கல். யகூப் திடுக்கிட்டுத் திரும்பிப்

பார்த்தவன், வேலி இடுக்கு வழியே ரோஜா நிறச் சிறு விரல் துருத்தியதைக் கண்டான். ஒருவேளை தனக்குத் தான் அப்படித் தோன்றுகிறதோ என்று நினைத்துக் கொஞ்சம் கிட்டத்தில் போனான். அப்போது விரல் அசைந்தது, துள்ளிற்று, பலகையை நகத்தால் பலமாகப் பிறுண்டத் தொடங்கிற்று.

''யார் அது?'' என்று கிசுகிசுத்தான் யகூப்.

''நான் தான்'' என்று கீச்சிட்டாள் குல்நூர். ''என் அண்ணன் ஐதாரும் அப்துல்லாவும் உன்னைக் கூப்பிடுகிறார்கள். சட்டென்று வரும்படிச் சொன்னார்கள். நீ சட்டென்று போகாவிட்டால் அவர்கள் கோபித்துக் கொண்டு, இந்த எடுத்துக்காட்டானவன் எதற்கும் உதவ மாட்டான் என்று மறுபடி சொல்லுவார்கள்... எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் கட்டைகள் மேல் உட்கார்ந்திருக்கிறார்கள்.''

''சரி. ரொம்ப நேரம் உளறுதே. உன் வழியைப் பார்த்துக் கொண்டு போ. ஓடு!''

''அப்படியே ஓடுகிறேன்!''

ஆனால் குல்நூர் இப்போது இன்னொரு திக்கில் ஓடினாள். தையல்காரி யம்ளீஹா தனக்காகத் தைத்துக் கொண்டிருக்கும் அழகான கவுன் அவளுக்குத் திடீரென்று நினைவுக்கு வந்து விட்டது. தன் உடை எந்த நிலையில் இருக்கிறது என்று தெரிந்து கொள்வதற்காக ஓடினாள் குல்நூர். கவுனோடு கூடவே பறவைகளும் வந்து விடுமே. ஆக அவளுக்கு மூன்று ஆனந்தங்கள் கிடைக்கும்—இரண்டு பறவைகளும் ஒரு கவுனும்! அதோடு கூண்டு வேறே. ஆகவே, நான்கு ஆனந்தங்கள்.

* * *

யகூப் நண்பர்களை வெகு நேரம் காக்க வைக்கவில்லை. உருளைக் கிழங்கு வயல் வழியாக ஏரிக் கரைக்குப் போய், பின்பு சந்தில் நடந்து வீதியை அடைந்தான். அந்த வழி எவ்வளவோ அதிக நீளம், ஆனால் அது ஆபத்து இல்லாதது, ஏனென்றால் நேராக வீதிக்குப் போவதற்கு குலியெமேஷ்-அபாய் வீட்டில் இருந்த கிரீச்

சிடும் கதவு, யாரோ முகப்புக்குள் வந்திருக்கிறார்கள் அல்லது வெளியே போயிருக்கிறார்கள் என்று தன் வீட்டுக்காரிக்கு உடனே தகவல் கொடுத்து விடும். அப்துல்லாவும் ஐதாரும் இரண்டு நாட்களாக யகூபைப் பார்க்கவில்லை. இந்த நேரத்தில் அவன் கொஞ்சம் இளைத்திருந்தான். அவனுடைய நெற்றி கரு மஞ்சள் தழும்புகளால் இன்னமும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவன் வளர்ச்சி அடைந்து நிமிர்ந்து விட்டவன் போலக் காணப்பட்டான்.

தலைவன் வியப்பு தொனித்த கேள்வியுடன் யகூபை வரவேற்றான்.

''உனக்கு இப்படி அலங்காரம் செய்தது யார்?''

''நானே தான்.''

''பொய் மட்டும் சொல்லாதே.''

''சாப்பாட்டின் மேல் ஆணையாகச் சொல்லுகிறேன்! எடுத்துக் காட்டான தன்மை எல்லாம் என்னிடமிருந்து போய் விட்டது. பாறையிலிருந்து குதிக்க நான் பழகி விட்டேன். நீ தானே உத்தர விட்டாய்! நீந்த மட்டுந்தான் என்றால் முடியாது.''

''ஏரியில் இரண்டு வாளித் தண்ணீரை விழுங்கினால் தானே கற்றுக் கொள்வாய்!''

''கற்றுக் கொள்வேன், கட்டாயமாக'' என்று வேண்டா வெறுப்பாகச் சொன்னான் யகூப். காலையில் குடித்த ஏரி நீர் இன்னமும் அவனுக்குக் குமட்டிக் கொண்டிருந்தது.

தன் செயல்கள் எல்லாவற்றையும் பற்றித் தலைவனுக்கு வரிசையாக அறிவிக்க அவனுக்கு ஆசையாய் இருந்தது. ஆனால் அப்துல்லா அதைக் கேட்காததால் அப்புறம் சொல்லிக் கொள்ளலாம் என்று யகூப் முடிவு செய்தான்.

''உன் தாத்தா எப்போது திரும்புவார்?'' என்று கேட்டான் ஐ ார்.

''தாத்தா என்னவோ ரொம்பச் சீக்கிரம் திரும்ப மாட்டார் போலிருக்கிறது ஏன்?''

''அவருடைய படகின் சாவி எங்கே இருக்கிறது?''

''எனக்குத் தெரியாது...''

''இந்தத் 'தெரியாது' விவகாரத்தை விடு! புரிந்ததா?'' என்று கடுமையாகச் சொன்னான் தலைவன். ''நாளை பலபலவென்று விடியும் போது ஏரியில் போக வேண்டும் நாம். இருட்டோடு இருட்டாக யம்லெகூல் பாட்டி வீட்டுக் குளியறைக்குப் பின்னால் கூடுவோம். உன்னுடைய படகு சாயங்காலம் முதலே தயாராய் இருக்க வேண்டும்.''

தோழர்கள் இந்த மாதிரி வேலைக்குத் தன்னை நாடியது பற்றி யகூப் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தான். அது வரை எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டிருந்த அவனிடம் ''முக்காலிக்'' குழுத் தலைவனே இவ்வளவு பொறுப்புள்ள வேலையை ஒப்படைக்கும் போது அவன் ஆனந்தம் அடையாமல் எப்படி இருப்பான்? யகூப் கிளர்ச்சி அடைந்தான். அவனுடைய வெளிறிய முகம் சிவந்தது. கண்கள் பளிச்சிட்டன. தன் வயதுப் பையன்களுக்கு நடுவே சமமானவனாக உணர்வது நன்றாய் இருந்தது போலும்.

''அதற்கென்ன, படகு தயார்!'' என்று களி பொங்கக் கூறினான். ''வேண்டுமானால் இப்போதே உட்கார்ந்து ஓட்டு!''

''ஆமாம், ஆமாம், தயார்! பெரிய கையுறை அளவான பூட்டு அதன் மேல் தொங்குகிறதே!''

''அதனால் என்னவாம்? பூட்டு பெரியதாய் இருந்தாலும் குலைக்கவோ கடிக்கவோ முடியாத நாய் மாதிரி அது. தாத்தா படகைப் பூட்டுவது வெறும் பாவனைக்குத்தான்.''

''அப்புறம் தாத்தா திட்ட மாட்டாரா?'' என்று கவலையோடு கேட்டான் ஐதார்.

''திட்ட மாட்டார் என்றே நினைக்கிறேன். என்னுடைய தாத்தா அல்லவா அவர்!''

''முக்காலிக்'' குழுவின் மூன்று கால்கள் இந்த மாதிரி முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடத்திக் கொண்டிருந்த போது வீதியின் மறு பக்கத்தில் போய்க் கொண்டிருந்தான் வஜீர். பார்ப்பதற்குச் சுதந்திரம் உள்ளவனாகக் காணப்பட்டான். கைகளைச் சராய்ப் பைகளில் நுழைத்துக் கொண்டிருந்தான். நடந்த வண்ணம் அவன் ஏதோ ஒரு மெட்டைச் சீழ்க்கை கூட அடித்தான்.

இந்த மூன்று பையன்களிடமும் அவன் ஒரே அசட்டை பாராட்டு வது போலவும், அவனுடைய காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு விட்டன போலவும், உலகம் அவனுக்கு இனியது போலவும், தன் உடம்பை வலுப்படுத்திக் கொள்வதற்காகவே அவன் வெளியே கிளம்பி இருப்பதாகவும் தோன்றியது.

வஜீர் மெதுவாக நடந்து வீதியின் ஒரு பக்கம் போனுன், பின்பு மறு பக்கம் திரும்பினுன். ஆனுல் ஒருவரும் அவனைச் சட்டை செய்யவில்லை, அவனைப் பார்க்கக் கூட இல்லை. சரியாகச் சொன் னுல், பார்க்கத்தான் செய்தார்கள், ஆனுல் அதைக் காட்டிக் கொள் ளவில்லை. கட்டை மேல் உட்கார்ந்திருந்த பையன்களில் எவனும் வஜீரின் பெயரைச் சொல்லத் துணியவில்லை—வீதியில் நடப்பவன் அவர்களுடைய முந்திய தோழனும் நண்பனும் அல்ல போலவும், தன் வீட்டு வாயிலைக் காண முடியாமல் தடுமாறும் ஆட்டுக்குட்டி போலவும். அதை விட மோசம், ஏனென்ருல் வழி தவறிய ஆட்டுக் குட்டிக்கு யாருமே கதவைத் திறந்து உள்ளே வர விடுவார்களே.

திரும்பிய போது பையன்கள் உட்கார்ந்திருந்த பக்கமாக நடந்தான் வஜீர். ''முக்காலிக்'' குழுவை நெருங்கியதும் அவன் சராய்ப் பைகளிலிருந்து கைகளை எடுத்து விட்டு, சீழ்க்கை அடிப் பதை நிறுத்தி, பரிதாபமான தோற்றத்தை வருவித்துக் கொள்ள முயன்ருன். தோழர்களுக்கு முன் தன்னைத் தாழ்த்திக் கொள்வது வஜீருக்கு மிகவும் கசப்பாய் இருந்தது. தன் மேல் உண்டான இரக்கத்தால் அவன் அனேகமாக வாய்விட்டு அழத் தெரிந்தான். ஆனுல் சமாதானம் செய்து கொள்ள வேறு வாய்ப்பு அவனுக்குத் தெரியவில்லை. ஆகவே, பையன்களுக்கு நேராக வந்ததும் தன் சக்தியை எல்லாம் திரட்டிக் கொண்டு தலைவனுக்கு முன்னே நின்ருன்.

''அப்துல்லா,'' என்று தணிந்த, நடுங்கிய, ஏங்கிய குரலில் பேசத் தொடங்கினுன். ''அந்தக் கத்தியை நான் அப்போதே கொண்டு போய்க் கொடுத்து விட்டேன். நம்பிக்கை இல்லா விட் டால் ஷரீபுல்லாவிடமே கேட்டுக் கொள். இனிமேல் நான் பிறத் தியார் பொருளைத் தொட்டால் என் கைகள் சூம்பிப் போகட்டும்!''

இந்தச் சொற்களால் முதன்மையாக அப்துல்லாவின் பிரியத்தைச் சம்பாதிக்க விரும்பிஞன் வஜீர். தலைவன் மனம் மாறி விட்டால் ஐதார் மறுத்துப் பேச மாட்டானே.

வஜீரின் பேச்சை முரட்டுத்தனமாக வெடுக்கென்று இடைமுறிக்க நினைத்த அப்துல்லா தலையை நிமிர்த்திஞன்... ஆனுல் கடுமையான ஒரு சொல் கூடப் பேச அவனுல் முடியவில்லை. வஜீரின் கண்கள் மிக மிக அடிக்கடி கொட்டின, மேல் உதடு நெளிந்தது, கைகளில் புல்லரிப்பு ஏற்பட்டது. வெற்று மார்பில் தெரிந்தது ஆழமான புதிய சிறுய்ப்பு, காலையில் யகூபின் படகை வஜீர் காப்பாற்றிய போது ஏற்பட்டது இந்தக் கீறல்.

அப்துல்லா தோழனை மௌனமாகப் பார்த்தான். வஜீரின் பரிதாபகரமான தோற்றம் அவனுடைய கோபத்தைப் போக்கி விட்டது. அது மட்டும் அல்ல, அவனுடைய நெஞ்சு வலித்தது. அப்துல்லாவின் கண் முன்னே நின்ருன் வேருெரு வஜீர், குதூகலம் பொங்கும் அவனுடைய முந்திய நண்பன், அவனேடு சேர்ந்து வளர்ந்தவன். இந்த மாதிரி நேரங்களில் எல்லா விஷயங்களும் நினைவுக்கு வருகின்றன. வெகு நாட்களுக்கு முன்பு காட்டில் தொப்பிகளை மேலே வீசியவாறு தாங்கள் விளையாடியதை அப்துல்லா நினைத்துக் கொண்டான். அப்துல்லாவின் தொப்பி எல்லாவற்றிலும் உயரமான கிளையில் சிக்கிக் கொண்டு தொங்கியது. கற்களாலும் கம்புகளாலும் அதை அடித்து வீழ்த்தப் பையன்கள் முயன்றதெல்லாம் வீணுயிற்று. மரத்தில் ஏறுவதற்கு வேண்டிய சாமர்த்தியமும் பலமும் ஒருவருக்கும் போதிய அளவு இல்லை. வஜீர் ஒருவன் தான் உள்ளங்கைகளில் சிறுய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு தொற்றித் தொற்றி மரத்தில் உச்சி வரை ஏறித் தொப்பியை எடுத்தான். தரையில் இறங்கிய போது தவறி விழுந்து வலி எடுக்கும்படி கல்லில் அடிபட்டுக் கொண்டான். ஆனுல் அவன் அழவோ குறை சொல்லவோ இல்லை. பெரியவர்கள் சொல்லுவது போல, ''நடக்காதவன் தான் விழாதிருப்பான்'' என்று மட்டும் சொன்ஞன்.

வஜீரும் தானும் எத்தனை தடவைகள் மீன் பிடிக்கச் சேர்ந்து போயிருக்கிருர்கள் என்பதையும் அப்துல்லா நினைவுபடுத்திக் கொண்

டான். மீன் பிடிப்பதில் அப்துல்லா பெரிய அதிர்ஷ்டக்காரனும் இருக்கவில்லை. வஜீர் சில மீன்களைப் பிடித்து விட்ட பிறகும் அப்துல்லாவின் தூண்டிலில் இரையை ஒரு மீனுவது கொத்தக்கூட இல்லை. ஆனாலும் அவர்கள் வீடு திரும்பிய போது பிடிப்பட்ட எல்லா மீன்களையும்—பெரியவற்றையும் சின்னவற்றையும்—வஜீர் பேர்பாதியாகப் பங்கிட்டான்.

அப்புறம், போன ஆண்டில் நடந்தது இது. எவனே கெட்டவன் ஆழமான கிணற்றில் பூனைக்குட்டியைப் போட்டு விட்டான். அது மூழ்கி விடவில்லை, துருத்திய ஈரக் கல்லில் தொற்றிக் கொண்டு நடுப்பகல் வரையில் முறையிடுவது போலக் கத்திக் கொண்டிருந்தது. கயிற்றில் வாளியைக் கட்டி இறக்கிப் பார்த்தார்கள். ஆனல் வாளியில் ஏறிக் கொள்வதற்குப் பூனைக்குட்டிக்கு அறிவு பற்றவில்லை. குழந்தைகளும் பெரியவர்களும் அதைக் காப்பாற்ற முயற்சி செய்தார்கள், ஆனல் ஒரு பயனும் விளையவில்லை. அப்போது நீளக் கயிறும் கையுமாக வந்தான் வஜீர். கயிற்று நுனியைத் தூணோடு சேர்த்துக் கட்டி விட்டுக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு இருண்ட ஆழக் கிணற்றில் அஞ்சாமல் இறங்கினன். கயிற்றை ஒரு கையால் பிடித்துத் தொங்கியபடி பூனைக்குட்டியைத் துருத்து கல்லிலிருந்து முதலில் எடுத்து வாளியில் உட்கார்த்திய பிறகே தான் மேலே ஏறினன்... அந்தக் காட்சியைத் தான் எவ்வளவு பதைபதைப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் என்பது அப்துல்லாவுக்கு நினைவிருந்தது.

ஒளி வீசும் இந்த எல்லா நிகழ்ச்சிகளும் அப்துல்லாவின் நினைவுத் திரையில் கண நேரத்தில் காட்சி அளித்தன. துணிவுள்ள நண்பனை அதே வஜீரா இப்போது குற்ற உணர்வால் குனிந்த தலையுடன் தன் தோழர்களுக்கு முன் நின்று அவர்களிடம் மௌனமாக மன்னிப்புக் கேட்கிறன்? அப்துல்லாவும் ஐதாரும் அவனை மன்னிக்கத் தயாராய் இருந்தார்கள். ஆனல், ''முக்காலிக்'' குழுவின் கவுரவத்துக்குக் கறை ஏற்படுத்தியவன் விஷயத்தில் இவ்வளவு இளகிய மனமும் விட்டுக்கொடுக்கும் போக்கும் உள்ளவனுய் இருக்கத் தலைவன் என்ற முறையில் தனக்கு உரிமை கிடையாது

என்று அப்துல்லா எண்ணினன். ''இந்த மாதிரிச் சந்தர்ப்பங் களில் உறுதியாய் இருக்க வேண்டும்!'' என்று நினைத்த அப்துல்லா கண்டிப்பை வரவழைத்துக் கொண்டு, மெல் உணர்ச்சி அற்ற, அசட்டையான தோரணையில் கேட்டான்:

''என்ன வேண்டும் உனக்கு?''

''ஒன்றுமில்லை'' என்று கூச்சத்துடன் பதிலளித்தான் வஜீர்.

''ஒன்றுமில்லை என்ருல் எதற்காக இங்கே வளைய வருகிருய்?''

''நீங்கள் எனக்கு வேண்டும்'' என்று தழுதழுத்த குரலில் குழற்றினன் வஜீர். அவனுடைய கண்கள் முன்னை விட அடிக்கடி இமை கொட்டலாயின.

வஜீர் மேல் உண்டான இரக்கத்தால் பொங்கிய கண்ணீரை யகூப் சிரமத்துடன் அடக்கிக் கொண்டான். அவனுக்கு வஜீரைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்தது. சாமர்த்தியத்திலும் சித்த உறுதியிலும் மற்றவர்களை விட எப்போதும் மேலாக இருந்த இவன் என்னதான் பிழை செய்தான் என்று புரிந்து கொள்ளவே யகூபுக்கு முடியவில்லை. வீதி முழுவதையும் கைக்குள் வைத்திருந்த வஜீர் இப்போது இவ்வளவு இரங்கத்தக்க நிலைமைக்கு ஏன் உள்ளாளுன்? தோழர்கள் அவனை எதற்காகப் புறக்கணிக்கிருர்கள்?

சிவப்புப் பிடி வைத்த கவணைச் சராய்ப்பையில் தொட்டுப் பார்த்துக் கொண்டான் யகூப். இந்தக் கவணுல் எந்த இலக்கி லும் தவருமல் கல் எறிந்து வந்தான் வஜீர். வேதனையுடனும் மரி யாதையுடனும் தன் நண்பனைப் பார்த்தான் யகூப்.

''வேண்டுமானுல் திட்டுங்கள், விரும்பினுல் அடியுங்கள், ஆனுல் நான் சொல்வதைக் காது கொடுத்துக் கேளுங்கள்!'' என்ருன் வஜீர்.

''சரி, சொல்லு சட்டென்று! எங்களுக்கு நேரம் இல்லை'' என்று கடுகடுப்புடன் இசைந்தான் அப்துல்லா.

''என் வீட்டுச் சவுக்கையில் கவர்ச்சியான பண்டம் ஒன்று இருக்கிறது. அட அவ்வளவு கவர்ச்சி உள்ளது இல்லைதான்... வாருங்கள், போய்ப் பார்ப்போம்....''

''இது ஏதோ தந்திரம் போலிருக்கிறது'' என்று சந்தேகப் பட்டான் ஐதார்.

''இல்லே, தந்திரம் இல்லே இது.''

''வேறு என்னவாம்?''

''வாருங்கள், பார்ப்பீர்கள்!''

''முக்காலி''யின் மூன்று கால்களும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ஆனுல் முடிவான தீர்மானம் தலேவன் தான் செய்ய வேண்டி இருந்தது. அவன் சொன்ஞன்:

''நாங்கள் வந்தால் அது உன்னேச் சோதிப்பதற்காகத்தான். ஏதாவது சூழ்ச்சி செய்யலாம் என்று நினேத்தாயோ, அப்புறம் வருவதற்கு நீயேதான் பொறுப்பாளி ஆவாய்!''

இப்படிச் சொல்லித் தன் வலுவான முட்டியை வஜீருக்குக் காட்டிஞன்.

''அட இல்லே என்கிறேன்! நான்தான் சொல்லுகிறேனே, வேண்டுமாஞல் வெட்டுங்கள், இல்லாவிட்டால் பொசுக்குங்கள்...''

அப்துல்லா ''முக்காலிக்'' குழுவுக்கு உத்தரவிட்டான்:

போய்ப் பார்ப்போம்!''

ஆனுல் யகூபை அழைப்பதாக வஜீர் திட்டமிடவில்லே. தவிர வும், இந்த மாதிரி மதிப்பு உள்ள குழுவில் சேர்வதற்கு எடுத்துக் காட்டானவன் தகுதி அற்றவன் என்று அவன் நினேத்தான்.

''யகூப், நீ வருவது அவசியம் இல்லே'' என்ருன்.

யகூப் அப்துல்லாவைக் கெஞ்சுபவன் போலப் பார்த்தான். தலேவனே அவன் சார்பில் பதில் சொன்ஞன்:

''இல்லே, யகூபும் எங்களோடு வரட்டும்! அவன் எங்களுடைய மூன்ரும் கால்!''

வஜீரின் நெஞ்சு விண்டு போயிற்று. ஆனுல் அவன் தன் வருத் தத்தைக் காட்டிக் கொள்ளவில்லே. பெருந்தன்மையுடன் சொன் ஞன்:

''சரி, வரட்டும், எனக்கு ஒன்றும் தடை இலலே!'' ஆனுல் மனதுக்குள் சட்டென்று கணக்குப் போட்டான்: அப்துல்லாவுக் கும் ஐதாருக்கும் ஆளுக்கு மூன்று பணியாரம் கிடைத்தால் அவனுக் கும் யகூபுக்கும் ஒவ்வொன்றுதான் வரும். சமமாகப் பங்கிட்டா லோ, தலேக்கு இரண்டு பணியாரம் கிடைக்கும்.



வஜீரின் இரண்டாவது தவறு

சவுக்கைக்குள் போனதுமே வஜீரின் தன்னம்பிக்கை அதிகம் ஆயிற்று. அவனுடைய குரலில் கூட அதிக உற்சாகம் தொனித்தது. என்னதான் சொன்னாலும் இன்றைக்கு விருந்தாளிகளைத் தின்பண்டம் கொடுத்து உபசரிக்கப் போகிறவன் அவன்தானே.

''நண்பர்களே, உங்களுக்காகக் கொஞ்சம் போலத் தின்பண்டம் வைத்திருக்கிறேன்! அற்பந்தான் என்றாலும் பெரிதாக ஏற்றுக் கொள்ளுங்கள்!'' என்று வெற்றிக் குரலில் சொன்னான். விருந்தாளிகளை உபசரிக்கும் போது தன் தகப்பனார் இந்தச் சொற்களைச் சொல்வதை அவன் அடிக்கடி கேட்டிருந்தான்.

பையன்களின் விழிகள் பளிச்சிட்டன. ''என்ன தின்பண்டம் அது?'' என்று ஆவலுடன் எண்ணினார்கள்.

இனிப்பு விரும்பியான யகூப் சப்புக் கூடக் கொட்டி, வாயில் ஊறிய உமிழ்நீரை விழுங்கினான்.

''தின்பண்டம் அப்படிப் பிரமாதமானது அல்ல'' என்று முன் கூட்டிச் சொன்னான் வஜீர். மகிழ்ச்சியில் அவனுக்குத் தலைகால் தெரியவில்லை. ''யகூப், எங்கே, உன் தொப்பியைக் கொடு!''

யகூபின் தலையில் இருந்தது அவனுடைய தகப்பனாரின் பழைய தொப்பி. அதை வாங்கிக் கொண்டு வஜீர் சவுக்கையின் இருண்ட மூலைக்குப் போனான். படல் சுவற்றின் கம்புகளுக்கு இடையில் இருந்த இடுக்கில் கையை விட்டு அங்கே துழாவலானான். மூன்று சோடிக் கண்கள் அவனுடைய ஒவ்வொரு அங்க அசைவையும் ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

''ஆகா, அகப்பட்டீர்களா, இனியவர்களே!'' என்று ஒவ்வொரு பணியாரமாக எடுத்துத் தொப்பியில் வைத்தபடிக் கொக்கரித்தான் வஜீர். ''அகப்பட்டீர்களா? ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு, ஏழு, எட்டு... அப்துல்லாவுக்கும் ஐதாருக்கும் ஆளுக்கு மூன்று பணியாரங்கள். மற்றவர்களுக்கு ஒவ்வொன்று. யாருக்கும் குறை இருக்காது!''

தின்பண்டங்கள் பையன்கள் எதிர்பார்த்ததை விட எண்ணிக்கையில் நிறைய இருந்தன. தவிரவும், எதிர்பாராமல் திடீரென்று பணியாரங்களைச் சுவைக்கும் வாய்ப்பு எப்போதும் கிடைப்பதில்லையே! யகூப் இன்னொரு தரம் வாயில் ஊறிய நீரை விழுங்கினான். மற்றவர்களுக்கும் தொண்டையில் தினவெடுத்தது.

விலைமிக்க தின்பண்டங்கள் அடங்கிய தொப்பியை எடுத்துக் கொண்டான் வஜீர். சவுக்கையில் நண்பர்களுக்கு உபசாரம் செய்வது அவனுக்குச் சரியாகப் படவில்லை. அவர்கள் கன்றுக்குட்டிகள் அல்லவே, மாட்டுத் தொழுவத்தில் நின்ற வண்ணம் சவைப்பதற்கு!

''சவுக்கைக்குப் பின்னே போவோம்! அங்கே ஒதுக்கமான இடம் இருக்கிறது'' என்று விருந்தாளிகளை அழைத்தான்.

வீட்டுக்காரனின் அழைப்பை விருந்தாளிகள் மறுக்கவில்லை.

சவுக்கைக்குப் பின்னால் பெரிய தட்டைப் பாறை இருந்தது எல்லோருக்கும் தெரியும். அதன் மேல் பெரிய விருந்துக் கொண்டாட்டங்கூட நடத்தலாம். நிரம்ப வசதியானது. அந்தப் பாறை மேல் தன் ஏராளமான தின்பண்டங்களை வைப்பான் வீட்டுக்காரன்.

விருந்தாளிகள் வற்புறுத்தி உபசாரம் செய்ய வேண்டும் என்று கட்டாயப்படுத்த மாட்டார்கள். விருந்து உபசாரத்தில் தேர்ந்த வீட்டுக்காரஞன வஜீரோ, கூச்சப்படாமல் இருக்கும்படி அவர்களை ஓயாமல் கேட்டுக் கொள்வான். ஒருவேளை யகூபை மட்டும் விசேஷமாக உபசரிக்க மாட்டான். விருந்தாளிகளை உபசரிப்பதை விடப் பெரிய மகிழ்ச்சி உலகத்தில் உண்டா?

எல்லோரும் சவுக்கைக்குப் பின்ஞல் போய்ச் சேர்ந்ததும் தொப்பியில் இருந்தவற்றைப் பாறை மேல் வீசிக் கொட்டி விட்டு, தொப்பியை அலட்சியமாக யகூபிடம் எறிந்தான். ஆஞல் விருந்தாளிகளுக்குத் திடீரென்று என்ன நேர்ந்தது? புன்னகையில் மலர்ந்த உதடுகள் குவிந்தன, புருவங்கள் வியப்பிஞல் உயர்ந்தன, இனிய எதிர்பார்ப்பிஞல் பளிச்சிட்ட கண்கள் மங்கின... விருந்தாளிகளுக்கு என்னதான் நேர்ந்தது? அதோடு வீட்டுக்காரனும் மலைத்து நின்று விட்டான்... என்ன காரணம்?

காரணம் என்ன என்ருல் ஒரு பணியாரம் கூட முழுதாக இருக்கவில்லை. எல்லாப் பணியாரங்களையும் சுண்டெலிகள் கறவி இருந்தன. சிலவற்றை விளிம்பிலும், மற்றவற்றை எல்லாப் பக்கங்களிலும். இரண்டு பணியாரங்கள் ஊடே துளைக்கப்பட்டிருந்தன. பையன்களுக்கு மட்டும் அல்ல, சுண்டெலிகளுக்கும் பணியாரங்கள் பிடிக்கும் போல் இருக்கிறது. இந்த இரண்டு நாட்களில் அவை திருப்தியாக விருந்து சாப்பிட்டிருந்தன!

''சுண்டெலிகள் கறவாமல் விட்டு வைத்திருப்பவைகளை நீயே தின்று கொள்ளலாம்!'' என்று கசப்புடன் சொன்ஞன் தலைவன்.

வஜீருக்கு இடி விழுந்தது போல் இருந்தது. மனிதனுக்கு எல்லா வகையான துன்பங்களும் நேரலாம் ஆஞல் ஒரே மனிதனுக்கு இத்தனை துன்பங்கள் என்ருல், அது அளவு கடந்தது!

''நான் நேற்றுதான் அவைகளை வாங்கி வந்தேன்...'' என்று குழப்பத்துடன் முனகிஞன். ''நீங்கள் நம்பா விட்டால்...''

யகூப் நிலைமையைச் சீர்படுத்த முயன்ருன்.

'சுண்டெலிகள் கறவிய மிச்சத்தைத் தின்ருல் பற்கள் கெட்டி ஆகுமாம்'' என்ருன்.

ஆனுல் ஐதார் அவனே மேலே பேச விடாமல் கடுப்புடன் குறுக்கிட்டான்:


''எங்கள் பற்கள் இப்போதே கெட்டிதான். உன்னேப் போலச் சர்க்கரைப் பல்லர்கள் அல்ல நாங்கள்!''

கோபத்தால் சிறுவர்களுக்கு மூச்சு திணறிற்று. பின்னே என்ன? யாருக்குமே இதனுல் எரிச்சல் உண்டாகத் தான் செய்யும்! பையன்கள் எவ்வளவோ எதிர்பார்த்தார்கள், தின்பண்டங்களேச் சுவைக்கும் மனநிலேயில் இருந்தார்களே....

''நன்றி. நல்ல தின்பண்டங்களால் கிடைப்பதை விட அதிகமான திருப்தி எங்களுக்கு ஏற்பட்டு விட்டது!'' என்று சொல்லிவிட்டு, ''போவோம்!'' என்று ''முக்காலிக்'' குழுவுக்குக் கட்டளே இட்டான் அப்துல்லா.

கோபம் கொண்ட விருந்தாளிகள் மெதுவாக அப்பால் போனுர்கள். பாறை மேல் வைத்திருந்த பணியாரங்களே வஜீர் நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். பின்பு அவற்றை ஒவ்வொன்ருக எடுத்துத் தோட்டத்தில் வீசி எறிந்தான். ஒவ்வொரு கைவீச்சின் போதும் ''போய்த் தொலே! போய்த் தொலே! போய்த் தொலே!'' என்று வெறியுடன் திரும்பத் திரும்பக் கத்தினுன்.

இந்தச் சொற்கள் யாரிடம் கூறப்பட்டன—சுண்டெலிகளிடமா, தோழர்களிடமா, அல்லது தன்னிடமேயா—என்பது தெரியவில்லே. கடைசிப் பணியாரத்தை வீசி எறிந்த பிறகு அவன் உரக்க விம்மினுன், பின்பு பாறையில் விழுந்து அழத் தொடங்கினுன். நெடு நேரம் அழுது கொண்டிருந்தான் வஜீர். அழுவதையும் குறை சொல்லுவதையும் அவன் வெகு காலத்துக்கு முன்பே விட்டிருந்தான். ஆனுல் இப்போதோ, கண்ணீர் எல்லாம் தீர்ந்து போகும் வரை அழுது கொண்டிருந்தான். எவ்வளவு பாடுபட வேண்டி இருந்தது, அவ்வளவும் வீணுகி விட்டதே என்று ஓயாமல் எண்ணி மறுகிக் கொண்டிருந்தான். பணியாரம் வாங்குவதற்காக அம்மாவின் பணத்தைத் திருடினுன், ஆனுல் விருந்து கொண்டாட வாய்க்கவில்லே.



தூண்டிலில் அகப்பட்டாயா, மீனே!

பொழுது புலரும் வேளையில் எங்கள் வாள் ஏரியைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருக்க மாட்டீர்கள். ஆனால் இந்த அற்புதத்தை ஒரு தரமாவது பார்க்க உங்களுக்கு வாய்த்தால், எந்தக் காலத்திலும் அதை மறக்க மாட்டீர்கள்! வெறுமே பெருமை அடித்துக் கொள்வதற்காக நான் இப்படிச் சொல்லவில்லை. வாள் ஏரியையோ சூரிய உதயத்தையோ செய்தவர்கள் நாங்கள் அல்ல. அவற்றை உருவாக்கியது இயற்கை. இந்த அழகைப் பார்த்துப் பரவசம் அடையவும், இந்த அழகின் ஓர் அம்சத்தையாவது என் கண்களால் நீங்கள் கண்டு மகிழும் பொருட்டு அதை வருணிக்கவும்தான் என்னால் முடியும்.

புது நாளின் முதல் கதிர்கள் வாள் ஏரியின் மறு புறம் இருக்கும் செங்குத்துப் பாறையில் மோதும். பிறகு ஒளி வீசிக் கொண்டே எல்லாப் பக்கங்களிலும் சிதறும். அந்த நேரத்தில் ஏரி பால் வெள்ளை மூடுபனி என்ற மென்மையான போர்வை போர்த்துக்

கொண்டு இன்னமும் தூங்கிக் கொண்டிருக்கும். காலை வெளிச்சத் தால் கூட உறங்கும் ஏரியை எழுப்ப முடியாது. மாறாக, ஏரி போர்வையை இன்னும் கனமாக இழுத்துப் போர்த்துக் கொள் ளும். ஏரி போர்த்துக் கொள்வதன் காரணம் என்ன என்றால் எங் கள் மலைகளில் கோடைகாலக் காலை வழக்கமாகக் குளிராய் இருப் பதுதான். சூரியன் மேலே வரும்போது தான் எங்கள் வாள் ஏரி உறையிலிருந்து எடுக்கப்பட்ட கட்டாரி போலப் பளிச்சிடத் தொடங்கும்.

''நிரம்ப நேரம் தூங்குகிறாய், வாள் ஏரியே! என்ன கனவு கள் கண்டாய்? என்று கேட்கும் சூரியன்.

''உலகத்தில் அமைதி இருக்கும் போது வாள் நிம்மதியாகத் தூங்க வேண்டியது தானே'' என்று கேலி செய்து விட்டு, ''நான் நல்ல கனவுகள் கண்டேன், சூரியா, நன்றி!'' என்று சொல்லும் ஏரி.

பின்பு சூரியன் தன் வழியே போய் விடும். எதிர்ப்படும் ஒவ் வொருவரிடமும் நெடுநேரம் பேசிக் கொண்டிருந்தால் ஒரு நாளில் உலகம் முழுவதையும் சுற்றி வர அதற்கு முடியுமா எங்காவது?

சூரியன் மேலே மேலே ஏறிக் கொண்டு போகும், அந்த நேரத்தில் ஏரித் தண்ணீர் முன்னிலும் இதமான மென்மையும் அமைதியும் உள்ளதாய் இருக்கும். அதன் சீரான மேற்பரப்பில் வெறுங் கால்களோடு ஓட ஆசை உண்டாகும். புது நாள் பிறக் கும் போது புது மகிழ்ச்சிகளும் புது வருங்கால நம்பிக்கைகளும் கூடப் பிறக்கின்றன. ஏக்கம் தோய்ந்து ஒளி ஊடுருவ முடியாத வையாக இருப்பவை மூடுபனிப் படலங்கள்தாம். அதற்குக் கார ணம் அவை நிலையானவை இல்லாதது ஆகும். இருந்தாலும், நாணல்களையும் வில்லோக்களையும் அகலமான அல்லி இலைகளையும் பற்றிக் கொண்டு ஏரி மேல் அதிக நேரம் படர்ந்திருக்க மூடு பனிப் படலங்கள் முயற்சி செய்கின்றன. ஆனால் இது வீண். சூரி யனுக்குப் பக்கத்தில் மூடுபனியால் கொஞ்ச நேரந்தான் வாழ்ந் திருக்க முடியும். இது எல்லோருக்கும் தெரியுமே.

விடியற் காலையில், ஊர்ச் சேவல்கள் குரல் எழுப்பி ஒன்றை

ஒன்று அழைத்துக் கொண்ட போது மூன்று சிறுவர்கள் படகில் ஏறி உட்கார்ந்தார்கள். முந்திய இரவில் அப்துல்லாவும் ஐதாரும் தீனிப்புல் பரணில் ஒன்ருகப் படுத்து உறங்கிஞர்கள். அவர்கள் படுக்கை விட்டு எழுந்ததையும் வெளியே போனதையும் ஒருவரும் கவனிக்கவில்லை. ஆஞல் தாயார் கவனிக்காதபடி வீட்டிலிருந்து வெளியேற யகூபால் முடியவில்லை. பொழுது விடிந்ததும் விடியாததுமாக அவன் விழித்துக் கொண்டு, தாயார் மூச்சு விடுவதை உற்றுக் கேட்ட வண்ணம் வெகு நேரம் அசையாமல் படுத்திருந்தான். பிறகு ஓசைப்படாமல் உடை மாட்டிக் கொள்ளத் தொடங்கிஞன். ஆஞல் சராயில் ஒரு காலை அவன் விடுவதற்குள் தாயார் விழித்துக் கொண்டாள்.

''எதற்காக வெள்ளென எழுந்து விட்டாய் மகனே? ஒருவேளை கெட்ட சொப்பனம் கண்டாயோ?''

''நான் கனவுகளே காணவில்லை. இன்றைக்கு நான் மற்ற பையன்களோடு சேர்ந்து மீன் பிடிக்கப் போகிறேன், அவ்வளவு தான்.''

''மீன் பிடிக்கவா? ஏரியிலா?'' என்று கட்டிலில் துள்ளிக் கூட எழுந்தாள் குலியெமேஷ்-அபாய்.

''மீன்கள் ஏரியில் தானே இருக்கின்றன, அம்மா'' என்று அமைதியாகக் கூறிஞன் யகூப்.

''ரொம்ப வாயாடாதே! இது வேறு வேண்டி இருந்ததா?''

''தோழர்களுக்கு நான் வாக்கு கொடுத்து விட்டேன், அம்மா. கொடுத்த வாக்கை மீறக் கூடாது அல்லவா?''

''வாக்குகள் பல வகைப்பட்டவை. சில வாக்குகளை மீறக் கூடாது, வேறு சிலவற்றையோ, மீறலாம். வீட்டிலிருந்து நீ ஓர் அடி கூட நகரக் கூடாது. ஆமாம், சொல்லி விட்டேன்!''

''மற்றவர்களுக்கு நான் எதில் குறைந்தவன், அம்மா? எதஞல் மற்றவர்கள் செய்யலாம், நான் மட்டும் செய்யக் கூடாது?''

''மற்றவர்களைப் பற்றி எனக்கு அக்கறை இல்லை. எனக்கு இருப்பவன் ஒரே மகன்!'' என்று ஆத்திரத்துடன் பதில் சொன்ஞள் குலியெமேஷ்-அபாய்.

தான் முன்பு பயங் காட்டியதை யகூப் நினைவுபடுத்திக் கொண்டான்.

''இதோ பார், அம்மா! தோழர்களோடு போவதற்கு என்னை நீ விடாவிட்டால் நான் இப்போதே தாத்தாவின் படகில் ஏறித் தன்னந்தனியாக ஏரியில் வெகு தூரம் ஓட்டிக் கொண்டு போய் விடுவேன், தெரிந்து கொள்! எதுவுமே செய்ய என்னை விட மாட்டேன் என்கிறாய் நீ, நானோ, பெரியவன் ஆகி விட்டேன்!''

குலியெமேஷ்-அபாயின் கண்கள் கூட இருண்டன. இந்தப் பயலுக்கு என்ன நேர்ந்து விட்டது? எந்தப் பேய் குழந்தை மேல் கண் போட்டு விட்டது? கோழி மாதிரிப் பணிந்து போய்க் கொண்டிருந்த பையன் இரண்டு மூன்று நாட்களுக்குள் ஒரேயடியாகக் கைக்கு மீறிப் போய் விட்டானே! ''இவனை இப்போது போக விடாவிட்டால், எப்படியும் தன் போக்கிலேயே தான் போவான், தவிர மெய்யாகவே படகிலேறி ஓட்டிப் போய் விடுவான்'' என்று எண்ணிய தாய், சற்று நேரம் பேசாதிருந்து விட்டுக் கேட்டாள்:

''யார் அவர்கள், உன் தோழர்கள்? அதே வஜீர் தான், கட்டாயமாக...''

''அப்துல்லாவும் ஐதாரும்'' என்று பெருமையுடன் சொன்னான் யகூப்.

கணிசமாக நீண்ட நேரம் பேரம் பண்ணிய தாய், நெஞ்சில் வேதனையுடன் முடிவில் இணங்கினாள். யகூபின் முதலாவது பெரிய வெற்றியாக விளங்கிற்று இது.

''அங்கே விழிப்போடு எச்சரிக்கையாய் இரு. ஏரியில் பராக்குப் பார்க்காதே'' என்று மகனை வழியனுப்பிய போது அறிவுறுத்தினாள் தாய்...

ஆக இப்போது யகூப் துடுப்பும் கையுமாகப் படகின் பின் பகுதியில் நின்றான், அப்துல்லா நடுவில் உட்கார்ந்திருந்தான், ஐதார் முன் பகுதியில் இடம் பிடித்துக் கொண்டிருந்தான். படகோட்டி உற்சாகமாகத் துடுப்பு தள்ளத் தொடங்கினான். படகு கரையோரமாக அமைதியாகப் போய், விரைவில் மூடுபனியில் முழுதும் மறைந்து விட்டது. வாள் ஏரியின் மறு கரை சேர்ந்ததும், பையன்

கள் நாணல்களின் நடுவே தங்கள் மீன் வளர்ப்புக் கூடை மறைத்து வைக்கப்பட்டிருந்த இடத்தில் படகை நிறுத்தி, தூண்டில்களைப் போட்டார்கள். இதற்குள் சூரியன் மேலே வந்து விட்டபடியால் மூடுபனி அகன்று ஏரி தெளிவாகி விட்டது.

முதலில் மீன்கள் நன்றாகப் பிடிபட்டன. ஐதார் வகை வகையான பதினொரு மீன்கள் பிடித்தான். அப்துல்லாவும் சின்னவை ஆனாலும் ஓர் ஆறு, ஏழு மீன்களைப் பிடித்து விட்டான். யகூப் ஒருவனுக்குத் தான் மீன்கள் பிடிபடவில்லை, ஏனென்றால் மீன் இரையைக் கொத்தத் தொடங்கியதுமே யகூப் தூண்டிலைச் சுண்டி இழுத்தான்.

பிடிபட்ட ஒவ்வொரு மீனும் படகு விளிம்பிலிருந்து நீரில் விடப்பட்டிருந்த வலைச் சாக்கில் போடப்பட்டது, தான் மறுபடி ஏரிக்குத் திரும்பிவிட்டதாக நினைத்து அங்கேயே நீந்தவும் வாலை அடிக்கவும் தலைப்பட்டது.

தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் போது இரைச்சல் கூடாது. ஆனால் பஷ்கீரியாவில் தூண்டிலை நீரில் போடும் போது மந்திரச் சொற்களைச் சொல்வது வழக்கம். இது இரைச்சலாக எண்ணப் படுவதில்லை.

''முள்ளின் மேலே நீந்தினேன், மீனைக் கயிற்றோடு சேந்தினேன்'' என்று தன் தூண்டிலுக்கு ஒவ்வொரு தரமும் மந்திரம் போட்டான் அப்துல்லா.

பிடிபட்ட மீனை எடுத்த போது ஐதார் அதன் மேல் துப்பி விட்டு இப்படி முணுமுணுத்தான்:

''அருமையான மீனே, அழைப்பாய் உன் அம்மாவை, மறக்காதே அப்பாவை, அண்ணன் தம்பியைக் கூப்பிடு, அக்காள் தங்கையை வரச் சொல்லு! சோம்பாதே, அழைத்திடுவாய், சொன்னேன் மீனே, பிடிபடுவாய்!''

யகூபும் இவர்களோடு சேர்ந்து கொண்டான்.

''தூண்டிலிலே நீ பிடிபடுவாய், தூண்டில் முள்ளில் அகப்படுவாய், அகப்படாவிட்டால் தூண்டிலிலே, அடி முட்டாளாய் மாறிடுவாய்!''

ஒவ்வொரு மீனும் தூண்டிலில் அகப்படாமல் அடி முட்டாளாக மாறுவதையே மேலாக மதித்தது. யகூபின் வேண்டுதல்களுக்கு அது மசியவே இல்லை. அவற்றை அது காது கொடுத்துக் கேட்கக் கூட இல்லை. ஒரு வேளை கொடுத்திருக்கும் காதை, ஆனால் அதற்குக் காதுகள் கிடையாதே.

சூரியன் மேலே ஏற ஏற மீன்கள் பிடிபடுவது குறைந்து கொண்டு போயிற்று. பையன்கள் பல முறை இடங்களை மாற்றிக் கொண்டார்கள், ஆனால் மீன்கள் பேசி வைத்துக் கொண்டவை போல, தூண்டில்களை நெருங்காமல் விலகின. மேலும் அதிக நேரம் உட்கார்ந்திருப்பது பயனற்றதாய் இருந்தது. பிடிக்க முடிந்த எல்லா மீன்களையும் அவை உயிரோடு இருந்த போதே மீன் வளர்ப்புக் கூடையில் விடுவது அவசியமாக இருந்தது. பையன்களுக்குக் கடும் பசியும் எடுக்கத் தொடங்கிற்று.

மீன் வளர்ப்புக் கூடை வைத்திருந்த இடத்தில் நாணல்களை விலக்கிக் கொண்டு புகுந்த படகு, முன்புறத்தைக் கரையோடு பொருத்தியது. அப்துல்லாவும் ஐதாரும் சராய்களைக் கழற்றி விட்டு மீன் வளர்ப்புக் கூடை இருந்த இடத்துக்கு விரைந்தார்கள். இதோ அது! போன தடவை அவர்கள் போட்ட இடத்திலேயே கிடந்தது... ஆனால் இது என்ன? சுற்றிலும் நாணல்கள் அசைகின்றனவே. பையன்கள் அப்படியே மலைத்துப் போனார்கள்... கூடைக்குள் பல வகையான பெரிய பெரிய மீன்கள் துளைந்து கொண்டிருந்தன. எண்ணிக்கையில் பதினைந்துக்குக் குறையாது. இருபது கூட இருக்கும்! இங்கே எப்படி வந்தன? சரியான புதிர்! முடைந்த கூடையின் மூடி, அவர்கள் மூடியது மாதிரியே மூடி இருந்தது. மீன் தானாக அதன் வழியே உள்ளே புகுந்திருக்க முடியாது. ஆகவே, இதைச் செய்தது மனிதனுடைய கைதான்!

மற்றவருடைய மீன் வளர்ப்புக் கூடையிலிருந்து மீன்களை எடுத்துக் கொள்வது சில வேளைகளில் நடப்பது உண்டு. ஐதாரும் அப்துல்லாவும் அசடர்களாக இருந்தபோது பிறத்தியார் வலைகளில் கை விட்டிருந்தார்கள். வஜீரைப் பற்றியோ கேட்கவே வேண்டாம். ஆனால் தன்னுடைய மீன்களை வேற்றூர் வளர்ப்புக் கூடையில்

போடுவதை அவர்கள் கண்டதே இல்லை. இந்த மாதிரி அற்புதங்கள் கேள்வியே படாதவை! தங்கக் கழுகு ஊரில் ஒரு மனிதர் கூட இதை நம்ப மாட்டார். இந்த மாதிரி அற்புதத்தைப் பற்றிச் சொன்னால் புளுகன் என்ற பெயர் தான் கிடைக்கும்.

''பாட்டி சொல்வது போல, மாயம் இது! பணக்காரன் ஆக வேண்டும் என்று விதி இருந்தால் போகிற வழியிலேயே பணம் கிடைக்கும்! அதற்கென்ன, சரிதான்! சேமிப்பால் பை கிழிந்து விடாது என்பார்கள் நம்மவர்கள்!'' என்றான் அப்துல்லா.

''நம்முடைய கூடையைத் தன்னது என்று நினைத்து யாரேனும் தவறாக அதில் மீனைப் போட்டிருப்பானோ?'' என்று தன் அனுமானத்தை வெளியிட்டான் ஐதார்.

''ஆமாம், ஆமாம், ஆசையாகக் காத்திரு, யாரேனும் போடுவான் என்று!''

''தவறாக இல்லை என்றால் இதில் ஏதோ சூழ்ச்சி இருக்கிறது'' என்று தன் சந்தேகத்தை மறுபடி வெளியிட்டான் ஐதார்.

''உனக்கு என்ன என்னவோ சூழ்ச்சிகள் எப்போதுமே தோன்றுகின்றன'' என்று கிண்டலாகச் சிரித்தான் அப்துல்லா. ஆனால் தோழனைப் போலவே அவனும் கவலை கொண்டிருந்தான்.

''இதை யார் செய்தார்கள், தெரியுமா?'' என்றான் கரையில் நின்று கொண்டிருந்த யகூப். ''மீன் பிடிப்பவர்களின் காவலனான மந்திரவாதி!''

''மந்திரவாதியாவது ஒன்றாவது! இந்த அழகில் நீ முன்னோடிச் சிறுவன் வேறு!'' என்று அவன் கருத்தை அடியோடு நிராகரித்தான் ஐதார்.

பையன்களுக்கு ஒன்றுமே விளங்கவில்லை. வேற்றூர் மீன்கள் தங்கள் கூடைக்கு வந்த மர்மத்தைப் புரிந்து கொள்ளத் தலைவனால் கூட முடியவில்லை. புதிர் விடுபடாமலே இருந்து விட்டது.

மறு நாள் நம் மீனவர்களின் வேட்டை அதிகப் பயன் அளித்தது. அனேகமாகப் பாதி வாளி மீன்கள் பிடிபட்டன. ஆனால் அவர்களுடைய கலவரமும் தலைக்கு நாளைக் காட்டிலும் அதிகம் ஆயிற்று, ஏனென்றால் கூடையில் மறுபடியும் மீன்கள் போடப்பட்டிருந்தன.

இவற்றில் தங்க நிறக் குருஷியன் மீன்களும் மூன்று இருந்தன. பையன்கள் வியப்பினால் கல்லாய்ச் சமைந்து விட்டார்கள். மகிழ்வதா, வருந்துவதா என்று ஒருவருக்கும் தெரியவில்லை. மீன்கள் குறைந்திருந்தால் அது வேறு விஷயம். ''எவனோ திருடன் கையாடி இருக்கிறான்'' என்று அப்போது சுளுவாகச் சொல்லி இருப்பார்கள். முதன்மையாக வஜீர் மேல் சந்தேகம் ஏற்பட்டிருக்கும், கட்டாயமாக.

''நண்பர்களே, நன்றாக ஆலோசனை செய்வோம் வாருங்கள். ஒருவேளை தற்செயலாக நமக்கு அதிர்ஷ்டம் அடித்திருக்கலாம். பிறத்தியாருடையவற்றை நாம் திருடவில்லையே'' என்றான் ஐதார்.

''உழைக்காமல் பெறுவது எல்லாம் திருடப்பட்டது போலவே எண்ணப்படுகிறது'' என்று ஏக்கத்துடன் கூறினான் தலைவன்.

''ஆனால் நமக்குத்தான் தெரியுமே, நம்முடைய மீன்கள் எவை என்று. ஆகவே, வேற்று மீன்களை விட்டு விடுவோம் வாருங்கள், காரியம் தீர்ந்து விடும்!'' என்று உறுதியுடன் யோசனை சொன்னான் ஐதார்.

ஆனால் இந்த உறுதியான யோசனையைச் செயல்படுத்துவதற்குச் சிறுவர்களிடம் மனோதிடம் போதவில்லை. பளபளப்பான, அழகிய இத்தனை நிறைய மீன்களைத் தாங்களாகவே, சொந்தக் கைகளால், விட்டு விடுவதாவது, அது எப்படி? இது வெறும் அசட்டுத்தனம் அல்லவா ஆகும்!

''சொந்த மூளையைப் பயன்படுத்தி யோசியுங்கள், நாம் எதற்காக மீன்களைப் பிடித்தோம்? சீறும் வாணலியில் வதக்கித் தின்பதற்காக அல்லவே?'' என்றான் தலைவன்.

''தெரிகிறது, முறு முறுவென்று சுவைப்பதற்காக இல்லைதான்'' என்று உதடுகளை நக்கிக் கொண்டு உறுதிப்படுத்தினான் ஐதார்.

''அப்படியானால் இப்போதைக்குக் கூடையில் நீந்தட்டும். இவற்றை என்ன செய்வது என்பது அப்புறம் தெரியும்.''

''பாவத்துக்குப் பயந்தீர்களானால் பாவம் என்னைச் சாரட்டும். நான் ஒன்றும் பிடிக்கவில்லையே'' என்று பெருந்தன்மையோடு சொன்னான் யகூப்.

''இங்கே 'உன்னுடையது' என்றும் 'என்னுடையது' என்றும் எதுவும் கிடையாது. எல்லாவற்றையும் சேர்ந்து செய்கிறோம், எல்லாவற்றுக்கும் சேர்ந்து பொறுப்பு ஏற்கிறோம். நம்மிடம் எல்லாம் பொது'' என்று மறுப்பு தெரிவித்தான் அப்துல்லா.

என்ன ஆனாலும் இந்த மர்மப்புதையல் சிறுவர்களின் மன அமைதியைக் குலைத்து விட்டது. ஆனால் நம்முடைய மீனவர்கள் ஏமாற்றுக்கு உள்ளாகக் கூடிய வெகுளிகளாய் இருக்கவில்லை.

மூன்றாம் நாள் அவர்கள் சில நேரங்களில் ஏரியின் நடுவே படகை ஓட்டினார்கள், வேறு சில நேரங்களிலோ, வேண்டுமென்றே நாணல் புதரில் புகுந்து மீன் பிடிப்பவர்கள் போலப் பாவனை செய்தார்கள். முடிவில் அவர்கள் கரை சேர்ந்து, படகை நாணலுக்கு நடுவே இழுத்துத் தள்ளி விட்டு, மீன் வளர்ப்புக் கூடை இருந்த இடத்துக்கு அருகில், அடர்ந்து உயரமான கோரைப் புற்களில் மறைந்து கொண்டார்கள். முந்தின நாளே இந்தத் தந்திரத்தை அவர்கள் திட்டம் இட்டிருந்தார்கள். இரகசியத்தை எப்பாடு பட்டாவது தெரிந்து கொள்வது அவசியமாய் இருந்தது. அவர்களுடைய பொறுமை முன்பே தீர்ந்து போய் விட்டது.

ஏரியிலிருந்து பார்வையை அகற்றாமல் பையன்கள் வெகு நேரம் படுத்திருந்தார்கள். ஆனால் எங்கும் எதுவும் அசையக் கூட இல்லை. நாணல்களின் பழுப்புக் கொண்டைகளும் மரக் கிளைகளும் புற்களின் தண்டுகளும் காலைத் தூக்கத்திலிருந்து இன்னும் விழித்துக் கொள்ளவில்லை. புதர்களில் பாடிய பறவைகளையோ, பையன்கள் கவனிக்கவே இல்லை. பட்சிகள் அவர்களுக்கு ஒரு பொருட்டாக இல்லை.

ஏரியின் மேற்பரப்பில் சிற்றலைகளை எழுப்பியவாறு வீசிற்று காலைக் காற்று. ''எதற்காக என்னை எழுப்பினீர்கள்?'' என்று முனகி அண்டை அயலாரைக் கடிந்து கொள்பவை போல நாணல்கள் சரசரத்தன.

இளங்காற்று மரங்களின் இலைகளிலும் வீசிற்று. ஆனால் வசந்த காலத்தில் தளிர் இலைகள் மென்மையாய் இருக்கும், சச்சரவு செய்து சரசரக்காமல் ஒன்றுக்கு ஒன்று அன்போடு முகமன் சொல்லும்.

காற்று அப்பால் போயிற்று, சுற்றிலும் எல்லா ஓசைகளும் அடங்கிப் போயின. அந்த நிசப்தத்தில் வண்ணத்துப் பூச்சிகளின் சிற கடிப்பைக் கூடக் கேட்க முடிந்தது.

இரண்டு மணி, அல்லது ஒருவேளை மூன்று மணி நேரங்கூட, கழிந்தது. பையன்களிடம் கடிகாரம் இல்லை. குழந்தைப் பருவத் தில் வயிற்றைக் கொண்டு நேரம் கணிக்கப்படுகிறது. பசி எடுத் தது என்றால், காலைச் சிற்றுண்டி, மதியச் சாப்பாடு அல்லது இரவு உணவுக்கான நேரம் வந்து விட்டதாக அர்த்தம். காலைச் சிற்றுண்டி வேளை கடந்து விட்டது, நேரம் மதியத்தை நெருங்கிக் கொண்டிருக் கிறது என்று பையன்களின் வயிற்றுக் கடிகாரம் எப்போதோ தெரி வித்து விட்டது. அந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் பொறுமைக்கு ஓர் எல்லை உண்டு.

''இங்கே படுத்து வெட்டியாகப் பொழுதைக் கழிக்கிறோமே'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்டான் யகூப்.

ஆனால் ஐதார் குல்லாயால் அவன் வாயை மூடி, முட்டியைக் காட்டி அச்சுறுத்தினான். யகூப் உடனே மௌனமாகி விட்டான்.

திடீரென்று மிக அருகில் லேசான கிரீச்சொலி கேட்டது. மீன் பிடிப்பவன் ஒவ்வொருவனுக்கும் பழக்கமானது இந்தக் கிரீச் சொலி. துடுப்புக் கொண்டிகள் இப்படிக் கிரீச்சிடும்... பையன் கள் எச்சரிக்கை அடைந்தார்கள். நாணலின் சரசரப்பும் தண்ணீ ரின் சளப்போசையும் கேட்டன... துடுப்பு தள்ளியவன் கெட்ட வேலைகளில் ஈடுபட்டிருந்தான் போலவும் எதற்கோ பயப்படுவது போலவும் தோன்றியது. அவன் மிக எச்சரிக்கையுடன் செயல்பட் டான். பையன்கள் நாணல்களில் இன்னும் உள்ளே புகுந்து கொண் டார்கள். தொட்டி மாதிரித் தட்டையான படகில் காணப்பட் டான் வஜீர். அவன் அச்சத்துடன் எல்லாப் பக்கங்களிலும் கண் ணோட்டி, சுற்று முற்றும் ஒரு பூதர் இல்லை என்று உறுதிப்பட்டதும் தன் படகைக் கரைக்கு அருகே செலுத்தினான். படகின் பின் பகுதி யில் கட்டியிருந்த மூட்டை நீரில் அதன் பின்னே இழு பட்டது. மூட்டையில் ஏதோ அசைந்து துளைந்து கொண்டிருந்தது. வஜீர் படகிலிருந்து வெளியே குதித்து, மூட்டையை அவிழ்த்து எடுத்து

மீன் வளர்ப்புக் கூடை கிடந்த இடத்துக்கு அதைக் கொண்டு போனான்.

ஆகா, அப்படியா! வஜீருக்குத் தான் பிடித்த மீன்கள் போதவில்லை போலிருக்கிறது, பிறத்தியாருடைய மீன்களையும் அள்ளிக் கொண்டு போக விரும்புகிறானே? எவ்வளவு பேராசைக்காரன்! ஆனால் நடவாது, வஜீர்! உன்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் மூன்று சோடிக் கூர்ந்த விழிகள் பார்வையிட்டுக் கொண்டிருக்கின்றன! எங்கே, தொட்டுப் பார்! தங்கள் ஆத்திரத்தைப் பையன்கள் பாடுபட்டு அடக்கிக் கொண்டார்கள். என்ன அக்கிரமம்! யாரோ இரகசியமாக அவர்களுக்கு உதவுகிறார்கள். வஜீரோ திருடப் பார்க்கிறான்!

களவு வெளிப்படும் போது திருடன் படப் போகிற அவமானத்தை வெற்றிப் பெருமிதத்துடன் முன்கூட்டி எண்ணிப் பார்த்தார்கள் அப்துல்லாவும் அவனுடைய தோழர்களும். ''நல்லது, வஜீருக்குப் பாடம் கற்பிப்போம்!'' என்று அவர்களில் ஒவ்வொருவனும் நினைத்துக் கொண்டான். திருடனைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்குக் காத்திருப்பது தான் தேவை.

வஜீர் கூடையின் மூடியைப் பதபாகமாகத் திறந்தான். அவன் பையன்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்றதால் அவன் என்ன செய்கிறான் என்று எவ்வளவோ விரும்பியும் அவர்களால் பார்க்க முடியவில்லை. ஆனால் மீன்கள் நீரில் வால்களை அடித்துத் துளையும் சத்தம் அவர்களுக்குக் கேட்டது... அவர்களுடைய மீன்களைத் தன் மூட்டையில் ஒவ்வொன்றாக எடுத்துப் போட்டுக் கொள்ளுகிறானே? தங்கள் மறைவிடத்திலிருந்து வெளியே பாய அவர்களுக்கு நேரம் வரவில்லையா? பையன்கள் அப்துல்லாவைக் கேள்விக் குறியுடன் பார்த்தார்கள். அவனோ, பொறுத்திருக்கும்படிச் சைகை செய்தான்.

திருடன் தன் வேலையை நன்றாகச் செய்து விட்டு மூடியைக் கெட்டியாக மூடிய பின் மறைந்து கொள்ளப் போனான், ஆனால் அதற்குள் கரையிலிருந்து கேட்டது அப்துல்லாவின் அச்சுறுத்தும் முழக்கம்:

''மாட்டிக் கொண்டாயா, திருட்டுப் பயலே!''

வஜீர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். தன் முன்னே மூன்று தோழர்களையும் கண்ட அவன் கண்களை மிக அடிக்கடி கொட்டி, குழப்பத்துடன் புன்னகை செய்தான். அந்தப் புன்னகை பையன்களின் ஆத்திரத்தை இன்னும் அதிகம்தான் ஆக்கிற்று. அப்துல்லா தண்ணீரை வாரித் தெறித்தவாறு தாவி அவன் மேல் பாய்ந்து முழு பலத்துடனும் அவன் கன்னத்தில் அறைந்தான். ஐதாரும் தன் தரப்பில் அடி கொடுத்தான். ஆனாலும் வஜீர் கட்டை போல் அசையாமல் நின்றான், தற்காத்துக் கொள்ள நினைக்கவே இல்லை.

''ஓகோ! மீனை ருசி பார்க்க ஆசைப் பட்டாயோ?'' என்று கடுங்கோபத்துடன் அவன் மேல் பாய்ந்தான் தலைவன். ''அப்படியானால் இந்தா, இன்னொரு மீன் உனக்குத் தருகிறேன்!'' இவ்வாறு கூறி மறுபடி வஜீரை அடிக்கக் கையை ஓங்கினான்.

ஆனால் அப்போது வஜீர் குனிந்து வெற்றுச் சாக்கை நீரிலிருந்து எடுத்தான். சாக்கிலிருந்து தாரை தாரையாகத் தண்ணீர் கொட்டிற்று. அதற்குள் ஒன்றும் அசையவில்லை.

''மீன்களை எங்கே போட்டாய்? எங்களைப் பழி வாங்குவதற்காக ஏரியில் விட்டு விட்டாயோ?'' என்று மறுபடி அவனை நெருங்கினான் அப்துல்லா.

''நான் விடவில்லை. நீ நம்பா விட்டால் பார்த்துக் கொள்.''

அப்துல்லாவும் ஐதாரும் மீன் வளர்ப்புக் கூடையின் பக்கம் ஓடினார்கள். சிரமத்துடன் அதைத் தூக்கியவர்கள், திகைத்துப் போய் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கூடையில் மீன்கள் ஏராளமாக இருந்தன. பையன்கள் வைத்திருந்ததைவிட எவ்வளவோ நிறைய...

''உனக்கு எங்கிருந்து கிடைத்தன?''

''என்னிடம் சொந்த மீன் வளர்ப்புக் கூடை இருக்கிறது. அது மீன்கள் உள்ள இடத்தில் கிடக்கிறது'' என்று பதில் அளித்தான் வஜீர்.

கரையில் நின்று கொண்டிருந்த யகூப் மகிழ்ச்சியால் கைகளைக் கொட்டிச் சீழ்க்கை கூட அடித்தான். இந்த நேரத்தில் கனத்த கூடை சிறுவர்களின் கைகளிலிருந்து நழுவி நீரில் மெதுவாக மூழ்கிற்று... அதற்குள் இருந்த மீன்கள் செதில்கள் மினுமினுக்க வால்களை அடித்து நீந்தத் தொடங்கின...

ஆக, நடந்தது இது ஆகும்! அப்துல்லாவும் ஐதாரும் ஊமை ஆகி விட்டவர்கள் போல மலைத்துப் போய் வஜீரைப் பார்த்தார்கள். தலைவனுடைய கையின் அடித் தடம் சிவப்புத் தழும்பாக வஜீரின் கன்னத்தில் பதிந்திருந்தது. விழிகளில் ஏக்கம் ததும்பும் கண்டனம் தெரிந்தது. ''அட அசடுகளா...'' என்றன வஜீரின் கண்கள். ஆனால் தோழர்களின் முகங்களில் இருந்த குழப்பத்தைக் கண்டதும் அவன் சட்டென மண்டியிட்டு உட்கார்ந்து அடக்க முடியாமல் விழுந்து விழுந்து சிரித்தான். அவன் சிரித்த விதத்தில் அவனுடைய திறந்த வயிறு குலுங்கிற்று, நீரில் சிறு வட்டங்கள் தோன்றிப் பரவின. அந்த வட்டங்களைப் பார்த்து ஐதாரும் பொங்கிச் சிரித்தான், அப்துல்லா அவனைப் பின்பற்றினன்.

பையன்கள் இடுப்பளவு நீரில் நின்றபடி வெகு நேரம் கட கடவென்று சிரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் துள்ளினர்கள், ஒருவரை ஒருவர் இடித்தார்கள். அந்த நேரத்தில் வெளியார் எவரும் அவர்களைப் பார்த்தால், வேடிக்கைப் பேர்வழிகள் என்று எண்ணி இருப்பார்கள். ஆனால் எல்லாரையும் விட மகிழ்ந்து வெற்றி கொண்டாடியவன் யகூப்தான். அது வரை அவன் தாளுக்கும் தாழ்ப்பாளுக்கும் நடுவே சிக்கியவன் போலத் தவித்துக் கொண்டிருந்தானே.

''ஹுர்ரா! ஹுர்ரா! எவ்வளவு அற்புதமாக முடிந்து விட்டது!'' என்று கத்தினன் யகூப்.

''நேற்றைக்கும் நீதான் போட்டாயா?'' என்று கேட்டான் அமைதி அடைந்துவிட்ட அப்துல்லா.

''ஆமாம்'' என்று தலை ஆட்டினன் வஜீர்.

''முந்தா நாளுமா?''

''ஆமாம்.''

''எதற்காக?'' என்று கரையில் ஏறிய பின் கேட்டார்கள் தோழர்கள்.

''வெறுமேதான்... கூடை சீக்கிரமாக நிறைய வேண்டும் என்பதற்காக...''

வஜீர் தன் கன்னத்தைத் தொட்டான்.

''என்ன இருந்தாலும் உன் கை வலுவானது, அப்துல்லா!'' என்று வன்மம் இல்லாமல் சொன்னான்.

''அட கிடக்கிறது, விடு...'' என்று தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு கூச்சத்துடன் கூறினான் அப்துல்லா. ''இதெல்லாம் இங்கேயே இருந்து விடட்டும், சரிதானா? நீயே தானே...''

''ஆனால் மீன் பிடிப்பதில் பெரிய அதிர்ஷ்டசாலிதான் வஜீர்'' என்று சட்டென்று குறுக்கிட்டுப் பேச்சை வேறு திசையில் திருப்பினான் யகூப். ''இவ்வளவு பெரிய மீன்கள் பிடிபட்டன அவனுக்கு!''

''சின்னவற்றை எல்லாம் நான் மறுபடி ஏரியில் விட்டு விட்டேன்...''

இந்த நேரத்தில் ஓர் அருமையான யோசனை தலைவனுடைய மூளையில் உதித்தது.

'' 'முக்காலி'க்கு எத்தனை கால்கள்?''

அறிவுக் கூர்மை உள்ள ஐதார் அப்துல்லாவின் எண்ணத்தை உடனே புரிந்து கொண்டான்.

''எத்தனை வைக்கிறார்களோ அத்தனை. எல்லாம் பொருத்துவதைப் பொறுத்தது. வேண்டுமானால் பத்து கால்கள்கூடப் பொருத்தலாம்!''

இந்தத் தடவை தலைவன் உத்தரவு பிறப்பிக்கவில்லை, தோழர்களின் யோசனையைப் பணிவுடன் கேட்க முடிவு செய்தான். வஜீரை ஒரு காரணமும் இல்லாமல் தான் அடித்தது அப்துல்லாவுக்குப் பிடிக்கவில்லை. தன் மேல் அவன் மிகுந்த அதிருப்தி அடைந்தான். உத்தரவு கொடுக்கத் தனக்குத் தகுதி இல்லை என்று எண்ணினான். ஏனென்றால், தலைவன் அதிகப் பொறுமையும் அடக்கமும் கொண்டிருக்க வேண்டுமே.

''நண்பர்களே, வஜீரை 'முக்காலிக்' குழுவில் மறுபடி சேர்த்துக் கொண்டால் எவ்வளவு நன்ருய் இருக்கும்! இதற்கு ஆதரவாய் இருப்பவர்கள் கை உயர்த்துங்கள்'' என்ருன்.

பையன்கள் ஒன்ருகக் கைகளை உயர்த்திஞர்கள். நண்பர்களின் பெருந்தன்மையால் மனம் உருகிய வஜீருங்கூடக் கை உயர்த்திஞன். எல்லோரும் நிரம்ப மகிழ்ச்சி அடைந்தார்கள், ஆஞல் தங்கள் மகிழ்ச்சியை வெளியே காட்டுவது சந்தர்ப்பப் பொருத்தம் அற்றது என்று நினைத்தார்கள். இவ்வாறு, பல சங்கடங்களுக்கு உள்ளான ''முக்காலி'' மறுபடி உறுதியான கால்களில் நின்றது. இந்தத் தடவை, வளைக்க முடியாத நான்கு கால்களில் அது நின்றது.

நனைந்த உடையைப் பிழிந்து மறுபடி அணிந்து கொண்டார்கள் பையன்கள். வஜீரிடம் சராய் மட்டுமே இருந்தபடியால் அவன் எல்லாருக்கும் முன்ஞல் தயாராகி விட்டான்.

''உன்னிடம் வேறு சட்டை இல்லையா என்ன?'' என்று கவலையுடன் கேட்டான் அப்துல்லா. ''மழையிலும் கூடச் சட்டை இல்லாமலா வளைய வருகிருய்?''

''இருக்கிறது சட்டை. பெட்டியில் கிடக்கிறது. உடம்பை உரப்படுத்துவதற்காக நான் வேண்டுமென்றே வெற்றுடம்பாகச் சுற்றுகிறேன்!''

வஜீர் தன் உடம்பை இந்த உபாயத்தால் வலுப்படுத்துகிருன் என்பது அவனுடைய நண்பர்களுக்கு அதுவரை தெரிந்திருக்கவில்லை. அவர்கள் அவனைக் கொஞ்சம் சந்தேகத்துடன் பார்த்தார்கள்.

வீட்டுக்குப் போகும் வழியில் சிறுவர்கள் வருங்காலத்தைப் பற்றி எண்ணமிட்டார்கள். கிரமேத் சிகரத்தில் உள்ள ஏரிக்கு உயிர் ஊட்டப் போகிற நாள் இப்போது தொலைவில் இல்லை! மறு நாளைக்கு மறுநாள் இதற்காகக் குறிக்கப்பட்டிருந்தது. பொழுது விடிவதற்கு முன்பே அவர்கள் அங்கே போகக் கிளம்பி விடுவதாக ஏற்பாடு. ஆஞல் இப்போது இரண்டு படகுகள் ஒன்ருக ஊருக்குப் போய்க் கொண்டிருந்தன. தாத்தாவின் விசாலமான படகில் மூன்று பேரும் மற்றச் சிறு படகில் ஒருவனும் இருந்தார்

கள். இரண்டு படகுகளும் ஏரியின் நடுவரை போனதும் கணீரென்ற குரலில் இனிமையான பாட்டு ஒலித்தது. பாடினவன் ஐதார். அவன் மிக நன்றாகப் பாடியதால் அவனுடைய பாட்டி சில நேரங்களில் சொன்னாள்:

''பேரப்பிள்ளை, நீ ரொம்பப் பாடுகிறாய். நீ ஆக்கம் கெட்டவன் ஆகிவிடக் கூடாதே என்று பார்க்கிறேன்.''

ஆனால் எதற்காக, என்ன காரணத்தால் ஐதார் ஆக்கம் கெட்டவன் ஆக வேண்டும்? ஒருவனுக்கு இந்த மாதிரிக் குரல் வாய்த்திருந்தால் அவனுடைய பாட்டு மற்றவர்களின் காதுகளுக்கு இன்பம் தருகிறது, நெஞ்சுகளைக் குளிர்விக்கிறது, துன்பத்தில் ஆறுதல் அளிக்கிறது. இந்த ஒரு தன்மையே பெருத்த அதிர்ஷ்டம் அல்லவா? இப்போதும் ஐதாரின் பாட்டு ஏரியின் நீர்ப் பரப்பில் கணீரென ஒலித்துப் பெருகிற்று, கரைகளில் பிருகாக்களாகச் சிதறி மலைகளில் மந்தமாக எதிரொலித்தது... இல்லை, இந்தப் பாட்டு கரைகளில் மட்டும் சிதறவில்லை, மனிதர்களின் காதுகளில் ஒலித்து நெஞ்சுகளில் புகுந்தது.

''எங்கெல்லாந்தான் வலம் வரவில்லை,
எதையெல்லாந்தான் கண்டிடவில்லை,
இளம் வீரனும் அவன் நட்புப் பரியும்...''



காளையோடு மோதல்

ஊர் எல்லையில் ஆட்டு மந்தை தென்பட்டது. எல்லாவற்றுக்கும் முன்னால் பெருமிதத்துடன் நடை போட்டது 'யம்லெகூல் பாட்டியின் ஒற்றைக் கொம்புள்ள கறுப்பு வெள்ளை ஆடு. தங்கக் கழுகு ஊர் மந்தையின் தலைவி இந்த ஆடு. நிரம்பத் துணிச்சல் உள்ள ஆட்டுக் குட்டிகள் கூடத் திடலில் அதை முந்தத் துணியாது. மந்தை ஊரில் புகும் போதுதான் கறுப்பு வெள்ளை ஆடு ஒரு பக்கம் கொஞ்சம் விலகி மற்றவைகளுக்கு வழி விட்டது. செம்மறிகள் இதற்காகவே காத்திருந்தன. மே மே என்று கத்தியவாறு அவை முன்னே ஓடின.

''மந்தை வருகிறது! மந்தை வருகிறது!'' என்று அந்த நேரத்தில் பையன்கள் உரக்கக் குரல் கொடுத்தார்கள்.

இந்தக் கத்தல் வீதி முழுவதும், வீட்டுக்கு வீடு பரவிற்று. ஒவ்வொரு வீட்டிலிருந்தும் மந்தையை எதிர் கொள்ளுவதற்காக யாராவது வாசலுக்கு வந்தார்கள். பையன்கள் இல்லாதவர்கள்

வேலையிலிருந்து இன்னும் திரும்பவில்லை என்றால் அண்டை வீட்டுக் குழந்தைகள் அவர்களுடைய கால்நடைகளை எதிர்கொண்டார்கள். எங்கள் தங்கக் கழுகு ஊரில் எத்தனையோ நூற்றாண்டுகளாக நிலவி வந்த வழக்கம் இது.

பெரியவர்களும் குழந்தைகளும் தங்கள் கால்நடைகளை வெவ்வேறு குரல்களில் பெயர் சொல்லி அழைத்தார்கள்:

''பார்-பார்!''

''கோஸ்-கோஸ்!''

அப்துல்லாவும் அன்று மந்தையை எதிர்கொள்ள வெளியே வந்தான். பாட்டி வீட்டில் இல்லை. அதற்கு முன்னால் யகூப் அப்துல்லாவிடம் வந்தான். வஜீர் பரிசளித்த கவணை அவன் தலைவனுக்குக் காட்டினான். வஜீரோடு தான் பழகுவதைத் தோழர்கள் தெரிந்து கொள்வார்களோ என்று அதுவரை யகூப் ஓயாமல் பயந்து கொண்டிருந்தான். இப்போதோ, அவன் மகிழ்ச்சியில் திளைத்தான். இப்போது அவர்கள் எல்லோரும் நண்பர்கள் ஆகி விட்டார்களே, அவன் இனி எதையும் மறைக்க வேண்டாமே. ஆகவே அவன் தன் கவணைப் பெருமையோடு வெளியே எடுத்தான். அப்துல்லா அவனைக் கண்டிக்கவில்லை. தான் கவண் எறியக் கற்றுக் கொண்டு விட்டதை யகூப் காட்டிய போது தலைவன் அவனைப் பாராட்டக் கூடச் செய்தான். இன்று மந்தையை எதிர்கொள்ள அவர்கள் இரண்டு பேருமாக வெளியே வந்தார்கள்.

அப்துல்லாவின் பசுவையும் இரண்டு செம்மறிகளையும் அவன் வீட்டு முகப்பில் ஓட்டிய பின் சிறுவர்கள் வீட்டுக்குப் போகவில்லை தங்கக் கழுகு ஊரில் யாருமே உடனே வீட்டுக்குப் போகவில்லை. தன் கால்நடையை எதிர்கொண்ட பிறகு ஒவ்வொருவரும் வாசலில் தங்கி, பாக்கி மந்தையை வழியனுப்பினார்கள். தேவை ஏற்பட்டால் யாரேனும் அண்டை அயலாருக்கு முரண்டும் மாட்டையோ ஆட்டையோ தொழுவில் அடைக்க உதவினார்கள். ஆடுகளும் மாடுகளும் அழைப்புக் குரல்கள் கொடுக்கும் இரைச்சல் நிறைந்த இந்த மாலை வேளை, சிறு திருவிழா போல இருந்தது. மந்தைக்குப் பின்னால், அதை வழியனுப்புவது போல வீதியின் கீழ்ப்

பாதியில் வந்து கொண்டிருந்தது ஒரு காளை மாடு. மிகச் சோம்பலுள்ள பசுக்களுக்குக் கூட ஒரு நூறு அடி பிந்தி இருந்தது அது. வெளிர் பழுப்பு மேனியும் இரத்தம் கக்குபவை போலச் சிவந்த கண்களும் கொண்டிருந்த அந்தக் காளை நிரம்ப முட்டும் வழக்கம் உள்ளது என்று ஊர்க்காரர்கள் சொன்னார்கள். பார்ப்பதற்கு அது அப்படிப் பெரியதோ அச்சம் தருவதோ அல்ல என்றாலும் அதைக் கண்டதுமே பையன்கள் சிதறி ஓடினார்கள். சிலர் கதவுகளுக்குப் பின்னால் மறைந்து கொண்டார்கள், வேறு சிலர் வேலிகள் மேல் தொற்றிக் கொண்டார்கள். அப்துல்லாவும் யகூபும் பயத்தினால் அல்ல, வழக்கம் காரணமாகச் சுற்றுச் சுவர் மேல் சவாரி செய்யும் பாவனையில் அமர்ந்தார்கள். எதற்கும் இருக்கட்டும் என்று யகூப் பையிலிருந்து கவணை எடுத்துக் கூழாங்கல்லைத் தயாராக அதில் வைத்துக் கொண்டான். ஒரு நேரம் போல ஒரு நேரம் இருக்காதே. கல் தேவையும் படலாம்.

அப்போது நடந்தது எதிர்பாராதது.

காளை அப்துல்லா வீட்டு வாசலைக் கடந்து போன போது பக்கத்து வீட்டு முன் தோட்டத்திலிருந்து வெளியே ஓடி வந்தாள் குல்நூர். தையல்காரி வீட்டிலிருந்து தன் புதிய சிவப்பு கவுனை அணிந்து அப்போது தான் திரும்பி வந்து கொண்டிருந்தாள் அவள். களிப்பில் அவளுக்குச் சுவர்க்கம் கிடைத்துவிட்டது போல் இருந்தது. இடமும் வலமும் திரும்புவதும் பகட்டான குஞ்சங்களைத் தடவுவதும் அழகான பொத்தான்களைப் பார்த்துப் பார்த்து மகிழ்வதுமாக வந்து கொண்டிருந்த அவள், சுற்றிலும் எதையும் கவனிக்காமல் இனிமையாகக் கீச்சிட்டுக் கொண்டிருந்தாள்:

''ஆகா குல்நூர்! உன் கவுன்தான் எவ்வளவு அழகு! புத்தாடை உனக்கு மகிழ்ச்சி தரட்டும். அது ஒரு போதும் நைந்து போகாமல், எப்போதும் அழகானதாக இருக்கட்டும்...''

குல்நூரின் கவுன் மெய்யாகவே மிகக் கவர்ச்சியாக இருந்தது. மிடுக்காக நடு வீதியில் போய்க் கொண்டிருந்த பழுப்புக் காளையால் இந்த அழகான கவுன் மேல் பார்வை செலுத்தாமல் அப்பால் போக நிச்சயமாக முடியவில்லை. வியப்பினால் அது மலைத்து

இதெல்லாம் ஒரே விநாடியில் நடந்து விட்டது. நாலா புற மிருந்தும் ஆட்கள் ஓடி வந்தார்கள்.

அப்துல்லா சுருண்டு விழுந்து கிடந்தான். அவனுடைய வெளி றிய முகம் உயிர் இல்லாதது போலக் காணப்பட்டது. முனகாமல் இருக்கும் பொருட்டுச் சட்டை விளிம்பைப் பற்களால் இறுகக் கடித்துக் கொண்டிருந்தான். காளையை விரட்டி விட்டு ஆட்கள் கலவரத்துடன் பையனைச் சூழ்ந்தார்கள். ஒருவர் அவனைத் தூக்கப் போனார். ஆனால் அப்துல்லா வலியால் வீரிட்டான்:

''கை.. கை!..'' அவனுடைய உதட்டோரத்திலிருந்து அவ னுடைய மோவாயில் சிறு தாரையாக வழிந்தது இரத்தம்.

அதைக் கண்ட குல்நூர் பயந்து போய்க் கீச்சிட்டுக் கத்தினாள்.

''கீச்சிடாதே'' என்று அவளை அதட்டி நிறுத்தினான் அப்போது வந்து சேர்ந்த ஐதார்.

கூடி இருந்தவர்கள் நடந்ததைப் பரிவுடன் விவாதித்தார்கள். ஒவ்வொருவரும் தன் அனுதாபத்தைக் காட்டவும் யோசனை சொல்லவும் முயன்றார்கள். சிலர் காளையைச் சபித்தார்கள். வேறு சிலர் அதன் சொந்தக்காரனைத் திட்டினார்கள்.

''சொந்தக்காரன் எப்பேர்ப்பட்டவனோ அப்பேர்ப்பட்டதே அவனுடைய மாடு.''

''இந்தக் காளையின் சொந்தக்காரன் தானே பாம்பை விட மோசமானவன்.''

''சபாஷ், அப்துல்லா, இவன் அல்லவா வீரன், சின்னப் பெண்ணைக் காப்பாற்றினானே!''

''ஒரு காரணமும் இல்லாமல் பையனைக் குதறி விட்டதே...''

''வெட்டி வம்பு பேசிப் பயன் என்ன? ஏதாவது செய்ய வேண் டும்!''

''இருப்பது ஒரு வழி தான். சட்டென்று மருத்துவ மனைக்கு அனுப்ப வேண்டும்!''

''எதில் அனுப்புவதாம்? இப்போது ஊரில் ஒரு கார் கூட இல்லையே?''

''யஹும்பாயெவ், போய்க் குதிரையை வண்டியில் பூட்டு!''

யகூபும் ஐதாரும் தங்கள் தலைவனை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். யகூபின் முகத்தில் கண்ணீர் இடைவிடாமல் பெருகிக் கொண்டிருந்தது. ஐதார் நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டான். வீதி வழியே கவலை இல்லாமல் போய்க் கொண்டிருந்த வஜீர் கூட்டத்தில் புகுந்து, தரையில் விழுந்து கிடந்த அப்துல்லாவைப் பார்த்ததும் மெல்லிய குரலில் ''ஐயோ!'' என்றான்.

''என்ன நீங்கள் எல்லோரும் நட்டமாய் நின்று கொண்டிருக்கிறீர்கள்? இவனை மருத்துவ மனைக்கு எடுத்துப் போக வேண்டும்!'' என்று கோபாவேசத்துடன் கூடியிருந்தவர்களை அதட்டிவிட்டு, கூட்டத்தை இடித்து விலக்கிக் கொண்டு வீதியில் ஓடினான். ''குதிரை வேண்டும்! கார் வேண்டும்! இதோ எல்லாவற்றையும் தேடிப் பிடித்து விடுகிறேன்!''

ஆனால் ஷரீபுல்லா அதற்குள் அவனை முந்திக் கொண்டார். வீதி வழியே போய்க் கொண்டிருந்த ஒரு வண்டியை நிறுத்தி, வயதான வண்டிக்காரரைக் கூட்டத்தின் பக்கத்தில் கூட்டி வந்தார்.

''இதோ இந்தப் பையனைக் காளை காயப்படுத்தி விட்டது.''

''காளை... காளை... முட்டிவிட்டது.''

''மருத்துவ மனைக்குக் கொண்டு போக வேண்டும்'' என்று சுற்றும் இருந்தவர்கள் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு பேசலானார்கள்.

''பையன் தன் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தான். அப்போது சிவப்பு கவுன் போட்ட பெண்... காளை அவள் மேலே பாய்ந்ததே பார்க்க வேண்டும்...''

ஆனால் விவரங்களைக் கேட்டுக் கொண்டிருக்க வண்டிக்காரர் காத்திருக்கவில்லை.

''பையனை வண்டியில் ஏற்றுங்கள்'' என்று ஆணையிட்டார் அவர்.

கூட்டம் விலகி வழி விட்டது. அலை பாய்ந்தது. யாரோ மென்மையான தீனிப் புல்லை வண்டியில் பரிவுடன் பரப்பினர். ஷரீபுல்லா பையனைப் பதபாகமாகத் தூக்கி வண்டியில் படுக்க வைத்தார். முனகாமல் இருப்பதற்கு அப்துல்லா முழு மூச்சாக முயன்றான். சட்டை விளிம்பைப் பிடித்து அதை வாய்க்குள் திணித்துக் கொண்டான். ஆனால் அவனுடைய கண்களின் அடியில் இருந்த கரு நிழல்களும் இரத்தம் அற்று வெளிறிய முகமும் முறையிடும் முனகலை விடத் தெளிவாக அவனுடைய வேதனையைக் காட்டின...

தோழர்கள் வண்டியை ஒட்டி நெருக்கமாக நின்று கொண்டு அச்சத்துடனும் எதிர்பார்ப்புடனும் தங்கள் தலைவனை நோக்கினர்கள். அவன் அழைத்ததுமே அவனிடம் பாய்ந்து போய் உதவவும் அவனுடைய துன்பத்தைத் தாங்கள் ஏற்றுக் கொள்ளவும் அவர்கள் தயாராய் இருந்தார்கள்.

''நல்லது, புறப்பட நேரமாகி விட்டது. பையனோடு யார் வருகிறார்கள்?'' என்று கேட்டார் வண்டிக்காரர்.

''நாங்கள்... நாங்கள் வருகிறோம்! இவன் எங்கள் கூட்டாளி! என்று பரிதாபமாகக் கெஞ்சினார்கள் சிறுவர்கள்.

ஆனால் அதற்குள் ஷரீபுல்லா வண்டிக்காரரின் பக்கத்தில் ஏறி உட்கார்ந்து விட்டார்.

''இவனுடைய பாட்டி வீட்டில் இல்லை... நான் இல்லா விட்டால் ஒருவேளை காரியம் நடக்காது. போவோம்!'' என்றார்.

வண்டி ஊரின் வழியாக மெதுவாக நகர்ந்தது. வெகு தூரம், இருபத்தைந்து கிலோமீட்டருக்கு அப்பால், குல்தபான் கிராமத்துக்குப் போக வேண்டி இருந்தது. வண்டி ஏரியின் மறு கரையை எச்சரிக்கையுடன் சுற்றிப் போய்க் கண்ணுக்கு மறைந்தது. ஆட்கள் கலைந்து போகத் தொடங்கினார்கள். மூன்று தோழர்கள் மட்டும் இன்னமும் நின்று, குல்தபான் கிராமத்துக்கு மலையின் வழியே இட்டுச் செல்லும் தொலை தூரச் சாலையைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். சற்று முன்பு அப்படி ஓடிச் சாடி, கணீர்க் குரலில் உத்தரவுகள் இட்டு, தங்களோடு ஏரிக்குச் சென்ற அப்துல்லா, இப்போது தானிய மூட்டைபோல வண்டித் தளத்தில் கிடக்கிறான்,

ஷரீபுல்லா தாமே அவனை எங்கோ தொலைவில் உள்ள மருத்துவ மனைக்கு எடுத்துப் போகிறார் என்பது அவர்களுக்கு அச்சம் தருவதாகவும் புரியாததாகவும் இருந்தது. பையன்கள் அப்துல்லா வீட்டு வாசல் அருகே நின்று, மலைகளில் மறைந்து விட்ட சாலையை நீண்ட நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

பூனை கவ்விச் சென்று விட்ட குருவியின் குஞ்சுகள் போலக் காணப்பட்டார்கள் அவர்கள்.



கடிதம்

அப்துல்லா எடுத்துப் போகப்பட்ட பின் மீன் பிடிப்பதைப் பையன்கள் நிறுத்தி விட்டார்கள். ஆனால் வளர்ப்புக் கூடையில் இருந்த தங்கள் மீன்களை நாள்தோறும் போய்ப் பார்த்து அவற்றுக்கு இரை போட்டு வந்தார்கள்.

நாட்கள் கழிந்தன. ஊரில் எல்லாம் முன்போலவே இருந்து வந்தது. ஒரே வேறுபாடு, பழுப்புக் காளையை அதன் சொந்தக்காரர் இறைச்சிக்காக வெட்டி விட்டார் என்பதுதான். சொந்தக்காரர் தாமாக வெட்டியிருக்க மாட்டார். ஆனால் மக்கள் கூச்சல் கிளப்பினார்கள்.

''நீ வெட்டா விட்டால் உன்னிடமிருந்து காலை பறித்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுப்போம், உன் மேல் வழக்கு தொடுப்போம்'' என்ருர்கள்.

இந்த நேரத்தில் குறிப்பிடத் தக்க இன்னொரு நிகழ்ச்சியும் நடந்தது. தங்கை குல்நூருக்குக் கொடுத்த வாக்கை ஐதார் காப் பாற்றி விட்டான். கால்நடைப் பண்ணை முகட்டறையில் ஒரு குருவிக் கூட்டைக் கண்டு, இரண்டு குருவிக் குஞ்சுகளைத் தங்கைக்குப் பிடித்துக் கொடுத்தான் ஐதார். குல்நூர் அவை வானம்பாடிகள் என்று எளிதில் நம்பி விட்டாள். ஆனுல் பறவைகளுக்காகத் தமை யன் கூண்டு தயாரித்து முடிப்பதற்குள் தங்கை அவைகளைப் போக விட்டு விட்டாள்.

வஜீருக்கும் புதுமை நிகழ்ந்தது, அல்லது சரியாய்ச் சொன் ஞல் புதிய உடை கிடைத்தது. தாயார் அவனுக்கு மஞ்சள் சாட் டின் சட்டை தைத்தாள். ஆனுலும் அவன் அதைப் போட்டுக் கொள்ளவில்லை. சபாந்துாய் விழாவில் தான் போட்டுக் கொள் வேன் என்றுவிட்டான்.

யகூபின் பழைய காயங்களும் முழைப்புக்களும் ஆறி விட் டன, ஆனுல் புதியவை சேர்ந்து கொண்டன. தன் ''எடுத்துக்காட் டான'' தன்மையைப் போக்கிக் கொள்ள அவன் இன்னமும் இடை விடாமல் கடு முயற்சி செய்து வந்தான். ஊரிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் யகூப் ஏருத மரமோ மலைப் பாறையோ ஒன்று கூட இல்லை. அவன் தாண்டாத பள்ளமோ அகழோ ஒன்று கூட இல்லை. அவனுடைய தாய் கூட இதற்கெல்லாம் நாளடைவில் பழகிப் போய் விட்டாள்.

அப்துல்லாவுக்கு நேர்ந்த விபத்து பற்றிய செய்தி அவனுடைய தாயார் வேலை செய்து கொண்டிருந்த கோடைகால மேய்ச்சல் தரைக்கு எட்டி விட்டது. மறு நாளே மகனை எண்ணி அழுது துடித்தவாறு அவள் ஊருக்குக் குதிரை ஏறிப் பாய்ந்து வந்தாள். குதிரைச் சேணத்தைக் கழற்ருமல் உடனே குல்தபானுக்கு விரைந் தாள். அப்துல்லாவின் கிழப் பாட்டி தவிர ஊரில் வேறு யாருமே அவளைப் பார்க்கவில்லை. பாட்டியோ, ஓயாமல் அழுது கண்ணீர்

பெருக்கிக் கொண்டிருந்தாள். மருத்துவ மனையில் மகன் உயிரோடு இருப்பதைக் கண்ட பிறகுதான் தாய் ஓரளவு நிம்மதி அடைந்தாள். அப்துல்லாவின் இரண்டு விலா எலும்புகளும் இடது கையும் முறிந்திருந்தன.

''இளம் எலும்புகள் விரைவில் இணைந்து விடும்'' என்று சொன்ன மருத்துவர் அப்துல்லாவை அதே கையோடு புகழ்ந்தார்: ''பொறுமைசாலி, தாங்கும் திறன் உள்ள பையன் உங்கள் மகன். பெரியவன் ஆனதும் உண்மையான ஜிகித்தாக விளங்குவான்.''

தாயார் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு பெருமையுடன் எண்ணமிட்டாள்: ''தகப்பனே அச்சு! துணிவும் வீரமும் உள்ளவன்... சும்மா யோசித்துக் கொண்டிராமல் காளை மேல் பாய்ந்து பெண்ணைக் காப்பாற்றி விட்டானே!''

மகனுடைய துணிவு தாய்க்கும் தொற்றிக் கொண்டது. அப்துல்லாவைப் பிரிந்த போது அவள் அழவில்லை. மேய்ச்சல் தரையில் தன் தோழர்களுக்கு மகனைப் பற்றி விவரித்து, ''தகப்பனுரைக் கொண்டிருக்கிறுன் என் மகன்...'' என்று பெருமை அடித்துக் கொண்டாள்.

ஊரில் அப்துல்லாவின் பெயரைப் பெரியவர்களும் குழந்தைகளும் இந்த நாட்களில் மறுபடி மறுபடி சொல்லிக் கொண்டிருந்தார்கள். குல்நூரின் தாயார் வீடு வீடாகப் போய், கண்ணீருடன் சொன்னுள்:

''இந்தப் பையனுக்கு நாங்கள் தலைமுறை தலைமுறையாகக் கடன்பட்டிருப்போம். அப்துல்லா இல்லா விட்டால் என் மகள் பிழைத்திருக்க மாட்டாள்.''

பையன் மருத்துவ மனையிலிருந்து திரும்பி வந்ததும் மிக மிகச் சுவையுள்ள தின்பண்டங்கள் தயாரித்து உபசரிப்பதற்காக முட்டைகளும் வெண்ணெயும் இப்போதே திரட்டி வந்தாள் அவள்.

எல்லா விதச் சங்கடங்களையும் துன்பதுயரங்களையும் மௌனமாகத் தாங்கிக் கொள்ளப் பழகி இருந்த நகிமா பாட்டி நெஞ்சைக் கல்லாக்கிக் கொண்டாள், தன் வருத்தத்தை மற்றவர்

களுக்குக் காட்டவில்லை. ஆனால் தனியாய் இருந்த நேரங்களில் தேம்பித் தேம்பி அழுது துடித்தாள்:

''அப்துல்லாவைக் கொண்டு போய் விட்டார்கள். பாவம், அவன் அங்கே எப்படி வதைபடுகிறானோ! ஒரே பேரனை நான் இழந்து விடுவேனா என்ன? எனக்கு உள்ள ஒரே ஆனந்தம் அவன் தானே.''

ஆனால் ஒன்று. நகிமா பாட்டி என்னதான் துடித்தாலும் அழுதாலும், வியாழக் கிழமைதோறும் தன் மகன் முகம்மதின் பதக்கத்தை வழக்கம் போலத் துடைத்துத் துப்புரவாக்க அவள் மறக்கவில்லை.

பத்து நாட்களுக்குப் பின் நகிமா பாட்டிக்கு அப்துல்லாவிட மிருந்து கடிதம் வந்தது. அவளுக்குப் படிக்கத் தெரியாது என்றா லும் ஆவலை அடக்க மாட்டாமல் உறையைச் சாக்கிரதையாகப் பிரித்து, கடிதத்தை எடுத்து, பேரனின் ஒழுங்கற்ற கையெழுத்தை வெளிச்சத்தில் நெடு நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு தான் அப்துல்லாவின் மூன்று நண்பர்களையும் கடிதத்தைப் படிப் பதற்காக அழைத்தாள். அவர்களுக்குள் யகூப் நிரம்ப நன்றாகப் படிப்பவன் என்று மதிக்கப்பட்டான். கேட்பவர்கள் அமரிக்கை யாகவும் அமைதியாகவும் பலகைக் கட்டில்களில் உட்கார்ந்தார் கள். கடிதத்தை நின்ற வண்ணம் படிக்க யகூப் தீர்மானித்தான். பெருமிதத்தைக் காட்டுவதற்காக இருமிவிட்டு, கம்பீரமான குரலில் படிக்கத் தொடங்கினான்:

''வணக்கத்தை அனுப்புகிறேன், விடையை அனுப்பு.

''அன்பார்ந்த, ஆழ்ந்த மரியாதைக்கு உரிய பாட்டீ! இது வரை நான் உனக்கு எதனால் எழுதவில்லை என்று நீ கேட்பாய். பதில் சொல்லுகிறேன். என்னுடைய இரண்டு விலா எலும்புகளும் இடது கையும் முறிந்திருப்பதாகத் தெரிய வந்தது. போதாக் குறைக்கு மூன்று நாட்கள் நான் படுக்கையில் கிடந்து இரத்தம் கக்கிக் கொண்டிருந்தேன்—என்னுடைய கல்லீரலும் மண்ணீரலும் இடத்தை விட்டு

நகர்ந்து தொண்டைக் குழிக்குப் பக்கத்தில் போய்விட்டன போல் இருக்கிறது. இப்போது அவை மறுபடி தங்கள் இடங் களுக்குத் திரும்பி நகர்ந்து விட்டன. மருத்துவர் என்னைக் கட்டிலில் கிடத்தி, அன்றாடத் தேவைகளுக்குக் கூட எழுந் திருக்க விடவில்லை. வெட்கத்தால் எனக்கு எங்கே புதைந்து கொள்வது என்று தெரியவில்லை. என் இடது கையின் மேல் அப்பப்பட்ட வெள்ளைக் களி மண் உடனே உலர்ந்து விட் டது. கையைத் தூக்கிப் பார்த்தேன். அது மிகவும் கனமாக இருந்தது. இப்போது கையில் வலி இல்லை. ஆனால் களிமண் ணுக்கு அடியில் கடுமையாக அரிக்கிறது. மூச்சு விடும்போது இடது விலாவுக்கு அடியில் குத்து வலி எடுக்கிறது. வலித் தாலும் எனக்கு முன் போலச் சிரமமாக இல்லை. நான் எச் சரிக்கையாய் இருக்க முயல்கிறேன்.

''என் சட்டையையும் சராயையும் கழற்றி விட்டுப் பெரிய வெள்ளைச் சராயும் வெள்ளைச் சட்டையும் கொடுத் திருக்கிறார்கள். காயங்களுக்குக் கட்டுப் போடும் குறுகலான சல்லாத் துணியால் நர்ஸ் இந்தச் சராயை என் இடுப்பில் கட்டினாள். இங்கே மருத்துவ மனையில் ஒரே வெப்பம். சன் னல்கள் சல்லாத் திரையால் மூடப்பட்டிருக்கின்றன, ஈக்கள் வராமல் தடுப்பதற்காக. ஆனாலும் ஈக்கள் வந்து கொண்டு தான் இருக்கின்றன. சாப்பாட்டுக்குப் பிறகு இங்கே இனிப் பான வெந்த பழச் சாறு தருகிறார்கள். ருஷ்யனில் அதற்குப் பெயர் கம்போத். இது நிரம்ப ருசியானது.''

இந்தக் கடைசிச் சொற்களைப் படிக்கையில் யகூப் தன்னை அறியாமலே நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண் டான்.

''பாட்டீ, இங்கே டாக்டர்கள் நிரம்ப நல்லவர்கள். தலைமை மருத்துவர் வார்டுக்குள் வரும் போதெல்லாம் புன்னகை செய்கிறார், என்னோடு அன்புடன் பேசுகிறார்.

என் பங்கைச் சாப்பிடாமல் வைத்திருப்பதாக எண்ணுதே, தயவு செய்து. அதிகப்படியாக மிஞ்சினவை இவை.

''என் கடிதத்தின் முடிவில் வேண்டிக் கொள்கிறேன்: உறவுகாரர்களுக்கும் நண்பர்களுக்கும் என் வணக்கத்தைத் தெரிவி. உனக்கும் அம்மாவுக்கும் வணக்கம். இன்னும் வஜீருக்கும் ஐதாருக்கும் யகூபுக்கும் தனிப்பட்ட வணக்கம். இனி மேல் எனக்காகக் கவலைப்படாதே பாட்டீ. 'வீரர்களுக்குக் காயங்கள் படாமல் இருக்காது' என்று டாக்டர் சொன்னுர்.

''இதோடு என் கடிதத்தை முடிக்கிறேன். பெறுபவள் பாட்டி. அனுப்புபவன் அப்துல்லா. 9 ஜூலை, 1950ம் ஆண்டு.''

கடிதத்தைப் படிக்கக் கேட்ட பிறகு நகிமா பாட்டி வெற்று உறையை யகூபிடம் நீட்டினுள்.

''பாரேன், மகனே. இந்தக் காகிதத்தின் மறுபக்கம் ஏதோ எழுதி இருப்பது போலத் தெரிகிறதே?'' என்ருள்.

உறையின் மறு பக்கத்தில் இந்தச் சொற்கள் எழுதப்படிருந்தன:

''பசையைக் குடித்த மாமாதான் இந்தக் கவரை எனக்குக் கொடுத்தார். தபால் தலை உறையிலேயே ஒட்டப்பட்டிருந்தது.''

கடிதத்தைப் படிக்கக் கேட்ட போது நகிமா பாட்டி பேரனுடைய பன்னிரண்டு ஆண்டு வாழ்க்கை முழுவதையும் எண்ணிப் பார்த்தாள். அவன் எப்போது நிற்பான், எப்போது முதல் அடி எடுத்து வைப்பான் என்று சற்று முன்புதான் அவள் நினைத்தது போலத் தோன்றியது. அப்புறம் அவன் எப்போதுதான் பேசத் தொடங்குவானே என்றும், பிறகு அவன் பள்ளிக்கூடம் போவதையும் எதிர்பார்த்தாள்... இப்போதோ, இவ்வளவு தொலைவிலிருந்து, குல்தபான் கிராமத்திலிருந்து பேரன் இவ்வளவு நல்ல கடிதத்தை அவளுக்கு எழுதி இருந்தான்.

அப்துல்லா தானே எழுதிய முதல் கடிதம் இதுதான்.



பதில்

தாமதம் செய்யாமல் பதில் எழுதத் தீர்மானித்தார்கள். முதல் காரியமாக நகிமா பாட்டி ஐதாரிடம் பணம் கொடுத்து உறையும் தபால் தலையும் வாங்கி வரும்படி அஞ்சலகத்துக்கு அனுப்பினுள். அப்துல்லாவின் முழுதும் எழுதப்படாத நோட்டுப் புத்தகத்திலிருந்து வெற்றுக் காகிதம் கிழித்து எடுத்துக் கொண்டாள். ஆனுல் வீட்டில் பேனுக் களோ மையோ இல்லை. தலைவன் சாமான்களைப் பத்திரமாகப் பேணும் வழக்கம் இல்லாதவன். யகூப்தான் வீட்டுக்கு ஓடிப் போய்ப் பென்சில் எடுத்து வந்தான்.

எல்லாவற்றிலும் அழகான கையெழுத்து வஜீருடையது என்று மதிக்கப்பட்டது. ஆகவே அவன்தான் கடிதம் எழுதினுன். அவன்

இந்தக் கடிதத்தைச் சொந்தமாக இட்டுக்கட்டவில்லைதான். நகிமா பாட்டி கண்டிப்பான வரிசையில் சொல்லி வந்ததைத் தான் எழுதினுன்.

'' 'பெரு மதிப்புக்குரிய, என் அன்புள்ள பேரன் அப்துல்லா...' எழுதினுயா?'' என்று கேட்டாள் பாட்டி.

வஜீர் பின் மண்டையைச் சொறிந்தான்.

''எழுதுவது என்னவோ எழுதி விட்டேன். ஆனுல் 'பெரு மதிப்புக்குரிய' தேவைதானு?''

''தேவைதான். இந்தச் சொல் இல்லாமல் கடிதத்தைத் தொடங்கக் கூடாது. கடிதம் பாங்காக அமையாது. தவிர நீ ரொம்பத்தானே குறுக்குக் கேள்விகள் கேட்காதே. சொல்லுவதை எழுது. மறுபடி ஆரம்பத்திலிருந்து சொல்லுகிறேன்!''

''பெரு மதிப்புக்குரிய என் அன்புள்ள பேரன் அப்துல்லா!

தன் உளமார்ந்த சொற்களை உன்னிடம் சொல்லுவதற்கு முன்னுல் உனக்கு வணக்கமும் அன்பு கனிந்த முகமன்களும் அனுப்புகிருள் உன் பாட்டி. நீ ஆஸ்பத்திரியில் கிடக்கும் குல்தபான் கிராமத்தின் திசையிலிருந்து கண்களை எடுக்காமல், நீ விரைவில் திரும்புவதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள் அவள். உரால் ஆற்றின் கரையில் உள்ள கோடை. கால மேய்ச்சல் தரையில் இப்போது வேலை செய்து கொண்டிருக்கும் உன் தாயாரும் உனக்கு முகமன் தெரிவிக்கிருள். பகலும் இரவும் உன்னைப் பற்றிய எண்ணங்களே அவளுடைய நிம்மதியைக் குலைக்கின்றன. இன்னும் உனக்கு வணக்கமும் வாழ்த்தும் தெரிவிக்கிருள் யம்லெகூல் பாட்டி. உன் தகப்பனுர் பிறந்த போதும், தாயார் பிறந்த போதும் மருத்துவச்சியாக இருந்தவள் அவள். தன் வீட்டிலும் ஊர் முழுவதிலும் மதித்துப் போற்றப்படுகிருள் அவள். உன் தாத்தாவுக்கு வேட்டைத் தோழராய் இருந்த அல்லாபெர்தீ தாத்தாவின் குடும்பத்தார் உனக்கு முகமன் தெரிவிக்கிருர்கள். ஷரீபுல்லாவும் உனக்கு வணக்கமும் முகமனும் தெரிவிக்

ஞர். தம்முடைய பொன்னுன நேரத்தைப் பொருட்படுத்தாமல், உன்னைப் பற்றிக் கவலை எடுத்துக் கொள்ளவும் உனக்காகப் பாடுபடவும் தயங்காமல், தமது நரை முடியால் காரியத்துக்கு மதிப்பு ஏற்படுத்தி, உன்னை மருத்துவ மனைக்கு எடுத்துப் போய், நேரே டாக்டரின் கைகளில் ஒப்படைத்தவர் அவர்தான். உன் தகப்பனுருடைய சிறந்த நண்பர், நொண்டி சாகிப்கரேய் உனக்கு வணக்கமும் வாழ்த்தும் தெரிவிக்கிருர். இப்போது அவர் கூட்டுப்பண்ணை அலுவலகத்தில் கணக்கராக வேலை பார்க்கிருர். நம்முடைய எல்லா அண்டை அயலாரும் உனக்கு முகமன் தெரிவிக்கிருர்கள். நம் குடும்பத்தின் நலம் அவர்களைப் பொறுத்திருக்கிறது. இத்துடன் எல்லா வணக்கங்கள் முகமன்களையும் முடிக்கிறேன்.''

''எங்களுடைய முகமன்களோ?'' என்று கேட்டான் யகூப்.

தன் கவனமின்மையைப் புரிந்து கொண்ட நகிமா பாட்டி, தவறைத் திருத்திக் கொள்ள விரைந்தாள்.

'' 'முடிக்கிறேன்' என்ற சொல்லுக்கு முன்ஞல் எழுது: 'உன் சம வயதினரான வஜீர், யகூப், ஐதார் ஆகியவர்கள் உனக்குப் பெரிய வணக்கமும் வாழ்த்துக்களும் தெரிவிக்கிருர்கள். அவர்களோடு கூடவே நீ வளர்ந்தாய், விளையாடி மகிழ்ந்தாய். இத்துடன் வணக்கங்களை முடிக்கிறேன்...' ''

''என் அருமைப் பேரா அப்துல்லா! தங்கத்தை விட மதிப்புள்ளதும் பட்டைக் காட்டிலும் அழகுள்ளதுமான உன் கடிதம் 1950ம் ஆண்டு ஜூலை மாதம் பன்னிரண்டாம் தேதி நடுப் பகலில் எங்களுக்குக் கிடைத்தது. முதல் வரியிலிருந்து கடைசி வரி வரையில் பல தடவைகள் அது படிக்கப்பட்டது. உன் தோழர்கள் ஐதார், யகூப், வஜீர் ஆகியவர்களும் நானும் ஒன்ருக அதைப் படித்தோம். மதிப்பிட முடியாத உன் எலும்புகள் எப்படி வலிக்கின்றன என்பதை உணர்ந்து என் நெஞ்சு வேதனைப் பட்டது வீண் அல்ல என்று தெரிகிறது. ஆனுல் என்ன செய்வது? எல்லாம் நல்லபடி முடியட்டும், போதும்.

கள்ளம் கபடம் இல்லாத ஒரு குழந்தையின் உயிரைக் காப் பாற்றினதால் எத்தனை பேரைக் கொடும் துயரத்திலிருந்து நீ தப்புவித்திருக்கிருய்! அந்தப் பாழும் காளை உன் கண்ணெதிரே குழந்தையைக் கொன்றிருந்தால், வாழ்நாள் முழுவதும் உன் நெஞ்சு அமைதி அடையாது. நாம் கோழை, நமக்குத் துணிச்சல் போதவில்லை என்று நீ உன்னையே பழித்துக் கொண்டிருப்பாய். துயரத்தால் உன் நெஞ்சு தவித்திருக்கும். நெஞ்சின் துன்பம் உடம்பின் வேதனையைக் காட்டிலும் எவ்வளவோ பயங்கரமானது. ஏனென்ருல் உடம்பின் நோய் தீர்ந்து விடும். மனச்சான்றின் உறுத்தலும் உள்ளத்தின் வேதனையும் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். இப்போது நீ நிம்மதியுடன் படுத்திரு, உன் டாக்டர்கள் சொற்படி நட. உடம்பு சரி ஆனதும் தொலைபேசிக் கம்பி மூலம் எங்களுக்கு உடனே தகவல் தெரிவி. பழங் காலத்தில் ஆளுநர்களை மட்டுமே ஏற்றிச் சென்ற சாதிப் புரவிகள் போன்று வேகமாக ஓடும் குதிரையை வண்டியில் பூட்டி உனக்காக அனுப்புவதாகக் கூட்டுப் பண்ணைத் தலைவரே சொன்ஞர்.

''கையில் அரிப்பு எடுப்பதாக எழுதுகிருய். ஒருவேளை அதை ஆவியில் காட்டி பிர்ச் மிலாருல் அடித்துச் சூடுபடுத்த வேண்டும் போல் இருக்கிறது. குளியறையில் நீராவிக் குளியலுக்கு எற்பாடு செய்யும்படி உன் டாக்டரிடம் சொல்லு. ஆவி மட்டுமீறிச் சூடு ஆகாமல் மட்டும் பார்த்துக் கொள்ள வேண்டும். நீ எனக்காகத் தின்பண்டங்கள் சேமித்து வைத்திருப்பதற்கு நன்றி. உன் சொற்கள் எந்தத் தின்பண்டங்களையும் விட அதிக இனிமையாக இருந்தன. உனக்கு நிரம்பச் சலிப்பாய் இருக்கும் போது இந்தத் தின்பண்டங்களைப் பாட்டி அனுப்பியவையாக நினைத்து நீயே தின்னு. பாத்திரம் நிறையப் பாலாடையும் பத்து முட்டைகளும் உனக்கு அனுப்பலாம் என்று பார்த்தேன். ஆனுல் கூட்டுப்பண்ணைத் தலைவர் தவுலியேத் வேண்டாம் என்று விட்டார். மருத்துவ மனையில் திருப்தியாகச் சாப்பாடு போடுகிருர்கள் என்ருர்.

''நம்முடைய பண்ணை, கால்நடைகளும் கோழிகளும் வாத்துக்களும் நன்றாய் இருக்கின்றன என்ற தகவல் உனக்குத் தெரியட்டும். கோழிகள் முட்டை இடுகின்றன. கறுப்பு வெள்ளைக் கோழி முட்டைகள் இட்டுப் பன்னிரண்டு குஞ்சுகள் பொரித்திருக்கிறது. பசுவும் அதிகப் பால் தருகிறது. யம்லெகூல் பாட்டியும் நானும் சில நாட்களுக்கு முன்னால் கொஞ்சம் காற்றாட உலாவவும் வயல்களைச் சுற்றிப் பார்க்கவும் முடிவு செய்தோம். வயல்களில் கோதுமைப் பயிர் செழிப்பாக நன்றாக வளர்கிறது. எல்லாம் அமைதியாக, நலமாக இருக்கிறது. கீழ் வீதி அமீர்கானின் குளியறை தான் தீப்பிடித்து எரிந்து போய் விட்டது. உன் வரவை எதிர்பார்க்கிறோம். உயிரோடு விரைவில் நலமாகத் திரும்பி வா. நான் ஓயாமல் எண்ணமிட்டு, நீ திரும்பியதும் உன் தகப்பனுடைய பதக்கத்தை நாள் பூராவும் மாட்டிக் கொள்ளக் கொடுப்பதாக முடிவு செய்திருக்கிறேன். அதை மார்பில் குத்திக் கொள். பேரப் பிள்ளை, நீ செய்திருக்கும் அருமையான காரியத்துக்கு, தகப்பனுடைய பதக்கத்தை மாட்டிக்கொள்ள உனக்கு முழு உரிமை உண்டு, அதுவும் ஒரு நாள் மட்டும் அல்ல.

''நீ குல்நூரைப் பற்றிக் கேட்டிருக்கிறாய். அவள் நலமாய் இருக்கிறாள். பட்சி நாக்கு போலக் குட்டையான என் கடிதத்தை முடிக்கும் போது, வாழ்க்கையில் ஒளியுள்ள பாதைகள் உனக்குக் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

உன் பாட்டி".

இதன் பின் நகிமா பாட்டி அப்பாடா என்று பெருமூச்சு விட்டு, வஜீருக்குச் சைகை செய்தாள்:

''கடிதத்தை மடி.''

''எப்படி? மீன்களைப் பற்றியோ?'' என்று கூவினார்கள் சிறுவர்கள்.

''அது என்ன மீன்கள்? முன்பே கேட்க நினைத்தேன், மறந்து விட்டேன்.''

பையன்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''ஆனால் இது இரகசியம், பாட்டீ.''

''இரகசியம் என்றால் நீங்களாக யோசித்து, தோன்றுவதை எழுதுங்கள்! உங்கள் இரகசியங்களுக்கும் மர்மங்களுக்கும் முடிவே இராதே!''

பையன்கள் வஜீருக்குக் கண் சாடை செய்தார்கள். அவன் சுருக்கமாகப் பின் குறிப்பு எழுதினான்:

''அப்துல்லா, மீன்களைப் பற்றிக் கவலைப்படாதே. அவை சேதம் இல்லாமல் பத்திரமாய் இருக்கின்றன. விரைவில் திரும்பிவா.

''இந்தக் கடிதத்தைச் சொல்லி எழுதுவித்தாள் உன் பாட்டி, எழுதினான் வஜீர்.''

உறையின் மேல் அழகான அச்சு எழுத்துக்களால் முகவரி எழுதி, "**பெறுபவர் அப்துல்லா யுலமானவ்**" என்ற சொற்களுக்கு அடிக்கோடு இட்டான்.

''கொடுங்கள் பாட்டீ, நான் சட்டென்று ஓடிப் போய், கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டு விட்டு வருகிறேன்'' என்றான் யகூப்.

''நன்றி, என் குழந்தைகளே. நானே போகும் வழியில் போட்டுக் கொள்கிறேன். எப்படியும் நான் அந்தப் பக்கம் போக வேண்டும்'' என்று சொன்ன நகிமா பாட்டி அடுப்பின் பின்னே இருந்த கூடையிலிருந்து ஆறு முட்டைகள் எடுத்துத் தலைக்கு இரண்டு வீதம் பையன்களுக்குக் கொடுத்தாள்.

பையன்களுக்கு வாங்கிக் கொள்ள விருப்பம் இல்லை, ஆனாலும் மறுக்கத் தயங்கினார்கள். ஏனென்றால் தான் உபசாரத்துக்கு மேற்பட்டவன் என்று காட்டிக் கொள்வது கூடாது. இந்த வழக்கத்தை மீறுவது பொருந்தாத மண்டைக்கனம் என்று தங்கக் கழுகு ஊரில் கருதப்படும்.

''யகூப், கொஞ்ச நேரம் பொறுத்து நீ வந்து அப்துல்லாவின் கடிதத்தை எனக்கு இன்னொரு தடவை படித்துக் காட்டேன்''

என்று பையன்களை வழி அனுப்பிய போது நகிமா பாட்டி சொன்னாள்.

பையன்கள் போனதும் தன்னுடைய நீளமான பல நிற உடையையும் பச்சை வெல்வெட் மார்புச் சட்டையையும் பெட்டியிலிருந்து எடுத்தாள். இந்தப் பகட்டான உடையை அணிந்து, புதிய காச்மீரத் தலைக் குட்டையைக் கட்டிக் கொண்டாள். நகிமா பாட்டிக்கு எங்கும் போக வேண்டி இருக்கவில்லை. பேரனுக்குக் கடிதத்தைத் தன் கையால் அனுப்ப அவள் ஆசைப் பட்டாள். இவ்வளவு முக்கியமான, மகிழ்ச்சி தரும் காரியத்திற்காகவே அவள் தன் விழா நாள் உடையைப் போட்டுக் கொண்டாள்.

பொழுது போக்குக் கழகம் வரை போனதும் கதவின் இடது பக்கத்தில் தபால் பெட்டியைக் கண்டாள். ஆனால் இந்த அஞ்சல் நிலையக்காரர்கள் தாம் எவ்வளவு அசட்டை பாராட்டுகிற ஆட்கள்! தபால் பெட்டி மேல் கனத்த புழுதிப் படலம் படிந்திருந்தது. அந்தப் புழுதியை ஊதிப் போக்க நகிமா பாட்டி முதலில் முயன்றாள். ஆனால் அது பலிக்காததைக் கண்டு மார்புச் சட்டைப் பையிலிருந்து கைக்குட்டையை எடுத்து, தபால் பெட்டி முழுவதையும் அவசரப்படாமல் கவனமாகத் துடைத்தாள். பிறகுதான், சிறு இடுக்கைத் திறந்து விலை உயர்ந்த கடிதத்தை அதற்குள் போட்டாள்.

காரியம் முடிந்த பிறகும் நகிமா பாட்டிக்குப் போக மனம் வரவில்லை. தபால் பெட்டியைப் பார்த்தவாறு இன்னும் சிறிது நேரம் நின்றாள், அன்பு ததும்பிய முதிய கரங்களால் அதை வருடினாள், பின்பு மெல்லெனக் கிசுகிசுத்தாள்:

''பறவைகளின் இறக்கைகள் என் கடிதத்தின் வழித் துணைவர்களாய் இருக்கட்டும்!''



சாலை

நன்றாகச் சிந்தனை செய்தால் எந்தப் பிரச்சினைக்கும் தீர்வு காண்பது எப்போதும் முடியும். ஒரு நாள் மாலையில் பையன்கள் தங்கள் பசுக்களை மேய்த்துக் கொண்டும் அண்மைக் காலத்தில் எப்போதும் செய்து வந்தது போல அப்துல்லாவைப் பற்றி நினைத்துப் பேசிக் கொண்டும் இருந்தபோது அவர்கள் எல்லோருடைய மூளைகளிலும் ஓர் அருமையான எண்ணம் திடீரென்று உதித்தது. அப்துல்லா மருத்துவ மனையிலிருந்து அனுப்பப்படும் வரை காத்திராமல், மறுநாளே அவனைப் போய்ப் பார்ப்பது என்பது அந்த எண்ணம்! இல்லாவிட்

டால் நடப்பது என்ன? ''முக்காலிக்'' குழுத் தலைவன் மருத்துவ மனையில் கிடக்கிறான். அவர்களோ, ஒன்றுமே நடக்காதது போல இங்கே வளைய வருகிறார்கள், ஓடுகிறார்கள், விளையாடுகிறார்கள்! என்ன மாதிரி நட்பு இது! சந்தேகம் இல்லாமல், அவர்கள் உடனே அப்துல்லாவிடம் போக வேண்டும்! இவ்வளவு சாதாரணமான எண்ணம் இதற்கு முன்னால் அவர்கள் மூளைகளில் உதிக்காதது ஏன்? வீடு திரும்பியதும், மறு நாளே அதி காலையில் தாங்கள் புறப்படப் போவதாக மூன்று பையன்களும் தங்கள் தாய்மாருக்குத் தெரிவித்தார்கள்.

அப்துல்லாவின் பெயரைக் கேட்டதும் தாய்மாரில் யாரும் தடை சொல்லவில்லை. குலியெமேஷ் அத்தை பிரமாதமான சிந்தனைகள் ஒன்றும் இல்லாமல் மகனை விட இசைந்தாள். ஐதாரின் தாயாரோ, மகிழ்ச்சி கூட அடைந்தாள்.

''வெகு நாள் முன்பே போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இங்கே வெட்டியாகச் சுற்றி வந்து கொண்டிருக்கிறீர்கள்'' என்று சொல்லி, தன் குடும்பத்தின் சொற்பப் பண்டங்களிலிருந்து முட்டைகளும் வெண்ணெயும் அப்துல்லாவுக்காக எடுத்துக் கொடுத்தாள்.

யகூபின் தாய் ஒரு பாத்திரம் நிறையத் தேனும் சில அடைகளும் கட்டித் தந்தாள். குர்பான்பிகா காட்டு முந்திரிப் பழப் பாகுக் கட்டி ஒன்றைக் கொடுத்தாள்.

''தேநீரோடு சேர்த்துச் சாப்பிடட்டும். கரு முந்திரிப் பழம் எலும்பு வலியைக் குறைக்கும்'' என்றாள்.

தலைவன் பொறுப்பை அப்போதைக்கு ஏற்றுக் கொண்டிருந்த ஐதார் முந்தின நாளே பல உத்தரவுகளைத் தன் தோழர்களுக்குக் கொடுத்திருந்தான். நிறைய உடைகள் உள்ளவனாக மதிக்கப்பட்ட யகூபிடம் இரண்டு சராய்களும் இரண்டு சட்டைகளும் போட்டுக் கொண்டு வரும்படிச் சொன்னான்.

''வெக்கையாய் இருக்குமே'' என்று மறுக்கப் பார்த்தான் அவன்.

''சரிதான். வெக்கை எலும்பை முறித்து விடாது.''

''ஆனால் எனக்கு எதற்கு இரண்டு சராய்களும் இரண்டு சட்டைகளும்?'' என்று விடாமல் கேட்டான் யகூப்.

''ஒருவேளை வேண்டி இருக்கலாம்'' என்று சுருக்கமாக விடை அளித்தான் ஐதார்.

இந்தத் தடவை வஜீரும் தனது மஞ்சள் சாட்டின் சட்டையைப் போட்டுக் கொள்ள வேண்டியதாயிற்று. அவ்வளவு தூரம், வேற்றுக் கிராமத்துக்கு, வெற்று உடம்பாகப் போவது அநாகரிகம் ஆகுமே.

சூரியனின் முதல் கிரணங்கள் வான விளிம்பில் பரவிய போதே மூன்று பையன்களும் சாமான் முடிச்சுக்களுடன் வழி நடக்கத் தொடங்கி விட்டார்கள். முதலில் அவர்கள் உற்சாகமாக நடந்தார்கள், மலைச் சரிவுகளில் ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு ஓடக் கூடச் செய்தார்கள். ஆனால் வெயில் ஏற ஏற நம் பயணிகளின் நடையும் தளர்ந்து கொண்டு போயிற்று. முடிவில் குளிர்ந்த மலை நீரோடையின் அருகே அவர்கள் நின்று தண்ணீர் குடித்தார்கள். ஆனால் தண்ணீர் உதவவில்லை, ஏனென்றால் அவர்களுக்குக் கடும் பசி எடுத்திருந்தது.

''வாருங்கள், நண்பர்களே, ஊட்டம் போடுவோம்'' என்று யோசனை சொன்னான் வஜீர்.

சரியான நேரத்தில் சொல்லப்பட்ட இந்த யோசனைக்கு யாரும் மறுப்பு தெரிவிக்கவில்லை.

பையன்கள் ஓடைக் கரையில் உட்கார்ந்து ஆர்வத்துடன் ''ஊட்டம் போடத்'' தொடங்கினார்கள். ஆனால் ஒரு நாளையச் சாப்பாடு முழுவதும் ஒரே வேளையில் எப்படித் தீர்ந்து போயிற்று என்பதை ஒருவரும் கவனிக்கவில்லை.

''பரவாயில்லை. ஒரு நாளைக்கு வேண்டிய சாப்பாடு நம் வயிறுகளிலேயே பத்திரமாக இருக்கட்டும்!'' என்றான் ஐதார்.

இன்னொரு தரம் ஆசை தீரத் தண்ணீர் குடித்து விட்டுப் பையன்கள் மறுபடி நடக்கலானார்கள். சாலை வெறிச்சோடிக் கிடந்தது. கார்களோ குதிரை வண்டிகளோ நம் பயணிகளை முந்தவில்லை. மலைகளையும் காட்டையும் கடந்து அவர்கள் ஸ்தெப்பி

வெளியில் போன நெடுஞ்சாலையை அடைந்தார்கள் குல்தபான் சந்தைக்குத் தகப்பனுருடன் சென்ற ஆண்டு இரண்டு தரம் வண்டியில் போய் வந்த வஜீர் பாதையை நன்ருகப் புரிந்து கொண்டான். அவர்கள் பாதி வழி கடந்து விட்ட போது முதலாவது லாரி அவர்களை எட்டிப் பிடித்தது. இணைப்பு வண்டி உள்ளது அது. நீளமான மரக் கட்டைகள், சங்கிலிகளால் இறுகக் கட்டப்பட்டு இணைப்பு வண்டியில் இருந்தன.

மூன்று பையன்களும் ஒரே நேரத்தில் கைகளை உயர்த்திஞர்கள். லாரி நின்றது. இளைஞுன காரோட்டி முன்னறைக் கதவைத் திறந்தான்.

''எங்கே போகிறீர்கள், ஜிகித்துக்களா?''

''குல்தபானுக்கு'' என்று ஒரே குரலில் சொன்ஞர்கள் பையன்கள்.

''குல்தபானில் உங்களுக்கு என்ன வேண்டும்?''

''எங்கள் தோழன் அங்கே மருத்துவ மனையில் கிடக்கிருன். அவனை மாடு முட்டிவிட்டது. பார்க்கப் போகிருேம். ஏற்றிக் கொள்ளுங்களேன், மாமா!''

''சுமை ரொம்பப் பாரம்'' என்று கிண்டல் செய்தான் காரோட்டி. ''நல்லது, காரால் இழுக்க முடியும் என்ருல் ஏற்றிப் போகிறேன்!''

''இழுக்க முடியும். சாலை சமமானது, நாங்களும் ரொம்ப லேசானவர்கள்'' என்று சொன்ஞன் யகூப்.

''என்ன செய்வது? நீங்கள் அவ்வளவு லேசானவர்கள் என்ருல், ஏறிக் கொள்ளுங்கள். ஆஞல் முன்னறையில் இரண்டு பேருக்குத்தான் இடம் இருக்கும். உங்களில் ஒருவன் மேலே ஏறிக் கொள்ள வேண்டி வரும்.''

''நாங்கள் எல்லாருமே மேலே ஏறிக் கொள்கிருேம், மாமா!''

''உங்கள் பாடு. ஆஞல் சாக்கிரதையாக இருங்கள், சேட்டை பண்ணுதீர்கள். இல்லாவிட்டால் விழுந்து விடுவீர்கள்! விபத்து உங்களை விடப் பெரியதாய் இருக்கும்!'' என்று கண்டிப்பாகக் கூறிஞன் காரோட்டி.

பையன்கள் லாரியின் பின் பகுதியில் ஒரு நொடியில் தொற்றிக் கொண்டார்கள். களைத்துப் புழுதி படிந்த அவர்களது முகங்கள் ரோஜா நிறம் ஆயின. அவர்களுடைய மனத்தில் உடனே உற்சாகம் பொங்கியது. ஸ்தெப்பிச் சாலை சமமாகவும் மென்மையாகவும் இருந்தது. லாரி தாலாட்டுவது போலப் போகிற போக்கில் மெதுவாக ஆடியது. இரண்டு பக்கங்களிலும் அடர்ந்த கோதுமைப் பயிர் தழைத்திருந்தது. மெல்லிய காற்று இளம் கதிர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தது. தொலைவில் நீலமாகக் காட்சி தந்தன மலைகள். தங்கக் கழுகு ஊர் கண்ணுக்குப் புலப்படாமல் மலைகளுக்கு நடுவில் மறைந்திருந்தது. மலைச் சரிவுகளில் உயரமான புகைப் படலங்கள் தூண்கள் போலக் கிளம்பின. கோடைகால மேய்ச்சல் தரைகளில் மேய்ப்பர்கள் மூட்டிய நெருப்புக்களிலிருந்து கிளம்பிற்று அந்தப் புகை. இவை எல்லாவற்றுக்கும் மேலே, எல்லா மலைச் சிகரங்களுக்கும் நடுவில் ஆக உயர்ந்த சிகரமாக எழுந்து நின்றது வெண்மையாகப் பளபளத்த கிரமேத்! பஷ்கீரியாவில் மலைகளின் அரசன் என்று கிரமேத் அழைக்கப்படுவது காரணத்தோடுதான்!

தங்களுக்குப் பழக்கம் இல்லாத புது இடங்களைச் சிறுவர்கள் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டு போனார்கள். உள்ளத்தில் பொங்கிய மகிழ்ச்சியால் ஐதார் தனக்குப் பிடித்த பாட்டைப் பாடத் தொடங்கினான்:

''துவண்ட கால்கள் வழங்கிடாமல்
சோர்ந்து விட்டாலும்,
தவழ்ந்தேனும் திரும்பிடுவேன்
தாயகத்துக்கே.''

பாட்டு எல்லாவற்றையும் மறக்க அடிக்கிறது. இப்போதும், தன் கையில் சாமான் முடிச்சு இருந்ததையும், பாட்டின் தாளத்துக்கு ஏற்ப இந்த முடிச்சை வீசி ஆட்டினால், லாரியின் பின்பகுதியைச் சேர்ந்த கடினமான ஏதேனும் ஒன்றில் அது அடிபட நேரமாகாது என்பதையும் ஐதார் மறந்து விட்டான். வெள்ளைத் துணியின் ஊடாக முட்டைகளின் மஞ்சட் கருக்கள் வெகு நேரமாகவே

கசிந்து கொண்டிருந்தன... அப்துல்லாவுக்குத் தின்னக் கொடுப்பதற்காக இருந்த முட்டைகள் மிக எளிதில் நொறுங்கக் கூடியவையாக இருந்தன போலும். ஆனால் ஐதாரோ அவனுடைய தோழர்களோ இதைக் கவனிக்கக் கூட இல்லை. வெயிலும் காற்றும் மஞ்சள் கறைகளை விரைவில் உலர்த்தி விட்டன. இந்தச் சிறு சம்பவம் இவ்வாறு முழுதும் இரகசியமாகவே இருந்து விட்டது. குல்தபானுக்குக் கொஞ்ச தூரத்தில் காரோட்டி லாரியை நிறுத்தினான்.

''நான் ஊருக்குள் நுழையாமல் நேரே போகிறேன். கொஞ்சம் முன்னாடி இறக்கி விடுவதற்காகக் கோபித்துக் கொள்ளாதேயுங்கள், பையன்களா'' என்று முன்னறையிலிருந்து தலையை வெளியே நீட்டிக் கூறினான். பின்பு புன்னகையுடன் சொன்னான்: ''பாட்டு நன்றாய் இருந்தது, நன்றி. எப்படி வந்து சேர்ந்தேன் என்று நான் கவனிக்கக் கூட இல்லை. உங்களில் யார் இவ்வளவு நன்றாகப் பாடுகிறவர்கள்?''

''இதோ இவன்!'' என்று ஐதாரை விரலால் குத்திப் பெருமையோடு சொன்னான் யகூப்.

''சபாஷ், தம்பீ!'' என்று மெச்சினான் காரோட்டி.

சிறுவர்கள் லாரியிலிருந்து குதித்தார்கள்.

''நன்றி, மாமா!''

''உங்களுக்கு நன்றி!'' என்று ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு காரோட்டிக்கு நன்றி தெரிவிக்கலானார்கள்.

அப்துல்லாவின் முடிச்சிலிருந்து இரண்டு முட்டைகளைக் காரோட்டிக்கு வழியில் தின்பதற்காகக் கொடுக்கலாம் என்று மனக் கனிவுடன் நினைத்தான் ஐதார், ஆனால் கூச்சப்பட்டான். ''ஒருவேளை வாங்கிக் கொள்ளாவிட்டால் வெட்கமாய் இருக்கும்'' என்று எண்ணி, முடிச்சை முதுகுக்குப் பின்னால் மறைத்துக் கொண்டு மறுபடி சொன்னான்:

''நன்றி, மாமா!''

''நன்றி சொல்லத் தேவை இல்லை. எனக்கே லாரி ஓட்டிப் போகக் குதூகலமாய் இருந்தது. விடை கொடுங்கள், தம்பிமாரே! பிரதான வீதியில் நேரே போங்கள். ஊரின் மறு கோடியில் இருக்

கிறது மருத்துவ மனை.'' இவ்வாறு சொல்லி, சிறுவர்களுக்குத் தலை அசைப்பால் வணக்கம் தெரிவித்து விட்டு மேலே சென்றான்.

மருத்துவ மனை கிட்டத்தில் தான் இருந்தது. ஊர் நடு வரை போனதும் பையன்கள் ஓடைக் கரையில் நின்று உடையிலிருந்த புழுதியைத் தட்டிப் போக்கி, நன்றாக உடம்பு கழுவிக் கொண்டார்கள். அவர்கள் போனது மாட்டுத் தொழுவத்துக்கு அல்ல, மருத்துவ மனைக்கு, அல்லவா? ஒவ்வொரு காரியத்திலும் அதற்கு ஏற்ற முறை உண்டே.

அகலமான வாசல் உள்ள மர வீட்டில் அமைந்திருந்தது மருத்துவமனை. வாசலில் வெள்ளை மேலங்கி அணிந்த ஒரு முதியவள் உட்கார்ந்திருந்தாள். மடியில் கம்பளி நூற்சுருளைப் போட்டுக் கொண்டு சால்வை பின்னிக் கொண்டிருந்தாள் அவள். முகப்பு வெளியில் சற்று தூரத்தில் தெரிந்தது இன்னொரு மர வீடு. அதன் பக்கத்தில் பெஞ்சியில் உட்கார்ந்திருந்த இள மாது குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். கிளைகள் அடர்ந்த தேவ தாரு மரத்தின் அடியில் புல் மேல் உட்கார்ந்திருந்தார்கள் இரண்டு ஆண்கள். முகப்பில் தூணுக்குத் தூண் கட்டி இருந்த கயிற்றில் துவைத்த உள்ளாடைகள் தொங்கிக் கொண்டிருந்தன. வாசலில் உட்கார்ந்திருந்த முதியவள், சால்வை பின்னுவதை நிறுத்தாமல், உலர்த்தியிருந்த துணிகளைச் சற்றைக்கு ஒரு தரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளிடமிருந்து அவைகளைக் காவல் காத்துக் கொண்டிருந்தாள் போலும்.

''அத்தை!'' என்று முதியவளை மரியாதையாக அழைத்தான் வஜீர். ''நாங்கள் எங்கள் தோழனைப் பார்க்க வந்திருக்கிறோம். அவன் பெயர் அப்துல்லா யுலமானவ்.''

''யுலமானவுக்கு உடம்பு குணமாகிக் கொண்டிருக்கிறது. நான் காவது வார்டில் தனியே படுத்திருக்கிறான் அவன். ஆனால் அவனிடம் இப்போது போகக் கூடாது. இது நோயாளிகள் ஓய்வு கொள்ளும் நேரம். இளைப்பாறிய பிறகு அவனே உங்களிடம் வருவான். எங்கள் ஒழுங்கு முறை அப்படி.''

இந்த ஒழுங்கு முறை பையன்களுக்கு அவ்வளவாகப் பிடிக்க

வில்லே. நோயாளிகளின் ஓய்வு நேரம் எப்பொழுதடா முடியும் என்று இங்கே உட்கார்ந்து காத்திருப்பதற்காகவா அவர்கள் இவ்வளவு நீண்ட பயணம் செய்தார்கள்?

''அருமை அத்தை, எங்களே விடுங்கள், நாங்கள் சத்தமே செய்யாமல், நுனிக் கால்களில் நடந்து வார்டுக்குள் போகிறோம்'' என்றான் யகூப்.

''நுனிக் கால்களிலும் கூடாது, குதிகால்களிலும் கூடாது! போங்கள், போங்கள்! அப்புறம் வாருங்கள்'' என்று தீர்மானமாகச் சொன்னாள் மாது.

''நாங்கள் ரொம்ப தூரத்திலிருந்து வந்திருக்கிறோம், அத்தை... தங்கக் கழுகு ஊரிலிருந்து வருகிறோம்!''

''கழுகு ஊரிலிருந்து வந்தால் என்ன. காக்கை ஊரிலிருந்து வந்தால் என்ன, வித்தியாசம் ஒன்றும் இல்லே. கூடாது என்றால் கூடாது தான்!''

பையன்கள் முகப்பிலிருந்து வெளியேறி, பெரிய பிர்ச் மரத்தின் நிழலில் படுத்துக் கொண்டார்கள்.

''உம், மோசம்! பகல் வீணாகிறதே'' என்றான் ஐதார்.

''நம்முடைய பாதை ஆக்கங்கெட்டது'' என்று பெருமூச்செறிந்தான் யகூப்.

''படுத்து முனகிக் கொண்டிருந்தால், எதிலும் ஆக்கம் இருக்காது. ஏதாவது திட்டமிட வேண்டும்'' என்று கூறினான் வஜீர்.

பையன்கள் ஒருவருக்கு ஒருவர் இன்னும் நெருங்கி வந்தார்கள், சதியாலோசனை செய்பவர்கள் போலக் கிசுகிசுத்தார்கள், ஏதோ பேசி முடிவு செய்து கொண்டார்கள், பின்பு மருத்துவமனை முகப்புக்கு மறுபடி போனார்கள். முதியவள் முன்போலவே வாசலில் உட்கார்ந்து அவசரமாகச் சால்வை பின்னுவதில் முனைந்திருந்தாள்.

''நேரம் ஆனாலும் நிரம்ப மெதுவாகக் கழிகிறது'' என்று சோம்பல் முறித்துக் கொண்டு சொன்னான் வஜீர். ''வேலே இல்லாமல் உட்கார்ந்திருந்து எங்களுக்குப் பழக்கம் கிடையாது... அத்தை, இங்கே உங்களிடம் ஏதாவது வேலே இருக்குமா? சும்மா

கொட்டாவி விடுவதைக் காட்டிலும் ஏதாவது செய்வது மேல் அல்லவா?''

''உழைக்க அஞ்சாதவனுக்கு வேலை எப்போதும் நிறையக் கிடைக்கும்'' என்று பின்னலிலிருந்து பார்வையை உயர்த்தாமல் பதில் சொன்னுள் முதியவள்.

''என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்லுங்கள். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து நொடியில் முடித்துக் கொடுப் போம்.''

''அதற்கென்ன,'' என்று திடீரென மென்மையாகக் கூறினுள் முதியவள். ''உங்களுக்குச் சோம்பலாய் இல்லாவிட்டால், அதோ துவைத்த துணிகள் வெகு நேரத்துக்கு முன்பே உலர்ந்து விட்டன. எனக்குப் பின்னலை முடிக்க அவசரம். நீங்கள் துணிகளை எடுத்துச் சவுக்கைக்குள் கொண்டு வைத்தீர்களானுல் உங்களுக்கு நன்றி சொல்லுவேன்...'' என்று புன்னகைத்தாள். ''பழமொழி தெரி யும் அல்லவா? ஒரு நன்றிச் சொல் ஆயிரம் விபத்துக்களைத் தவிர்க் கும்! உங்களுக்கு வேண்டும் போல் இருந்தால் இந்த வேலையைச் செய்யுங்கள். துணிகளை மட்டும் கீழே போடவோ கறைப்படுத் தவோ செய்யாதீர்கள்!''

''நாங்கள் சாக்கிரதையாய்ச் செய்வோம், அத்தை...''

பையன்கள் உடனே வேலையில் முனைந்தார்கள். கண்டிப்புள்ள அத்தைக்குத் திருப்தி உண்டாக்கும் விருப்பத்துடன் அவர்கள் துணிகளைக் கொடியிலிருந்து பதபாகமாகவும் கச்சிதமாகவும் எடுத்துச் சவுக்கையில் கொண்டு வைத்தார்கள்.

''நல்ல பிள்ளைகளும் இருக்கத்தான் செய்கிறுர்கள்'' என்று அவர்களைப் பார்த்து எண்ணமிட்டாள் முதியவள். ''என் மகன் தான் செய்ய வேண்டியதைக் கூடச் செய்ய மாட்டேன் என்கிறுன், முரண்டு அடிக்கிறுன். இந்தக் குழந்தைகளோ, தாங்களாகவே முன் வந்து உழைக்கின்றன!''

''நன்றி உங்களுக்கு! எவ்வளவு கவனம் உள்ள பிள்ளைகள் நீங்கள்!'' என்று கொடி காலியானதும் அவர்களை உரக்கப் பாராட் டினுள் மாது. ''நிரம்ப நன்றி, பிள்ளைகளா!''

''உங்கள் நன்றி எங்களுக்குக் கேட்டது, அத்தை. அது எங்களை ஒரு விபத்திலிருந்து காப்பாற்றட்டும், பார்ப்போம். தோழனைப் பார்க்கப் போவது எங்களுக்கு அவசியம்!'' என்முன் ஐதார்.

''அட தந்திரக்காரப் பையன்யன்களா! எனக்கு இது தோன்றவே இல்லையே!'' என்று வாய்விட்டுச் சிரித்தாள் முதியவள். ''ஆனால் உங்களை என்னதான் செய்வது? டாக்டர் பார்த்து விட்டால் நம் எல்லோருக்கும் கிடைக்கும் செம்மையாக!''

''கிடைக்குமோ கிடைக்காதோ. எங்களுக்கு அச்சமில்லை!''

''இல்லை, கூடாது. மூன்று பேரையும் என்னால் விடவே முடியாது...''

''அப்படியானால் இரண்டு பேரை மட்டும் விடுங்களேன். இதோ இவன்'' என்று வஜீரைக் காட்டி, ''முகப்பில் நின்று கொண்டிருப்பான்'' என்முன் ஐதார்.

''சரி போங்கள். ஆனால் ஒன்று. கப்சிப் என்று இருக்க வேண்டும், சத்தம் காட்டாமல்!'' மாது இங்குமங்கும் கண்ணோட்டி விட்டுக் கிசுகிசுத்தாள்: ''நாலாம் வார்டு. உள்ளே போனதும் வலது பக்கம் இரண்டாவது கதவு...''

ஐதாரும் யகூபும் நுனிக் கால்களில் நடந்து உள்ளே போய், ஓசைப்படுத்தாமல் இருக்க முயன்றவாறு கதவைச் சாத்திக் கொண்டார்கள்.

வஜீர் சால்வை பின்னிக் கொண்டிருந்தவளின் பக்கத்தில் வாசலில் உட்கார்ந்தான்.

''இவ்வளவு அழகான சால்வை யாருக்காகப் பின்னுகிறீர்கள்?'' என்று தந்திரமாகக் கேட்டான்.

''என் மகள் கேட்டாள். அவளுக்கு நேரம் இல்லை. கன்றுக் குட்டிகளை மேற்பார்க்கிருள், நாள் முழுவதும் வேலை நெரிகிறது'' என்று தாராளமாக விவரித்தாள் மாது.


''என்னுடைய தாயார் கோழிப் பண்ணையில் வேலை செய்கிருள்'' என்று முயற்சியுடன் பேச்சைத் தொடர்ந்தான் வஜீர்.

''அப்படியா. அவளுடைய கோழிகள் நன்றாய் முட்டைகள் இடுகின்றன, அல்லவா?''

''பிரமாதமாக! ஒன்றை ஒன்று மிஞ்சி விடுகின்றன! அவை இடும் முட்டைகளைப் பொறுக்கிச் சேர்ப்பதே பெரும் பாடாய் இருக்கிறது!'' என்று பெருமை அடித்துக் கொண்டான் வஜீர்.

''அடேயப்பா!'' என்று வியந்தாள் மாது.

அவள் பேசுவதில் மிகுந்த விருப்பம் உள்ளவளாகக் காணப் பட்டாள். பேச்சில் உற்சாகம் அதிகம் ஆக ஆக ஒரேயடியாக மனத்தைத் திறந்து பேசத் தலைப்பட்டாள். வாழ்நாளில் தான் செய்தவை எல்லாவற்றையும் விவரிக்கத் தொடங்கினாள்: சால்வை பின்னினாள், அடுப்பு போட்டாள், உடை தைத்தாள், ஒட்டுக் கம்பளி நீள் சோடுகள் தயாரித்தாள், நாடகங்களில் நடித்தாள், இளமையில் சபாந்தூய்த் திருநாளில் குதிரையேற்றப் போட்டி களில் இளைஞர்களுக்குச் சமமாகப் பங்கெடுத்துக் கொண்டாள்... ஒரே முரடான, அச்சமே இல்லாத பெண்ணாக இருந்தாள்! வஜீர் வெறுமே வியப்பைக் காட்டினான், கேள்விகள் கேட்டான், சுவை யான பேச்சு தொடர்ந்து நடப்பதற்கு முடிந்த வரை பாடுபட்டு முயன்றான்.



எதிர்பாரா விருந்தாளிகள்

யகூபும் ஐதாரும் வார்டுக்குள் போன போது அப்துல்லா தன் கட்டிலில் படுத்து, செய்வதற்கு ஒரு வேலையும் இல்லாததால் விட்டத்தில் இருந்த ஈக்களை எண்ணிக் கொண்டிருந்தான். தோழர்களைக் கண்டதும், எதிர்பாராமையால் அவன் திடுக்கிட்டுக் கண்களைக் கசக்கிக் கொண்டான். அவர்களும் சிறிது குழப்பம் அடைந்தார்கள். உள்ளே வந்ததும், அடித்த சிலைகள் போலக் கதவின் அருகில் அசையாமல் நின்று விட்டார்கள்.

''வந்து விட்டீர்களாக்கும்?'' என்று வேறு வார்த்தைகள் கிடைக்காததால் கேட்டான் அப்துல்லா.

''வந்து விட்டோம். உனக்கு உடம்பு குணமாகி விட்டதா?''

''ஆமாம்.''

''கையும் வலிக்கவில்லையோ?''

''இப்போது வலிக்கவில்லை.''

பையன்கள் ஒவ்வொருவராக நோயாளியுடன் கை குலுக்கினார்கள்.

''வணக்கம், அப்துல்லா!''

''வணக்கம்.''

''ஆனால் வஜீர் ஏன் வரவில்லை?'' என்று அவர்கள் கைகளைக் குலுக்கிய பின் கேட்டான் அப்துல்லா.

''வந்திருக்கிறான், ஆனால் நர்ஸ் அவனை உள்ளே விடவில்லை. முகப்பில் இருக்கிறான்.''

''நாங்கள் உனக்குத் தின்பண்டங்கள் கொண்டுவந்திருக்கிறோம். பழப்பாகு வஜீரிடமிருந்து'' என்று முடிச்சை அப்துல்லாவிடம் கொடுத்தான் ஐதார்.

''தின்பண்டங்களுக்கு நன்றி. ஆனால் எந்தச் சாப்பாடும் தொண்டைக்குக் கிழே இறங்க மாட்டேன் என்கிறது. வீட்டுக்குப் போக ஆசையாய் இருக்கிறது. என் பாட்டி சவுக்கியமா? மீன்கள் எப்படி இருக்கின்றன? உயிரோடு இருக்கின்றனவா?''

''கும்மாளம் போடுகின்றன! ஓயாமல் நீந்தித் துளைந்து கொண்டிருக்கின்றன! உன்னை எப்போது விடுவார்கள்.''

''இன்னும் பத்து நாட்களிலாம், சொல்லுகிறார்கள். ஒரு வாரம் பொறுத்துக் களிமண்ணை எடுப்பார்களாம்.''

''ஓகோ-கோ!''

''சராய் மட்டும் இருந்தால் சன்னல் வழியாக எப்போதோ கம்பி நீட்டி இருப்பேன். சராயைத்தான் கொடுக்க மாட்டோம் என்கிறார்கள்'' என்று வருத்தத்தோடு சொல்லி, சன்னல் அருகே போனான் அப்துல்லா. சன்னல் காட்டைப் பார்த்து இருந்தது, சல்லாத் திரையால் மூடப்பட்டிருந்தது. ''ஒரு பூதருக்குத் தெரியாது... இந்தச் சல்லாத் துணியை அப்புறப்படுத்தி விட்டு நழுவ வேண்டியதுதானே!''

''உடை எங்களிடம் நிறைய இருக்கிறது. யகூப் எல்லாம் இரண்டிரண்டு போட்டிருக்கிறன்'' என்று உற்சாகம் பொங்கக் கூறினன் ஐதார்.

பையன்கள் சொற்களை வீணுக்க விரும்பவில்லை. அப்துல்லா வின் ஆஸ்பத்திரி உடையைக் கழற்றி, சராய் மாட்டிக் கொள்ள உதவினர்கள். யகூபின் சட்டை குறுகலாய் இருந்தது. பிளாஸ்டர் வைத்த கையைச் சட்டைக் கைக்குள் புகுத்தவே முடியவில்லை. ஆனல் பையன்கள் மனம் சோரவில்லை. தோளிலிருந்து மணிக் கட்டு வரை சட்டைக் கையை டர்ரென்று கிழித்தான் யகூப்.

''வீடு திரும்பியதும் அம்மா தைத்து விடுவாள்'' என்றன்.

பாட்டிக்காக அப்துல்லா சேர்த்து வைத்திருந்த தின்பண்டங் களைத் தின்பண்ட முடிச்சில் திணித்தார்கள். ஐதார் சன்னலிலி ருந்து சல்லாத் துணித் திரையைப் பதபாகமாக அகற்றினன். வெளியே குதிக்க முழு ஏற்பாடுகளும் ஆனதும், அப்துல்லா தன் தோழர்களைத் தடுத்தான்.

''சொல்லிக் கொள்ளாமல் போவது நல்லதல்ல'' என்றன்.

சிறு அலமாரியிலிருந்து பென்சிலும் காகிதமும் எடுத்து, சின்னக் கடிதம் எழுதினன்:

> ''அன்புள்ள டாக்டர் மாமா! உங்களுக்கு மிக மிக நன்றி. எனக்கு உடம்பு பூராவும் குணமாகி விட்டது. இப் போது என் கிராமத்து வீட்டுக்குப் போகிறேன். பையன் கள் எனக்கு உடை கொண்டு வந்தார்கள். ஒரு வாரம் பொறுத்து, களிமண்ணை எடுக்க வேண்டி இருக்கும் போது, நானே வருவேன். தயவு செய்து கோபித்துக் கொள்ளாதீர் கள்.
>
> **அப்துல்லா யுலமானவ்''.**

சன்னல் தரையிலிருந்து கிட்டத்தில் தான் இருந்தது. ஐதார் முதலில் குதித்தான். அப்புறம் எச்சரிக்கையுடன் இறங்கினன் அப் துல்லா. ஐதார் அவனை இரண்டு கைகளாலும் தழுவி, தரையில் நிற்க உதவினன். கடைசியாகக் குதித்தான் யகூப். விழுந்த போது

தேவதாருவின் முரடான வேரில் அவன் முழங்கால் இடித்துக் கொண்டது. அவனுக்கு நிரம்ப வலி எடுத்தது, ஆனால் யகூப் முனகக் கூட இல்லை.

சுற்று முற்றும் பார்வை செலுத்தி விட்டு, பையன்கள் காட்டுக்கு ஓடினார்கள். ஆட்களின் கண்களில் படாமல் தொலைவில் மறைந்து கொண்டதும் அவர்கள் நின்றார்கள். பறவை பாடுவது போன்று நீண்ட சீழ்க்கை அடித்தான் ஐதார். வஜீரின் நுண்ணிய காதுகளுக்கு இந்தச் சீழ்க்கை யாவற்றிலும் அழகான இசையாக ஒலித்தது. ஆனாலும் தோழனின் குறியொலி கேட்டதுமே அவன் இடத்தை விட்டு நகர்ந்துவிடவில்லை.

''அதோ, அந்தச் செடிக்குப் பின்னால் போகிறேனே'' என்று நிதானமாகச் சொன்னான்.

ஆனால் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மாது, தங்கள் பொழுது போக்குக் கழகத்தில் அவர்கள் தாங்களே போட்ட கடைசி நாடகத்தைப் பற்றி ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அப்போது தான் சொல்லிக் கொண்டிருந்தாள்.

''பொறு, இதோ சொல்லி முடித்து விடுகிறேன்'' என்றாள் அவள்.

''அட இந்த நாடகத்தைத் தான் நான் பார்த்திருக்கிறேனே. எங்கள் ஊரில் அதைப் போட்டார்களே'' என்று பொறுமை இன்றிச் சொன்னான் வஜீர்.

''பார்த்திருக்கிறாய் என்றால் உடனே சொல்லி இருக்க வேண்டும். நான் வேறு ஒரு நாடகத்தைப் பற்றிச் சொல்லி இருப்பேன். அந்த நாடகத்தைப் பற்றிச் சொல்லுகிறேன், கேள். அதிலே ஒரு பணக்கார இளைஞன்...''

காட்டிலிருந்து பறவைக் கத்தல் மறுபடி கேட்டது.

''கோடை காலந்தான் எவ்வளவு இன்பமானது'' என்று பெருமூச்சு விட்டாள் மாது. ''பறவைகள் பாடும் போது நெஞ்சு இனிய உணர்ச்சிகளால் அலை மோதுகிறது!''

''ஐயோ, ஐயோ, என் வயிறு!'' என்று திடீரென முனகத் தொடங்கினான் வஜீர்.

''சரி, சரி. அப்படியானல் போ'' என்று அதிருப்தியுடன் சொன்னள் மாது.

வஜீர் குனிந்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு காட்டின் பக்கம் பாய்ந்து ஓடினன்...

திரும்பும் வழியில் கார்களோ குதிரை வண்டிகளோ பையன்களை முந்தவில்லை. அவர்கள் நடந்தே போனர்கள், ஆனல் பேச்சில் நேரம் போனது தெரியவில்லை, ஒருவருக்கும் களைப்பும் உண்டாகவில்லை.

மருத்துவ மனையில் தான் ஏங்கிப் போனதை அப்துல்லா விவரித்தான்.

''பாட்டியின் கடிதம் கிடைத்ததும் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி உண்டாயிற்று, தெரியுமா?'' என்று நினைவு கூர்ந்தான்.

''அதை நான் எழுதினேன்'' என்று பெருமை அடித்துக் கொண்டான் வஜீர்.

''நல்ல கையெழுத்து'' என்று பெரியதனத்துடன் பாராட்டினன் அப்துல்லா.

''நகிமா பாட்டி தகப்பனரின் பதக்கத்தை ஒரு நாள் முழுவதும் மாட்டிக் கொள்ள உனக்குத் தருவாள் என்று கடிதத்தில் எழுதி இருந்தது'' என்றன் ஐதார்.

''அப்படித்தான் எழுதி இருந்தது'' என்று உறுதிப்படுத்தினன் அப்துல்லா. ''பாட்டிக்கு நன்றி. ஆனல் அந்தப் பதக்கத்தை நான் மாட்டிக் கொள்ள மாட்டேன்'' என்று ஆழ்ந்த குரலில் மேலும் சொன்னன்.

''ஏன்? இந்தக் கவுரவத்தை ஏன் வேண்டாம் என்கிருய்?'' என்று வியந்தார்கள் பையன்கள்.

அப்துல்லா தலையை அசைத்தான்.

''தகப்பனரின் புகழ் மகனுக்கு ஒரு நாளைக்குக் கூட வந்து விடாது. புகழ் என்பது தொப்பி அல்ல'' என்று உறுதியாகச் சொன்னன்.

தங்கள் தலைவனை வியப்புடன் நோக்கியவாறு சிறுவர்கள் பேசாதிருந்தார்கள்.

''ஒருவேளை இது சரிதான்'' என்று சற்று சிந்தனை செய்த பின் சொன்னான் ஐதார். ''புகழ் வந்து விடாது, ஆனால் தகப்பனார் களின் வீரம் பிள்ளைகளுக்கு வருகிறது. ஷரீபுல்லாவே அப்படிச் சொன்னார்!''

''வீரம் வருகிறது!'' என்று மார்பில் கையை வைத்துக் கொண்டு உறுதியாக ஆமோதித்தான் வஜீர்.

''அப்துல்லாவுக்கு அது ஏற்கெனவே வந்தாயிற்று'' என்று பெரு மகிழ்ச்சியோடு சொன்னான் யகூப்.

''இது உண்மைதான்!'' என்று பெருமையுடன் உறுதிப்படுத் தினார்கள் பையன்கள்.

அப்துல்லா தோழர்களின் தோள்களைப் பற்றி அணைத்துக் கொண்டான்.

''பாருங்கள், அதோ கிரமேத்!''

நான்கு வழிப்போக்கர்களும் குன்றின் மேல் நின்று விட்டார் கள். கிரமேத் சிகரத்தின் உச்சி மேல் நெருப்பு உருண்டையாக அமர்ந்தது சூரியன். இந்தச் சூரியனால் ஒளியுறுத்தப்பட்ட மலை, கருஞ்சிவப்பாக மூண்டெரியும் தழலைக் கக்கும் எரிமலை போலத் தோற்றம் அளித்தது. பையன்கள் தங்கள் கிரமேத்தைப் பரவசத் துடன் பார்த்தார்கள். ஐதார் தன்வசமின்றிப் பாடலானான்:

''தொலைவினிலே பளபளெனத் தோன்றுமப்பா,
மலையரசன் கிரமேத்தின் வெண்முடிகள்...''

தொடர்ந்து பாடினார்கள் மற்றப் பையன்கள்:

''எங்கெல்லாந்தான் வலம் வரவில்லை,
எதையெல்லாந்தான் கண்டிடவில்லை,
இளம் வீரனும் அவன் நட்புப் பரியும்!''

முன்னே இருந்தது கிரமேத்! இன்னும் சில நாட்களில், அதன் ஏரியில் உயிரோட்டத்தைத் தூண்டி விடுவதற்காக, நான்கு கால்

களில் உறுதியாக நிலைத்து விட்ட ''முக்காலிக்'' குழு மலைப் பயணம் புறப்படும்! ஏனெனில் உண்மையான மனிதன் ஒரு முறை பாதையில் முன்னே அடி எடுத்து வைத்த பிறகு, எந்த விதமான இடர்களுக்கும் அஞ்ச மாட்டான், தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றாமல் பின்னே திரும்ப மாட்டான், உயரமானது மட்டும் இன்றி மகத்தானதுமாக விளங்கும் சிகரத்தின் மேல் கட்டாயம் ஏறுவான்!

ஆண்டுகள் கழியும். இந்தப் பையன்கள் வளர்ந்து ஜிகித்துக்கள் ஆவார்கள். கிரமேத்தைக் காட்டிலும் உயரமான புதிய சிகரங்களின் மேல் இவர்கள் ஏறுவார்கள். எத்தனையோ ஏரிகளில் இவர்கள் உயிரோட்டம் ஏற்படுத்துவார்கள். நிலத்தை மட்டும் அல்ல, வானத்தையும் அழகு படுத்துவார்கள்!

நீங்கள் இதை நம்புகிறீர்களா? நான் நம்புகிறேன்.

வாசக நேயர்களுக்கு

தங்கக் கழுகு ஊர் என்ற மலைப் பிரதேசக் கிராமத்தைச் சேர்ந்த என் சிறு நண்பர்களை நான் பிரியும் நேரம் வந்து விட்டது. இந்தப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தைத் திருப்பிய பின், வாசக நேயர்களே, நீங்களும் அவர்களைப் பிரிந்து விட்டீர்கள். நண்பர்களைப் பிரிவது எப்போதுமே வருத்தம் தருவது. அதனால் நான் கொஞ்சம் வருத்தம் அடைந்திருக்கிறேன். நீங்களோ?

புத்தகத்தில் வழக்கத்துக்கு மாறானது எதுவும் நடக்கவில்லை. கதை மாந்தர்கள் உயிரோடு, உடல் நலத்தோடு இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒன்றும் நேரவில்லை. அப்துல்லாவுக்குக் காயம் பட்டதுதான் வித்தியாசம். ஆனால் காயங்களும் விரைவில் ஆறி விட்

டன. என்னுடைய நண்பர்கள் சிறப்பான அருஞ் செயல்களை இது வரை ஆற்றவில்லை, தங்கள் சொந்த ஊருக்கோ தங்களுக்கோ அவர்கள் எதனுலும் சிறப்பான புகழ் தேடித் தந்து விடவில்லை. ஆனுலும் முக்கியமான ஒன்று அவர்களுக்கு நிகழத்தான் செய்தது. சில கோடைகால வாரங்களில் பையன்கள் நிறைய மறு சிந்தனை செய்தார்கள், எத்தனையோ விஷயங்களில் சீர்பட்டார்கள், வீரச் செயல்களுக்கு, அருஞ் செயல்களுக்குத் தாங்கள் தயார் என் பதைக் காட்டினுர்கள். தேவைப்பட்டால் அவர்கள் கட்டாயமாக அருஞ் செயல்கள் புரிவார்கள்.

இதே கையோடு அருஞ் செயலைப் பற்றிச் சில வார்த்தைகள். யாருமே முன்கூட்டித் திட்டமிட்டு அதை நிறைவேற்றுவதில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. இதோ நான் அருஞ் செயல் ஆற்றி மனிதர்களைப் பிரமிக்க வைப்பேன், எனக்குப் புகழ் தேடிக் கொள்வேன் என்று யாரும் பறை சாற்றுவதில்லை. நாட்டுக்கும் மக்களுக்கும் தன் கடமையை—அது உழைப்பிலாயினும் சரி, போரிலாயினும் சரி—ஒருவன் தன் சக்தி முழுவதையும் ஈடுபடுத்தி, எவ்விதக் கணக்கும் பாராமல், நிறைவேற்றுகிறுன். வீரத்தை மனிதர்கள் தேடுவதில்லை. வீர முயற்சிகள் எங்கே தேவையோ அங்கே வீரத்தைக் காட்டுகிறுர்கள் அவர்கள். வீரச் செயல்களில் மட்டும்,—உதாரணமாக அலெக்சாந்தர் மத்ரோசவ் அல்லது ஸோயா காஸ்மதெம்யான்ஸ்கயாவின் செயல்களில் போல—விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டும், காட்டப்படுவதில்லை துணிவு. எந்தக் காரியத்திலும், முதல் பார்வைக்குச் சர்வ சாதாரணமாகத் தோன்றும் செயலில் கூடக் காட்டப் படுகிறது அது. என் கருத்துப்படி முக்கியமானது, துணிவுள்ள நெஞ்சைப் படைத்திருப்பது, சிறு வயது முதலே துணிவுள்ள சுபாவத்தைப் பயிற்றி வளர்த்துக் கொள்வது, அன்றுட விவகாரங்களிலும் செயல்களிலும் நேர்மையையும் அச்சமின்மையையும் காட்டுவது ஆகும்.

போர் முனை வாழ்க்கையின் ஒரு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. 1944ம் ஆண்டு வசந்தத்தில், தினேஸ்தர் ஆற்றின் மறு கரையில் அமைந்த சிறு தாக்கு தளத்தில் சோவியத் பீரங்கிப்

படையணி ஒன்று பகைவர்களின் கடுமையான குண்டுத் தாக்குக்கு நடுவே, முன்னேறி வந்த பாசிஸ்டு டாங்கிகளை நேரடியாகப் பீரங்கிக் குண்டுகளால் தாக்கிற்று. நாற்புறமும் துப்பாக்கிக் குண்டுகள் சீழ்க்கை அடித்தன, பீரங்கிக் குண்டுகள் அதிர்ந்து முழங்கின. பீரங்கியில் குண்டுகள் கெட்டித்துக் கொண்டிருந்த படையினன் மேல் தற்செயலாக என் கவனம் சென்றது. தன் வீட்டு அடுப்பில் விறகுக் கட்டைகளைச் செருகுபவன் போலமுழு அமைதியுடன் பீரங்கியில் குண்டுகளைக் கெட்டித்துக் கொண்டிருந்தான் அவன். அருஞ் செயலைப் பற்றியோ, புகழைப் பற்றியோ அவன் எண்ணவே இல்லை. பீரங்கிப் படையினனுக்கு உரிய தன் பொறுப்பை ஒரே முனைப்புடனும் நம்பிக்கையுடனும் நிறைவேற்றிக் கொண்டிருந்தான், அவ்வளவே. அதே சமயம் அவன் ஆற்றியது அரிய வீரச் செயல்.

நான் கொஞ்சம் வேறு விஷயத்துக்குத் தாவினாலும் என் நண்பர்களை மறக்கவில்லை. இந்தப் புத்தகத்தை எழுதிய போது, எனக்கும் ஒன்று நேர்ந்தது. என் பையன்கள் மேல் நான் அன்பு கொண்டேன், அவர்களை நேசித்தேன். நிரம்ப. இது அப்படிக் குறைவானது அல்லவே.

வாசக நேயர்களே, நீங்களும் அவர்களை நேசித்தால் நான் எல்லையற்ற மகிழ்ச்சி அடைவேன். நட்பு வேண்டிப் பெறப்படுவது அல்ல, நம்மை அறியாமலே, தானாகவே அது தோன்றுகிறது என்பதை அறிவேன்.

''இருக்கட்டும், கிரமேத் மலைக்கு அவர்கள் போனார்களா, உலர்ந்து போக இருந்த ஏரிக்கு உயிர் ஊட்டினார்களா?'' என்று நீங்கள் என்னிடம் கேட்கலாம். தாங்கள் எண்ணியவை எல்லாவற்றையும் அவர்கள் நிறைவேற்றி விட்டார்கள் என்பதை நான் திண்ணமாக அறிவேன். இல்லாவிட்டால் அவர்களிடம் நட்பு பாராட்டியே இருக்க மாட்டேன். வெறுமே வாயரட்டை அடிக்கும் வீணர்களையும் சோம்பேறிக் கனவு காண்பவர்களையும் எனக்குக் கட்டோடு பிடிக்காது. அந்த மாதிரிப் பேர்வழிகளைப் பற்றி எழுத இவ்வளவு மசியையும் காகிதத்தையும் செலவிட்டிருக்க மாட்டேன்.

எவர்கள் நிறைவேற்றக் கூடியதையே திட்டம் இடுகிறுர் களோ, திட்டம் இட்டவற்றை நிறைவேற்றுகிறுர்களோ, அவர் களே எனக்குப் பிடித்தவர்கள்.

அவ்வளவுதான். மீண்டும் சந்திக்கும் வரை விடை கொடுங் கள், நண்பர்களே!

ஆக்கியோன்



பொருளடக்கம்





